# விடுதலைப் போரில் சேதுபதி மன்னர்



**எஸ்.எம்.கமால்**

# விடுதலைப்போரில் சேதுபதி மன்னர்

For more ebooks vist: http://getmyebook.in/


# எஸ். எம். கமால்



1997

23 பிப்ரவரி, 2024 அன்று விக்கிமூலத்தில் இருந்து பதிவிறக்கப்பட்டது

For more ebooks vist: http://getmyebook.in/




---

**உலகளாவிய பொதுக் கள உரிமம் (CC0 1.0)**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

### பதிப்புரிமை அற்றது

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என

For more ebooks vist: http://getmyebook.in/

பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டு முயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

### No Copyright

For more ebooks vist: http://getmyebook.in/

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community

( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

---

இந்திய விடுதலைப் பொன்விழா ஆண்டு வெளியீடு

# விடுதலைப் போரில் சேதுபதி மன்னர்

டாக்டர் எஸ். எம். கமால்

For more ebooks vist: http://getmyebook.in/

வெளியீடு :
**ஷர்மிளா பதிப்பகம்**
21, ஈசா பள்ளிவாசல் தெரு
இராமநாதபுரம் - 623 501

முதற் பதிப்பு : மார்ச், 1987
இரண்டாவது பதிப்பு : 1997
© டாக்டர் S. M. கமால்

**விலை** : ரூ. 50-00

**அட்டைப்படம்**

இராமேசுவரம் திருக்கோயிலின் மூன்றாம் பிரகாரத் திருப்பணியை முற்றுவித்ததன் காரணமாக, அந்தக்கோயிலின் மேற்கு கோபுர வாசல் தூணில் பொறிக்கப்பட்டு இருக்கும். மன்னர் முத்துராமலிங்க சேதுபதியின் திருவுருவம்.

For more ebooks vist: http://getmyebook.in/

அச்சிட்டோர் : உதயபிரியா அச்சகம், மதுரை - 10.

---

## Bibliographical Data


1, Title : VIDUDHALAI PORIL
SETHUPATHY MANNAR

2, Author : Dr. S. M. Kamal
21, Esa Pallivasal Street
Ramanathapuram-623 501

3, Language : Tamil

4, Edition : Second

5, Publication : November, 1997

6, Copyright : Author

7, Paper used for Text: Cream Wove 13.7 kg.

8, Size of the Book : 21.5 >< 14 Cms

9, Type used for Text : 10pt. Tamil Roman

10, Pages : 14+206

11, No. of copies : 1000

12, Printers : Udhayapriya Achchaham


For more ebooks vist: http://getmyebook.in/

28-A, Janaki Narayanan Street
S.S. Colony, Madurai-625 O1 O.

13, Publishers : Sharmila Pathippagam
21. Esa Pallivas a Street.
Ramanathapuram-623 501

14, Binding : Paper pack

---

For more ebooks vist: http://getmyebook.in/



இந்திய விடுதலை இயக்க முன்னோடியும் மறவர் சீமையின் மகத்தான தியாகியுமான முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதியின் வழி வழியினரும், இந்த நூலின் பதிப்புக்குரியவருமான

திரு. **நாகேந்திர குமரன் சேதுபதி** அவர்கள்

---

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
டாக்டர் இரா. நாகசாமி எம். ஏ., பிஎச். டி., அவர்களின்
அணிந்துரை

விடுதலைப் போரில் சேதுபதி மன்னர்' என்ற டாக்டர் எஸ். எம். கமால் எழுதிய இந்த நூல் ஒரு அருமையான வரலாற்று நூல். ஆழ்ந்த ஆராய்ச்சியும், தெளிவான சிந்தனையும், இனிய வீறுகொண்டு எழச் செய்யும் நடையும், தக்க சான்றுகளின் ஆதார அடிப்படைக் குறிப்பும், தொகுத்துரையும் உள்ள இந்நூல் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்துகிறது

For more ebooks vist: http://getmyebook.in/

எனில் அது மிகையல்ல. ஆங்கில கும்பினியாரின் ஆதிக்கத்தில் சிக்கித் தவித்த தமிழகத்தின் வரலாற்றில் வீர உணர்வோடு, நியாய அடிப்படையில் எதிர்க்குரல் கொடுத்த இராமநாதபுரம் சேதுபதி மன்னரின் வரலாறு, இறுதியில் சென்னை சிறையில் ஆங்கிலேயரால் அடைக்கப்பட்டு, உடல் நலம் குன்றி 23, 24-1-1809 அன்று இரவு வரலாற்றில் வாழும் பொன்றாத புகழ் உடம்பு எய்திய' இம்மன்னரைப் பற்றி இதைக் காட்டிலும் சிறப்பாக வேறு ஒரு நூல் எழுத இயலாது என்னும் அளவிற்கு ஒப்பொரும் நூலாக கமால் அவர்கள் இதனைப் படைத்துள்ளார்கள்.

பல்வேறு ஆவணங்களை, மாவட்ட மான்யுவல்களை மிலிட்டரி குறிப்புகளை ஆய்ந்து படித்து அற்புத தமிழில் வடிக்கப்பட்ட இந்நூலில் ஆங்காங்கே அன்றிருந்த வாணிகம், வாணிகப் பொருட்கள், அதற்குக் கிடைத்த லாபமும், கூலியும், அன்றிருந்த நாணய மதிப்புகள் முதலியன சிறப்புற வடிக்கப்பட்டுள்ளன. சேதுபதி மன்னரை கும்பினியார் வஞ்சகமாய் கைதாக்கி திருச்சிக்கு அனுப்பியபோது அன்றிருந்த மறவர்களின் மனக்குமுறல்களை ஆசிரியர் இந்நூலில் கொட்டியிருக்கிறார் (பக்கம் 88). அதைப் படிக்கும்போது நாம் வீறு கொண்டு எழுகிறோம், உள்ளம் துடிக்கிறது. சேதுபதி மன்னரின் உடைமையை கும்பினிப் பரங்கியர் எப்படி எல்லாம் சூறையாடினார்கள் என வடித்துள்ள பகுதி குறிக்கத்தக்கது.

தமிழில் ஆராய்ச்சி மிகுந்த நல்ல வரலாற்று நூல்களை எழுத முடியும் என்பதை இவ்வாசிரியர்

For more ebooks vist: http://getmyebook.in/

வெளிப்படுத்தியுள்ளார் இவரது ஆராய்ச்சித் திறனைப் பாராட்டுகிறேன். அண்மையில் ஆராய்ச்சித் தமிழில் வெளிவந்துள்ள வரலாற்று நூல்களில் இதைத்தலைச் சிறந்த நூல் எனக் கருதுகிறேன்.

ஆசிரியர் இதுபோன்று பல நூல்களைப் படைப்பின் தமிழ் வரலாறு சிறப்புறும் என்பதில் ஐயமில்லை. இந்நூலை வெளிக் கொணரும் நியூ செஞ்சுரி புத்தக நிலையத்தாருக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

**இரா. நாகசாமி**

---

# பதிப்புரை

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து பத்தொன்பதாம் நூற்றாண்டில் நடந்த சிப்பாய்க் கிளர்ச்சிக்கு முன்பே தமிழகத்தில் விடுதலைப் போராட்டம் வெடித்தது. பாஞ்சாலங் குறிச்சியில் கட்டபொம்மு, சிவகெங்கைச் சீமையில் மருதிருவர், மற்றும் பல எண்ணற்ற வீரர்கள் விடுதலைப் போரில் தம் இன்னுயிரை ஈந்த வரலாற்றை நாம் அறிவோம். ஆனால் பதினெட்டாம் நூற்றாண்டில், வெள்ளையனை எதிர்த்து, தன்னாட்சிக்கு வீர சபதம் ஏற்று, போர்க்கொடி உயர்த்திய ராமநாதபுரம் மன்னர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியைப் பற்றிய வரலாறு இதுவரை முழுமையாக அறிய முடியாமலே இருந்து வந்துள்ளது. இப்பொழுது அந்தக் குறையினை டாக்டர் எஸ். எம். கமால் விடுதலைப் போரில் சேதுபதி மன்னர்' எனும் இந்நூலைப் படைத்ததன் மூலம் நிறைவு செய்துள்ளார். அரசு

For more ebooks vist: http://getmyebook.in/

ஆவணக் காப்பகத்திலிருந்து சேதுபதி மன்னரைப் பற்றிய பல அரிய உண்மைகளைச் சேகரித்து இந்நூலில் தந்துள்ளார்.

1760-ல் பிறந்த இம்மன்னர் இளம் வயதிலிருந்தே ஆங்கிலேயரால் சுமார் 22 ஆண்டுக் காலம் திருச்சி, சென்னை ஆகிய கோட்டைச் சிறைகளில் அடைக்கப்பட்டு, 1809-ல் சென்னை கோட்டைக்கு அருகிலுள்ள பிளாக் டவுனில் உயிர் நீத்தார்.

சேதுபதி மன்னர் காலத்தில் ஆங்கிலேயர் ஆட்சி இராமநாதபுர மக்களின் வாழ்க்கையை எவ்வாறு சூறையாடியது என்பதனையும் அங்கு குறிப்பாக கைநெசவாளர் தயாரித்த மஸ்லின்வகை போன்ற துணிகள் எவ்வாறு ஏற்றுமதி செய்யப்பட்டன என்பதனையும் ஆதாரங்களுடன் இந்நூல் விளக்கிக் கூறுகிறது.

இந்நூலுக்கு தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமி, எம். ஏ., பிஎச்.டி., அவர்கள் அணிந்துரை வழங்கியுள்ளார்கள். அன்னாருக்கு எமது நன்றி உரியது.

தமிழக வரலாற்று ஆய்வாளர்களும், மாணவர்களும், பொதுமக்களும் இதனை வரவேற்பார்கள் என்னும் நம்பிக்கையுடன் இந்நூலை வெளியிட்டுள்ளோம்.

**சர்மிளா பதிப்பகம்**

For more ebooks vist: http://getmyebook.in/

# இரண்டாவது பதிப்புரை

இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர், தமிழகத்தில் வணிகம் செய்து பொருளிட்ட வந்தவர்கள் "கும்பெனியார்" என்று அழைக்கப்பட்ட ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியார். அரசியல் தலைமையை இழந்து, குழப்பம் மிகுந்து இருந்த அன்றைய அரசியலைத் தங்களது சூழ்ச்சிகளினாலும் சித்து விளையாட்டுகளினாலும் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டனர். தங்களது வெடிமருந்துத் திறனால் தஞ்சாவூர், புதுக்கோட்டை மன்னர்களை அடக்கி ஒடுக்கி தங்களது எடுபிடிகளாக்கி, ஆற்காட்டு நவாப்பின் அதிகாரம் பெற்ற முகவர்களாக அன்று அவர்கள் பவனி வந்தனர்.

இந்த ஏகாதிபத்திய வெறிநாய்களை விரட்டியடிக்க முன்வந்தவர்கள் மறவர் சீமை மன்னர்கள் மட்டுமே. இந்தப் பரங்கிகளின் ஏகாதிபத்திய பேராசையினைப் பகற்கனவாக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டவர் இராமநாதபுரம் முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதி மன்னர் (கி.பி. 1760-1809). இந்த மன்னர் பன்னிரண்டு வயதாக இருக்கும் பொழுது, இராமநாதபுரம் கோட்டையைப் பீரங்கிகளால் துளைத்து ஆற்காட்டு நவாப்பிற்கு வெற்றியைப் பெற்றுத்தந்த கும்பெனியார், இந்த இளம் மன்னரையும் இவரது தாயாரையும் கைதிகளாக்கி திருச்சிக் கோட்டையில் சிறை வைத்தனர்.

For more ebooks vist: http://getmyebook.in/

சேதுபதி சீமையில் எழுந்த கலகத்தை சமாளிக்க இயலாத ஆற்காட்டு நவாப், இளம் மன்னரை சிறையில் இருந்து விடுவித்து சமாதானம் செய்து கொண்டார்.

பத்தாண்டுச் சிறைவாசம் முடித்து ஆட்சிக்கு வந்த சேதுபதி மன்னர், ஆற்காட்டு நவாப்பையும் அவரது அடிவருடியான கும்பெனியாரையும் அஞ்சாது எதிரித்தார். அவர்களது ஆணைகளைப் புறக்கணித்தார். அவர்களது வெடிமருந்து ஆயுதங் களை முறியடிக்க ஆயுதச்சாலை நிறுவி, இறுதி மோதுதலுக்கு ஆயத்தமானார். ஆனால் சூழ்ச்சியால் அரண்மனையைச் சூழ்ந்து மன்னரை மீண்டும் சிறைப்படுத்தினர். மறவர் சீமையில் மக்கள் கிளர்ச்சி, ஆயுதப் போராட்டம். மன்னருக்கு ஆதரவாக எழுந்த இந்தக் கிளர்ச்சிகளும் துரோகத்தினால் முறியடிக்கப்பட்டன. மன்னர் திருச்சிக் கோட்டையிலிருந்து குண்டு துளைக்காத சென்னைக் கோட்டை அறையில் அடைக்கப்பட்டார். இந்தச் சிறைவாசத்தையும் சேர்த்து மொத்தம் இருபத்துநான்கு ஆண்டுகள் சிறைவாழ்க்கையில் அவரது வாழ்க்கை முடிந்தது.

இதந்தரு மனையின் நீங்கி இடர்மிகு சிறைப்பட்டாலும், பதந்திருவிரண்டும் மாறி, பழிமிகுத்திட்டாலும், விதம்தரு கோடி இன்னல் விழைந்தெம்மை அழித்திட்டாலும், சுதந்திரதேவி நின்னைத் தொழுதிடல் மறக்கிலேன் என பின்னர் சுதந்திரப் பிரகடனம் செய்த மகாகவி பாரதியின் கவிதைக்கு

For more ebooks vist: http://getmyebook.in/

முன்னோடி வடிவாக அமைந்துள்ளது இந்த மன்னரது வாழ்க்கை.

ஏறத்தாழ இருநூறு ஆண்டுகாலமாகத் தமிழக வரலாறும் தமிழக மக்களும் அறிந்து கொள்ளாத இந்த வீரமறவனது தியாக வாழ்க்கையை, கும்பெனியாரது துசுபடிந்த ஆவணங்களில் இருந்து திரட்டி, எழுத்து வடிவில் தமிழக மக்களுக்கு முதன் முறையாக அறிமுகப்படுத்தி அறியச் செய்த பெருமை சேது நாட்டு வரலாற்றுச் செம்மல் டாக்டர். எஸ். எம். கமால் அவர்களையே சாரும்.

இந்த இளம் சேதுபதி மன்னர் பற்றிய அனைத்துச் செய்திகளையும் மிக்க ஆர்வத்துடன் பலவித இடர்ப்பாடுகளுக்கிடையில் தமிழக அரசின் தமிழ்நாடு ஆவணக்காப்பகத்து ஆவணங்கள், மடல்கள், அறிக்கைகள், தொகுப்புப் பதிவேடுகள் ஆகியவைகளில் இருந்து சேகரித்து, அழகு தமிழில் சிறந்த வரலாற்று நூலக ஆசிரியர் அமைத்து வழங்கி இருப்பது அருமையிலும் அருமை.

இந்த நூலுக்கு 1989ஆம் ஆண்டு திருவள்ளுவர் திருநாள் விழாவில் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை சிறந்த நூலா கத் தேர்வு செய்து முதற்பரிசும் பாராட்டிதழும் வழங்கியது. பொது நூலகத் துறையைச் சார்ந்த பொது நூலகங்களுக்கு, இந்த நூலின் ஐநூறு படிகளை வாங்கி வழங்கியது.

பத்தாண்டுகளுக்குப் பிறகு, இப்பொழுது குறிப்பாக, இந்திய விடுதலை பொன்விழா ஆண்டில், இந்த நூலின் இரண்டாவது பதிப்பு வெளிவருவதை

For more ebooks vist: http://getmyebook.in/

நாட்டுப்பற்று மிக்க தமிழ் மக்கள் நிச்சயம் வரவேற்பார்கள் என நம்புகிறோம். மேலும் இந்த பதிப்பு, சேதுபதி மன்னரது சீரிய தியாகத்திற்கு நாம் செலுத்தும் அன்புக் காணிக்கையாக என்றும் விளங்கும் என எண்ணுகிறோம்.

**- சர்மிளா பதிப்பகம்**

இராமநாதபுரம்

1997ம் ஆண்டு
நவம்பர் - 16

---

## அறிமுகம்

அந்நிய ஆதிக்கத்திற்கு எதிரான நமது விடுதலைப் போராட்டம், நாடு தழுவிய தேசிய இயக்கமாக முதன் முதலில் வட இந்தியாவில் கி.பி. 1857-ல் இந்திய சிப்பாய்களது கிளர்ச்சியுடன் தொடங்கியதாக வரலாற்று ஆசிரியர்கள் அண்மைக் காலம் வரை எண்ணி வந்தார்கள். எழுதி வந்தார்கள்.

ஆனால், அந்தக் கிளர்ச்சிக்கும் எழுபது ஆண்டுகளுக்கு முன்னர், தெற்கே தமிழ்நாட்டில் விடுதலை இயக்கம் துவங்கிவிட்டது என்பதுதான் மறுக்க முடியாத வரலாற்று உண்மை. அந்த இயக்கத்தின் பல பகுப்புகளை, மோதல்களை, போராட்டங்களை விவரமாக அறியத்தக்க வாய்ப்பு இல்லை. அவைகளைத் தொடர்ந்து தலைமை தாங்கிய தீரர்களை வீரர்களை . தியாகிகளைப் பற்றிய விவரங்களை வரலாற்று ஆவணங்களின் அடிப்படையில், முறையாகத் தொகுத்து வழங்கும்

For more ebooks vist: http://getmyebook.in/

பணி மேற்கொள்ளப்படாததுதான் அதற்குக் காரணமாகும்.

அதனைத் தொடரும் முகமாக, இந்த நூலில், மறவர் சீமையின் தன்னாட்சிக்கு வீரமுழக்கமிட்டு, நமது நாட்டு விடுதலை வேள்வியைத் துவக்கிய, வேந்தர் திலகம் முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதி மன்னர் (1760-1809) தமிழக மக்களுக்கு அறிமுகம் பெறுகிறார்.

ஆயுத பலத்தை ஆதாரமாகக் கொண்ட ஆற்காட்டு நவாப் முகம்மது அலி-ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியார்-ஆகியோரது ஆதிக்க வெறியை அழித்து ஒழிக்க துடிதுடித்து செயல்பட்ட அந்த இளம் மன்னரைப் பற்றிய செய்திகளை வரலாற்று ஆவணங்களில் இருந்து தொகுத்து இங்கு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த வீர மறவரைப் பற்றிய செய்தியை முதன் முதலில் கி.பி. 1891-ல் வெளியிடப்பட்ட ஆங்கில நூலான இராம்நாட் மானுவலில் (Rammad Manual-1898) "முத்துராமலிங்க சேதுபதி மன்னர் கி.பி. 1792-ல் ஆங்கில அரசுக்கு எதிராகப் புரட்சி செய்யும் போக்கினைக் கொண்டு இருந்தார்" (பக்கம் 248). "அதனால் அவரது சீமையை நிர்வகிக்க கும்பெனிக்கு கலெக்டர் நியமிக்கப்பட்டதுடன், சேதுபதி மன்னரும் சென்னைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கேயே கி.பி. 1801-ல் காலமானார் (பக்கம் 251-52)' என்று கும்பெனியாரது சேவையில் இருந்த திரு. ராஜாராம்ராவ் என்பவர் வெள்ளை அரசுக்குப் பயந்த முறையில் வரைந்துள்ளார்.

For more ebooks vist: http://getmyebook.in/

பதினெட்டாம் நூற்றாண்டின் மறவர்களைப் பற்றி விரிவான ஆய்வை மேற்கொண்ட பேராசிரியர் டாக்டர் எஸ். கதிர்வேல் அவர்கள், தமது ஆய்வுரையில், மறவர் சீமையின் மன்னரான இவர், ஆற்காட்டு நவாப், பிரிட்டிஷார் ஆகிய இருவரது ஆதிக்கத்தையும் புறக்கணித்தார். தன்னரசு நிலையை எய்துவதற்கு முயன்றார் (பக்கம் 185). பிப்ரவரி 1795-ல் கும்பெனிப் படைகள் மேஜர் ஸ்டீவென்ஸன் தலைமையில் இராமநாதபுரத்திற்குள் நுழைந்தன. சேதுபதி மன்னர் இதனை எதிர்பார்க்கவில்லை. அவரைப் பதவியில் இருந்து நீக்கி, திருச்சிக்கு அனுப்பிவிட்டு, கும்பெனியாரது ஆட்சியை அங்கு நிறுவினர் . (History of Marawas, Page 191, 1974) எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதனையே பேராசிரியர் டாக்டர் கே. ராஜையனும் தமது “Rise and fall of the Polegars of Tamilnadu (1962) என்ற நூலில் எழுதியுள்ளார். இந்தக் குறிப்புகளைத் தவிர இந்த மன்னரது புரட்சிப் போக்கைத் தெரிவிக்கும் நூல் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை.

ஆனால், தமிழ்நாடு அரசின் சென்னைப் பட்டின ஆவணக்காப்பகத்தில் பாதுகாக்கப்பட்டு வரும் கிழக்கிந்திய கும்பெனியாரது பலவகையான ஆவணத் தொகுப்புகளைப் படித்துப் பார்த்தபொழுதுதான், இந்த மன்னரைப் பற்றிய பல தகவல்களைத் தெரிந்துகொள்ள முடிந்தது. குறிப்பாக அவரது எண்ணத்தில் இழையோடிய சுதந்திரப் போராட்ட சிந்தனைகள் அந்நிய ஆதிக்க எதிர்ப்புணர்வுகள், அவைகளைப் பிரதிபலிக்கும் நடவடிக்கைகள். மறவர் சீமை ஆதிக்கத்தைக்

For more ebooks vist: http://getmyebook.in/

கைப்பற்ற பரங்கிகள் செய்த சதி, பகற்கொள்ளை- இவைகளைக் கண்டு கொதித்து எழுந்த விர மறவர்களது கிளர்ச்சி-ஆயுதப் போராட்டங்கள் போன்ற பல அரிய செய்திகளை அந்த ஆவணங்கள் தெரிவிக்கின்றன.

அவைகளை ஒரளவு முறையாகத் தொகுத்து இந்த நூலில் அளித்துள்ளதின் மூலம், அந்த வீர மன்னரது வரலாற்று வடிவத்தை விடுதலை இயக்கத் தொடக்கத்திற்கு அவரது பங்களிப்பை, தியாகத்தை சித்தரிக்க முயன்று இருக்கிறேன்.

இந்த நூல் முழுவதையும் ஆர்வத்துடன் படித்து முடிக்கும் வாசகர் இதயத்தில், இந்தச் சிறந்த தியாகிகளைப் பற்றிய அனுதாபத்தை எனது எழுத்துக்கள் ஏற்படுத்துமானால், எனது இந்த முயற்சி உரிய இலக்கினை எய்தியுள்ளதாக மகிழ்ச்சியுறுவேன். மேலும், நமது நாட்டு விடுதலை இயக்க முன்னோடிகளில் முதன்மையானவரை, முழுதுமாக மறந்துவிட்ட தமிழக மக்களுக்கு இனங்காட்டிய பெருமையையும், மன நிறைவையும் பெறுவேன்.

இந்தப் பணிக்கு முதலும் முடிவுமாக அமைந்துள்ள தமிழக அரசு ஆவணக் காப்பக வரலாற்று ஆவணங்களை, கடந்த மூன்று ஆண்டுகளில் படித்துப் பார்த்து, குறிப்புகள் எடுத்துக் கொள்ள மேலான அனுமதி வழங்கிய தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி ஆணையாளர்கள் திரு. சு. ரங்கமணி, ஐ.ஏ.எஸ் அவர்களுக்கும் உதவி

For more ebooks vist: http://getmyebook.in/

ஆணையாளர் திரு வின்செண்ட், எம்.ஏ., திருமதி சரோஜா, எம்.ஏ., ஆகியோருக்கும், விரும்பிக் கோரிய கோப்புகள், தொகுப்புகள், பதிவேடுகள், நூல்கள் ஆகியவைகளைத் தேடி எடுத்து வழங்கி உதவிய, ஆவணக் காப்பகப் பணியாளர் அனைவருக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், எனது இந்த எளிய முயற்சி, எழிலும், பொலிவும் பெற்று, அழகிய இந்த நூல் வடிவில் எழுத்துலகில் பவனி வருவதற்கு பேரார்வம் காட்டிய சென்னை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினருக்கும் அதன் தலைவர் தோழர் எம்.வி. சுந்தரம் அவர்கட்டும் எனது நன்றிப் பெருக்கினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராமநாதபுரம், **எஸ். எம். கமால்**

ஆகஸ்ட், 1986.

---

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. மறவர் சீமை | ... | 1 |
| 2. இராமநாதபுரம் கோட்டை | ... | 10 |
| 3. சேதுபதி இல்லாத சீமையிலே | ... | 22 |
| 4. பன்னிரு வருட ஆட்சியில் | ... | 32 |


For more ebooks vist: http://getmyebook.in/

5. கும்பெனியாரும் சேதுபதியும் ... 43
6. சிவகங்கையும் சேதுபதியும் ... 49
7. எரிமலை புகைந்தது ... 63
8. வஞ்சகத் தாக்குதல் ... 82
9. திருச்சியில் மீண்டும் சிறை ... 89
10. புரட்சிப் பாதையில் ... 110
11. கிளர்ச்சியின் தொடர்ச்சி ... 129
12. சென்னைக் கோட்டையில் ... 138
இணைப்பு 1 150
இணைப்பு 2 155
இணைப்பு 3 183
இணைப்பு 4 189
இணைப்பு 5 190
13. சில விளக்கக் குறிப்புகள் ... 160
14. நூற்பெயர்க் கோவை ... 192
15. பெயர்கள் அகர வரிசை ... 183

---

For more ebooks vist: http://getmyebook.in/

# மறவர் சீமை

## மறவர்

பாண்டிய நாட்டின் கிழக்கிலும் தெற்கிலும் நெய்தலும் பாலையுமாக அமைந்திருந்த பகுதியில் இயல்பாகவே கடின வாழ்க்கையை மேற்கொண்டிருந்த மக்கள் மறவர்கள். அவர்கள் வாழ்ந்த மண்ணிலே பயிர்தரும் விளைச்சல் இல்லை. ஆனால் அவர்கள் வாழ்க்கையில் உயிர் வளர்க்கும் வீரம் இருந்தது. புகழ் இருந்தது. பெருமை தரும் போர் ஆற்றலும் நிறைந்து இருந்தது. மான உணர்வும் அஞ்சாமையும் விஞ்சிய இந்த மக்கள், பாண்டியர்களது மாசு துடைக்கும் தூசுப் படையாக இருந்தனர். பகைவரைப் பொருதி பொன்றாத வெற்றியையும் புகழையும் சேர்த்தனர்.

'அமரர் தம் உலகொடு, இவ்வுலகு கைப்படும் எனினும் அது ஒழிபவர், உயிரை விற்று உறுபுகழ் கொள உழல் பவர்' ஆக இருந்தனர் என ஜெயங்கொண்டார் அவர்களைப் பாராட்டிப் பாடியுள்ளார்.[1] இதன் பொருட்டு போர் எனில் புகழும் புனைகழல் மறவர்' என புறப்பாட்டும்[2] 'பகை எனில் கூற்றம் வரினும் தொலையான்' என கலித்தொகையும்[3] அவர்களுக்குக் கட்டியம் கூறுகின்றன.

ஏழாவது நூற்றாண்டில் இருந்த அய்யனாரிதனார் என்ற தமிழ்ப் புலவர், மறவர்களது புகழ் வாழ்க்கையை மறப்பண்புகளின் இலக்கணமாக புறப்பொருள் வெண்பாமாலை என யாத்துள்ளார்.

For more ebooks vist: http://getmyebook.in/

வில்வேர் உழவரான இநத வீர மறவர்கள, பானடியப் பேரரசில், மழவராயர், வில்லவராயர், நாடாள்வார், முத்தரையர். முனையதரையர், காங்கேயர் என்ற வீர விருதுகளுடன் சிறப்பான அரசியல் தலைவர்களாக விளங்கி வந்தனர்.[4] பின்னர் சோழ பாண்டியர்கள் ஆட்சியிலும், விஜயநகர நாய்க்கர்களின் ஆதிக்கத்தின் பொழுதும் அவர்களது அரசியல் பாதுகாவலராக இருந்து வந்தனர். வெள்ளாற்றிற்கும் வேம்பாற்றிற்கும் இடைப் பட்ட பகுதியில் வாழ்ந்த இந்த மக்கள் பன்னிரண்டாவது நூற்றாண்டில், தெற்கேயுள்ள நெல்லை மாவட்டத்துக்கு குடி பெயர்ந்ததாகத் தெரிகின்றது.[5] இவர்களில், தெற்குப் பகுதியில் இருந்தவர்கள் மதுரை நாயக்கர்களுக்கு அடங்கிய குறு நிலக்கிழார் (பாளையக்காரர்) களாக இருந்து வந்தனர். இவர்களில் சிவகிரி, சேத்துார், சிங்கம்பட்டி, சொக்கம்பட்டி, ஊத்து மலை, ஊர்க்காடு, கடம்பூர், காடல்குடி, குளத்துார், சுரண்டை , தலைவன் கோட்டை , நெல் கட்டும் செவ்வல், வடகரை பாளையக்காரர்கள் முக்கியமானவர்கள். ஆனால் கிழக்குப் பகுதியில் உள்ள மறக்குடி மக்கள் நாயக்கர்களுக்கும் கட்டுப்படாமல் அவர்களது மேல் ஆதிக்கத்தை மதித்தவர்களாக தன்னரசினராக இருந்தனர். அவர்களது தனிப்பெரும் தலைவர் தான் சேதுபதி மன்னர்.

### சேதுபதி மன்னர்கள்

மறவர் மக்களுக்கிடையில் பொதுவாக எழு கிளைகள் உள்ளன.[6] அவைகளுள் செம்பி நாட்டு

For more ebooks vist: http://getmyebook.in/

மறவர் கிளையைச் சேர்ந்தவர்கள் இராமநாதபுரம் அரசர்கள். இந்தக் கிளையினர், இந்து வைதீக நெறியை தீவிரமாகப் பின்பற்றியதால் பிறப்பு, இறப்பு, பூப்பு, திருமணம் போன்ற சமூகப் பழக்க வழக்கங்களில் ஏனைய ஆறு கிளைகளுக்கும் இவர்களுக்கும் இடையில் மிகுந்த வேறுபாடுகள் இருந்தன. இவர்களது விதவைகள் மறுமணம் செய்வது கிடையாது மாறாக, அவர்கள் மாய்ந்த கணவனுடன் தீக்குளிக்கும் கொடிய பழக்கத்தைக் கொண்டிருந்தனர். [7] மறவர் மக்களிடம் அவர்களது ஒப்பற்ற ஒரே தலைவர் என்ற முறையில் சேதுபதி மன்னரிடம் அவர்களுக்கு மட்டற்ற மரியாதையும் அன்பும் இருந்தன.

புதுக்கோட்டை தொண்டைமானும், தஞ்சாவூர் சீமையில் பதினெட்டுப் பாளையக்காரர்களும், மன்னரது சமூகத்தில் கை கூப்பிய வண்ணம் பணிவுடன் நின்றனர்.

பாஞ்சாலங்குறிச்சி கெட்டி பொம்மூவும், காடல்குடி நாயக்கரும், தொக்கலை தொட்டியனும் இதர ஜாதி பாளையக்காரர்களும் மன்னரைச் சந்திக்கும் பொழுது அவர் முன்னர் வீழ்ந்து சாஸ்டாங்கம் செய்யும் வழக்கம் இருந்தது.

ஆனால் எட்டையாபுரம், ஊத்து மலை, சுரண்டை, சிவகிரி, சேத்துார், தலைவன் கோட்டை பாளையக்காரர்கள், இத்தகைய பாவனைகள் எதுவுமின்றி சேதுபதி முன்னர் பணிவுடன் நின்று வந்தனர்.

For more ebooks vist: http://getmyebook.in/

இந்த சேதுபதி மன்னர்களது ஆட்சித் துவக்கம், அவர்களது முன்னோர் மரபு பற்றிய முறையான வரலாற்றுச் செய்திகள் இதுவரை கிடைக்கவில்லை. புராணங்களும், பிற்கால இலக்கியங்களும் இந்த மன்னர்களை இராமாயண இதிகாசத்துடன் தொடர்புபடுத்திப் பேசுகின்றன. இராமபிரான் சீதையை மீட்டுத் திரும்பும் பொழுது, இராமேசுவரத்தில் இராமலிங்க பிரதிஷ்டை செய்து அந்த லிங்கத்தையும் சேது அணையையும் காத்து வருவதற்கு நியமிக்கப்பட்ட மறவர் தலைவரது வழித் தோன்றல் இவர்கள் என பழங்கதை ஒன்று தெரிவிக்கின்றது.

இன்னொரு ஆவணத்தின்படி தங்களது அரசர்களாக இருந்த பாண்டியர்கள் வலுவிழந்த பிறகு அவர்களை வென்று, மதுரையையும் தஞ்சையையும் கொண்ட பரந்த பகுதியை மறவர்கள் ஆட்சி செய்தனர் என்றும், விஜய நகர நாயக்கர்கள் தமிழகத்தைக் கைப்பற்றும் வரை மறவரது இந்த தன்னரசு நீடித்தது என்றும் தெரிகின்றது.[8] இதனைப் போன்று இன்னும் சில வரலாற்றுக் குறிப்புகளும் சேதுபதி மன்னர்களது தொன்மைச் செய்திகளும் இராமநாதபுரம் மானுவலில் வரையப்பட்டுள்ளன.[9]

மற்றும், சேதுபதி அரச வழியினர், பதினோராம் நூற்றாண்டில் பாண்டி மண்டலத்தைக் கைக்கொண்டு, ஈழத்தையும் வெற்றிக்கொண்ட ராஜராஜ சோழதேவன் இராமேசுவரம் கடற் பாதையைக் கண்காணிப்பதற்கு நியமித்த மறவர் தலைவரது வழியினர் என்றும், பாண்டிய நாட்டை கி.பி. 1170-ல் கைப்பற்றி இராமேசுவரம் கோவிலின் ஒரு பகுதியை நிர்மாணித்த

For more ebooks vist: http://getmyebook.in/

இலங்கை தண்டநாயகனால் நியமனம் செய்யப்பட்ட பிரதிநிதியின் பரம்பரை என்றும் ஆசிரியர் தர்ஸ்டன் குறித்துள்ளார்.[10] சேது சமஸ்தான மகாவித்வானாக விளங்கிய திரு. ரா. ராகவையங்கார், குலோத்துங்க சோழனது காலத்தில் தஞ்சையிலிருந்து பாண்டி நாடு புகுந்த சோழரது தானைத் தலைவர்களாக இருந்து, நாளடைவில் தன்னாட்சி பெற்றவர்கள் சேது மன்னர்கள் என பல ஆதாரங்களை அளித்துள்ளார்.[11]

பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த முத்துராசக் கவிராயர் புனைந்துள்ள கைலாய மாலையில், யாழ்ப்பாண நல்லூர் கோயிலை அமைத்த ஆரியச் சக்கரவர்த்தி, இராமநாதபுரம் சேதுபதி மன்னரது உதவியுடன் இராமேசுவரத்திலிருந்த அந்தணர்களை அங்கு வரவழைத்து அந்தக் கோயிலின் குருக்களாக நியமித்தார் என்ற செய்தியைச் சொல்கின்றது.[12]

இங்ஙனம் சேதுபதி மன்னர்கள் பற்றிய செய்திகள் பல தரப்பட்டதாயினும், இந்தச் செய்திகள் சுட்டுகின்ற முக்கியமான குறிப்பு ஒன்று உள்ளது. அதனை ஆசிரியர் நெல்சன், 'பல நூற்றாண்டு காலமாக மக்கள், கூட்டம் கூட்டமாக இராமேசுவரத்துக்கு தலயாத்திரை வந்து செல்வதால், இந்தப் பகுதி (மறவர் சீமை)யில் வலிமை பொருந்திய ஒரு தன்னரசு செயல்பட்டிருந்தாலொழிய இத்தகைய அமைதியான தலயாத்திரை சாத்தியமாக இருந்து வரமுடியாது. ஆதலால் முதலாவது சடைக்கன் சேதுபதி (1604-22)க்கும் முன்னர், இந்தப் பகுதியில் சேதுபதி மன்னர்கள் ஆட்சி,

For more ebooks vist: http://getmyebook.in/

செழித்து வந்திருக்க வேண்டும்' என்ற உறுதியான கருத்தைத் தெரிவித்துள்ளார்.[13]

இந்த மன்னர்களது தொன்மை எத்தகையதாக இருப்பினும் அவர்கள் பாண்டிய மண்டலத்து நிலக் கூறுகளான கீட்செம்பி நாடு, வடதலைச் செம்பிநாடு, செவ்விருக்கை நாடு கைக்கி நாடு, பொலியூர் நாடு, களவழி நாடு, கானப்பேர்நாடு, தென்னாலை நாடு, இடையள நாடு ஆகிய பகுதிகளைக் கொண்ட பெரும் நிலப்பரப்பின் அதிபதியாக இருந்து வந்தனர் என்று தெரியவருகின்றது.

இந்த மன்னர்களது நாடு, புனிதமிக்க சேது அணையை அடுத்து இருந்ததால், இலக்கியங்கள் இதனை சேது நாடு என சிறப்பித்து வழங்கின. இந்த நாட்டின் கிழக்கு எல்லை வங்கக்கடலாகவும், மேற்கு எல்லை மதுரைச் சீமையின் கிழக்கு எல்லையாகவும், வடக்கு எல்லை பாம்பாற்றுக் கரையாகவும், தெற்கு எல்லை வேம்பாறு வைப்பாறாகவும் அமைந்திருந்தன. ரகுநாத திருமலை சேதுபதி காலத்திலும், கிழவன் சேதுபதி காலத்திலும் வடக்கு எல்லைகள் பரந்து விரிந்தன. இன்றைய புதுக்கோட்டை மாவட்டத்தின் பெரும் பகுதி அப்பொழுதைய இராமநாதபுரம் அரசிற்கு உட்பட்டிருந்ததை அங்குள்ள கல்வெட்டுக்களும்[14] பட்டயங்களும் உறுதிப்படுத்துகின்றன. ஆனால், இந்த மன்னர்களது காலத்திலும், அவர்களுக்குப் பின் வந்த அரசர்களது ஆட்சியின் போதும் ஏற்பட்ட தஞ்சை மராத்தியரது படை எடுப்புகள் நாட்டுப் பிரிவினை ஆகிய காரணங்களினால் மீண்டும் இந்த நாட்டின்

For more ebooks vist: http://getmyebook.in/

எல்லைகளில் மாற்றமும் மொத்தப் பரப்பில் சுருக்கமும் ஏற்பட்டன. மறவர்களது இந்த தன்னரசு பரப்பு ஆங்கிலேயரது ஆவணங்களில் மறவர் சீமை அல்லது பெரிய மறவர் (Great Marawa) என குறிப்பிடப்பட்டுள்ளது.

சேதுபதிகளும் தங்களை ஆளப்பிறந்த அரசர்கள் என எண்ணிக் கொள்ளாமல் இராமபிரானது அடிமைகளாகவே தங்களைக் கருதி ஆட்சி செலுத்தி வந்தனர். இராமேசுவரத்தில் உள்ள இராமநாத சுவாமிக்கு தொண்டு செய்து வாழ்வதை, தங்களது வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டு தங்களது ஆட்சியை இராமநாத சகாயம்' என வழங்கி வந்தனர். தங்கள் ஆட்சியின் பொழுது இராமநாதசுவாமிக்கு அன்றாட பூஜை, மற்றும் ஆண்டுத் திருவிழாவுக்கென ஏராளமான கிராமங்களை சர்வமான்யமாக அளித்ததுடன், பொன்னையும், பொருளையும் அன்பளிப்பாக வாரி வாரி வழங்கினர். இவைகளினால் திருப்தி அடையாத இந்த மன்னர்கள் கோவிலில் நடக்கும் அர்த்த சாம பூஜையில் கலந்துகொண்டு, முடிவில் அவர்களே தீவட்டி ஏந்தி சுவாமியை வழிநடத்தி பள்ளியறையில் சேர்ப்பிக்கும் பணியையும் அண்மைக்காலம் வரை மேற்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும். இந்த மன்னர்கள் ஆண்டு முழுவதும் சேதுயாத்திரையாக இராமேசுவரம் வருகின்ற ஆயிரக்கணக்கான பயணிகளுக்கு சேது பாதை நெடுகிலும் ஆங்காங்கு உணவும், உறையுளும் அளிப்பதற்கு பல அன்னச் சத்திரங்களை அமைத்து

For more ebooks vist: http://getmyebook.in/

பராமரித்து வந்தனர். இந்த சத்திரங்களின் இடிபாடுகளை, இன்னும் சேது பாதையில், தொடர்ச்சியாக பல இடங்களில் காணலாம்

கிடைத்துள்ள வரலாற்றுச் செய்திகளின்படி, கி.பி. 1434ல் உடையான் சேதுபதி என்பவர் ராமேசுவரம் மேலக் கோபுரம், திருமதில் திருப்பணியை மேற்கொண்டதாலும்[15] கி.பி. 1559-ல் ராமேசுவரம் சாலையில் உள்ள வேதாளை கிராமத்தில் கோட்டையையும், அகழியையும் அமைத்து இராமேசுவரம் செல்லும் பயணிகளுக்கு பல இடர்ப்பாடுகளை ஏற்படுத்திய போர்த்துக்கீஸிய பரங்கியரை விரட்டியடிக்க சேதுபதி ஒருவர் மதுரையில் ஆளுநரான விசுவநாதநாயக்கரிடம் இராணுவ உதவி பெற்றதாலும்[16] கீழைக் கடற்கரைப் பகுதியில் சேதுபதிகள், பதினைந்து பதினாறாம் நூற்றாண்டுகளில் நிலைத்திருந்த விவரம் அறிய முடிகிறது. ஆனால் கி.பி. 1605 முதல் இராமநாதபுரம் மன்னர்களைப் பற்றிய தெளிவான செய்திகள் உள்ளன.

பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியில் மன்னார் வளைகுடாவில் போர்த்துக்கீஸியரின் நடமாட்டமும் ஆதிக்கமும் அதிகரித்து வந்தன. அப்பொழுது அவர்களைச் சமாளிக்க மதுரை நாயக்க மன்னரிடம் கடற்படை எதுவும் இல்லை. அத்துடன் அவர்களை கடற்கரைப் பகுதியில் பொருதி அழிப்பதற்குத் தகுந்த தரைப்படையும் அவர்களிடம் இல்லை. இந்த அவல நிலையைச் சமாளித்து தமக்கு

For more ebooks visit: http://getmyebook.in/

உதவுவதற்காக கி.பி. 1605-ல் மதுரை மன்னரான முத்துகிருஷ்ணப்ப நாயக்கர் இராமநாதபுரம் கடற்கரைப் பகுதியில் புகலூரில் இருந்த முதலாவது சடைக்கன் சேதுபதியை அந்தப் பகுதியின் மன்னராக அங்கீகரித்து, அரசு மரியாதைகளை அளித்தார்.[17] அது முதல் சேது மன்னர்கள் மதுரை நாயக்கர்களது மேலாதிக்கத்தை மதித்து ஏற்றுக்கொண்டவர்களாக இருந்து வந்தனர். இதனால் அவர் களுக்கு தளவாய்[18] என்ற சிறப்புப் பெயரும் இருந்துவந்தது. திருமலை மன்னரது ஆட்சித் துவக்கத்தின்பொழுது தோன்றிய பிணக்குகளின் காரணமாக, நாயக்கரது பெரும் படை சேதுபதி சீமையில் கி.பி. 1639-ல் நுழைந்தது. பல போர்களுக்குப் பிறகு இராமேசுவரம் போர்க்களத்தில் தோல்வியுற்ற இரண்டாவது சடைக்கன் சேதுபதி சிறை பிடிக்கப்பட்டார். தொடர்ந்த குழப்பங்களைச் சமாளிக்க முடியாத திருமலை மன்னர் சேதுபதியை விடுதலை செய்து, சேது நாட்டை அவர் மீண்டும் ஆளுமாறு செய்தார்.[19]

அவருக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த திருமலை ரகுநாத சேதுபதி, திருமலை மன்னருக்கு பக்கபலமாக இருந்து, அவரது 72 பாளையக்காரர்களுக்கும் தலைமை ஏற்கும் தகுதியுடையவராக இருந்தார். நெல்லைப் பகுதியில் எட்டையபுரம் பாளையக்காரரும், இன்னும் சிலரும் திருமலை மன்னருக்கு எதிராக சினந்து எழுந்த போது, இராமநாதபுரம் மன்னர் மறவர் படையுடன் சென்று எட்டையபுரம் பாளையக்காரரைக் கொன்று ஒழித்து, கிளர்ச்சியை அடக்கி திரும்பினார். மனம் மகிழ்ந்த திருமலை மன்னரும் மறவர்

For more ebooks vist: http://getmyebook.in/

தலைவருக்கு பல சிறப்புக்களைச் செய்து பாராட்டினார்.[20] அந்த வீர நிகழ்ச்சியை நினைவுறுத்தும் வண்ணம் சேதுபதியும் அன்று முதல் தனது இடது காலில் எட்டப்பனது தலை உருவம் கொண்ட வீரக் கழலை அணிந்து வரலானார். அதனை,

> “கானில் வன்கல்லை பெண்ணாக்கிய காலில்,
> எட்டன் தலையார் விஜயரகுநாத சேது தளசிங்கமே”

என பாவலரும் பாராட்டிப் பாடினர்.[21]

கி.பி. 1659-ல் திருமலை நாயக்கர் நோயுற்று நலிந்த நிலையில் இருந்த பொழுது, மைசூர் படைகள் மதுரையை நோக்கி படையெடுத்து வந்தன. இந்த இக்கட்டான நிலையை அறிந்த திருமலை சேதுபதி இருபதினாயிரம் மறவர்களைத் திரட்டி மதுரை சென்றார் மைசூர் படைகளைப் பொருதி அழித்ததுடன் எஞ்சியவர்களைக் கொங்கு நாட்டின் எல்லைவரை துரத்தியடித்து விட்டு வந்தார். மதுரை மண்ணுக்கும் நாயக்க ஆட்சிக்கு நைரவிருந்த, மாபெரும் பழியையும், இழப்பையும் நீக்கிய சேதுபதி மன்னரை பல வழிகளிலும் பாராட்டி சிறப்புக்களை வழங்கினார் திருமலை நாயக்கர் அவைகளில் நாயக்க

அரசுக்கு சேதுபதி மன்னர் ஆண்டுதோறும் அளிக்கும் திறைப் பணத்தை செலுத்த தேவையில்லை என்பதும் ஒன்று[22] அவரைத் தொடர்ந்து இராமநாதபுரம் அரசு கட்டிலுக்கு வந்த

For more ebooks vist: http://getmyebook.in/

பன்னிரண்டு சேதுபதிகளும், ஒரு நூற்றாண்டுக்கு மேலாக தன்னாசாக இருந்து வந்ததை வரலாறு விளம்புகிறது.

அவர்களின் பட்டியலில், இறுதியாக இடம் பெறுபவர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதி என்பவர். அதுவரை எந்த சேதுபதி மன்னரும் சந்தித்திராத பிரச்சினைகளையும், அனுபவித்தறியாத அல்லல்களையும் இந்த மன்னர் அணுக வேண்டியிருந்தது. அந்த ஆபத்தான கொடிய சோதனையில், தமது பரம்பரையின் ஆளும் உரிமையை மட்டும் அல்லாமல் தமது இனிய உயிரையே அர்ப்பணித்தார்.

தன்மான உணர்வினுக்கும் தன்னரசுப் போக்கிற்கும் அத்தகைய உயர்ந்த விலையை-தியாகத்தை-அளித்த அந்த மன்னரது வாழ்க்கையை வரலாற்றுப் பார்வையில் ஆய்வு செய்வது இந்த முயற்சி.

1. ↑ ஜெயங்கொண்டார், கலிங்கத்துப் பரணி, பாடல் எண்.354
2. ↑ கோவூர் கிழார், புறநானூறு, பாடல் எண் 31
3. ↑ கலித்தொகை
4. ↑ நீலகண்ட சாஸ்திரி K. A., Ceylon Historical Journal, Vol. IV. pp. 1-4.
5. ↑ கதிர்வேல் Dr. S., History of Marava (1977), pp. 8 & 9.
6. ↑ Rajaram Row T. Ramnad Manual (1891), p. 33.
7. ↑ Edgar Thurston, Caste and Tribes of South India 19 09, Vol. 5 pp.
8. ↑ Mahalingam, T. V., Mackenzie Mss. pp. 200-212. (1975), Vol. I
9. ↑ Rajaram Row, T., Ramnad Manual (1891), pp. 204, 205
10. ↑ Edgar Thurston, Castes and Tribes of South India, Vol. V. pp. 25, 26.
11. ↑ ரா. ராகவ ஐயங்கார், மகாவித்வான், சேது நாடும் தமிழும் (1932).

For more ebooks vist: http://getmyebook.in/

12. ↑ Seshadri. Dr. Sethupathis of Ramnad (1972), Thesis, p. 62.
13. ↑ Nelson, Manual of Madura Country (1868), Part 111 pp. 11-12,
14. ↑ Pudukkottai - State Inscriptions, Mahalingam, T.V., Mackenzie Ms. – No 36. (1974), pp. 200, 202. Rajaram Row, T., Ramnad Manual (1891), pp.
15. ↑ R. Srinivasa Iyor, Brios notes on the History and Traditions of Ramoswaram Temple, (1914), p. 4.
16. ↑ Fr. Heras, Aravidu Dynasty p 1 56
17. ↑ Taylor, Old Historical Manuscripts, Vol. II
18. ↑ தளவாய் தளபதி பதவியை ஒத்த அரசுப் பணி, தெலுங்கு மொழிச் சொல்.
19. ↑ Sathianatha Iyer, Thamilaham In 17th Century (1956)
20. ↑ Rajaram Raw, Ramnad Manual (1891). P. 22-1.
21. ↑ மிதிலைப்பட்டி அழபிய சிற்றம்பலக் கவிராயர், தளசிங்க மாலை; செந்தமிழ் தொகுதி 6, பக். 44-50.
22. ↑ Sathiyanatha Iyer, History of Madurai Nayaks (1924), p. 136.

---

For more ebooks vist: http://getmyebook.in/

# 2
# இராமநாதபுரம் கோட்டை

மறவர் சீமையின் மகுடம் இராமநாதபுரம் கோட்டை, இதனை அமைத்த மன்னர் யார் என்பது வரலாற்றில் இல்லை. ஆனால் இங்கு இருந்த மண்கோட்டையை கல்கோட்டையாக அமைத்து சேதுபதி மன்னர்களது தலைமையிடமாக மாற்றி அமைத்தவர் வரலாறு புகழும் கிழவன் சேதுபதி என்ற ரகுநாத சேதுபதி (1675-1710) ஆகும்.[1] ஏனெனில் அதுவரை சேது மன்னர்கள் குலோத்துங்க சோழ நல்லூர், விரையாதகண்டன் புகலூர், ஆகிய ஊர்களை தங்களது இருப்பிடங்களாகக் கொண்டு ஆட்சிசெய்து வந்தனர். கிழவன் சேதுபதி ஆட்சிக் காலத்தில் சேதுநாட்டின் எல்லைகள் பரந்து விரிந்த பரப்பினை கொண்டிருந்ததாலும் எல்லைகளில் இருந்த மதுரை நாயக்க அரசு, தஞ்சை மாரத்திய அரசு ஆகியோரின் கண்ணோட்டம் இந்த கடற்கரை நாட்டின் மீது நிலைத்து வந்ததாலும் இந்த நாட்டின் தலைமையிடமாக இராமநாதபுரத்தை தேர்வு செய்தார் கிழவன் சேதுபதி

இந்த கோட்டை இருபத்து ஏழு அடி உயரமும், ஐந்து அடி அகலமும் கொண்ட கல்கோட்டையாக போர்ப் பணிக்கு உதவும் நான்கு அலங்கங்களைக் கொண்டதாகவும் அவர் அமைத்தார். நீண்ட சதுரவடிவில் கிழக்குப் பக்கத்தில் மட்டும் ஒரே ஒரு தலைவாயிலைக் கொண்டதாகவும் நான்கு புறமும்

For more ebooks vist: http://getmyebook.in/

ஆழமான அகழியை அங்கமாகவும் பெற்றிருந்தது இந்த அரண். இதனையும் இதனுள் அமைக்கப்பட்ட இராமலிங்க விலாசம் என வழங்கப்படும் அழகிய மாளிகையையும் அமைக்க சேதுபதி மன்னருக்கு பெரிதும் உறுதுணையாக இருந்த அமைச்சர் வள்ளல் சீதக்காதி ஆவார்.[2] கிழக்கரை நகரின் பெருவணிகரான அவரது இயற்பெயர் செய்கு அப்துல் காதிரு மரக்காயர் ஆகும். இந்தக் கோட்டை அருகே நடந்த பெரும் போர்களில் கிழவன் சேதுபதி மதுரையிலிருந்து வந்த திருமலை மன்னரது படையையும் பின்னர் இராணி மங்கம்மாளது படையையும் அழித்து ஒழித்து, மறவர் குடியினரது மங்காத புகழை வரலாற்றில் பதித்து வைத்துள்ளார்.[3]

இந்தக் கோட்டை பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இவ்விதம் காட்சியளித்ததாக :

" ...இந்தக் கோட்டை அரணில் நாற்பத்து நான்கு அலங்கங்கள் இருக்கின்றன. அதனைச் சூழ்ந்து அகழியும் உள்ளது. ஆனால் தண்ணிர் இல்லை. மழைக்காலத்தில் தான் இங்கு நீர் நிறைந்து இருக்கும். கோட்டையின் நாலாபுறத்திலும் பரந்த மைதானம். கோட்டை மீது பெரிதும் சிறிதுமான பீரங்கிகள் ஏற்றி வைக்கப்பட்டுள்ளன. இவை தவிர்த்து நான்கு பெரிய பெங்காசிப் பீரங்கிகளும் உள்ளன. அவை வெடிக்கின்ற குண்டுகளை சுமார் இரண்டு மைல் தொலைவு வரையில் எறிய முடியும். மற்றும் இன்னும் ஐம்பது பீரங்கிகள், கோட்டைக்குள் உள்ளன இந்த கோட்டைக்கு கிழக்கே ஒரு பேட்டையும்,

For more ebooks vist: http://getmyebook.in/

அதனையடுத்து ஒரு கோவிலும்-குளமும் உள்ளன. வடக்கே ஏராளமான விளை நிலங்கள்... *ஒரு ஆவணத்தில்[4] காணப்படுகிறது*

ஆரவாரமில்லாது அமைதியாக இருந்த இந்த கோட்டையை கைப்பற்ற, கி.பி. 1771-ல் தஞ்சை மன்னன் துல்ஜாஜியினி தலைமையிலான பெரும் படை முயன்றது. இராமநாதபுரம் ஆட்சிக்கு உரிமை கொண்டாடிய மாப்பிள்ளைத் தேவனும் அவனது சகோதரனும் தஞ்சைப் படைகளை இராமநாதபுரச் சீமையின் வடகோடியில் உள்ள ஒருரில் இருந்து, இராமநாதபுரத்திற்கு வழி காண்பித்து அழைத்து வந்தனர். நவாப்பின் படைகளைப் போன்று மாறுடை தரித்த தஞ்சை மன்னரது மராத்தியப் படைகள் (4000 குதிரை வீரர்களும் 50,000 சிப்பாய்களும்) இராமநாதபுரம் சீமையின் வட எல்லையில் முதுவார் நத்தம் கிராமத்தை 3-2-1771-ல் எதிர்பாராத வண்ணம் தாக்கின. இந்த அத்துமீறலை எதிர்த்துப் போரிட்ட மறவர் அணி தொண்ணுூறு வீரமறவர்களை இழந்து ஆறுமுகம் கோட்டைக்குப் பின்வாங்கியது. இதனைத் தொடர்ந்து தஞ்சைப் படைகளை நடத்தி வந்த தளபதி மானோஜி, சுந்தரபாண்டியன் பட்டினம், வாரியூர், கண்ணன்குடி, மங்கலக்குடி, கொண்டவளந்தான், அமைந்தக்குடி ஆகிய மறவர் நிலைகளைக் கைப்பற்றி முன்னேறினார். அடுத்து, இராமநாதபுரம் கோட்டைக்கு நுழைவாயில் போல அமைந்து இருந்த ஆறுமுகம் கோட்டை, மராத்தியரது தாக்குதலைச் சமாளிக்க இயலாமல் 19-2-1771-ல் விழுந்தது. அடுத்த நாள்

For more ebooks vist: http://getmyebook.in/

அங்கிருந்து இருபது கல் தொலைவில் உள்ள இராமநாதபுரம் கோட்டையை அந்தப் படைகள் நெருங்கின. துரோகிகளை காட்டி மக்கள் ஆதரவு பெற முயன்ற தஞ்சை மன்னனது எண்ணக் கோட்டைக்கு இடைஞ்சலாக இந்தக் கோட்டை, இரும்புக் கோட்டையாகத் தோன்றியது. பத்து வயது நிரம்பிய சேதுபதி இளவரசரது சார்பாக அரசியாரும், பிரதானி பிச்சைப்பிள்ளையும் மறவர்களின் மானத்தைக் காக்கும் இந்தப் போரில் எதிர்நடவடிக்கைக்கான எல்லா முயற்சிகளிலும் ஈடுபட்டிருந்தனர். எத்தனையோ ஒலைகள் அனுப்பி உதவிகோரியும் ஆற்காட்டு நவாப்பு அசையவில்லை. ஆனால், எதிரியை தீவிரமாக எதிர்க்குமாறு ஆலோசனை வழங்கினார் அவர்.[5] மறவர் சீமையின் தன்மானத்தைக் காக்கும் இந்தப் போரில் தஞ்சைப் படையின் எதிர் அணியில் சேர்ந்து கொள்ள புதுக்கோட்டைத் தொண்டமான் ஆற்காட்டு நவாப்பின் அனுமதி கோரினார். ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் சும்மந்தான் கான் சாயபுவின் புரட்சியை அடக்க மறவர் உதவியைப் பெற்ற நவாப், இப்பொழுது அவர்களுக்கு உதவ முன்வராமல் மௌனம் சாதித் தார். என்றாலும் கீழ்க்கரையில் சேதுபதி மன்னரது அனுமதியுடன் பண்டகசாலை நடத்தி வந்த டச்சுக்காரர்களின் பரங்கி அணி ஒன்றும் பிரதானி பிச்சப்பிள்ளையின் ஆணையை எதிர்பார்த்து தயார் நிலையில் இருந்தன. இந்த இறுதி ஏற்பாடுகளையும் கடந்து இராமநாதபுரம் கோட்டை எதிரியிடம் சிக்கி விட்டால்...மானம் அழிந்தபின் வாழாமை முன் இனிது அல்லவா? அரசியாரும் கோட்டையில் உள்ள மகளிரும்

For more ebooks vist: http://getmyebook.in/

அக்கினி புகுவதற்கு ஆயத்தமாக வெடிமருந்து பொதிகளை கொண்டு அமைத்த மேடை ஒன்றில் தயாராக இருந்தனர்.[6]

போர் துவங்கி பத்தொன்பது நாட்கள் முடிந்து விட்டன. தஞ்சை மன்னர் திருப்புல்லானி அரண்மையில் தங்கி இருந்து கொண்டு இராமநாதபுரம் முற்றுகைப் போரை கவனித்து வந்தார். அடிக்கடி பாசறைக்கு வந்து தமது படைகளுக்கு உற்சாகம் ஊட்டி வந்ததுடன், தங்க வெள்ளி நாணயங்களையும் அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கி ஆக்கம் தந்து வந்தார்.[7] எந்தவகையிலும் இராமநாதபுரம் கோட்டையைப் பிடித்தே திருவேன் என துல்ஜாஜி மன்னர் இறுமாப்பாகப் பேசிவந்தார். இராமநாதபுரம் மறவர்கள் நாலைந்து நாட்களில் சரணடைந்து விடுவர் அல்லது தமது வாளுக்கு இரையாகி விடுவர் என காலக் கெடு நிர்ணயம் செய்து இருந்தார். அத்துடன், நாலு கோட்டைச் சீமையையும் (சிவகங்கைச் சீமை), தொண்டமான் சிமையையும், கைப்பற்றும் ஆசைக் கனவுகளில் அவர் ஆழ்ந்து இருந்தார்.[8] யாருக்கும் வெற்றி தோல்வி என்ற இறுதி நிலை ஏற்படாததால், அநேகமாக, இந்த 'ஊமைப்' போரினால் இருதரப்பினரும் இளைத்து களைத்துப் போன நிலைக்கு வந்துவிட்டனர்.

இருபதாவது நாள் பொழுது புலருவதற்கு இன்னும் சில நாழிகைகள் நேரம் இருந்தன. திடீர் என கடல் ஆர்ப்பரிப்பது போன்ற இரைச்சல். இராமநாதபுரம்

For more ebooks vist: http://getmyebook.in/

கோட்டைக்கு மேற்கே உள்ள பெரிய கண்மாய் நீர்த் தேக்கத்தின் வெள்ளம் கரையை உடைத்து பிரவாகமாக வந்து கொண்டிருந்தது[9] கோட்டையின் மேற்கு, வடக்கு பகுதிகளைக் கடந்து கிழக்குப் பகுதியில் அமைந்து இருந்த தஞ்சைப் படைகளின் பாசறையை அந்த வெள்ளம் சில நிமிடங்களில் மூழ்கச் செய்தது. ஆயுதங்கள், வெடி மருந்து, அரிசி மூட்டைகள், சாராயப் பீப்பாய்கள். பொதி வண்டிகள், மாடுகள், குதிரைகள்-அனைத்தையும் வெள்ளம் வலிந்து இழுத்துச் சென்றது. எதிர்பாராத இந்த இடர்ப்பாட்டினால் வெள்ளத்தில் மூழ்கிய ஒரு சிலரைத் தவிர ஏனைய வீரர்கள் உயிர்தப்பி, இங்கும் அங்கும் சிதறி ஓடினர். எங்கும் அவலக்குரல் எதிரொலித்தது. அன்றைய காலைப் பொழுது அலங்கோலக் காட்சியாக காணப்பட்டது. இந்த நிலையில் போரைத் தொடர்ந்து நடத்துவது இயலாதது என்பதை உணர்ந்த தஞ்சை மன்னர், இராமநாதபுரம் அரசியிடம் சமரசம் பேசி உடன்பாடு கண்டார்.[10] போர் செலவுக்காக ஒரு லட்சம் வெள்ளி நாணயங்களுடன், சில சலுகைகளையும் பெற்று அவர் தஞ்சை திரும்பினார்.

1772-ல் மே மாதம், கடைசி வாரம், மீண்டும் ஒரு படை யெடுப்பு: இராமநாதபுரம் கோட்டை வெளியில் தஞ்சைப் படையைவிட அளவிலும், வலிமையிலும், மிஞ்சிய ஆற்காட்டு நவாப்பின் படையும், கும்பெனியாரின் பரங்கிப்படையும் இணைந்து நின்று போர்ப்பறை கொட்டின.[11] எதிர்பாராத போர். பதினைந்துமாத இடைவெளியில் இராமநாதபுரம் கண்ட இந்தப் படையெடுப்பிற்கு நவாப்பின் மகன்

For more ebooks vist: http://getmyebook.in/

உம்தத்-உல்உம்ராவும், ஆங்கிலத் தளபதி ஜோசப் சுமித்தும் இணைந்து தலைமை தாங்கினர். இந்தப் படை அணி திருச்சிராப்பள்ளியில் இருந்து விராலிமலை, நத்தம் வழியாக யாரும் எதிர்பாராத நிலையில் இராமநாதபுரத்திற்கு வந்து சேர்ந்தது. அதே சமயத்தில், கும்பெனியாரின் இன்னொரு அணி மதுரைக்கோட்டையில் இருந்து கிழக்கே திருப்பூவனம் நோக்கிப் புறப்பட்டது. சிவகங்கைச் சீமையில் இருந்து இராமநாதபுரத்திற்கு ராணுவ உதவி எதுவும் வராமல் தடை செய்வதற்காக[12] பாசறை அணி வகுப்பிற்குப் பிறகு இராமநாதபுரம் அரசியாருக்கு எச்சரிக்கை ஒலை அனுப்பப்பட்டது. இரண்டு நாட்களாக கோட்டைக்கு உள்ளும் புறமும் வெள்ளைக்கொடி தாங்கிய தூதுவர்கள் குதிரைகளில் வருவதும் போவதுமாக இருந்தனர். அரசியாருக்கு, நவாப் வழங்க வேண்டிய சமாதான உடன்பாட்டில் எத்தகைய வாசகம் அமைய வேண்டும் என்பதில் சர்ச்சைகள் தொடர்ந்தன.

ஆற்காட்டு நவாப்பின் ஆதிக்கத்தை வெளிப்படையாக சேதுபதி ஏற்றுக் கொள்ளவில்லை, என்பதை புரிந்து கொண்ட நவாப்பின் மகனுக்கு ஆத்திரம் வந்து விட்டது போலும். திடீரென கோட்டையைத் தாக்குமாறு உத்தரவிட்டார். பன்னிரண்டு பவுண்டு குண்டுகளை சொரியும் பேய்-வாய் பீரங்கி இரண்டு, தமது அழிவு வாயைத் திறந்து அக்கினி மழை பெய்தன. பலன் இல்லை. அடுத்த நாளும் (2.6, 1772) பீரங்கித் தாக்குதல் தொடர்ந்தது. பதினெட்டு பவுண்ட் பீரங்கிகள் நான்கு, கூடுதலாக அன்றைய தாக்குதல்களில்

For more ebooks vist: http://getmyebook.in/

கும்பெனியரால் ஈடுபடுத்தப்பட்டன. நாள் முழுவதும் நீடித்த அந்த பலத்த தாக்குதலினால் கோட்டையின் கிழக்கு மதிலில் ஒரு இடத்தில் பெரும் வெடிப்பு ஏற்பட்டு பிளவு தோன்றியது.[13] கிழவன் சேதுபதி மன்னரால் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கடுக்காய் சாற்றிலும், கருப்பட்டி நீரிலும், நனைத்த செங்கற்களை கொண்டு எழுப்பிய அந்த உறுதியான சுவர், இத்தனை ஆண்டுகளாக இயற்கையின் அழிமானத்திற்கு தப்பி நின்றதே பெரும் செயலாகும்.

கோட்டைக்குள் நுழைந்து முன்னேறுவதற்காக மூன்று நாட்களாக ஆயத்த நிலையில் காத்திருந்த நவாப்பின் படைகள் தளபதி பிரைட்வயிட் என்ற பரங்கியின் தலைமையில் வெடித்து பிளந்த மதில் வழியாக கோட்டைக்குள் புகுந்தனர்.[14] அந்நியர்களைக் கண்ட மறவர்கள், ஆர்ப்பரித்து ஆவேசத்துடன் அவர்களை மோதினர். கடும் போர். இரண்டாயிரத்துக்கும் அதிகமான மறவர் களத்தில் பலியாயினர். ஆக்கிர மிப்புப் படை கோட்டையில் உள்ள மக்களது உடைமைகளை கொள்ளை கொண்டது.[15] இராமநாதபுரம் கோட்டையைக் கைப்பற்றி விவரத்தை தளபதி ஜோசப் ஸ்மித் விவரமான அறிக்கை மூலமாக சென்னை கோட்டைக்கு அனுப்பினார். 'இந்தக் கோட்டை பழமையானது. இங்குள்ள அரண்மனை இந்த நாட்டில் நான் கண்ட மிகச்சிறந்த கட்டுமானங்களில் ஒன்றாகும். அங்குள்ள அரச குடும்பத்தினர் கீழை நாடுகளுக்குரிய சிறந்த ஆடம்பரங்களில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு இந்த வாழ்க்கை இனியும் எங்கே கிட்டப்

For more ebooks vist: http://getmyebook.in/

போகிறது! அரசர் பன்னிரண்டு வயது பாலகன். அரசியார் எங்களுடைய பார்வையில் தட்டுப்படவில்லை. மணம் புரியத்தக்க இரண்டு பெண்மக்கள் அவருக்கு இருக்கின்றனர். இவர்களுக்கு நேர்ந்துள்ள இக்கட்டான நிலைக்கு நான் மிகவும் வருந்துகிறேன். இங்கு மூவாயிரம் வீரர்கள் இருந்தும் அவர்கள் மீது திடீரென தாக்குதல் தொடுக்கப்பட்டதால் அவர்களுக்கு என்ன செய்வது? நிலைமையை எப்படி சமாளிப்பது என்பது புரியவில்லை' எனக் குறிப்பிட்டு இருந்தார்.[16]

இன்னொரு அறிக்கையில் '...இந்த தாக்குதலில் இரண்டு பரங்கிகள் கொல்லப்பட்டனர். தளபதி பிரைட் மட்டும் ஈட்டித் தாக்குதலினால் படுகாயம் அடைந்தார். பீரங்கிப்படை அணி சிறப்பாகவும் அமைதியாகவும் செயல்பட்டது. எங்களை எதிர்த்த மறவர்களும் மிகுந்த வீரத்துடன் போரிட்டனர். குடிமக்களும் ஏதாவது ஒரு ஆயுதத்தை ஏந்தியவர்களாக வந்து போரிட்டனர். தாக்குதல் திடீரென தொடுக்கப்பட்டதால் அவர்கள் திகைத்து தவித்தனர். இந்த நிலையில் அவர்களை வெற்றி கொள்வது நமக்கு எளிதாக அமைந்து விட்டது. சிலர் அரண்மனைக்குள் ஓடினர். அரசியாருக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக, இன்னும் சிலர் கோட்டை மதிலில் இருந்து விழுந்து இறந்தனர். நமது துருப்புகள் முன்னேறி வருவதற்குள் இந்தக் குழப்பம் முழுவதும் ஒருவகையாக ஓய்ந்து விட்டது. அரசியாரும், இளவரசரும், பிரதாவி பிச்சைப்பிள்ளையும்

For more ebooks vist: http://getmyebook.in/

இப்பொழுது நமது கைதிகளாக உள்ளனர்' என்ற விவரம் தெரிவித்து[17] இருந்தார் தளபதி ஜோசப்.

கோட்டையைக் கைப்பற்றிய பிறகு, இளைஞரான நவாப்பும் அரண்மனையின் ஒரு பகுதியில் அரசு குடும்பத்தினருக்கு அண்மையில் தமது இருக்கையை ஏற்படுத்திக் கொண்டார். இதுபற்றி தளபதி ஜோசப் ஸ்மித் :...கவலையில் ஆழ்ந்துள்ள அரச குடும்பத்தினருக்காக நான் மிகவும் அனுதாபப்படுகிறேன். இது, அவர்களே தேடிக் கொண்ட நிலை. நானும் நவாப்பும் நீட்டிய வேண்டுகோளை புறக்கணித்து நமது பெரும்படைக்கு எதிராக தங்கள் கோட்டையைக் காத்துக்கொள்ள முயன்ற இவர் களது தவறினை எண்ணிப் பார்க்க இயலவில்லை. அங்குள்ள கொள்ளைப் பொருள்கள் அனைத்தும் அவைகளைக் கைப்பற்றிய வெற்றியாளருக்கு உரியது என்பதை நவாப்பிடம் தெரிவித்தேன். அது அவருக்குப் பொருத்தமாக தோன்றவில்லை. என்றாலும் கோரிக்கையில் அமைந்துள்ள நேர்மையைப் புரிந்து கொண்டு அரண்மனையில் என்ன இருக்கும்? எவை பாதுகாக்கப்பட்டிருக்கும் என்பதைத் தெரிந்தவராக, அரசியாரின் இருப்பிடம் புனிதமாக மதிக்கப்பட்டு வந்ததையும் உணர்ந்து கொண்டு, படைத் தலைவர் ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ஆயிரம் பணமும், அவருக்கு அடுத்துள்ள துணைத்தளபதி போன்றோருக்கு தலைக்கு அறுநூறு பணமும் வழங்க முன்வந்தார். இது ஒன்றும் மோசமான பேரம் இல்லை. ஆதலால் இதனை தங்களது ஒப்புதலின் பேரில்

For more ebooks vist: http://getmyebook.in/

ஏற்றுக்கொள்ள எண்ணியுள்ளேன்...' என்று இன்னொரு அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.[18]

அடுத்து, இராமநாதபுரம் அரசியாரையும், இளவரசரையும் அவரது இரு சகோதரிகளையும் பாதுகாப்புக் கைதிகளாக இராமநாதபுரத்திலிருந்து நூறு கல் தொலைவில் உள்ள திருச்சிராப்பள்ளிக் கோட்டைக்கு அனுப்பப்பட்டனர்.[19] அப்பொழுது சென்னைக்கு அடுத்து, கிழக்கிந்திய கம்பெனியாரது பிரதான இராணுவ நிலையாக திருச்சிராப்பள்ளி கோட்டை விளங்கியது அத்துடன் இந்தக் கோட்டைக்கும் இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களுக்கும் ஏற்கனவே ஒரு கசப்பான தொடர்பு இருந்தது இராமநாதபுரம் மன்னராக இருந்த ராஜ சூரிய சேதுபதி, கி.பி 1672-ல், தஞ்சைக்கும் மதுரைக்கும் நிகழ்ந்த போரில் தஞ்சை மன்னருக்கு உதவுவதற்காக திருச்சிப் பகுதிக்குச் சென்றார். மதுரை மன்னரது தளபதியான வேங்கட கிருஷ்ணப்பா, சேதுபதி மன்னரைச் சூழ்ச்சி செய்து திருச்சிராப்பள்ளிக் கோட்டைக்கு அழைத்துச் சென்று, நயவஞ்சகமாக அங்கு சிறையில் அடைத்ததுடன் அங்கேயே கொன்று போட்டார்.[20] அந்த நிகழ்ச்சிக்கு சரியாக நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த சேதுபதி மன்னர் மீண்டும் திருச்சிக் கோட்டையில் சிறை வைக்கப்பட்டார்.

ஆற்காட்டு நவாப் முகமது அலியின் ஆசைக்கனவு ஒரு

For more ebooks vist: http://getmyebook.in/

வகையாக நிறைவேறியது. இராமனாதபுரம் கோட்டையைக் கைப்பற்றி மறவர் சீமையை தமது சர்க்கார் சீமையாக ஆக்க வேண்டும் என்பது அவரது கடந்த இருபது வருட கால உள்ளக் கிடைக்கையாக இருந்தது. என்றாலும் . நாட்டின் பல்வேறு சூழ்நிலைகள் அவரை இத்தகைய தீவிர நடவடிக்கையுடன் மறவர் சீமைக்குள் புகுவதைத் தடுத்து வந்தன. கி.பி. 1752-ல், தமது எதிரியான சந்தாசாகிபுவை தீர்த்துக்கட்டிய பிறகும் அடுத் தடுத்து பல தலைவலிகள் அவரைத் தழுவி நின்றன. மதுரை நாயக்கர்களுக்கு முன்னுறு ஆண்டுகளுக்கு மேலாக கட்டுப்பட்டு இருந்த நெல்லைச் சீமைப் பாளையக்காரர்கள், ஆற்காட்டு நவாப்பிற்கு எதிராக கிளர்ந்து எழுந்தனர். அவர்களை அடக்குவதற்காக அனுப்பப்பட்ட அவரது தமையனார், மாபூஸ்கான் அவர்களுடன் கூட்டுச் சேர்ந்து அவருக்கு உதவும் கம்பெனியாரையே எதிர்த்தார்.[21] இந்தக் கிளர்ச்சியினால் வருமானம் மிகவும் பாதிக்கப்பட்டதால், அவர்களை அடக்குவதற்காக கும்பெனியாரது போர்ச்செலவு பட்டியலில் லட்சக்கணக்கில் நவாப்பின் கடன் ஏறியது. பாளையக்காரர்களையும், மதுரைக் கள்ளர்களையும் அடக்கி, நவாப்பினது வருமானத்தை கம்மந்தான்-கான்சாகிபு வசூலித்து வந்த பொழுதிலும், அவருக்கும் நவாப்பிற்கும் இடையே எழுந்த பிணக்கு காரணமாக, கி.பி. 1763-ல் மதுரைப் போர் முடிவில் கான் சாகிபு துக்கிலே தொங் கிய பிறகும், பாளையக்காரர்கள் பலர் தொடர்ந்து கிளர்ச்சியில் ஈடுபட்டனர். குறிப்பாக

For more ebooks vist: http://getmyebook.in/

அரியலூர், உடையார் பாளையம், பாளையங்களின் கிளர்ச்சி, திருவாங்கூர் மன்னருடன் போர் (1765), மைசூர் மன்னர் ஹைதர் அலி கானுடன் முதல் மைசூர் போர் (1767-69), ஆற்காட்டுப் போர் (1780-82) இவை போன்ற பல இடர்ப்பாடுகள்-தொடர் நிகழ்ச்சிகள், இதற்கிடையில் மறவர் சீமையில் நுழைவதற்காக படை உதவி கோரி, கும்பெனியாருக்கு கடிதம் ஒன்று அனுப்பினார் நவாப். அதில் இவர் குறிப்பிட்டிருந்த காரணங்கள் வினோதமானவையாக இருந்தன.[22]

1. இராமநாதபுரம் மன்னர், நவாப்பின் அனுமதியில்லாமல் மறவர் சீமையின் மன்னராக முடிசூட்டிக் கொண்டிருப்பது.

2. நவாப்பிற்குச் சொந்தமான பல ஊர்களை தமது சீமையில் சேர்த்து ஆக்கிரமித்து வந்திருப்பது.

3. அந்நியர்களான டச்சுக்காரர்களுக்கு மறவர் சீமையில் தொழில் மையம், பண்டகசாலை ஆகியவைகள் நிறுவ அனுமதி அளித்திருப்பது.

4. நவாப்பின் மேலாதிக்கத்தை ஏற்று கப்பத்தொகையை இதுவரை செலுத்தாமல் இருந்து வருவது.[23]

இந்த காரணங்கள் அனைத்தும் பொருத்தமற்றவை என்று வரலாறு தெரிந்த யாரும் எளிதில் கூறிவிட

For more ebooks vist: http://getmyebook.in/

முடியும். மறவர் சீமையின் அரசுக் கட்டிலில் அமருவதற்கு அந்த நாட்டு மக்களின் ஒப்புதலைத் தவிர வெளியார் யாரிடமும் சேதுபதி மன்னர் அனுமதி பெறத் தேவையில்லை. அதனைப் போன்றே அந்த நாட்டிற்குள் அந்நியர்கள் தொழில் நடத்த சேதுபதி மன்னர் தான் அனுமதி வழங்க வேண்டுமே தவிர, வெளியாரது அனுமதி எதுவும் தேவையில்லை. டச்சுக் கிழக்கு இந்தியக் கம்பெனியார், நவாப் முகமது அலி பிறப்பதற்கு முன்னரே கி.பி. 1638, 1659, 1698 ஆகிய வருடங்களில் கிழவன் சேதுபதியுடன் உடன்படிக் கைகளைச் செய்து கொண்டிருந்தனர். மன்னார் வளைகுடாவின், எதிர்க்கரையான (இலங்கை) கொண்டச்சியில் முத்துக் குளித்தும் வந்தனர். கி. பி. 1758-ல் கீழக்கரையில் தொழில் மையம் ஒன்றினை ஏற்படுத்தி கைத்தறித் துணிகளை தயாரித்து வந்ததுடன், அங்கிருந்து அவைகளை தங்களது நாட்டிற்கும் ஏற்றுமதி செய்து வந்தனர்.

மேலும், மறவர் சீமையின் கிழக்கே கடலும், வடக்கும் மேற்கும் சிவகங்கைச் சீமையும், தெற்கே நெல்லைச் சீமை பாளையக்காரர் பகுதிகளும் இருக்கின்றனவே தவிர நவாப்பின் ஊர் எதுவும் அங்கு இல்லை. கப்பத் தொகையைப் பொறுத்த வரையில் சேது மன்னர்கள் எந்த அரசிற்கும் கைகட்டி திறை செலுத்தியது கிடையாது என்பது வரலாறு. இராமநாதபுரம் மறவர்கள் மதுரை நாயக்கர்களது ஆதிக்கத்திற்குட்பட்ட குறுநில மன்னராக இருந்தாலும் கி. பி. 1638, 1659-ல் டச்சுக்காரர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கை காரணமாக அவர்களுக்கு

For more ebooks vist: http://getmyebook.in/

எதிரானவர்களாகவே செயல்பட்டு வந்தனர்.[24] அவர்களை மதித்து நடப்பவர்களாக இல்லை.[25] பெயரளவில் தான் மறவர்கள் மதுரை மன்னர்களுக்குக் கட்டுப்பட்டிருந்ததை 8-11-1709 தேசிய மார்ட்டின் பாதிரியாரின் கடிதம் ஊர்ஜிதம் செய்கின்றது. திருமலை நாயக்கர் கூட சேதுபதிகளிடம் கப்பம் கேட்க தயங்கிவந்தார் என கும்பெனியாரது ஆய்வு அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. புதுக்கோட்டை தொண்டமானைத் தோற்கடித்து மணிப்பள்ளம் காட்டிற்குள் துரத்திய சந்தாசாயபு கூட, மறவர் நாட்டின் பக்கம் திரும்பிப் பார்க்கவில்லை.[26] இதனைப் போன்றே மதுரையை ஆக்கிரமித்த மராட்டிய தளபதியான அப்பாஜிராவும், பின்னர் அவர்களைத் துரத்திவிட்டு கி.பி. 1743-ல் மதுரையை கைப்பற்றிய நிஜாம் ஆஸம்ஜாவும் மறவர்களை அடக்குவதற்கு எத்தனிக்கவில்லை.[27] ஆதலால் கும் பெனியாருக்கு நவாப்பினுடைய அந்தரங்கம் புரியாமலில்லை. எனினும் படையெடுப்பு மூலம் நவாப்பினால் தங்களுக்கு ஆதாயமும் சலுகைகளும் கிட்டுவதை பரங்கிகள் இழப்பதற்கு தயாராக இல்லை. உடனடியாக திருச்சிக்கு தகவல் அனுப்பி அங்குள்ள அவர்களது படை அணிகளைப் போருக்கு ஆயத்தப்படுத்தினர்.

அதனுடைய தொடர்ச்சி தான் நாம் மேலே கண்ட இராமநாதபுரம் கோட்டைப் போரும், இராமநாதபுரம் சேதுபதி மன்னரும் அவரது குடும்பத்தினரும் சிறைப்பிடிக்கப்பட்டதும் ஆகும். அன்று முதல் இராமநாதபுரம் கோட்டை ஆற்காட்டு நவாப்பினால்

For more ebooks vist: http://getmyebook.in/

தளபதி மார்ட்டின்ஸ் என்னும் பரங்கியின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது.

ஆற்காட்டின் இளைய நவாப் உம்தத்துல்-உம்ராவும் தளபதி ஜோசப் சுமித்தும் தங்களது படைகளை அடுத்த இலக்கான சிவகங்கை கோட்டையை நோக்கி வழி நடத்தினர்.[28]


1. ↑ Rajaram Row. T., Ramnad Manual (1891,) p. 226.
2. ↑ Rajaram Row, T., Ramnad Manual (1891), p. 232
3. ↑ Rajaram Row, T., Ramnad Manual (1891), p. 232
4. ↑ Military Country Correspondence Vol. 29(1772), p. 159.
5. ↑ Military Country. Correspondence. Vol. IX. (1 0 2 I 771), pp. 36-38.
6. ↑ M.C.C. Vol. 19, 28-2-1771, p. 82.
7. ↑ M. C. C., Vol. 19-3–1771 pp. 114, 115.
8. ↑ M. C. C., Vol. 19, 9-3-1771. pp. 114-115.
9. ↑ M. C. C., Vol. 19, 4-3-1771. 6-3-1771, pp. 89-93,
10. ↑ M. C. C., Vol. 19, 15-3-1771, p. 106.
11. ↑ Vibart Maj. H. M., Military History of Madras Engineers & Pioneers (1881), Vol. I, pp. 120-121.
12. ↑ Mily. Consultations. Vol. 42, 15-6-1771, p. 44
13. ↑ Vibart Maj. H. M., Military History of Madras Engineers (1881), Vol. I, p. 120.
14. ↑ Military Consultations Vol. 42, 8-6-1772, pp. 479. 86.
15. ↑ MIly, Conn., Vol. 42, 8-6-1772, p. 488.
16. ↑ MIly, con, Vol 42. 8.6-1772, p. 488.
17. ↑ Mily. Cons., Vol. 42-B, 8-6-1772, p. 410.
18. ↑ Mily Cons., Vol. 42-B, 8-6-1772, p. 489
19. ↑ Political Despatches to England, Vol. 7–9, pp. 80–81


For more ebooks vist: http://getmyebook.in/

20. ↑ Rajaram Row. T. Ramnad Manual (1891), p. 226
21. ↑ M. C. C., Vol. 5, (1757) p, 20, 50, 51.
22. ↑ M. C. C., Vol. 19, 20-2-1771, p. 247 and M. C. C., Vol. 19. 24-3-1771, pp. 119-23.
23. ↑ M. C. C., Vol. 21, 4–2–1772, p. 101-102.
24. ↑ Resolution Passed at Dutch Council, Colombon 27-3-1766
25. ↑ Valentina, History of East Indias, Vol. V, p. 164. M.
26. ↑ M. C. C. Vol. V11, p. 343.
27. ↑ Rajayyan, Dr. History of Madurai (1974), Cl. II.
28. ↑ Mily, Cons. Vol. 42, 26-6-1772, p. 534.

For more ebooks vist: http://getmyebook.in/

3

## சேதுபதி இல்லாத சீமையிலே

மறவர் சீமையின் முதல் குடிமகனான சேதுபதிக்கே அந்த மண்ணிலே உரிமை இல்லாது போயிற்று. ஆறு நூற்றாண்டுகளுக்கு மேலாக அந்த மண்ணின் ஆதிக்கத்தை, அரசை, நிர்வாகத்தை ஆட்சிபீடத்தை அலங்கரித்தவர்களை, புனித சேதுவின் பாதுகாவலர் எனப் போற்றப்பட்டவர்களை ஆற்காட்டு நவாப் அவரது நாட்டினின்றும் அகற்றி விட்டார். அவர்கள் வழியினருக்கு அவர்கள் நாட்டில் வாழ்வதற்குக் கூட உரிமையில்லையே என மறக்குல மக்கள் பொருமி நைந்தனர். அந்த நிலையில் அதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த ஆட்சிமுறைக்கு மாறாக நவாப், பல மாற்றங்களைப் புகுத்தினார். இராமநாதபுரம் கோட்டை 'அலிநகர்' என அரசுப் பதிவுகளில் குறிக்கப் பெற்றது. ஆட்சி மொழியாக பாரசீக மொழி புகுத்தப்பட்டது தலைமுறை தலைமுறையாக முற்றுட்டாகவும், இறையிலியாகவும், சர்வ மான்யமாகவும், சீவிதமாகவும் சேது மன்னர்களால் வழங்கப்பெற்று, குடிகளால் அனுபவித்து வரப்பெற்ற கொடைக்காணிகள் புதிய நிர்வாகத்தினரால் பறிக்கப்பட்டு புதிய அரசின் அடிவருடிகளுக்கு கவுல் காணியாக வழங்கப்பட்டன.[1]

நிர்வாகத் தலைவர் அமுல்தார் என வழங்கப்பட்டார். அவரது வசூல் நடவடிக்கைகளில் உதவுவதற்காக அமீன், தாசில்தார், சதர் என வழங்கப்பட்ட புதிய அலுவலர்கள் பொறுப்பு ஏற்றனர். அவர்கள் மறவர்

For more ebooks vist: http://getmyebook.in/

சீமை மக்களிடம் எவ்வித நியதிமின்றி கெடுபிடி வசூலை மேற்கொண்டனர்.[2] மகசூல் வசூலில் சர்க்காருக்கு சேரவேண்டிய மகசூல்தானியத்தை அளந்த பிறகும், எஞ்சியுள்ள மிகுதி தானியத்தை, ஊரில் உள்ள அத்தனை குடிகளுக்கும் பங்கிட்டு கொடுத்து அதன் மதிப்பை அவர்களிடமிருந்து வசூலிக்கும் குடியம்' என்ற முறையையும், அவர்கள் மேற்கொண்டனர்.[3] நிர்வாகப் பிரிவுகள் தாலுகா, கஸ்பா என வரையறுக்கப்பட்டன. அன்றாட நிர்வாகத்திற்கு. இசுலாமிய ஹிஜிரி ஆண்டு முறையும், அரசின் வரவு செலவிற்கு பாரசீக பசலி ஆண்டு முறையும் கையாளப்பட்டன. அதுவரை செலாவணியிலிருந்து சேதுபதிகளது சொந்த நாணயமும், டச்சுக் காரர்களது போர்ட்டோ நோவோ பக்கோடா என்ற நாணயமும் புழக்கத்திலிருந்து அகற்றப்பட்டு ஆற்காட்டு வெள்ளி ரூபாய்ப் பணமும், கும்பெனியாரின் ஸ்டார் பக்கோடா என்ற நாணயமும் அரசுச் செலாவணிக்குக் கொண்டு வரப்பட்டன. இவைகள் எல்லாம் சாதாரண மக்களுக்கு குழப்பத்தையும், நடைமுறையில் பல சிரமங்களையும் ஏற்படுத்தின. புதிய ஆட்சியாளர் மீது அருவருப்பும் பகைமையும் கொள்வதற்கு அவை உதவின. சீமை முழுவதும் அமைதியற்ற சூழ்நிலை நிலவியது.

இவைகளினால் பொறுமையிழந்த குடிமக்கள் பல பகுதிகளில் நவாப்பின் அலுவலருடன் சச்சரவிட்டு கை கலப்பில் ஈடுபட்டனர். வன்முறைகள் வளர்ந்தன. இயல்பாகவே போர்த் திறன் படைத்த மறவர்கள் சிறிய துப்பாக்கிகளையும், வாளையும், வேலையும் கொண்டு,

For more ebooks vist: http://getmyebook.in/

அவர்களுக்கு தொல்லைகள் தந்த நவாப்பின் கூலிப்படையினரை ஆங்காங்கு எதிர்த்து மோதினர்.[4] அந்நியரின் ஆட்சியில் வரி வசூல் கொடுமை எந்த அளவிற்கு பரிணமித்து நின்றன என்பதை, இந்த மக்கள் கிளர்ச்சிகள் கோடிட்டுக் காட்டுவனவாக இருந்தன. இதேபோல, நெல்லைச் சீமைப் பாளையக்காரர்களை அடக்குவதில் முனைந்த ஆற்காட்டுப் படைகளும், ஆங்கிலக் கூலிப்படைகளும், பாஞ்சாலங்குறிச்சி, சிவகிரி, கொல்லங்கொண்டான் ஆகிய பாளைய பட்டுக்களில் அடைந்த தோல்வி மறவர் சீமையிலும் நவாப்பின் ஆதிக்கத்தை நீக்கிவிட இயலும் என்ற நம்பிக்கையை சாதாரண மக்களிடம் வலுப்பெறச் செய்தது. அண்மைப் பகுதியான சிவகங்கைச் சீமையில் நிகழ்ந்து வந்த அரசியல் மாற்றங்களும், அவர்களை ஊக்குவித்தன.

இராமநாதபுரத்தை கைப்பற்றிய நவாப், அடுத்த இருபது நாட்களில் சிவகங்கையையும், காளையார்கோவிலையும் கைப்பற்றி சிவகங்கைச் சீமையை, ஆற்காட்டுச் சர்க்காரில் இணைத்து விட்டார். 25.6.1772ல் காளையார்கோவில் போரில் சிவகெங்கை மன்னர் முத்து வடுகநாத பெரிய உடையார் தேவர் கொல்லப்பட்டவுடன் அவரது ராணி வேலு நாச்சியாரும், பிரதானி தாண்டவராய பிள்ளையும் தப்பித்து மைசூர் மன்னருக்குச் சொந்தமான விருப்பாச்சியில் தஞ்சம் புகுந்தனர்.[5] மைசூரில் அப்பொழுது ஆட்சி செய்த ஹைதர் அலிகானும் அவர்களுக்கு ஆதரவு வழங்கினார். அவரிடம் மறவர்

For more ebooks vist: http://getmyebook.in/

சீமையை நவாப்பிடமிருந்து மீட்பதற்கு தமக்கு படை உதவி வழங்க வேண்டுமெனவும் பிரதானி தாண்டவராயப்பிள்ளை கோரினார்.[6]

சிவகெங்கை பிரதானி, ஹைதர் அலிக்கு எழுதிய மடலில்[7] *கர்நாடக நவாப், இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய இரண்டு சமஸ்தானங்களையும் ஆக்கிரமித்து அழிவு ஏற்படுத்தி வருகிறார். தப்பித்து வந்த நான், கள்ளர் அணி ஒன்றுடன் காடுகளில் தங்கி கிளர்ச்சியைத் தொடர்ந்து வருகிறேன். இந்தப் பணியில் எனக்கு யார் உதவி செய்தாலும், இன்னும் சிறந்த முறையில் சாதனைகளை ஏற்படுத்த முடியும். ஆகையால் தாங்கள் 5000 குதிரைகளையும் வீரர்களையும் திண்டுக்கல் கோட்டைக்கு அனுப்பி வைத்தால், அவர்களது செலவை நானே ஏற்று, அவர்களுடன் நானும் இணைந்து, அந்த இரு சமஸ்தானங்களையும் மீண்டும் கைப்பற்ற முடியும். அத்துடன் மதுரைக்கும் படை அணிகளை அனுப்பிவைத்து அந்தப் பகுதியிலும் எதிர் நடவடிக்கைகளைத் துவக்க இயலும். அங்குள்ள பாளையக்காரர்களும், நமக்கு ஒத்துழைப்பு நல்குவர். தங்களுக்கு செலுத்த வேண்டிய நஜர் பற்றி பின்னர் முடிவு செய்து கொள்ளலாம்'. இந்தக் கோரிக்கைக்கு உதவுவதாக ஹைதர் அலி மன்னர் உறுதியளித்தார்.

பிரதானி தாண்டவராயபிள்ளை அப்பொழுது சிவகெங்கைச் சீமைக்கும், தொண்டைமான் சீமைக்கும் இடையில் உள்ள பாய்குடி என்ற காட்டில் தென்னந்தோப்பு ஒன்றில் தங்கியிருந்தார். நவாப்பின்

For more ebooks vist: http://getmyebook.in/

நிர்வாகத்திற்கு இடைஞ்சலை ஏற்படுத்தி வந்ததுடன், மறைந்த சிவகங்கை மன்னரது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரை சிவகெங்கைக்கு மன்னராக நியமித்து மறவர் சீமையில் ஆட்சியை நிலை நாட்ட பாடுபட்டு வந்தார். ஆங்காங்கு உள்ள நாட்டாண்மைகளுக்கெல்லாம் ஒலைகள் அனுப்பி வைத்தார். '. .தஞ்சாவூராரும், தொண்டைமானும் சேர்ந்து தமக்கு படையும், பொருளும் வழங்க சம்மதித்து இருக்கின்றனர். ஹைதர் அலி நாயக்கரது* படை அணிகளும் இங்கு வர இருக்கின்றன. ஆதலால உங்களால் இயன்ற அளவு எல்லா வீரர்களையும், படைக்கலங்களையும் சேகரித்துக்கொண்டு நம்மிடம் வாருங்கள். எல்லோரும் இணைந்து இராமனாதபுரம், சிவகெங்கையைக் கைப்பற்றி விடலாம்' எனக் குறிப்பிட்டிருந்த ஒலை ஒன்றை தொண்டி அமுல்தார் கைப்பற்றிய பொழுதுதான் தாண்டவராய பிள்ளையினுடைய நடவடிக்கைகள் கும்பெனியாருக்குப் புலனாயிற்று. இதனை அந்த அமுல்தார் நவாப்பிற்குத் தெரிவித்துக் கடிதம் எழுதினார். [8]

இவையனைத்தும் மறவர் சீமையில், மக்களது கிளர்ச்சி தீவிரமடைந்ததற்கான அறிகுறிகளாகத் தென்பட்டன. பீதியடைந்த நவாப்பின் பணியாளர்கள் மிகவும் பாதுகாப்பான இடங்களில் மட்டும் இருந்து கொண்டு தங்கள் பணிகளை மேற்கொண்டிருந்தனர்.[9] சிவகங்கைப் பகுதியின் நிலைமை இவ்விதம் இருக்க, இராமனாதபுரம் பகுதியில், ஆறுமுகம் கோட்டை மாப்பிள்ளைத் தேவர் தமது எண்ணங்கள் நிறைவேற

For more ebooks vist: http://getmyebook.in/

மீண்டும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக எண்ணிச் செயல்பட்டார். இராமநாதபுரம் சீமையில், வடக்கு மேற்குப் பகுதியிலுள்ள குடிமக்களைத் திரட்டி, நவாப்பின் ஆட்சியை மறவர் சீமையினின்று அகற்றுவதற்கு போர்க்கொடி உயர்த்தினார். இராமநாத புரம் சீமையின் பெரும்பகுதி, அவரது ஆதிக்கத்தின் கீழ் வந்தது.[10] நவாப்பின் ஆட்சி அங்கு பெயரளவில் தான் நடைபெற்றது. அதனை அடியோடு அகற்றி தலைநகரமான இராமநாதபுரம் கோட்டையைக் கைப்பற்றுவதற்கு நல்லதொரு வாய்ப்பை எதிர்பார்த்திருந்தார்.

மைசூர் மன்னர் ஹைதர் அலிகானின் இராணுவ உதவியையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.[11] அப்போது மறவர் சீமையில், சுற்றுப்பயணம் செய்த ஸ்வார்ட்ஸ் பாதிரியார் நாடு முழுவதும் பெரும் மாற்றம் ஒன்றினுக்கு ஆயத்தம் ஆவது போன்ற மாறுபட்ட சூழ்நிலையில் காட்சி அளித்ததாக தமது குறிப்புகளில் வரைந்து வந்துள்ளார்.[12] சேது நாட்டில் சேதுபதி இல்லாவிட்டாலும், சேதுபதியின் மாமனார் மாப்பிள்ளைத் தேவர் மன்னராக வந்தால் போதும் என்ற அளவில் மக்கள் மனநிறைவு கொண்டு அவருக்கு ஆதரவு அளித்து வந்தனர். இராமநாதபுரம் சீமையிலிருந்து நவாப்பின் ஆட்சி முழுமையாய் அகற்றப்பட வேண்டிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருந்தது.

கி. பி. 1780-ம் ஆண்டு ஜனவரி மாதம் மைசூர் மன்னர்

For more ebooks vist: http://getmyebook.in/

நவாப்பின் மீது மோதுவதற்குத் திட்டமிட்டார். சூறாவளி போன்று அதனைச் செயல்படுத்தினார். திருச்சி, தஞ்சை, தென்னாற்காடு, சென்னை மீது மின்னல் தாக்குதல் ஒன்றைத் தொடுத்தார். இதற்கிடையில் பிரதானி தாண்டவராயபிள்ளை மரணம் அடைந்து விட்டதால் சிவகெங்கை அரசியாரின் நம்பிக்கைக்கு உரியவர்களாக இருந்த மருது சகோதரர்கள் ஹைதர் அலியின் கர்நாடக படை எழுச்சியை தமக்கு சாதகமாக பயன்படுத்தி ஹைதர் அலியின் திண்டுக்கல் கோட்டை தளபதி அளித்த ஓர் பெரிய படை அணியைக் கொண்டு சிவகெங்கை ராணியுடன் சீமைக்குள் நுழைந்தனர். நவாப்பில் கெடிபிடியில் சிக்கியிருந்த குடிமக்கள் மருது சேர்வைக்காரர்களையும் ராணியையும் மகிழ்ச்சியுடன் வரவேற்றதுடன் சிவகெங்கைச் சீமையின் விடுதலைக்கும் உதவினர். சிவகெங்கைக் கோட்டையைக் கைப் பற்றிய மருது சகோதரர்கள் மறைந்து போன சிவகெங்கை மன்னரது மனைவி வேலுநாச்சியாரை சிவகெங்கைச் சீமையின் அரசியாக அறிவித்து அவருக்கு உதவும் பிரதானிகளாக நியமனம் பெற்றனர்.[13]

இராமநாதபுரம் சீமையிலும் இத்தகையதொரு இறுதித் தாக்குதலைத் தொடுத்து இராமநாதபுரம் கோட்டையையும், இதர பகுதிகளையும் கைப்பற்ற மாப்பிள்ளைத் தேவர் முயன்றுவந்தார். அவரது முயற்சிக்கும் மைசூர் மன்னரது உதவி பின்னணியாக இருந்தது. தம்முடைய பிடிப்பினின்றும், சிவகெங்கையைப் போல மறவர் சீமையும் நழுவிச்

For more ebooks vist: http://getmyebook.in/

செல்வதை உணர்ந்த நவாப், அதனைத் தடுப்பதற்கு வழி என்ன என்பதைச் சிந்தித்தார். சிறையிலிருக்கும் சேது மன்னர்தான் இந்தச் சூழ்நிலையில் தனது நிலையை தக்கவைக்க உதவ இயலும் என்ற முடிவுக்கு வந்தார். அந்தத் துறையில் செயல்பட்டார்.

பன்னிரண்டு வயது பாலகனாக இருந்தபொழுது சிறைப் படுத்தப்பட்டு திருச்சிக் கோட்டைக்குக் கொண்டு செல்லப்பட்ட இளவரசர் முத்துராமலிங்கம், இருபது ஆண்டுகள் நிரம்பிய இளம் மன்னராக இராமனாதபுரத்திற்கு அழைத்து வரப்பட்டார்.[14] சிறையில் அவரது அன்னையார் இயற்கை எய்தியதால் அவாது தமக்கை மங்களேஸ்வரி நாச்சியார் மட்டும் உடன் வந்தார். இராமனாதபுரத்திற்கு திரும்பிச் செல்ல இயலுமா என எண்ணி ஏங்கி பெருமூச்சுவிட்டுக் கொண்டிருந்த இளைஞர் முத்துராமலிங்கத்தின் இதயம் இராமனாதபுரம் கோட்டை வாயிலைக் கண்டவுடன் மகிழ்ச்சியால் படபடத்தது.

வரலாற்றுப் புகழ்மிக்க அந்த வாசல் எத்துணையோ வீர நிகழ்ச்சிகளை அவருக்கு நினைவுபடுத்தியது. மறவர் சீமையின் மகுடமாக விளங்கும் அந்த வாயிலில் இருந்து கி.பி. 1659-ல் ரகுநாத திருமலை சேதுபதி தலைமையில் புறப்பட்ட மறப்படை, மதுரையை முற்றுகையிட்ட மைசூர் படைகளை அழித்து. புறமுதுகிட்டு ஒடும்படி செய்ததுடன், அவர்களை கொங்கு நாட்டின் எல்லை வரை துரத்தி

For more ebooks vist: http://getmyebook.in/

சென்று வந்து திருமலை நாயக்க மன்னரது மதுரை அரசை நிலைக்க வைத்தது. மேலும் மதுரை நாயக்கரது தயவிலே பாளையக்காரனாகிய எட்டப்பன், நாயக் கருக்கு அடங்காது கிளர்ச்சி செய்த பொழுது, அவனது பாளையத்தில் புகுந்து அவனது கொட்டத்தை அடக்கியதும், அந்தப் படைதான். மீண்டும் திருச்சிக் கோட்டையிலிருந்த மன்னர் சொக்கப்ப நாயக்கரை கி.பி. 1680-ல் சிறைப்படுத்தி வைத்திருந்த தளபதி ருஸ்தம்கானை கொன்று மன்னரை மீட்கக் கிழவன் சேதுபதியின் வீரர்கள் இங்கிருந்துதான் அணிவகுத்துப் புறப்பட்டனர். காலத்தால் செய்த உதவிகளையெல்லாம் மறந்து, மறவர் சீமை மீது ஆக்கிரமிப்பில் ஈடுபட்ட இராணி மங்கம்மாளது படையையும், அவரது தளபதி நரசையாவையும் இதே கோட்டைவாசலின் எதிரில் கி. பி. 1702-ல் வெற்றி வாகை சூடினார் கிழவன் சேதுபதி...

கோட்டை வாசலைக் கடந்தவுடன் கண்களில் படுவது கொற்றவை இராஜ இராஜேசுவரியின் திருக்கோவில். சேது எனப்படும் புனித திருவணையின் காவலர்களான சேதுபதிகளின் குல தெய்வமாக விளங்கும் அம்பிகை, மைசூர் படைகள் மீது கொண்ட வெற்றியின் நினைவாக மதுரை திருமலை நாயக்கர் மன்னர் ரெகுநாத சேதுபதிக்கு வழங்கிய அன்பளிப்புகளில் ஒன்றான அந்தப் பொற்சிலை அங்கு வைத்து வணங்கப்படுகிறது. இதற்கு எதிரில் உள்ள மரகத பலி பீடம் இராயவேலூரிலிருந்த குமார விஜய ரகுநாத சேதுபதியின் இளவலான தளபதி

For more ebooks vist: http://getmyebook.in/

தெய்வ கண்ணியினால் கொண்டுவந்து நிர்மாணிக்கப் பட்டதாகும்.[15]

அடுத்துள்ள இராமலிங்க விலாசம் அரண்மனை, கிழவன் சேதுபதியும், அவரது அன்புக்குரிய அமைச்சர் வள்ளல் சீதக்காதியும் இணைந்து திட்டமிட்டு அமைத்த கலைப்பேழையாகும் அதன் மணி வாயிலில் அகத்திய முனிக்கும், அதிகம் கற்றபேர்கள் ஆயிரம் கவிவாணர் இருந்தனர்.[16] பன்னூல் வல்லுநர் புலவர் பெருமக்கள் தங்கள் நன்னூலைப் படித்து பொன்னும் மணியும், ஊரும் பெயரும் பரிசிலாகப் பெற்றுச் செல்லும் அரங்கம் அது. அழகிய சிற்றம்பலக் கவிராயரது தள சிங்க மாலையும், அமிர்த கவிராயரது ஒருதுறைக் கோவையும், சொக்கநாதப் புலவரது பணவிடு தூதும், தேவை உலாவும் அரங்கேற்றம் பெற்றதும், அவைகளுக்குப் பரிசிலும், இராஜ சிங்க மங்கலமும் பொன்னாங்காலும், புலவர் மான்யமாக வழங்கப் பெற்றது. அங்குதான். இன்னும் சேது நாட்டின் சீர் அலைவாய்க் கரையில் சங்கையும், முத்தையும் நத்தி வந்த போர்த்துக்கீசியரும் டச்சுக்காரரும், பொன்னையும் மணியையும், நிறைத்த பரிசில்களைத் தாங்கி, சேதுபதி தரிசனத்திற்கு காத்திருந்ததும் அங்குதான்.

அங்குள்ள அரசுக் கட்டிலில் அமர்ந்து, முன்னோர் பலர் பன்னூறு ஆண்டுகள் முறை திறம்பாது ஆட்சி செய்து வந்தனர். அதே அரசு கட்டிலில் அமர்ந்து இருந்த விஜய ரகுநாத சேதுபதி, தமது இரு பெண் மக்களது ஒரே கணவர் என்பதைக் கூட கருதாமல் பாம்பன் ஆளுநர்

For more ebooks vist: http://getmyebook.in/

தண்டத் தேவருக்கு, சிவத்துரோகக் குற்றத்திற்காக தயக்கமின்றி கொலைத் தண்டனை வழங்கினார்.[17] தமிழும், தெய்வீகமும் தழைத்து வாழ நீதியும் வீரமும் நிலைக்க, சேதுபதிகள் பலர் செங்கோல் பிடித்து ஆட்சி செய்தது அதே அரசுக்கட்டில்தான். அந்தகட்டிலில் தாமும் அமர்ந்து, அந்த நீண்ட பெரும் தலைமுறையினரின் நியதியையும் பெருமையையும், காத்து ஆட்சி செலுத்த வேண்டும்...

கோட்டை வாசலைக் கடந்து இராமலிங்க விலாசம் அடைவதற்குள் இளவரசர் முத்து இராமலிங்கத்தின் மனத்திரையில் மின்னி மறைந்த எண்ணைத் தொகுப்புகள் அவை. நவாப்பிடமிருந்து வந்த பட்டோலையையும், சேது நாட்டு மன்னராக அங்கீகரித்து வழங்கிய சன்னதையும்[18] பிரதானி சங்கர நாராயண பிள்ளை மன்னரிடம் வணக்கத்துடன் வழங்கிய பொழுதுதான், தாம் இராமலிங்க விலாசம் முன்னர் இருப்பதையும், பொதுமக்களும் அரசு அலுவலர்களும், குழுமியிருந்து தமக்கு வரவேற்பு வழங்க காத்து இருப்பதையும் மன்னர் உணர்ந்தார். கட்டியக்காரர்கள், சேதுபதிகளது விருதுகளை முழக்கவும், சாமரம் பிடித்த பணியாளர் கவரிகளை அசைத்து முன் செல்லவும், அரண்மனை முகப்பிலிருந்து சிங்காதன மேடை வரை விரிக்கப்பட்டிருந்த சீனப்பட்டில் நடந்து அரண்மனையின் தென்மேற்கு மூலையில் உள்ள சேதுபீடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். இந்த பீடத்தில் முதலாவது சேதுபதி மன்னர் அமர்த்தப்பட்டு, ஸ்ரீ இராமபிரானால் முடிசூட்டப்பட்டார் என்பது ஐதிகம்.

For more ebooks vist: http://getmyebook.in/

[19] அந்த இருக்கையில் அமர்ந்து, புனித கங்கையில் நீராடி, மங்கலஉடை அணிந்து கொள்ளுதல், சேதுபதிகளது மரபு. தலைமுறை தலைமுறையாக கைக்கொள்ளப்படும் இந்த மங்கலச் சடங்கு முடிந்த பிறகு, வாளும் முடியும் புனைந்து, வாழ்த்தும் புகழ்ச்சியும் முழங்க, அரசு கட்டிலில் அமர்ந்தார் மன்னர் முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதி.

ஆற்காட்டு நவாப்பின் கொடுங்கோலாட்சியை அகற்ற மாப்பிள்ளைத் தேவர் தலைமையில் முனைந்து நின்ற பொது மக்களுக்கு இந்த முடிசூட்டுவிழா சிறிது ஏமாற்றத்தை அளித்தது. எனினும் தங்களது நாட்டில் பரம்பரை மன்னராட்சி மீண்டும் ஏற்பட்டதில், அவர்களுக்கு ஒருவிதமான மன நிறைவு. தமது திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப் பட்டதில் நவாப்பிற்கும் மகிழ்ச்சி. இளைஞர் முத்துராமலிங்கத்திற்கு சேது நாட்டின் மன்னராக ஆட்சியில் அமர்ந்ததில் பெருமிதம்; பூரிப்பு இன்னொருபுறம் ஆற்காட்டு நவாப்பிற்கு ஆண்டுக் காணிக்கை யாக ரூபாய் 1,75,000/-[20] அளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதில் வருத்தம்: வெறுப்பு. இருந்தாலும், அந்நிய சீமையில், ஆண்டாண்டு காலமாக சிறையில் அடைபட்டு, அரசியல் கைதியாக பொழுதைக் கழிப்பதை விட, சொந்த சீமையில் ஆட்சியில் இருந்து கொண்டே, நவாப்பையும் அவர்களது பரங்கி நண்பர்களையும் இந்த புனித மண்ணிலிருந்து விரட்டிவிட ஒரு பெரும் வாய்ப்பு ஏற்பட்டது என்ற தன்னம்பிக்கை.

For more ebooks vist: http://getmyebook.in/

முடிசூட்டு விழா முடிந்து, அரசுப் பணிகளை முடித்து இராமலிங்க விலாசத்தின் மச்சு வீட்டில் அமர்ந்திருந்தார் மன்னர். குழப்பமான சிந்தனைச் சூழலில், சேதுபதியின் மனம் தத்தளித்துக் கொண்டிருந்தது. பாண்டி மண்டலத்தின் பெரு மன்னராக விளங்கிய திருமலை மன்னரது தலையீட்டை எதிர்த்து இராமேஸ்வரம் களத்தில் வீரப் போரிட்டு மடிந்த மாப்பிள்ளை வன்னியத் தேவன்[21] ஆணவம்மிகுந்த இராணி மங்கம்மாளது அக்குரோணிச் சேனைகளை முறியடித்த மன்னர் மன்னன் கிழவன் சேதுபதி,[22] அண்டை நாடாக இருந்துகொண்டு அடிக்கடி தொல்லை தந்த தஞ்சை மராட்டியரை நிர்மூலம் செய்த விஜய ரகுநாத சேதுபதி,[23] தூத்துக்குடிக் கடற்படையை கீழக்கரைக்குக் கொண்டு வந்து நிறுத்தி, மிரட்டிய, டச்சுப் பரங்கிகளை துணிச்சலாக சிறையில் அடைத்த செல்லமுத்து சேதுபதி[24] ஆகியவர்களின் ஒவியங்களைக் கொண்ட அந்த மண்டபத்தில், அவர்கள் அனைவரும் நேரில்வந்து அஞ்ச வேண்டாம் என ஆறுதல் சொல்லுவது போன்ற பிரமையை மன்னருக்கு அப்பொழுது ஏற்படுத்தி இருத்தல் வேண்டும்.

1. ↑ Mily. Cons., Vol. 143 (1772), p. 1033.
2. ↑ Rajayyan, Dr. K., History of Madurai (1974) p. 2.66.
3. ↑ Madurai D1. Records, Vol. 1103, pp. 18-25.
4. ↑ Rajayyan, Dr. K. History of Madurai (1974), p. 266.
5. ↑ Kathirvelu. Dr. S., History of Marawas (1972) p. 163.
6. ↑ M. C. C., Vol. 21 (1772), pp. 282-83.

For more ebooks vist: http://getmyebook.in/

7. ↑ M. C. C., Vol. 21 (1772), p. 282.
8. ↑ M, C. C. . Vol. 2 1, 12-12-1772, p. 263.
9. ↑ M. C. C., Vol. 21, 2-10-1772, p. 236. : M. C. C. , Vol. 43, 1-12—1772, p. 1033.
10. ↑ Correspondence on Southern Polloms (1802), p. 28.
11. ↑ M.C.C., Vol. 21, 12-12-1772, p. 282-83.
12. ↑ Schwartz, Fr. Lr. Dt. 19–12–1780 (Pudukkottai State Records),
13. ↑ Kathirvelu, Dr. S., History of Marawas (1972) p. 166.
14. ↑ Mily. Cons. Vol. 74, 30–4–1781, p. 1076.
15. ↑ பெருந்தொகை, மதுரை தமிழ்ச்சங்க பதிப்பு (1935) பாடல் : எண் 1300.
16. ↑ பெருந்தொகை, மதுரை தமிழ்ச்சங்க பதிப்பகம் பாடல் எண் 1290
17. ↑ Rajaram Row, Ramnad Manual. (1891), p. 287.
18. ↑ M. C., Vol. 193, A. Sannath dated 7-3-1781, pp. 99-102
19. ↑ Vanamamalai Pillai, N.. The Sethu and Rameswaram (1922), pp. 141.
20. ↑ Rajaram Row, T., Ramnad Manual (1891), p. 322
21. ↑ இராமப்பையன் அம்மானை (1950), பக். 54-58.
22. ↑ Ranqucharya K. History of Madurai Nayak (1924), p. 213,
23. ↑ Rajaram Row T. Ramnad Manual (1891), p. 238.
24. ↑ Souhadri, V. K. Sethupati's of Ramnad (1972), Unpubli shud Thesis, p. 94.

---

For more ebooks vist: http://getmyebook.in/

4

## பன்னிரு வருட ஆட்சியில்

வடக்கே கோட்டைப்பட்டினம் துவங்கி தெற்கே வேம்பாற்று எல்லையில் உள்ள கன்னிராஜபுரம் வரையிலான 120 கல் நீள கடற்கரையை கிழக்கு எல்லையாகக் கொண்ட சேது நாட்டின் ஆட்சியை மன்னர் முத்துராமலிங்க சேதுபதி சிறப்பாக நடத்தி வந்தார். அவரது ஆட்சியின் செம்மைக்கு சிறந்த பிரதானிகளான சங்கரலிங்கம்பிள்ளை, வேலுப்பிள்ளை, முத்திருளப்பபிள்ளை ஆகியோர் அடுத்தடுத்து பணியாற்றியது காரணமாக அமைந்தது. அவரது பன்னிரண்டு ஆண்டுகால ஆட்சியில் பல உன்னதமான பணிகள் நிறைவேற்றப்பட்டன.

குறிப்பாக நிர்வாகத்திலும் குடிமக்களுக்கு உதவும் பல துறைகளிலும் புதிய மாற்றங்கள் புகுத்தப்பட்டன. சேதுநாடு இரண்டாயிரத்து முந்நூற்று ஐம்பத்து மூன்று சதுரமைல் பரப்பினையுடைய இரண்டாயிரத்து நூற்று அறுபத்து எட்டு ஊர்களைக் கொண்ட நிலப்பரப்பாக இருந்தபொழுதும்,[1] நீர்ப்பாசன ஆதாரங்கள் குறைவான நிலையில் மக்கள் கடுமையான உழைப்பின் மூலம் தங்கள் வாழ்க்கைக்கு ஆதாரமான விளைச்சலைக் கண்டு வந்தனர். இதில் தீர்வை, உம்பலம், ஊழியம் கங்காணம், தர்மம் என்ற பெயர்களில் சரிபாதியான மகசூலை அரசுக்கு செலுத்தும் அவல நிலை இருந்துவந்தது. அப்பொழுது சேது நாடு பதினேழு நிர்வாக பிரிவுகளாக

For more ebooks vist: http://getmyebook.in/

பிரிக்கப்பட்டிருந்தது என்றாலும் அங்குள்ள நஞ்சை புஞ்சை நிலங்களின் வேறுபட்ட விளைச்சல் திறனுக்கு ஏற்றவாறு கைப்பற்றி நிலத்தை சரியா அளந்து தீர்வை விதிக்கும் அளவுமுறை கைக்கொள்ளப்படாத நிலை. இதை நன்கு உணர்ந்த பிரதானி முத்திருளப்பபிள்ளை நாட்டின் பெரும்பாலான பகுதிகளை நேரில் பார்வையிட்டு குடிமக்களது குறைகளை உணர்ந்து, வரிவிதிப்பு முறையில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தார்.

முதன்முதலாக, தமது நாடு முழுவதிலும் உள்ள காணிகளை அளந்து கணக்கிடும் முறையை பிரதானி முத்திருளப்பபிள்ளை ஏற்படுத்தினார். நிலங்களை அளப்பதற்கு ஒவ்வொரு ஊரிலும் வெவ்வேறு விதமான முழக்கோல் பயன்படுத்தப்பட்டதால் அந்த முறையை நீக்கி நாடெங்கும் ஒரேவிதமான அளவினை ஏற்பாடு செய்தார். அதற்காக தனது நீண்ட காலடி நீளத்தின் அளவை ஆதாரமாகக் கொண்ட பிள்ளைக்குழி' அளவு நிர்ணயம் செய்யப்பட்டது. முக்கால்படி விதை தேவைப்படுகிற இருபத்திரண்டு அடிக்கு ஒரு அடி என்ற சதுரபரப்பு அளவுடையது அந்தக் குழி. இதன்படி ஒருகல விதையடி நிலம் 112 குழிகள் என கணக்கிடப்பட்டன.[2] இந்த நிலங்களுக்கு ஆதாரமாக இருந்த நூற்றுக்கணக்கான கண்மாய்கள் சீரமைக்கப்பட்டன. இராமநாதபுரம் பெரிய கண்மாய் சிறப்பாகப் பழுது பார்க்கப்பட்டது. இந்த கண்மாய்களின் ஆதாரமான வைகை ஆற்று நீர் ஆண்டு தவறாமல் ஒழுங்காக கிடைப்பதற்காக வைகை உற்பத்தியாகும் வர்ஷநாடு மலைப்பகுதியில்

For more ebooks vist: http://getmyebook.in/

வைகையின் நீர்வளம் பற்றிய ஆய்வு ஒன்றும் மேற்கொள்ளப்பட்டது. அப்போது செய்யப்பட்ட ஆய்வின்படி வைகைநதி வளத்திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால் மறவர் சீமையின் தென்கிழக்குப் பகுதிக்குப் பருவகால மழை வெள்ளத்தினால் ஆண்டுமுழுவதும் தண்ணிர் வசதி கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டு இருக்கும். போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தினால் இந்ததிட்டம் கி.பி. 1780-ல் கைவிடப்பட்டது.[3] நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த திட்டத்தை கும்பெனியார் நிறைவேற்றினர். அதற்குப் பெரியாறு திட்டம் என பெயரிடப்பட்டது. தற்பொழுதைய மதுரை மாவட்டம் மட்டும் அந்தத் திட்டத்தினால் பயனடைந்து வருகிறது.

இராமநாதபுரம் சீமை விளை நிலங்களும் நஞ்சை, புஞ்சை என்ற பிரிவுடன் நஞ்சை வான்பயிர், புஞ்சை வான்பயிர், நஞ்சைத்தரம் புஞ்சை, குளம்கோர்வை என அந்த மண்ணின் தரம், பாங்கு, விளைச்சல் ஆதாரம் ஆகியவைகளைக் கொண்டு பாகுபாடுகள் செய்யப்பட்டன. இவைகளில் இருந்து கிடைக்கும் விளைச்சல் தீர்வையை அந்த நிலத்தில் செய்யப்படும் வேளாண்மைச் செலவு, ஈடுபடுத்தப்படும் உழைப்பு, எதிர்பார்க்கப்படும் விளைச்சலின் மதிப்பு இவைகளை ஆதாரமாகக் கொண்டு நிர்ணயம் செய்யப்பட்டது. இந்த புதிய முறையினால் அரசுக்கு கிடைக்கவேண்டிய வருவாய் சரியான வழியில் கணக்கிடப்பட்டு வசூலிக்கப்பட்டதுடன் குடிமக்களும் தங்களது உழைப்பிற்கும் விளைச்சலுக்கும் ஏற்ற தீர்வையை மட்டும் செலுத்த வேண்டியவர் ஆயினர். கிடைக்கும்

For more ebooks vist: http://getmyebook.in/

மகசூல் எதுவோ அதன் பகுதியை அப்படியே தீர்வையாக செலுத்தும் பழக்கம் அதுவரை நடைமுறையில் இருந்தது. அதனை மாற்றி தீர்வைக்கான மகசூலின் மதிப்பை ரொக்கமாக பணத்தில் செலுத்தும் முறையும் புகுத்தப்பட்டது.[4] இதனால் குடிகள் தாங்கள் விளைவு செய்த பொருளை அப்படியே அரசுக்கு கொடுக்கவேண்டும் என்ற கட்டாயமும் இல்லை.

இத்தகைய பணியை அம்பலக்காரர்கள், அல்லது நாட்டாண்மை, கர்ணம், நோட்டக்காரர், தண்டல்காரர், காவல்காரர், அளவன், வரியன், பொலிதள்ளி என்ற பலவகையான அலுவலர்கள்[5] நாடு முழுவதும் மேற்கொண்டனர். இந்தப் பண மிராசி (பரம்பரை) என்றும் இந்தப் பணிக்கான ஊதியம் பெறுவதற்காக விளைநிலங்களும் மான்யமாக கொடுக்கப்பட்டன. சில பகுதிகளில் வசூல் செய்யப்படும் தீர்வை தானியத்தின் ஒரு பகுதியாக அளந்து கொடுக்கப்பட்டது. அதற்கு 'சுவந்திரம்' என பெயர் பெறும். இன்னும் அன்றைய முகவை மாவட்டத்தில் தமிழ்நாட்டின் ஏனைய பகுதிகளைப்போல நாளைய சந்ததிகளின் அறிவு வளர்ச்சிக்குத் திண்ணைப் பள்ளிகள் மட்டும் ஆங்காங்கு தமிழ்புலவர்களால் நடத்தப்பட்டு வந்தன. அப்பொழுது தஞ்சையில் இருந்த சுவார்ட்ஸ் பாதிரியார், மறவர் சீமையில் மேல்நாட்டு முறையில் கல்வியை போதிக்கும் பள்ளிகளைத் துவக்க முன்வந்தார். தஞ்சாவூரில் கும்பெனியாரது பிரதிநிதியாக இருந்த சுல்லிவன், ஆங்காங்கு உள்ள அரசர்கள் பெரு நிலக்கிழார்களது ஆதரவைக் கொண்டு மேனாட்டு கல்வி முறையை தமிழகத்தில்

For more ebooks vist: http://getmyebook.in/

தென்பகுதியில் பரப்புவதற்கான திட்டம் ஒன்றை சுவார்ட்ஸ் பாதிரியாரிடம் வரைந்து கொடுத்தார். இராமநாதபுரத்தில் அதற்கான பள்ளியொன்றை நிறுவுதல் சம்பந்தமாக பாதிரியார் இராமநாதபுரம் அரசரைச் சந்தித்து அந்தக் கல்வித் திட்டம் பற்றி விளக்கம் தந்த பொழுது, 'இது ஒரு சிறந்த திட்டம். இங்கு ஒவ்வொரு ஊரிலும் இத்தகைய பள்ளி நிறுவப்பட வேண்டும்' என்று தமது பேராவலை மன்னர் பாதிரியாரிடம் தெரிவித்ததுடன் அதற்கான ஆதரவு வழங்குவதற்கும் இணக்கம் தெரிவித்தார். இராமநாதபுரத்தில் நிறுவப்பட்ட இந்தப் பள்ளியைத் தொடர்ந்து சிவகங்கையிலும், பின்னர் தஞ்சாவூரிலும் நிறுவப்பட்டன. இந்த நல்ல முயற்சியை கவர்னரும், ஆற்காட்டு நவாப்பும் வெகுவாகப் புகழ்ந்தனர். இந்த புதுமையான முயற்சிக்கு சேதுபதி மன்னர் முழு ஆதரவு வழங்கியதுடன் இராமநாதபுரம் கோட்டையில் துவக்கப்பட்ட இத்தகைய பள்ளிக்கு மாதந்தோறும் முப்பது பக்கோடா பணம் மான்யம் வழங்கி வந்தார்.[6]

அடுத்தபடியாக அன்றைய சமுதாய மக்களது இறை உணர்வு காரணமாக ஆலயங்களும், அன்னசத்திரங்களும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இவைகளைப் பராமரிப்பதிலும் பழுதுபார்த்து நல்ல நிலையில் வைத்துக் கொள்ளவும் அன்றாட வழிபாடு, விழா, தர்மம் ஆகியவைகளை நடத்துவதிலும் சிறந்த கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பாக இராமேஸ்வரம், திருப்புல்லணை, திருச்சுழியல், திருவாடானை, நயினார் கோவில், பெருவயல் போன்ற சேது நாட்டின்

For more ebooks vist: http://getmyebook.in/

புனித தலங்களில் பெருங்கோவில்களை உருவாக்கி அவைகள் என்றென்றும் சிறந்த தலங்களாக விளங்குவதற்காக பல ஊர்களை அவை கருக்கு சர்வமான்யமாக வழங்கப்பட்டன.[7] அந்த கோவில் களில் பணி செய்பவர்களுக்கும் பலவகையான ஜீவித மான்யங்களை முந்தைய சேதுபதி மன்னர்கள் வழங்கி இருந்தனர். அதே மரபுகளைப் பின்பற்றி மன்னர் முத்துராமலிங்க சேதுபதியும் பல நிலக்கொடைகளை வழங்கி, கட்டளைகளையும் ஏற்படுத்தினார். ஆலயங்களின் பராமரிப்புக்கென வலுவான அமைப்பு ஒன்றை, நிரந்தரமாக செயல்பட அமைத்தார். கி.பி. 1788-ல் இதற்கென 'தரும மகமை' நிதியம் தோற்றுவிக்கப்பட்டது.[8] நஞ்சை நிலங்களின் மகசூலில் தீர்வையை கணக்கிடுவதற்கு முன்னர் கழிக்கப்படுகின்ற பொதுச்செலவுகளுடன் ஒரு சிறுபகுதி தானியம் இந்த மகமை நிதிக்கு ஒதுக்கப்பட்டது. இங்ஙனம் சேகரிக்கப்படும் தானிய தொகுப்பின் வருவாயைக் கொண்டு அரசு பொறுப்பில் உள்ள அனைத்து ஆலயங்களின் திருப்பணிகளை மேற்கொள்ளவும் ஆலயங்களில், வேத, புராண, நியாய, விளக்கங்கள் செய்யும் அந்தணர்களுக்கு ஆதரவு அளிக்கவும், ஏழை, எளியவர், ஊனமுற்றவர்கள் ஆகியோர்களைக் காத்து வரவும் இந்த நிதியம் பயன்படுத்தப்பட்டு வந்தது. பிற்காலத்தில் ஆலயங்கள் பராமரிப்புக்கென சேதுநாட்டு அரசியல் 'தேவஸ்தானம்' என்ற நிர்வாகப் பிரிவு செயல்படுவதற்கு முன்னோடியான திட்டம் இந்த மகமை நிதியம் எனக் கொள்ளுதல் பொருத்தமாகும்.

For more ebooks vist: http://getmyebook.in/

தனியார்கள் பொறுப்பில் உள்ள சிறுகோவில்களின் தேவைகளுக்கும் உதவுவதற்கென்று இதனை ஒத்த இன்னும் ஒரு பொது நிதியமும் ஏற்படுத்தப்பட்டது. அது 'ஜாரி மகமை' என பெயர் பெறும்[9] மற்றும், சமூகத்தில் கல்வி, பண்பாடு ஆகியவைகளில் செம்மாந்து நின்ற தமிழ்ப் புலவர்களுக்கும், வடமொழி வித்தகர்களுக்கும், வாழ்க்கைச் சுமையினை சிரமமாகக் கருதாமல் தங்கள் பணியினைத் தொடர்வதற்கு ஆதாரமாக சருவமானிய நிலங்களையும் சுரோத்திரிய கிராமங்களையும் மன்னர் வழங்கி உதவினார்.[10]

ஆலயங்களுக்கு அடுத்தபடியாக, இந்த மன்னர் இராமேஸ்வரத்திற்கு ஆண்டு முழுவதும் யாத்திரையாக வந்து கொண்டிருந்த பக்தகோடிகளின் வசதிக்கென அன்ன சத்திரங்களை பராமரித்துவரும் பணியில் மிகுதியான பொருளையும் செலவு செய்தார். வடக்கே தஞ்சை அரசின் தெற்கு எல்லையில் துவங்கி கிழக்கு கடற்கரை வழியே தொடரும் சேதுபாதையில் பல இடங்களில் முந்தைய சேதுமன்னர் பல அன்ன சத்திரங்களை ஏற்படுத்தி இருந்தார்கள். போக்குவரத்து வசதிகளும், அடுத்து அடுத்து ஊர்களும், அமையப்பெறாத நிலை அந்தக் காலத்திலும் இருந்ததால், இராமேஸ்வரம் வந்து செல்லும் பயணிகளுக்கு இந்த அன்ன சத்திரங்களில் தங்கும் வசதியும், உணவு வசதியும் இலவசமாக செய்து கொடுக்கப்பட்டன. பயணிகளின் விருப்பப்படி அந்த அன்ன சாலைகளில் அவர்களுக்கு சமைத்த உணவாகவும், அல்லது சமையலுக்கான அரிசி, பருப்பு, காய்கறிகளாகவும் வழங்கப்பட்டன. சேது மன்னரது

For more ebooks vist: http://getmyebook.in/

இந்தத் தர்மம் பெரும்பாலும் மூன்றுநாட்கள் வரை ஒவ்வொரு பயணிக்கும் வழங்கப்பட்டது. கோடைகாலத்தில் வெம்மையைத் தணிக்கும் வகையில் வழிப்போக்கர்களுக்கு நீரும் மோரும் வழங்கப்பட்டன[11] மேலும் ஏழை எளியவர்கள், உடல் ஊனமுற்றவர்கள் ஆகியோரது உறுபசி நீக்கவும், இந்த அன்னச்சத்திரங்கள் புகலிடமாக விளங்கி வந்தன இந்த அறப்பணிகள் காலமெல்லாம் தங்குதடையின்றி தொடர்ந்து நடைபெற சேது மன்னர்கள் பல ஊர்களை இந்த அறப்பணிகளுக்கு ஆதாரமாக வழங்கியிருந்தனர். அந்த ஊர்களின் ஆண்டு வருவாய் முழுவதும் இத்தகைய தர்மங்களுக்கு செலவிடப்பட்டது. இராமேஸ்வரத்திலிருந்து வடக்கே தஞ்சைக்கும் தெற்கே கன்னியாகுமரிக்கும் செல்லும் கடற்கரைப் பகுதிகளிலும், மேற்கே மதுரைக்குமாகச் செல்லும் மூன்று வழிகளிலும் இத்தகைய சத்திரங்கள் ஏற்கெனவே அமைக்கப்பட்டிருந்தன. இந்தப் பாதைகளின் இடைவெளியை குறைத்து இன்னும் கூடுதலான அன்ன சத்திரங்களை மன்னர் முத்துராமலிங்கம் அமைத்தார். கோட்டைப்பட்டினம். முத்துராமலிங்கப் பட்டினம், தீர்த்தாண்டதானம், தேவிப்பட்டினம், ஆற்றங்கரை, தோணித்துறை, கடுகு சந்தை, நாகாச்சி, பால் குளம், முடுக்கங்குளம், வேலாயுதபுரம் ஆகிய ஊர்களில் புதிய சத்திரங்களை நிர்மாணித்து அவைகளில் அன்னதானம் நடைபெற தேவையான வருவாய் தருகின்ற ஊர்களை தானமாக வழங்கினார். மற்றும், ஏற்கெனவே தனவந்தர்களால் நிறுவப்பட்டு நொடித்த நிலையில் இருந்த

For more ebooks vist: http://getmyebook.in/

தனுஷ்கோடி முகுந்தராயச் சத்திரம், இராமேஸ்வரம் முத்துக்குமாருபிள்ளைச் சத்திரம், திருப்புல்லாணி புருஷோத்தம பண்டித சத்திரம், வெள்ளையன் சேவைச் சத்திரம், அலங்கானுர், முடுக்கங்குளம் சத்திரம், பரமக்குடி, வேலாயுதபுரம் சத்திரம், நாகாச்சி மடம் சத்திரம் ஆகியவைகள், தொடர்ந்து மக்களுக்கு பயன்படும் வண்ணம் அவைகளுக்கும் பல கிராமங்களை மான்யங்களாக வழங்கி உதவினார்.[12] இத்தகைய சத்திரங்களும், அவைகளுக்காக வழங்கப்பட்ட கிராமங்களின் விவரங்களும் இணைப்புப் பட்டியலில் கொடுக்கப் பட்டுள்ளது.

இவைகளுக்கெல்லாம் மேலாக, இந்த மன்னரது ஆட்சியில், பழம் பெரும் தலங்களான திரு உத்திர கோச மங்கை, திருச்சுழியல், இராமேஸ்வரம் ஆகிய ஆலயங்களின் திருப்பணிகளும், மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டன. உலக அற்புதங்களில் ஒன்றாக எண்ணத்தக்க இராமேஸ்வரம் கோவிலின் மூன்றாம் பிரகாரத் திருப்பணியும், இவரது ஆட்சியின் பொழுதுதான் நிறைவேற்றப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.[13] அத்துடன் இராமநாதசுவாமி சன்னதியிலுள்ள சொக்கட்டான் மண்டபமும், இவரது திருப்பணிகளில் எழுந்த ஒன்றாகும்.[14]

இத்தகைய சிறந்த பணிகளை நிறைவேற்ற உயர்ந்த உள்ளம் மட்டும் அல்லாமல், உன்னத பொருள் வசதியும் வேண்டுமல்லவா? குடிகள் கொடுக்கும் வரிப்பணம்

For more ebooks vist: http://getmyebook.in/

அனைத்தையும், திருப்பணிகளுக்கு செலவழித்துவிட்டால் நிர்வாகம், பாது காப்பு போன்ற துறைகளுக்கான தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும். ஆதலால், பொருள் வருவாய்களை பெருக்கும் பல துறைகளிலும், அவர் ஈடுபட்டிருந்ததை வரலாற்று ஆவணங் களில் காணமுடிகிறது. (இக்கால அரசுத்துறை, பொதுத்துறை ஆகியவைகளை ஒத்த நிறுவனங்கள், உற்பத்தியிலும், அரசு வணிகத்திலும் ஈடுபட்டிருப்பது போன்று. இருநூறு ஆண்டு களுக்கு முன்னரே, அவர், அரசுத்துறை வணிகத்தைத் துவக்கி வளர்த்து வந்தார்).

தமது செம்மையான ஆட்சியில், நெல் அரிசி, எண்ணெய், கருப்புக்கட்டி போன்ற அன்றாடத் தேவைகளின் மொத்த வியாபாரத்தை, தமது அரசுப் பணியாளர்களின் ஒரு பிரிவினரைக் கொண்டு நடத்தி வந்தார். இராமநாதபுரம் அரசுக்கு வரியாக ஆண்டுதோறும் அரசுக் களஞ்சியத்திற்கு வந்து சேரும் ஆயிரக் கணக்கான கலம் நெல்லை அப்பொழுதுக்கப்பொழுது, இராமனாதபுரம் கோட்டைக்கு எதிரே அமைந்திருந்த பேட்டையில் வியாபாரிகளுக்கு விற்று வந்தார்.

பொதுவாக மறவர் சீமையில் மழை அளவு குறைந்து வறட்சி ஏற்பட்டாலும், மழைவளம் பெற்று விளைச்சல் ஏற்படும் பொழுதும் மக்களது தேவைக்கு அதிகமான அளவு நெல் விளைச்சல் இருந்ததாகத் தெரிகிறது. குடிமக்கள் தங்களது தேவைக்கு மிகுதியாக உள்ள

For more ebooks vist: http://getmyebook.in/

நெல்லையும் மன்னரது தீர்வையாகப் பெறுகின்ற நெல்லையும் மன்னரது அலுவலர்கள் விலைக்கு வாங்கி பல இடங்களில் சேகரம் பட்டறைகளில் சேமித்து வந்தனர். பொது வணிகத்தை அரசு மேற்கொண்டு இருந்ததால், இந்த நெல் உள்நாட்டு வெளிநாட்டு வணிகர்களுக்கு விற்கப்பட்டது. இவ்வித சேமிப்பிற்கும் வறட்சிக்காலத்தில் இறக்குமதி செய்யப்படும் தானியங்களைப் பாதுகாத்து வருவதற்கும் இந்த மன்னார் கிழக்கு கடற்கரையில் உள்ள ஊர்களில் சில இடங்களில் தானியக் களஞ்சியங்கள் கட்டப்பட்டு இருந்தன. குறிப்பாக ஆங்கரையில் மூன்றும், பாம்பனில் ஒன்றும், இராமேசுவரத்தில் மூன்றும், தேவிபட்டினத்தில் இரண்டும், திருப்பாலைக்குடியில் ஒன்றும், நம்புதானையில் ஒன்றும் தீர்த்தவாடியில் ஒன்றும். கீழக்கரையில் ஒன்றுமாக மொத்தம் பதினோரு சிறு களஞ்சியங்கள் இருந்தன. இவைகளின் மொத்த கொள்ளளவு 41,580 கலம். (அதாவது 37,42,200 படி நெல்). [15] மக்களிடத்தில் பெறப்பட்ட தானியங்களைப் பதுக்கி வைத்து கிராக்கியான நேரத்தில் விற்பதற்காக தானியங்களை இந்தக் களஞ்சியங்களில் வைக்கப்பட்டு இருக்க வேண்டும். பதுக்கி வைப்பதற்கு கடற்கரையில் மட்டும் தானிய களஞ்சியங்கள் கட்டப்பட வேண்டும்[16] இராமநாதபுரத்தில் உள்ள 'இறை ஆயிரம் கொண்டான்' என்ற அரண்மனைக் களஞ்சியம் ஒன்றே பல லட்சம் கலம் நெல்லை சேமித்து வைக்கப் போதுமானதாகும். இதைக் கவனித்து வந்த பணியாளர் குழு. மக்களுக்குத்

For more ebooks vist: http://getmyebook.in/

தேவையான பொருட்களையும், கைத்தறித் துணிகளையும், வெளிமாநிலங்கள், வெளிநாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்ட பொருட்களையும் விற்று வந்தனர்.[17] மேலும், மறவர் சீமை செலாவணியில், சுழிச்சக்கரம், ஸ்டார் பக்கோடா, போர்ட்டோ நோவா பக்கோடா என்ற நாணயங்கள் புழக்கத்தில் இருந்துவந்தன. கைத்தறி ஏற்றுமதி மூலம், இராமநாதபுரம் அரசுக்கு கிடைத்த டச்சுக்காரர்களது போர்ட்டோ நோவா பக்கோடா மிகுதியான செலாவணியில் இருந்தது. வேறு நாணயங்கள் எதுவும் செலவாணியில் இல்லாத நிலையில் டச்சுக்காரரது நாணயங்களுடன், இதர நாணயங்களின் மதிப்பை நிர்ணயித்து, ஒருவகை நாணயத்திற்கு மாற்றாக பிறிதொருவகை நாணயம் வழங்கும் வசதியும், இராமநாதபுரம் அரண்மனையில் ஏற்படுத்தப்பட்டது. இந்த நாணய மாற்றுதல் மூலம் கழிவுத் தொகையாக அரசுக்கு நல்ல வருவாயும் கிடைத்து வந்தது.[18]

கைத்தறித் துணியைப் பொறுத்தவரையில், மறவர் சீமை முழுவதும் இருந்த தறிகளில், பரவலாக அவை தயாரிக்கப்பட்டன. பரமக்குடியில் மட்டும் மிகவும் அதிகமாக 670 தறிகள் இருந்தன. பட்டு நூல்காரர்களிடம் 600-ம் சோனகர்களிடம் 35-ம், கைக்கோளர்களிடம் 35-ம் இயங்கி வந்தன. இவைகளில் 150 தறிகள் மன்னரது ஒப்பந்தம் பெற்று உற்பத்தியில் ஈடுபட்டிருந்தன. இந்தத் தறிகளில் அப்பொழுது பெரும்பாலும், சலாம்பூர் என வழங்கப்பட்ட

For more ebooks vist: http://getmyebook.in/

காலிக்கிளாத் துணி நெசவு செய்யப்பட்டது. அவை 6. 7, $7\frac{1}{2}$, 8, 9, $9\frac{1}{2}$, 10 காலிக்கிளாத் என்றும், 32 க்யூபிக் பீட் நீளத்திலும் 24 கியூபிக் பீட் அகலத் திலும் நெசவு செய்யப்பட்டன. அவைகளில் அரை லாங்கிளாத்' என்றும் முழு லாங்கிளாத் என்றும் இரு வகைகளிருந்தன. இவை தவிர வேட்டிகள், சேலைகள், மஸ்லின் துணிகள், கைக்குட்டைகள் என பிறவகை துணிகளும் நெசவு செய்யப்பட்டன. பட்டு நூல்க்காரர்களது நெசவுப் பட்டறையில் பெரும்பாலும், மஸ்லின் துணியும், ஆங்கில, பிரஞ்சு, டச்சு நாட்டவர்களுக்கு ஏற்ற வகைத் துணிகளும் நெய்யப்பட்டன.[19]

இந்தத் தறிகளுக்கு மூவேந்தர் காலத்தில் விதிக்கப்பட்டது போன்று தறி இறை ஒன்று வசூலிக்கப்பட்டது. தறி ஒன்றுக்கு 4 சுழிப்பணம் என்பது பொதுவான வரியாகும். இது தவிர்த்து அரண்மனையில் திருமணம், முடிசூட்டுவிழா போன்ற சிறப்பான நிகழ்ச்சிகளின் போது, நெசவாளர்களிடம் வேறு ஒருவகையான வரியும் வசூலிக்கப்பட்டு வந்தது.[20] மற்றும், தறியின் உற்பத்தி அளவுக்கு தக்கவாறு, கூடுதல் சுங்கம் ஒன்றையும், நெசவாளர்கள் செலுத்தி வந்தனர். மன்னரது ஒப்பந்தத் தறிகளில் உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் பாண்டிச்சேரி, தரங்கம்பாடி, சென்னை ஆகிய நகர்களுக்கு, மன்னர் அனுப்பி வந்தார். இவ்விதம் மன்னரது வியாபாரத் தொடர்புகளின் எல்லைகள் பரந்து விரிந்து கொண்டிருந்தன. வடகோடியிலுள்ள வங்காளத்துடன்

For more ebooks vist: http://getmyebook.in/

சங்கு வியாபாரமும், தென்கோடியிலுள்ள திருவாங்கூருடன் தெங்கு வியாபாரமும் தொடர்ந்து நடைபெற்றன. பிரஞ்சு, டச்சுநாட்டவருடன் வணிகத் தொடர்புகளைக் கவனிக்க சென்னையில் தனியாக வக்கீல் ஒருவர் நியமனம் செய்யப் பெற்றிருந்தார்.[21] இதைப்போன்று, கல்கத்தாவிலும், மன்னரது பிரதிநிதி ஒருவர் இருந்து வந்தார்.[22] இலங்கையுடனான ஏற்றுமதி இறக்குமதிகளைக் கவனிக்க பாம்பன் துறைமுகத்தில் தனியான அலுவலர் ஒருவரும் நியமிக்கப்பட்டிருந்தர்.

மன்னரது ஏற்றுமதி இறக்குமதி வியாபாரப் பட்டியலில் கைத்தறித் துணிகள், அரிசி, இஞ்சி, மிளகு, தேக்கு, பாக்கு, புகையிலை, கருப்புக்கட்டி, புளி, தெங்குப் பொருட்கள் ஆகியன காணப்படுகின்றன. இந்தப் பொருட்களைக் கொண்டு செல்லும் தோணிகளையும், படகுகளையும், பாம்பன் கால்வாயில் கடத்தி விடுவதற்காக மட்டும் ஆண்டுதோறும் ஏறத்தாழ 15,000/சுலிப்பணங்கள் சுங்க வருவாயாகக் கிடைத்தது.[23] இத்தகைய வாணிபத்தில் கல்கத்தாவிலுள்ள பேரட் கம்பெனி என்ற நிறுவனமும் பாண்டிச்சேரி வரதப்பச்செட்டி, காயல்பட்டினம் சேகனா லெப்பை, கீழக்கரை அப்துல்காதர் மரைக்காயர், நாகூர்சாமி செட்டி, நாகப்பட்டினம், சுப்பராயபிள்ளை, திருவாங்கூர் சேக் குட்டி என்ற பெரும் வணிகர்கள் மன்னருடன் தொடர்பு கொண்டிருந்த விபரம் தெரிய வருகிறது.[24]

For more ebooks vist: http://getmyebook.in/

இவர்களில் கிழக்கரையைச் சேர்ந்த அப்துல் காதிர் என்ற பெருவணிகருக்கு சிறப்பான வியாபாரச் சலுகைகளை சேதுபதி மன்னர் வழங்கி இருந்தார். இந்த வணிகரது முந்தையோர்களும் இராமநாதபுரம் மன்னருக்கு உற்றுழி உதவும் சிறந்த நண்பர்களாக விளங்கியவர்கள். ஆதலால் அப்துல் காதிர் மரைக்காயரது வாணிப பொதிகளுக்கு மறவர் சீமையில் மிகக் குறைவான சுங்கவரி (முக்கால் சதவீதம் மட்டும்) வசூலிக்கப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. அவரது வணிகம் தங்குதடை இல்லாமல் தொடருவதற்கு இவ்விதம் ஊக்குவிக்கப்பட்டது.[25]

1. ↑ Rajaram Row T. Ramnad Manual (1891), pp. 9-1
2. ↑ Itnlnram Row, T., Ramnad Manual (1881) page
3. ↑ Madura Dt. Records Vol. 1152. pp. 12, 16.
4. ↑ Rajaram Row, T., Ramnad Manual (1891),
5. ↑ Rajaram Row, T., Ramnad Manual (1891), p. 310
6. ↑ Rajaram Row, T., Ramnad Manual (1891), p. 129.
7. ↑ Rajaram Row, T., Ramnad Manual (1891), p. 252, p. 121.
8. ↑ Census the Town of Madras (1871), pp. 49-50.
9. ↑ Rajaram Row, T, , Ramnad Manual (1891), p. 12
10. ↑ Boards Misc. Register. (1812), pp. 332, 351.
11. ↑ Rajaram Row, T. Ramnad Manual (1891), pp. 98-94.
12. ↑ Boardis Misc Register. (1812), Vol. No. 6, pp. 301-406.
13. ↑ கமால் எஸ். எம்., இராமநாதபுரம் மாவட்ட வரலாற்றுக் குறிப்புகள் (1984), பக். 17.
14. ↑ Vanamamalai Pillai, N. The Setu and Rameswaram (1929), p. 121.
15. ↑ Revenue Consultations, Vol. 91-B, pp. 4755 (1797)

For more ebooks vist: http://getmyebook.in/

16. ↑ —do— Vol. 91-B, 14-12-1797, pp. 4749–51
17. ↑ —do— Vol. 50-A. (1793). pp. 546-47
18. ↑ —do— Vol. 50-A (1793), pp. 550–51
19. ↑ Rov. cons. vol. 50-A. (1793), p. 542
20. ↑ R. C. Vol. 50-A (1793), pp. 544-45
21. ↑ M C Vol. 44-A (1793), P. 55.
22. ↑ R. C. Vol. 62-A (1795), pp. 1796-97
23. ↑ R. C. Vol. 105. (1800), pp. 2615-16
24. ↑ Revenue Consultations. Vol. 62-A, pp. 1796–97
25. ↑ Madura District Records, Vol. 1178, pp, 470-472

For more ebooks vist: http://getmyebook.in/

## 5
# கும்பெனியாரும் சேதுபதியும்

1792-ம் ஆண்டு

மன்னர் முத்துராமலிங்க சேதுபதி தமது முன்னோர்களின் அடிச்சுவட்டில், சேது நாட்டை வளமை மிக்கதொரு தன்னரசு ஆக இருத்தி வைக்க வேண்டும் என்ற இலட்சிய நோக்கில், வளமையையும் அமைதியையும் நிலவச் செய்யும் ஆக்கங்களில் முனைந்து இருந்த நேரம். அந்தத் திக்கில் தமது எண்ணம் ஈடேறும் நாளை நோக்கி எதிர்பார்த்து இருந்தார். அன்றைய அரசியல் சூழ்நிலையில் தமிழ்நாட்டில் எஞ்சியிருந்த பழமையான இரண்டு அரசுகளான தஞ்சையும், முகவையும், ஆற்காட்டு நவாப்பின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டு வருடப் பணமான பேஷ்குஷ் தொகையை செலுத்த வேண்டிய நிபந்தனைக்குள் இருந்தன. இந்தக் கட்டுப்பாட்டுத் தளையையும் உதறி விட்டால். இதன் விளைவு நவாப்பின் கோபத்திற்கும், படையெடுப்பிற்கும் சேது நாடு மற்றொரு களமாகி விடும். போர் எனில் புளகாங்கிதம் கொள்ளும் புகழ் மறவர் படையெடுப்பு என்றால், அஞ்சிட மாட்டார்கள் அல்லவா? அஞ்சுவது அஞ்சாமை பேதமை ஆகிவிடுமா?

இத்தகைய இக்கட்டான நிலையில் உதவுவதற்காக பாண்டிச்சேரியிலுள்ள பிரஞ்சு நாட்டு கவர்னரை சேது மன்னர் எற்கெனவே அணுகியிருந்தார்.[1] அன்றைய தமிழக அரசியலில் ஆங்கிலேயருக்கு எதிர் அணியாக

For more ebooks vist: http://getmyebook.in/

அரசியலில் போட்டியிட்ட வர்கள் பிரஞ்சுநாட்டவர். ஆற்காட்டு நவாப் அரசு கட்டிலுக்கு போட்டியிட்ட சந்தா சாகிப்பிற்கு பெரும் இராணுவ உதவி வழகி திருச்சி முற்றுகைப் போரில் ஆங்கிலேயருடன் நேரடி யாக பொருதியவர்களும் அவர்களே[2] அன்றைய தன்னரசுகளாக விளங்கிய தஞ்சை மன்னரிடமும், ஹைதராபாத் நிசாமிடமும், மைசூர் திப்பு சுல்தானிடமும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்களும் அவர்களே. மறவர் சீமையைப் பொறுத்தமட்டில், பிரஞ்சுக்காரர்கள், விஜயரகுநாத சேதுபதி மன்னர் (கி. பி. 1710-1720) காலம் தொட்டு தொடர்பு வைத்திருந்தவர்கள் கமுதிக் கோட்டையை உருவாக்கி அமைத்துக் கொடுத்தவர்கள் பிரஞ்சு நாட்டு வல்லுநர்கள் ஆகும்.[3] உலகப் புகழ்பெற்ற இராமேஸ்வரம் திருக்கோயிலின் நீண்டு சிறந்த மூன்றாம் பிரகார வடிவமைப்புக்கும் பிரஞ்சு நாட்டுப் பொறியாளர்கள் உதவியிருக்க வேண்டும் என்பது வரலாற்று ஊகம்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் பாண்டிச்சேரியிலிருந்து, பிரஞ்சு நாட்டிற்கு புறப்பட்டுச் சென்ற மான்ஷியர் வெல்கோம்ப் மூலம் பிரஞ்சு சக்கரவர்த்தியுடன் பெற்றிருந்த இராஜியத் தொடர்புகளை சுட்டிக்காட்டி நவாப்பிடமிருந்து, மறவர் சீமையில் அரசியல் ஆக்கிரமிப்பை அகற்ற இராணுவ அணியும், வெடி மருந்து வசதிகளையும் கோரி மன்னர் தமது பிரதிநிதியாக மயிலப்பன் சேர்வைக்காரரை பாண்டிச்சேரியிலுள்ள பிரஞ்சு ஆளுநரிடம் அனுப்பி வைத்தார்.[4] இந்த இரகசிய நடவடிக்கைக்கு பிரஞ்சு

For more ebooks vist: http://getmyebook.in/

நாட்டு ஆதரவு இருந்தது. ஆனால் உருப்படியான உதவிகளைப் பெறுவதில் தாமதம் நீடித்தது. ஒரு வேளை அப்பொழுது பிரஞ்சு நாட்டில் வெடித்த மக்கள் புரட்சி, அரசியல் குழப்பங்கள் ஆகிய அசாதாரண சூழ்நிலைகள்பிரஞ்சு ஆயுத அணி, மறவர் சீமைகள் நுழைவதற்கு இடர்ப் பாடாக இருந்திருக்க வேண்டும்.!

இதற்கிடையில், மறவர் சீமையின் ஆதிக்கத்தை மிகுந்த பிரயாசையுடன் கி. பி. 1772-ம் ஆண்டு படையெடுப்பின் மூலம் நிலைநாட்டிய நவாப் முகமது அலி, அதனை ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியாருக்கு ஒரு உடன்படிக்கையின் மூலம் தாரை வார்த்துக் கொடுத்தார்.[5] எதிர்பாராத இந்த அரசியல் திருப்பத்திற்கு காரணங்கள் என்ன என்பதையும் இங்கு தெரிந்து கொள்ளுதல் அவசியமாகிறது. கர்நாடக நவாப்பின் ஆட்சி பீடத்திற்கு சந்தா சாகிபுவுடன் போட்டியிட்ட முகம்மது அலியை, ஆங்கிலேயர் தங்களது ஆயுத உதவியாலும், இராஜ தந்திரத்தாலும் வெற்றிபெறச் செய்தனர். ஆனால் தொடர்ந்து எழுந்த அரசியல் குழப்பங்கள்-நெல்லைச் சீமை பாளையக்காரர்களது கிளர்ச்சி, கமமந்தான் கான்சாகிப்பின் மதுரைப் புரட்சி, மதுரைச் சீமை ஆளுநரான நவாப்பின் தமையன் மாபூஸ்கானின் துரோகம், மறவர் சீமை, தஞ்சைத் தரணி படையெடுப்புக்கள், மைசூர் மன்னர் ஹைதரலியுடன் கர்நாடகப் போர், பிரஞ்சுக்காரர்களது சென்னை முற்றுகை-ஆகிய அரசியல் மோதல்களினால் நவாப் முகமதலி முழுமையாக கிழக்கிந்தியக் கப்பெனியாரது படைபலத்தைப் பெற்று சமாளிக்க வேண்டியதிருந்தது.

For more ebooks vist: http://getmyebook.in/

இதன் காரணமாக நவாப் போர் நடவடிக்கைகளுக்கான பெருஞ்செலவை கும்பெனியாருக்கு கடனாக செலுத்த வேண்டிய நிர்ப்பந்தமும் எழுந்தது. அத்துடன் ஆற்காட்டிலிருந்து சென்னை சேப்பாக்கத்தில் குடியேறுவதற்கு பிரம்மாண்டமான மாளிகையினை, (1783-1771) பல ஆயிரக்கணக்கான ரூபாய் கடன் தொகையை ஆங்கிலேயரிடம் மிகக் கூடுதலான வட்டிக்கு (20 முதல் 30 சதவீதம்) பெற்று-அமைத்து கும்மாளம் போட்ட ஆடம்பரச் செலவுகளும்[6] சேர்ந்து நவாப் முகமதலியின் கழுத்தை நெறித்தன.

இவைகளை சமாளிப்பதற்காக, அவர் பல சலுகைகளை ஆங்கிலேயர்களுக்கு வழங்கி வந்தார். முதலில் கி. பி. 1763-ல், இன்றைய செங்கை மாவட்டத்தை கும்பெனியாருக்கு நல்லெண்ண நடவடிக்கையாக விட்டுக் கொடுத்தார். நவாப்பின் கைப்பற்றுதலில் உள்ள நெல்லைச் சீமையின் வரி வசூலை மேற்கொள்ளும் உரிமையை அடுத்து, கும்பெனியார் பெற்றனர்.[7] அடுத்து, கர்நாடகத்தில் நவாப்பிற்கு வரவேண்டிய வருவாய் இனங்களை வசூலித்து அதில் ஆறில் ஒரு பகுதியை மட்டும், நவாப்பிற்கு அளித்து விட்டு எஞ்சிய தொகையை அவர் பட்ட கடனுக்கு வரவு வைத்துக் கொள்ளவும் அவர்கள் அனுமதிக்கப்பட்டனர். வியாபாரத்திற்காக இந்த நாட்டிற்கு வந்த ஆங்கிலேயர் இந்த நாட்டு அரசியலில் நேரடியாகப் பங்குகொள்ளத் துவங்கினர். நிர்வாகப் பணிகளை நிறைவேற்ற அவர்கள் தனியான நிர்வாக அமைப்பு ஒன்றினையும் (போர்டு ஆப் அசைன்டு ரெவின்யூவையும்), அதில் பணியாற்ற

For more ebooks vist: http://getmyebook.in/

பேஷ்குஷ் கலெக்டர்களையும், கி. பி. 1786-ல் நியமனம் செய்தனர். கி.பி. 1787-ல் நவாப்புடன் பாதுகாப்பிற்கான உடன்படிக்கையைச் செய்து கொண்டு அவரது ஆதிக்கத்திலிருந்த அனைத்துக் கோட்டைகளையும் பராமரிப்பு செய்வதாக நடித்து தங்களது பொறுப்பில் கொண்டு வந்தனர். அதற்கான நிதி வசதியையும் நவாப்பிடம் பெற்றனர். தமிழக வரலாற்றில் ஒரு புதிய அரசியல் திருப்பத்தைச் சுட்டுகின்ற முக்கியமான ஆவணமாக[8] இந்த உடன்பாடு விளங்குகிறது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர், ஆங்கிலேயர்கள் நவாப்புடன் செய்து கொண்ட உடன்பாட்டினால்[9] எழுந்துள்ள குறைபாடுகளைத் தவிர்ப்பதற்காக வரையப்பட்டது போன்ற தொடக்க வாசகங்கள் இதில் காணப்பட்டாலும், இந்த உடன்பாடு முழுக்க முழுக்க அந்நாட்டு நவாப் வாலாஜா முகம்மதலியின் இயலாத் தன்மையை பரிதாபமாக பிரதிபலிப்பதுடன், அவரிடம் எஞ்சியுள்ள அரசியல் அதிகாரங்களையும் கும்பெனியாருக்கு கொடுத்துவிடும் தான சாசனமாக உள்ளது.

இந்த உடன்பாட்டின் மூன்றாவது நிபந்தனை, ஏதாவது போர் அபாயம் ஏற்படும் பொழுது கர்நாடகப் பகுதி முழுவதையும் கும்பெனியாரே பொறுப்பு ஏற்க வேண்டியது. நவாப்பினது தனிப்பட்ட ஜாகீர்களைத் தவிர, கர்நாடகத்தில் உள்ள அனைத்துக் கோட்டைகளின் பாதுகாப்புப் பணியும் கும்பெனியாரைச் சார்ந்தது.

For more ebooks vist: http://getmyebook.in/

நான்காவது நிபந்தனைப்படி கர்நாடகத்தில் ராணுவ தளங்களைப் பராமரிக்க நவாப் ஆண்டுதோறும் கும்பெனியாருக்கு ஒன்பது லட்சம் ஸ்டார் பக்கோடா பணத்தை பங்குத் தொகையாகக் கொடுக்க வேண்டும். மேலும் பழைய கடன் பாக்கிக்காக 6, 21, 105 ஸ்டார் பக்கோடா பணமும் செலுத்த வேண்டும்.

ஐந்தாவது நிபந்தனைப்படி கும்பெனியார், நவாப்பிற்கு கட்டுப்பட்ட பாளையக்காரர் அனைவரிடமிருந்து ஆண்டு செலுத்த வேண்டிய பேஷ்குஷ் தொகை 2,64,704 ஸ்டார் பக்கோடா பணத்தையும் வசூலித்து முன் கடனுக்காக வரவுவைத்துக் கொள்ள வேண்டியது.

ஆறாவது நிபந்தனைப்படி, கும்பெனியார், நவாப்பின் பெயரால் பாளையக்காரர்களிடத்து அதிகாரங்களை செலுத்திக் கொள்வது.

ஏழாவது நிபந்தனைப்படி, நவாப் ஆண்டுதோறும் பாளையக்காரர் பேஷ்குஷ் தொகையைக் கழித்துக்கொண்டு பத்து தவணைகளில் 12, 56, 400 ஸ்டார் பக்கோடா பணம் செலுத்த வேண்டும்.

இந்த தொகையை குறிப்பிட்ட தவணை நாளுக்கு பதினைந்து நாட்கள் முன்னதாகச் செலுத்த நவாப் தவறினால், நவாப்பிற்குச் சொந்தமான திருநெல்வேலி, மதுரை, திருச்சி, நெல்லூர், வடஆற்காடு, பழநாடு, ஓங்கோல் சீமைகள் அனைத்தையும் அல்லது அவைகளில் ஒரு சீமை வரி வசூலை கும்பெனியார் மேற்கொள்ள வேண்டியது. பாக்கி முழுவதையும் வசூலித்த பிறகு அந்தச்

For more ebooks vist: http://getmyebook.in/

சீமையை மீண்டும் நவாப்பிற்கு கொடுத்துவிட வேண்டியது. இரண்டாவது தவணையிலும் நவாப் பணம் செலுத்துவதில் தாமதம் செய்தால், மேலே சொன்னவாறு மேற்கொள்ளப்பட்ட சீமையை கும்பெனியாரே நிரந்தரமாக வைத்துக்கொள்ள வேண்டியது என்பது உடன்பாட்டில் எட்டாவது நிபந்தனை.

மேலும், நவாப்பிற்குப் பதிலாக, பாளையக்காரர்களிடமிருந்து தேசகாவல் பணிக்கான, பாரம்பரியமான ஆண்டுக் காணிக்கைகளை அவர்களே பெற்றுக் கொள்ளும் உரிமையையும் பெற்றனர். இந்த உடன்பாட்டைத் தொடர்ந்து மறவர் சீமையை மூன்று ஆண்டு கால நிர்வாகத்திற்கு ஒப்படைப்பில் பெற்றனர்.

இத்தகைய, விபரீதமான முடிவிற்கு வர ஆற்காட்டு நவாப்பினை உந்திய காரணங்கள் எவை என்பதை விளக்க உதவும் ஆவணம் எதுவும் இல்லை (ஒரு வேளை இதுவரை மொழியாக்கம் செய்யப்படாமல் பாரசீக மொழியிலுள்ள நவாப்பினது கடிதத் தொகுப்புக்கள் மொழியாக்கம் பெற்றால் விளக்கம் பெற உதவலாம்).

முதுமையிலும் கடன் சுமையிலும் முதிர்ந்துவிட்ட முகமதலி நவாப் கொண்ட அவசர முடிவா? அல்லது மறவர் சீமையின் நிச்சயமற்ற சூழ்நிலையா?

அப்பொழுது இலங்கையில் காலூன்றி விட்ட ஆங்கிலேயருக்கு, எதிர்க்கரையான மறவர் சீமை எதிர்காலத்தில் தங்களுக்கு பயனுள்ளதாக அமையும்

For more ebooks vist: http://getmyebook.in/

என்ற கருத்தில் அவர்கள் நவாப்பை வற்புறுத்திப் பெற்ற தானமா?

இந்த வினாக்களுக்கு விடை காண இயலாதவையாக உள்ளன. என்றாலும், 9-7-1791ம் தேதியிட்ட கும்பெனியாரது ஆவணத்தின்படி தஞ்சை தரணியையும், எஞ்சியுள்ள தமிழ்நாட்டில் நவாப்பிற்கு ஆதிக்கம் உள்ள அனைத்துப் பகுதிகளையும், தங்களது நிர்வாக கட்டமைப்பில் கொண்டுவர அவர்கள் துடித்துக் கொண்டிருந்தனர் என்பதை புரிந்துகொள்ள முடிகிறது.[10] நவாப்பின் முடிவிற்கான காரணம் எதுவாக இருந்தாலும், ஆங்கில ஆதிக்கம் தமிழ்நாட்டில் நிலைகொள்ளுவதற்கு முதன் முதலில் வளமையற்ற மறவர் சீமையின், மண்ணைத் தேர்வு செய்தவர்கள் மதியூகிகள் என்பதை வரலாறு விளம்புகிறது. தமிழக வரலாற்றினை ஈர்த்து இழுத்துச் செல்லும் இத்தகைய எதிர்பாராத உத்திகள் சேதுபதி மன்னரது சாதனைகளுக்கு பெரும் சோதனைகளை உருவாக்கின. அத்துடன் இராமநாதபுரத்திற்கும், சிவகங்கைக்கும் இடையில் எழுந்த பிணக்குகளும், மோதல்களும் இராமநாதபுரம் அரசியலை பதினெட்டாம் நூற்றாண்டின் வரலாற்று விளிம்புகளுக்கு விரைவாக நெருடி நெருக்கின.

1. ↑ Kuthirvol. S. Dr. History of Marawas (1700-1800), p. 2.21.
2. ↑ Robert Oorme, Military Transactions in Indoostan, Vol. I, (1861), p. 200.
3. ↑ Rajaram Row, T., Ramnad Manual (1891) p. 180
4. ↑ Kathirvel, S. Dr. History of Marawas (1977), pp. 220-22
5. ↑ Karnatic Treaty, 1792, 15-7-1792

For more ebooks vist: http://getmyebook.in/

6. ↑ The Hindu (Madras) The Former Residence of Arcot' (3-0-1963)
7. ↑ Rajayyan. Dr. K., Administration and Society in Carnatic (1966)
8. ↑ Aitchison, Collection of Treaties, Vol. 5
9. ↑ Ibid., Vol. 5, No. 8 L.
10. ↑ Mily. Cons, Vol. 136, 9-7-1791, p. 2066

---

For more ebooks vist: http://getmyebook.in/

## 6
# சிவகங்கையும் சேதுபதியும்

அன்றைய சிவகங்கை என்பது இராமனாதபுரம் மன்னர் விஜய ரகுநாத சேதுபதியின் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட தொன்றாகும். நாலுகோட்டை உடையாத் தேவரை இராமனாதபுரம் சீமையில் பாளையக்காரர்களில் ஒருவராக மன்னர் கிழவன் சேதுபதி நியமனம் செய்தார். முன்னூறு வீரர்களுக்கு தளபதியாக அவரை நியமனம் செய்து, அதற்குத் தக்க நில மான்யமும் வழங்கியிருந்தார். இராமனாதபுரம் சீமை ஆட்சி உரிமைக்குப் போட்டியிட்ட சிறுவல்லி பாளையக்காரரான திரையத் தேவரது பாளையத்தை ஒட்டி நாலுகோட்டை அமைந்திருந்ததால் அதற்கு மிகுந்த அரசியல் முக்கியத்துவம் இருந்துவந்தது. அவரை அடுத்து வந்த விஜய ரகுநாத சேதுபதி மன்னர் உடையாத் தேவரது மகன் சசிவர்ணத்தேவருக்குத் தமது மூன்றாவது மகளாகிய அகிலாண்டேசுவரி நாச்சியாரைத் திருமனம் செய்துவைத்தார்.[1] அதுவரை தமது பாளையக்காரராக இருந்து இந்த திருமணத்தின் மூலம் நெருங்கிய உறவினராகி விட்ட நாலுகோட்டைத் தேவரது அந்தஸ்தை உயர்த்துவதற்காக அவருக்கு மேலும் பல கிராமங்களை சீதனமாக வழங்கி 1,000 போர் வீரர்களுக்கு தளபதியாகப் பதவி உயர்வு அளித்தார்.[2] தளபதி என்பவர் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான போர் வீரர்களை அவசர காலத்தில் மன்னருக்கு அளித்து உதவும் . கடபாடு உடையவர். ஆண்டுதோறும் அந்தப் போர் வீரர்ளைப்

For more ebooks vist: http://getmyebook.in/

பராமரிப்பதற்கான அளவு வருவாய் உடைய காணி அல்லது ஊர்களை தளபதிக்கு மன்னர் கொடுத்தல் வழக்கமாக இருந்து வந்தது. அத்துடன் தமது மருமகனை இராமநாதபுரம் சீமையின் எட்டு மாகாணங்களில் ஒன்றான வெள்ளிக் குறிச்சிக்கு ஆளுநராகவும் நியமனம் செய்தார்.[3]

ஆனால், இந்த சேதுபதி மன்னரது இறப்பிற்குப் பிறகு இராமநரதபுரத்தில் அரியாசனம் ஏறிய தண்டத் தேவரது ஆட்சியை தஞ்சை மன்னரது படை உதவியுடன் பவானி சங்கரத் தேவர் கைப்பற்றினார். இவர் இரகுநாதக் கிழவன் சேதுபதியின் இளவல் ஆவார். கைதியாகப் பிடிக்கப்பட்ட தண்டத் தேவர் கொலை செய்யப்பட்டார். அத்துடன் வெள்ளிக் குறிச்சியின் ஆளுநர் சசிவர்ணத் தேவரும் பதவி நீக்கம் பெற்றார். அவர் பக்கத்து நாடான தஞ்சைக்குச் சென்று பவானி சங்கர தேவரது அநீதியை தஞ்சை மன்னருக்கு எடுத்து உணர்த்தி அங்கேயே தங்கி விட்டார். அப்பொழுது இராமநாதபுரத்தி லிருந்து தண்டத் தேவரது சகோதரர் கட்டையத் தேவரும், உயிருக்குத் தப்பி தஞ்சை மன்னரிடம் ஓடிவந்து சேர்ந்தார்.[4]

இந்த இரண்டு இளவல்களது அவல நிலையை அறிந்த தஞ்சை மன்னர் அவர்களுக்கு ஆறுதல் கூறி, அரசியல் தஞ்சம் வழங்கினார். நாளடைவில் அவர்கள் மீது கொண்ட பரிவுணர்வு காரணமாகவும், இராமனாதபுரம் சீமையில், பாம்பாற்றுக்கு வடக்கே உள்ள பகுதியை மீண்டும் தமது அரசு எல்லைக்குள் சேர்த்து விட வேண்டும் என்ற பேராசையாலும், அந்த

For more ebooks vist: http://getmyebook.in/

மறவர் தலைவர்களுக்கு படை உதவ முன்வந்தார். ஏற்கனவே பவானி சங்கரத் தேவரும், இத்தகைய உடன்பாட்டின் அடிப்படையில்தான் ஏற்கெனவே தஞ்சை அரசரது படை உதவி பெற்று இராமனாதபுரத்தைப் பிடித்தார். ஆனால், அவர் தஞ்சை அரசருக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றி செயல்பட வில்லை. அதனால், பவானி சங்கர சேதுபதியையும், தஞ்சை மன்னர் பழிவாங்க முடிவு செய்தார். விரைவில் தஞ்சைப் படைகள் கட்டையத் தேவர் தலைமையில் மறவர் சீமையை நோக்கிப் புறப்பட்டன.

பாம்பாற்றுக் கரையின் தெற்கே உள்ள ஓரியூர் கோட்டை அருகே மறவர் சீமைப் படையும், தஞ்சை மராத்தியப் படையும் மோதின. பவானி சங்கரத் தேவர் சிறைப் பிடிக்கப்பட்டு தஞ்சைக்கு போர்க் கைதியாக அனுப்பப்பட்டார்[5] வெற்றிப் படைகள் இராமநாதபுரத்தை மீட்டதுடன் அரசுக் கட்டிலில் கட்டையத் தேவரை அமர்த்தி, முத்து விஜயரகுநாத சேதுபதி என மறவர் சீமையின் மன்னராக அறிவித்தது. தமது இக்கட்டான நிலையில் தம்முடன் தோளோடு தோள் சேர்த்து தமது முயற்சிக்கு பெருந்துணையாக நின்று போரிட்ட சசிவர்ணத் தேவரை சேதுபதி மன்னர் மறந்துவிடவில்லை. இராமனாதபுரம் சீமையை ஐந்து பகுதிகளாகப் பிரித்து, அவைகளில் இரண்டு பகுதியை சசிவர்ணத் தேவருக்கு சேதுபதி வழங்கினார். அதுமுதல் (கி. பி. 1730) மறவர்சீமை, இராமனாதபுரம் சீமை என்றும், சிவகங்கைச் சீமையென்றும் பெயர் பெற்றன. இந்தப்பிரிவினையை அமுல் நடத்திய

For more ebooks vist: http://getmyebook.in/

சம்பிரிதி சசிவர்ணத்தேவர் மீது கொண்ட அக்கறை காரணமாக வைகை ஆற்றின் வளமிக்க பெரும்பகுதி சிவகங்கைப் பகுதியில் அடங்குமாறு எல்லையை நிர்ணயித்து விட்டார். இந்தத் தவறுதல் இரண்டு பகுதி ஆட்சியாளருக்கும் இடையில் மனக்கசப்பையும், தொல்லைகளையும் தோற்றுவிப்பதற்கு காரணமாக இருந்ததை பிற்கால வரலாறு காட்டுகிறது.[6]

சசிவர்ணத் தேவருக்குப் பின்னர், சிவகங்கை மன்னரான அவரது மகன் முத்து வடுகநாத பெரிய உடையாத் தேவர் காளையார் கோவில் போரில் கும்பெனியாரது குண்டினால் 25-6-1772-ல் வீர மரணம் அடைந்தார். அவருடன் இருந்த அரசி வேலு நாச்சியாரும், பிரதானி தாண்டவராயபிள்ளையும், ஆற்காட்டு நவாப்பிடம் சரணடைய விருப்பமில்லாமல் காளையார் கோவில் கோட்டையிலிருந்து தப்பித்து, மைசூர் அரசுப் பகுதியான விருபாட்சிக்கு விரைந்து சென்றனர். மைசூர் மன்னர் ஹைதாலி பகதூர் அவர்களுக்கு அரசியல் தஞ்சம் வழங்கி ஆதரித்தார். அத்துடன் அவர்களுக்கு படை உதவி வழங்கு வதாகவும் வாக்களித்தார்.[7] ஆனால் பிரதானி தாண்டவராய பிள்ளை உடல் நலிவுற்று இறந்து விட்டதால், அரசியாரது அந்தரங்கப் பணியாளர்களான மருது சகோதரர்கள் ஹைதரலியின் படை உதவியுடன் கி. பி. 1780-ல் சிவகங்கைக் கோட்டையை ஆற்காட்டு நவாப்பின் கூலிப்படைகளிடமிருந்து மீட்டனர். அரசி வேலுநாச்சியாரை சிவகங்கைச்சீமையின் அரசியாக அறிவித்து அவரது பிரதானிகளாகப் பணியேற்றனர்.[8] நாளடைவில் விதவையான ராணி

For more ebooks vist: http://getmyebook.in/

வேலுநாச்சியாருக்கும் வெள்ளை மருதுவிற்கும் ஏற்பட்ட நெருக்கமான உறவு சிவகங்கை அரசியலில் விபரீதத்தை விளைவித்தது. அரசியார் பெண் என்ற பலவீனத் தைப்பயன்படுத்தி. தாங்களே சிவகங்கைச் சீமையின் ஆட்சியாளர்களாக மருது சகோதரர்கள் இயங்கி வந்தனர். அரண்மனையில் அடிமைப் பணிபுரியும் பெரிய மருது, அரசியாரை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்தது மறவர் இன மக்களிடம் மனக் கொதிப்பை ஏற்படுத்தியது, அண்டை நாடான பெரிய மறவர் சீமையின் சேதுபதி மன்னருக்கு மருது சகோரர்களது நடவடிக்கைகள் அதிர்ச்சியை அளித்தன. [9]

இவர்களுக்கு மக்களிடம் செல்வாக்கு மிகுந்ததால், நாளடைவில் அரசியாரது தலைமையை புறக்கணித்து தன்னிச்சையாக செயல்படத் தொடங்கினர். இதனால் சிவகங்கைச்சிமை அரசியலில் அவநம்பிக்கையும் கருத்து வேறுபாடுகளும் வளர்ந்தன. மக்களிடையே அரசியை ஆதரிப்பவர்களும், பிரதானிகளை பின்பற்றுபவர்களுமாக இரு பிரிவுகள் ஏற்பட்டன, பிரதானி சின்ன மருதுவின் அடாவடியான நடவடிக்கைகளால் அரசியார் வெறுப்பும் வேதனையும் அடைந்தார். அதனால் தமது ஆட்சியையும் அதிகார வரம்பையும் உறுதிப்படுத்த முயன்றார்.[10] இதனைத் தொடர்ந்து அரசியாரது ஆதரவாளர்களுக் கும் பிரதானியைப் பின்பற்றுபவர்களுக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது. அரசியாரது உதவிக்கு ஆற்காட்டு நவாப்பின் படைகள் ஓடிவந்தன.[11] சிவகங்கையிலிருந்து வெளியேற்றப்பட்ட மருதுவின்

For more ebooks vist: http://getmyebook.in/

ஆதரவாளர்கள் திருப்பத்துார் கோட்டைக்கும், காளையார்கோவில் கோட்டைக்குமாக சிதறி ஓடினர். ஆற்காட்டுப் படைகளும் கும்பெனியார் படைகளும் அவர்களைப் பின்தொடர்ந்து அவர்களை மைசூர் அரசின் பகுதிக்குள் விரட்டினர். சிவகங்கையில் அரசியாருக்கு ஆதரவான சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டு, நவாப்பின் படைகள் திருச்சிக்கும், மதுரைக்கும் புறப்பட்டுச் சென்ற பின்னர், மருதுவின் படைகள் மீண்டும் சிவகங்கையைக் கைப்பற்றின. இந்த இழுபறி தொடர்ந்து கொண்டே இருந்தது.[12]

இந்த நடவடிக்கைகளையெல்லாம் இராமநாதபுரம் மன்னர் முத்துராமலிங்க சேதுபதி மிகுந்த அக்கறையுடன் கவனித்துவந்தார் அவரது உள்ளத்தில் வேதனை நிறைந்தது. தமது பெரிய பாட்டனரான விஜய ரகுநாத சேதுபதி நாலுகோட்டைத் தேவருக்கு கொடுத்த சீதனச் சொத்து சிவகங்கை. அதன் அரசியல் சீரழிவை அவரால் எவ்விதம் சகித்துக் கொள்ளுவது? விர மறக்குடி வழியினரான தமது உறவினர் இராணி வேலுநாச்சியாரை, அவரிடமே அடிமைகளாக இருந்த மருது சேர்வைக்காரர்கள் ஆட்டிப் படைப்பதா? இத்தகைய இனவாத உணர்வுகள் அவரது இதயத்தில் மேலெழுந்து நின்றன. அத்துடன் அப்பொழுதைய ஆண்வாரிசு இல்லாத சிவகங்கைச் சொத்திற்கு தாமே சரியான வாரிசு என்ற பொய்மையான நியாயமும், அவரது சிந்தனையில் உருவாகி நின்றது. ஆதலால் மறவர் சீமையை மீண்டும் ஒன்றுபடுத்த வேண்டிய உயர்ந்த நோக்கத்தை ஆற்காட்டு நவாப்பிற்கு

For more ebooks vist: http://getmyebook.in/

விளக்கமாக எழுதி சிவகங்கைச் சீமையையும், தமது ஆட்சி வரம்புக்குள் அமைத்துக் கொள்ள விருப்பம் தெரிவித்தார். அந்தப் பகுதிக்கான பேஷ் குஷ் தொகையையும் தாமே செலுத்தி விடுவதாகவும் தெரிவித்தார்.[13]

இராமநாதபுரம் மன்னரது கோரிக்கை நவாப்பிற்கு நியாயமாகவே பட்டது. என்றாலும், நவாப்பின் இணைக்கத்தை செயல்படுத்துவதற்கு கும்பெனியார் உடன்படவில்லை. மைசூர் மன்னர் ஆங்கிலேயருக்கு எதிராகவும், மருது சேர்வைக்காரர்களுக்கு ஆதரவாகவும் இருந்ததால் சிவகங்கை அரசியலில் தீவிரமான மாற்றம் எதனையும் புகுத்த விடாமல் கும்பெனியார் குறுக்கே நின்றனர். இருந்தாலும் தமது அடுத்த முயற்சியாக இராணி வேலு நாச்சியாரது மகள் வெள்ளச்சியை மணந்து கொள்ளுவதற்கு சேதுபதி மன்னர் முயற்சித்தார்.[14] ஏற்கெனவே திருமணமான அவர் இப்பொழுது ஏன் சிவகங்கை இளவரசியை மணந்துகொள்ள முன்வர வேண்டும் என்பதை மருது சேர்வைக்காரர்கள் எளிதில் புரிந்து கொண்டனர். இந்த முயற்சி மறவர் சீமையை ஒன்றுபடுத்தவும், தங்களுக்குள்ள செல்வாக்கை செல்லாத காசாக்கவும் செய்யும் மறைமுக சூழ்ச்சி என்பதை உணர்ந்தவர்களாக அந்த முயற்சியை அவர்கள் முறியடித்தனர். அத்துடன் அந்த இளவரசி, படமாத்துார் கௌரி வல்லபத் தேவர் என்ற அரச வழியினரை மணம் செய்ய விடாமலும் குழப்பம் செய்தனர். இதனை அறிந்த கும்பெனி யார், சிவகங்கைச் சேர்வைக்காரர்களை கடுமையாக எச்சரித்தனர்.[15]

For more ebooks vist: http://getmyebook.in/

சிவகங்கைப் பிரதானிகளது நடவடிக்கைகளால் சேதுபதி மன்னரது சினமும் சீற்றமும் பன்மடங்கு பெருகியது. சிவகங்கைப் பிரதானிகள் தமக்கு மட்டுமல்லாமல், தமது மறவர் சமூகத்திற்கே எதிரியாக வளர்ந்திருப்பது போன்ற பகை உணர்வு மன்னருக்கு. அவர்களை அழித்து தமது முன்னோருடைய சொத்தான சிவகங்கைச் சீமையை மீட்பதற்கு என்ன செய்யலாம் என்ற சிந்தனையில் இடைவிடாது மூழ்கியிருந்தார் அவர். இந்த நிலையில்

(கி. பி. 1792) ஆற்காட்டு நவாப் கும்பெனியாரிடம் மறவர் சீமை நிர்வாகத்தை மூன்று வருடகாலத்திற்கு மாற்றிக்கொடுத்தது பல வழிகளிலும் இக்கட்டான சூழ்நிலைகளை உருவாக்கின. என்றாலும், இராமனாதபுரம் சேதுபதி மன்னரது இலட்சியம்-மறவர் சீமையை ஒன்றுபடுத்துவது. அந்நிய ஆதிக்கத்தை தமது மண்ணிலிருந்து அடியோடு அகற்றுவது-அந்த இலட்சியப் பாதை அவரது பார்வையில் தெளிவாகத் தோற்றமளித்தது! எத்தகைய எதிர்ப்புகள் இடைப்பட்டால் என்ன? அவைகளை எதிர்த்து தூசாகத் தூற்றிவிடக் கூடிய துணிவு இருக்கும் பொழுது!

நீண்ட நெடுங்காலமாக திருநெல்வேலிக்கும், சோழ வள நாட்டுக்கும் இடையிலான போக்குவரத்துப் பாதை மறவர் சீமை வழியாகச் சென்றது. இராமனாதபுரம் சீமையின் எல்லையிலுள்ள திருச்சுழியலில் தொடங்கி பட்ட நல்லூர் வழியாக சிவகங்கைச் சீமைக்குள் சென்று, தொண்டித் துறையைத் தொட்டு, தஞ்சை சேருவது இப்பாதை. ஏற்கெனவே சிவகங்கைச்

For more ebooks vist: http://getmyebook.in/

சிமையிலிருந்து இராமநாதபுரம் மன்னருக்குச் சொந்தமான திருவாடானை வழியாக தொண்டித் துறைமுகத்துக்குச் சென்ற சாயர் (அவுரி) பொதிகள் மீது விதிக்கப்பட்ட சுங்கம் ரூபாய் பதினாராயிரத்தை இராமநாதபுரம் அரசுக்கு சிவகங்கைச் சேர்வைக்காரர் செலுத்த மறுத்த[16] சிவகங்கை ஆட்சியாளர்மீது ஏற்பட்ட வெறுப்பு காரணமாக, இந்தப் போக்குவரத்துப் பாதையில், சேதுபதி மன்னர் மாற்றங்களை ஏற்படுத்தினார். இந்த மாற்று வழியினால், பட்டநல்லூர் சுங்கச்சாவடி மூலம் கிடைத்த வருமானம் சிவகங்கை அரசுக்கு கிடைக்காது போயிற்று. மன்னரது இந்த எதிர்ப்பு நடவடிக்கையை சிவகங்கைப் பிரதானிகள் கிழக்கிந்தியக் கும்பெனியாரிடம் புகார் செய்தனர். மேலும் ஆற்காட்டு நவாப்பின் கவனத்திற்கும் இந்த நடவடிக்கை பற்றி அறிக்கை அனுப்பினர். ஆனால் எத்தகைய பலனும் இல்லாத தாஸ், பொறுமையிழந்த சிவகங்கைப் பிரதானிகள் பலர் எதிர் நடவடிக்கையில் இறங்கினர்.[17]

மறவர் சீமையின் மலர்ச்சிக்கு காரணமாக உள்ள வையை கிருதுமால் ஆறுகள், மேற்கிலிருந்து கிழக்காக சிவகங்கைச் சீமையில் நுழைந்து இராமனாதபுரம் சீமையைக் கடந்து கிழக்குக் கடற்கரையில் சங்கமம் பெறுகின்றன. வழியிலுள்ள நூற்றுக் கணக்கான கண்மாய்கள், அதே ஆற்று நீரினால் நிறைக்கப்பட்டு, விவசாயத்திற்குப் பயன்படுத்தப் பட்டன. இதனைத் தடுத்து இராமநாதபுரம் சீமையில், வறட்சியைத் தோற்றுவிக்கும் முயற்சியாக, அந்த ஆற்றுக் கால்களின் போக்கை அடைத்து

For more ebooks vist: http://getmyebook.in/

வெள்ளத்தை, வேறு திக்குகளில் திருப்பிவிடும் முயற்சியில் சிவகங்கைப் பிரதானிகள் முனைந்தனர். மறவர் சீமையின் மன்னர் மீதுள்ள கோபம் காரணமாக, அந்தச் சீமையின் மக்களைப்பற்றி குறிப்பாக மன்னரது ஊழியத்திலுள்ள, ஆயிரக் கணக்கான தமது அகம்படியர் குலத்தவரது நல்வாழ்வு பற்றிய சிந்தனைகூட அவர்களுக்கு இல்லாது போயிற்று. இத்தகைய நடவடிக்கை பற்றிய முதல் செய்தி மன்னருக்கு பள்ளிமடத்திலிருந்து 14-4-1793-ல் கிடைத்தது. சித்திரைப் புத்தாண்டு நாளின் புனித காரியங்களில் ஈடுபட்டிருந்த சேதுபதி மன்னர், செய்தி அறிந்ததும், கிளர்ந்து எழுந்தார்.

அடுத்தநாள் காலையில், இராமநாதபுரம் கோட்டை கொடி மேடையிலிருந்த முரசம் முழங்கியது. கோட்டைக்கு உள்ளும் புறமும் இருந்த நூற்றுக் கணக்கான மறவர்கள் வளரித் தண்டு, வாள், கேடயம், ஈட்டி, துப்பாக்கி, தாங்கியவர்களாக கோட்டை முகப்பில் அணிவகுத்து நின்றனர். காவிக் கொடி தாங்கிய குதிரை வீரர்கள் முன் செல்ல பணியாட்கள் பின் தொடர, மன்னர் முத்துராமலிங்கம் பள்ளிமடத்துக்குப் புறப்பட்டார்.[18] அங்கே குண்டாற்றின் குறுக்கே சிவகங்கைச் சேர்வைக்காரர்கள் ஏற்படுத்தியிருந்த தடைகளை நீக்கி வெள்ளப்போக்கிற்கு வசதி செய்துவிட்டு கோட்டைக்குத் திரும்பினார். அடுத்து, அபிராமம் கண்மாய்க்கு வருகின்ற வாத்துக்காலும், சிவகங்கையாரால் மூடப்பட்டது. அதனையும் மன்னர் செம்மைபெறும்படிச் செய்தார். தொடர்ந்து பல கண்மாய்களும் இத்தகைய அழிவு முயற்சியால்

For more ebooks vist: http://getmyebook.in/

பாதிக்கப்பட்டன. இவை அனைத் தையும் உடனுக்குடன் மன்னர் கவனித்ததுடன், சிவகங்கையாரின் சிறுமைச் செயல்பற்றி கும்பெனியாரின் பிரதிநிதியான கலெக்டர் லாண்டனின் கவனத்திற்கு கொண்டு சென்றார்.[19]

இவை போன்று அடுத்தடுத்து பல நிகழ்ச்சிகள் உணர்ச்சி வசப்பட்ட இரு தரப்பினரின் நிலைகளில் பல மோதல்கள் உருவெடுத்தன. எல்லைப்பகுதி ஒன்றிலே உள்ள புஞ்சைக் காட்டின் விளைச்சலை அறுவடை செய்து எடுத்துவரும் பொழுது சிவகங்கையார் அந்த நிலம் தங்களது சீமையைச் சேர்ந்தது என உரிமை கொண்டாடி அறுவடை மகசூலை பறித்துச் சென்றனர். துணிகரமான முறையில் நடந்து கொண்ட இந்த தீய நடவடிக்கைக்கு மாற்று நடவடிக்கையாக இராமனாதபுரம் ஆட்கள் அன்று இரவே அந்தக் கிராமத்தைச் சூறையாடினர். அங்கு வந்த மருது சகோதரர்களின் மக்கள் இராமனாதபுரம் மறவர்களில் சிலரைக் கொன்று எஞ்சியவர்களை தங்களது எல்லையினின்றும் துரத்தி அடித்தனர்.[20] இதே போன்று இன்னொரு நிகழ்ச்சி. தொண்டியை அடுத்த சோழியக்குடி கிராமத்திலும் நடைபெற்றது. இராமநாதபுரம் வீரர்கள் ஐம்பது கிராமங்களை சூறையாடி குடிகளைக் கொன்று 20,000 கலம் நெல்லையும் கால்நடைகளையும் கடத்திச் சென்றதாக சிவகங்கையாரின் வக்கீல் சங்கரலிங்கம்பிள்ளை கும்பெனி துரைத்தனத்தாரிடம் புகார் செய்தார்.[21]

For more ebooks vist: http://getmyebook.in/

மற்றுமொரு அவமானமானச் செயல் பற்றி சின்ன மருது சேர்வைக்காரரே, கும்பெனி கலெக்டருக்கு புகார் ஒன்று அனுப்பி வைத்தார். அந்த அறிக்கையின் சுருக்கமாவது.[22] சிவகங்கையைச் சேர்ந்த பாண்டுகுடி கிராமத்தில் சிவகங்கைச் சேர்வைக்காரரது பணியில் இருந்த குப்பமுத்து என்பவர், மருது சேர்வைக்காரர்களுக்கு பயந்து பக்கத்தில் உள்ள இராமநாதபுரம் சீமையில் தஞ்சமடைந்தார். அவருடைய இரண்டு மாடுகள் பாண்டுகுடி யில் தங்கி விட்டதை ஒட்டிச் செல்வதற்காக, இராமநாதபுரம் சீமைச் சேவகர்கள் இருபதுக்கும் அதிகமானவர்களை அழைத்துவந்து, தம்முடைய மாடுகளுடன் எனைய குடிகளது மாடுகளையும் ஒட்டிக்கொண்டு போய்விட்டனர். இந்த விவரத்தை சீமை, சீமையில் உள்ள திருவாடனை அமில்தாருக்கு தெரிவித்து இந்த நிகழ்ச்சிக்கான முகாந்திரத்தைத் தெரிவிக்குமாறு சிவகங்கைப் பிரதானி ஒரு சேவகர் மூலம் கடிதம் அனுப்பினார். இது சம்பந்தமாக இராமநாதபுரம் அரசைக் கேட்டு பதில் கொடுப்பதாகவும் அதுவரை அவரை திருவாடனையில் தாமதிக்குமாறும் சொல்லப்பட்டது. அவ்விதமே மூன்றாவது நாள் இராமநாதபுரத்தில் இருந்து வந்த சேவகர், சிவகங்கை சேவகரைப் பிடித்து இருத்தி அவரது தலையில் ஒரு பகுதியை சிரைத்து, அவரை ஒரு கழுதை மேல் அமர்த்தி, பிணைத்து சிவகங்கை சேர்வைக்காரரது கடிதத்தையும் கழுதையின் கழுத்தில் தொங்கவிட்டு, கழுதைக்கும் சேவகருக்கும் உதை கொடுத்து சிவகங்கை சீமைப் பகுதிக்குள் துரத்தி விட்டனர்.

For more ebooks vist: http://getmyebook.in/

எல்லையிலே நிகழ்ந்த இத்தகைய தொல்லைகளினால், பகைமை மிஞ்சிய பழி உணர்வுடன், தமது போர் வீரர்களை சிவகங்கைச் சீமைப் பகுதிக்குள் புகுந்து, கொள்ளையும், கொலையும் மேற்கொள்ளுமாறு மன்னர் உத்தரவிட்டார். அவரது அணியொன்று எல்லையிலுள்ள விசுவனுர் சென்று அடைந்த பொழுது சிவகங்கைச் சேர்வைக்காரர்கள் தமது போர்வீரர்களை ஆனந்துருக்கு அனுப்பி இராமனாதபுரம் அணியை தடுத்து நிறுத்த ஆணையிட்டனர். இரண்டு கல் தொலைவு இடைவெளியில், இரு தரப்பினரும் எதிர் எதிராக இருந்து ஒருவரை ஒருவர் கடுமையாகச் சாடினர். பல நாட்கள் இந்தத் தாக்குதல் தொடர்ந்தது.[23] வேறு சில பகுதிகளிலும் இத்தகைய மோதல்கள் ஏற்பட்டன. இராமநாதபுரம் மன்னருக்கு ஆதரவாக இருந்த மேலூர் கள்ளர்களும், சிவகங்கைச் சீமையின் மேற்குப் பகுதியில் புகுந்து தங்கள் கைவரிசைகளைக் காண்பித்தனர். திருப்புவனம் சீமையைக் கொள்ளையிட்டு 258 பேர்களைக் கொன்றனர். 2, 000 கலம் நெல்லையும், 17,000 மாடுகளையும், 10,000 ஆடுகளையும் கொள்ளைப் பொருளாக எடுத்துச் சென்றனர். பட மாத்துார் அய்யாத்தேவர் மகன் கவண்டத் தேவர் தலைமையில் இந்தக் கொள்ளை நீடித்தது.[24] தெற்கிலும் மேற்கிலும் தாக்கப்பட்ட சிவகங்கைப் படைகள் வீரத்துடன் போரிட்டு நிலையையை சமாளித்தனர்.

For more ebooks vist: http://getmyebook.in/

அடுத்து, இராமநாதபுரம் சீமையைச் சேர்ந்த சம்பிரிதி ஒருவர். அரசரது கடுமையான நடவடிக்கைக்குப் பயந்து சிவகங்கைச் சீமை கிராமம் ஒன்றில் தஞ்சம் புகுந்தார். மன்னரது வீரர்கள் அந்தக் கிராமத்துக்குள் புகுந்த அந்த அலுவலரை பிடித்து பிணைத்து அரசரிடம் அனுப்பி வைத்தனர். இது சம்பந்தமாக கும்பெனியாரது தலையீட்டையும் புறக்கணித்து மன்னர் அந்த அலுவலரை பொது இடம் ஒன்றில் நிறுத்தி கசை அடி தண்டனை வழங்கினார்.[25] இன்னொரு நிகழ்ச்சியில் பாமக்குடியிலிருந்த அரசருடைய போர் வீரர்கள் பக்கத்துாரான நெட்டுரில் புகுந்து, சிலரைக் கொன்றதுடன், குடிசைகளையும் கொளுத்தினர். அந்த ஊர் நாட்டாண்மையின் தலையைத் துண்டித்து இராமநாதபுரத்துக்கு அனுப்பி வைத்தனர். தங்களுடைய சீமையில் துணிகரமாகப் புகுந்த இந்த மறவர்களை பழிவாங்க முனைந்த பெரிய மருதுவின் மக்கள் மூவரில் ஒருவர் இராமநாதபுரம் வீரர்களால் களபலி ஆக்கப்பட்டார். எஞ்சிய இருவருக்கும் கடுமையான காயங்கள் ஏற்படுத்தப்பட்டன. செய்தியை அறிந்து, ஆத்திரம் அடைந்த பெரிய மருது சேர்வைக்காரர், இராமநாதபுரம் வீரர்களைத் தொடர்ந்து வந்து, பரமக்குடியில் புகுந்து 700 பேரைக் கொன்று குவித்துவிட்டு சிவகங்கை திரும்பினார்.

இந்த நிகழ்ச்சியை நேரில் கண்ணுற்ற கலெக்டர் மக்லாயிடு சென்னைக்கு அனுப்பி வைத்த அறிக்கையில்.[26]

'......கடந்த 26-ம் தேதி காலையில் நெட்டுரிலிருந்து பரமக்குடி சென்று கொண்டிருந்தேன், சுற்றுப்புறத்தில்

For more ebooks vist: http://getmyebook.in/

துப்பாக்கிகள் வெடிக்கும் சத்தம் பலமாகக் கேட்டது. நான் பரமக்குடி வந்து சேர்ந்த இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு எனது பணியாளர்கள் வந்து அந்த நிகழ்ச்சிப் பற்றிய விவரங்களை என்னிடம் சொன்னார்கள். ஆயுதம் தாங்கிய இராமநாதபுரம் வீரர் பலர் நெட்டுரையும், அங்கிருந்த சின்ன மருதுவின் ஆட்களையும் தாக்கினர். அவர்களும் திருப்பிச் சுட்டார்கள். தாக்குதல் பலத்ததால், சமாளிக்க முடியாமல் சிதறி ஓடினர். இராமநாதபுரம் ஆட்கள் ஊருக்குள் நுழைந்து, குடிசைகளைக் கொளுத்தினர். உச்சிப் பொழுதில் பெருங்கூக்குரலும் கள்ளர்களின் குழல் ஒலியும் கேட்டன. நான் பார்க்கும் பொழுது ஒருநூறு பேருக்கு குறையாத ஆட்களும், குதிரைகளில் அமர்ந்த ஐந்து தளபதிகளும், பரமக்குடி ஆற்றைக் கடந்து ஊருக்குள் வந்து கொண்டிருந்தனர். அவர்களை நான் வினவியபொழுது தாங்கள் சின்ன மருதுவின் நெட்டூர் கிராமத்தை தாக்கிவிட்டு வருவதாகப் பதில் அளித்தனர். அவர்களில் காயமடைந்த மூன்று வீரர்களும் இருந்தனர். அப்பொழுது பரமக்குடியில் நிலைகொண்டிருந்த ஆயிரத்து ஐநூறு வீரர்களின் அணியைச் சேர்ந்தவர்கள் அவர்கள்......'

அவரே மீண்டும் 22-6-1794 தேதியிட்ட கடிதத்தில் பரமக்குடியில் நடைபெற்ற பயங்கரமான படுகொலை பற்றிய விபரங்கள் இன்று காலையில் எனக்குக் கிடைத்தன. நேற்று அந்த வழியாக வந்த எனது வில்லைச் சேவகர்கள் அந்த நிகழ்ச்சி பற்றி கொடுத்துள்ள சத்திய பிரமான வாக்குமூலத்தில் தலையில்லாது கிடந்த 400 முண்டங்களை அவர்கள்

For more ebooks vist: http://getmyebook.in/

பார்த்ததாகக் கூறியுள்ளனர். நெட்டுர் நிகழ்ச்சியின் தொடர்பாக வெள்ளை மருது நடத்திய தாக்குதலின் விளைவு இது. தனது இரண்டாவது மகன் கொல்லப்பட்டு மற்ற இரு மக்களும் படு காயம் உற்றதினால் சீற்றம் கொண்ட வெள்ளை மருதுவினுடைய செயல் என்பதைப் பலரும் சொல்லுகின்றனர். இது சம்பந்தமாக எனக்குத் தெரிந்த வேறு ஒன்றிரண்டு விபரங்களையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

'கடந்த 12ம் தேதிக் காலையில் இராமநாதபுரம் பேட்டை வழியாக சென்று கொண்டிருந்தேன். அப்பொழுது சத்திரத்தில் எண்பதுக்கும் அதிகமான போர் வீரர்கள் இருந்தனர். அவர்களை விசாரித்த பொழுது திருவாங்கூர் மன்னரது பணியில் உள்ள அவர்கள், இராமநாதபுரம் மன்னரின் உதவிக்கு வந்திருப்பதாகவும் தெரிவித்தனர். அவர்கள் இருநூறு பேர் இருப்பதாகவும் தெரிவித்தனர்.

'நெல்லைச் சீமைப் பாளையக்காரர்கள் அடிக்கடி ஏராளமான வீரர்களை இங்கு அனுப்பி ஒத்துழைப்புக் கொடுப்பது தெரிய வருகிறது. சிவகிரி பாளையக்காரரின் மைத்துனரை இங்கு சந்தித்தேன். என்னைக் கடந்து அவர் குதிரையில் செல்லும் பொழுது வணக்கம் கூறிச் சென்றார். அப்பொழுது அங்கு இன்னும் சில போர் வீரர்களும் இருந்தனர். அவர்கள் தங்களை எட்டையபுரத்து பாளையக்காரர்களது ஆட்கள் என்று தெரிவித்தனர். இவைகளிலிருந்து இங்கு நிலவும் பகைமைச்

For more ebooks vist: http://getmyebook.in/

சூழ்நிலை பற்றிய நிலைமை புரிகிறது. அதனை உடனடியாக அழித்தொழிக்காவிட்டால், மீண்டும் எதிர்காலத்தில் அவைகள் பல வழிகளில் வளர்ச்சி பெறும் சூழ்நிலை ஏற்படும்....'

இதே கருத்தினையே அடுத்து கலெக்டராக வந்த பவுனியும் தமது மேலிடத்திற்குத் தெரிவித்தார்.[27] அவரது கருத்துப்படி இராமநாதபுரம் அரசரினால் எந்தச் சூழ்நிலையிலும் பன்னிரண்டாயிரம் வீரர்களை களத்திற்குக் கொண்டு வரும் தகுதி உள்ளது என்று அவரது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். இந்த மோதல்களைத் தொடர்ந்து ஆற்காட்டு நவாப்பும், கும்பெனியாரும் இரண்டு தரப்பினரையும் வன்முறையைத் தவிர்த்து அமைதி காத்துக்கொள்ளும்படியாக பல வேண்டுகோள்களை விடுத்தனர். சிவகங்கைச் சேர்வைக்காரர் மட்டும் தங்களது வீரர்களை சிவகங்கை எல்லைப்பகுதிக்குள் திருப்பி அழைத்துக் கொள்வதாக கும்பெனியாருக்கு உறுதி அளித்தனர். ஆனால், சேதுபதி மன்னரோ ஆற்காட்டு நவாப்பினது அறிவுரையையோ அல்லது கும்பெனியாரது ஆணையையோ ஒரு சிறிதும் மதித்துச் செயல்படவில்லை.[28] அந்த அளவிற்கு அவரது வெஞ்சினமும் வெறுப்பும், சிவகங்கைச் சேர்வைக்காரர் மீது நிலைத்திருந்தது. அத்துடன் நவாப்பையும் வெள்ளையரையும் மறவர் மண்ணிலிருந்து அகற்றுவதற்கான பிரதான இலட்சியத்தில் ஈடுபட்டிருந்த அவருக்கு, அப்பொழுது சிவகங்கைப் பிரதானிகள் அவரது பிரதான எதிரிகளாகத் தோன்றினர். அவர்களை அழித்து

For more ebooks vist: http://getmyebook.in/

ஒழிக்கும் முயற்சியில் தமக்கு உதவுமாறு புதுக்கோட்டைத் தொண்டமானையும் கேட்டுக் கொண்டார். ஆனால் தொண்டமான் சேதுபதி அரசருக்கு உதவும் மனம் இல்லாமல் வாளாக இருந்து விட்டார்[29].

இந்தவிதமான முயற்சியில் தீவிரமாக இராமநாதபுரம் மன்னர் ஈடுபட்டிருந்தார் என்றும் திருவாங்கூர் அரசரும் திருநெல்வேலி பாளையக்காரர்களும், மேல்நாட்டு கள்ளர்களும் சேதுபதி மன்னருக்கு பக்கபலமாக இருந்து உதவினர் என்பதையும் கும்பெனியாரது ஆவணங்களில் குறிக்கப்பட்டுள்ளன. இதற்கான நிதிவசதி, பெரும் அளவில் சேதுபதி மன்னரிடம் இருந்தது. அத்துடன் இந்தியா முழுவதிலுமுள்ள இந்துக்களால் புனிதமாகக் கருதப்படும் சேது அணையின் காவலர் என்ற முறையிலும், இந்த மன்னர்கள் இடத்தில் சேதுபதி மன்னருக்கு தார்மீகரீதியான மதிப்பும் செல்வாக்கும் இருந்தன என்பதை அந்த ஆவணங்கள் தெரிவிக்கின்றன. சிவகங்கைச் சேர்வைக்கார்ர்களின் சீற்றத்தை அடக்க மன்னர் மேற்கொண்ட இந்த ஆவேசமான அவசர நடவடிக்கைகள், ஆற்காட்டு நவாப்பிடமும் கும்பெனியாரிடமும் வெறுப்பை வளர்த்து, மோதலை ஏற்படுத்தி தமது இலட்சியப்பாதைக்கு இடைஞ்சலாக அமையும் என அவர் எண்ணவில்லை, எதிர்பார்க்கவில்லை. தொடர்ந்த அந்நிகழ்ச்சிகள் மறவர் சீமையின் அரசியல் களத்தில் இராஜ தந்திர சூன்யம் உருவானதை தெளிவாகச் சுட்டிக் காட்டின.

For more ebooks vist: http://getmyebook.in/

1. ↑ Annasamy Iyer V., Sivaganga, its orgin and litigations ( I ho8). pp. 3-4
2. ↑ hajaram Row, T., Ramnad Manual (1891), pp. 2:37-89
3. ↑ Rajaram Row, T., Ramnad Manual (1891), p. 239
4. ↑ Ibid., p. 239
5. ↑ Rajuram Row, T., Ramnad Manual (1891), p. 239
6. ↑ Hovonuo Sundries, Vol. 26, 6-10-1801
7. ↑ Military Country Correspondence, Vol. 21 (1772), p. 282
8. ↑ Kathirvel. S. Dr. History of Marawa (1977), p. 166
9. ↑ Dr. S. Kathirvel. History of Marawa (1972), p. 168
10. ↑ Military Country Correspondence, Vol. 129. C, 9–5–1789 p. 1461
11. ↑ Military Country Correspondence, Vol. 128, 17-3-1789, p , 28:), p, 1459
12. ↑ MIlitury Country Correspondence. Vol. 155, 24-1-1702, p. 414
13. ↑ Military Consultation, Vol. 158, 24-1-1792, p. 474
14. ↑ Board of Revenue Proceedings, Vol. VIII 11.4-1785, p. 338
15. ↑ Military Country Correspondence Vol. 45,28-5-1794, p. 153
16. ↑ Military Country Correspondence, Vol. 45 (1794), pp. 10 1, 104
17. ↑ political dospatches to England. Vol. III (1794) pp. 816-18
18. ↑ Military Miscellaneous Book, Vol. 31, 20-4-1793, pp. 569-72
19. ↑ Military Country Correspondence, Vol. 45, 30-6-1794, p. 230
20. ↑ Military Consultations, Vol. 185-B, 29-8-1794, p. 4060
21. ↑ Military Consultations, Vol. 185-B, 3-6-1794, p. 2157
22. ↑ Military Consultations, Vol. 191, 7-12-1794. p. 5098-99
23. ↑ Military Country Correspondence, Vol. 45, (1794AD) pp. 177-78
24. ↑ Military Country Correspondence, Vol. 45, (1794), p. 153
25. ↑ Military" Consulations, Vol. 185, B, 21-6-1794, pp. 2756
26. ↑ Lottor from Collector Macleoid D., 21-6-1794, Fort St. Gnorgo Diary Consultations, p. 2757

For more ebooks vist: http://getmyebook.in/

27. ↑ Military Consultations, Vol. 189 A, 29-8-1794, p. 4067

28. ↑ Military Country, Correspondence. Vol. IV. (1794), p. 198

29. ↑ Military Country Correspondence, Vol. 185-B (1794) p. 2157.

For more ebooks vist: http://getmyebook.in/

7

## எரிமலை புகைந்தது

பதினேழாம் நூற்றாண்டின் தொடக்க சூலம் முதல் இந்த நாட்டின் செல்வ வளங்களை தமது நாட்டு வாணிபப் பொருளுக்கு ஈடாகப் பெற்றுச் செல்வதற்காக பரங்கிகள் இங்கு வந்தனர். இந்த முயற்சியில் முதலிடமாக. தமிழ்நாட்டின் தென்கோடியிலுள்ள துத்துக்குடிக்கு போர்ச்சுக்கீசியர் வந்தனர். அவர்களைத் தொடர்ந்து தரங்கம்பாடியில் டச்சுக்காரரும் புதுச்சேரியில் பிரஞ்சுக்காரருடம். நிலை கொண்டனர். அவர்களை அடுத்த வந்த ஆங்கிலேயர், கி. பி. 1539-ல் சென்னைக் கடற்கரையை ஒட்டி பண்டகசாலை ஒன்றையும், கோட்டையையும் அமைத்தனர். ஆற்காட்டு நவாப்பின் ஆதரவுடன் தென் பகுதியில் வியாபாரத்தில் ஈடுபட்டனர். குறிப்பாக அப்பொழுது தமிழ் நாட்டு நெசவாளிகள் உற்பத்தி செய்த கைத்தறித் துணிகளை கொள்முதல் செய்து இங்கிலாந்திலும் ஐரோப்பாவிலுமுள்ள சந்தைகளுக்கு அனுப்பி வந்தனர்.

இந்த வியாபாரத்தைக் கண்காணிப்பதற்காக அவர்கள் அமைத்த சென்னைக் கோட்டையில், போர்டு ஆப் டிரேடு என்ற வாணிபக் கழகம் செயல்பட்டு வந்தது. அதன் மேற்பார்வையில் நாகூர், பாளையங்கோட்டை, இராமனாதபுரம் ஆகிய ஊர்களில் கமர்ஷியல் ரெஸிடெண்டு (வர்த்தகபிரதிகள்) என்ற அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். நாகப்பட்டினத்திலிருந்து

For more ebooks vist: http://getmyebook.in/

லிருந்து தூத்துக்குடி வரையிலான தமிழ்நாட்டுக் கடற்கரை, அப்பொழுது சோழ மண்டலக்கரை என அவர்களால் வழங்கப்பட்டது. இந்தப் பகுதியில் உற்பத்தியாகும் கைத்தறித் துணிகளுக்கு மேல்நாடுகளில் நல்ல கிராக்கி இருந்தது. தமிழ் நாட்டின் 'Printed Calicos', வங்காளத்தின் மஸ்லின்கள் "Evening Due”, “Textile Breeze”. “Running water" என்று விரும்பி அழைக்கப்பட்ட மஸ்லின் துணிவகைகளும் நாட்டின் இதர பகுதிகளில் நெசவு செய்யப்பட்ட சாதாரண வெள்ளைத் துணிகளும் ஏராளமாக கொள்முதல் செய்து அனுப்பப்பட்டு வந்தன. ஆண்டுதோறும், ஒன்றரை மில்லியன் துணி சிப்பங்கள் மேற்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இதில் மஸ்லின் காலிகோ, டோரியாஸ், கைக்குட்டைகள், லாங்கிளாத், பெட்டு லாஸ் என்ற வகைகளும் அடங்கும். அவைகளின் மதிப்பு 2, 9 மில்லியன் பவுன்கள் என்று கணக்கிடப்பட்டது. இதில் மூன்றில் ஒரு பங்கு பெறுமான சரக்குகள் சோழமண்டலக்கரையான தமிழ் நாட்டைச் சேர்ந்தது என்பதை அன்றைய வாணிபப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.[1] இன்னொரு ஆய்வின்படி ஒரு சிப்பத்தில் 1000 கஜம் துணி கொண்டதாக உள்ள $5\frac{1}{2}$ சிப்பங்கள் ஒரு டன் சரக்காகக் கருதப்பட்டது. சுமார் 500 டன் நிறையுள்ள கப்பலில் 34 மில்லியன் கஜத்துணி சிப்பங்களை நிரப்பி எடுத்துச் செல்ல முடியும். ஆண்டுதோறும் இங்கிருந்து இவ்விதமான துணிப் பொதிகளைச் சுமந்தவாறு பதினொன்று அல்லது பன்னிரண்டு கப்பல்கள் இங்கிலாந்திற்கு புறப்பட்டுச்

For more ebooks vist: http://getmyebook.in/

சென்றன. மொத்தத்தில் 30 மில்லியன் கஜத்திற்கும் மிகுதியான துணி ஆண்டுதோறும் இங்கிருந்து கும்பெனியாரால் ஏற்றுமதி செய்யப்பட்டது.[2]

இத்தகைய சிறப்பான வாணிப சூழ்நிலை காரணமாக தமிழகப் பெண்களும், குழந்தைகளும்கூட நெசவுத் தொழிலில் ஈடுபடாத கிராமம் எதனையும் சோழ மண்டலக் கரையில் காண முடியவில்லை, என வரலாற்று ஆசிரியர் இராபர்ட் ஊர்ம் வரைந்து வைத்துள்ளார்.[3] இதன் காரணமாக 40,000 தறிகளுக்கு வேலை இருந்தன. இவைகளில் 50,000 நெசவாளிகள் ஈடுபட்டிருந்தனர். இவர்களில் பெரும்பகுதி, சென்னையிலும், கடலூர், உடையார்பாளையம், சின்னமன்னாடிபாளையம், சிர்காழி மற்றும் இராமனாதபுரம் திருநெல்வேலிச் சீமையைச் சேர்ந்த சில ஊர்களில் இருந்ததாகத் தெரிகிறது.[4] இவர்கள் கைக்கோளர், சேடர், பட்டுநூல்காரர், சோனகர் என்ற பிரிவுகளைச் சார்ந்தவர்கள். இந்த வகை நெசவாளி, மாதம் ஒன்றுக்கு தனது மனைவி குழந்தைகள் உதவியுடன் இரண்டு பீஸ் துணிகளை நெசவு செய்து தர முடியும் என்றும், இவைகளின் மதிப்பு ருபாய் 4 என்றும் தெரியவருகிறது.

என்றாலும், கும்பெனியாரது ஒப்பந்தத் தறிகள் ஒரு சில மாவட்டங்களில் மட்டுமே இருந்தன. பொதுவாக, நெசவாளிகள் அப்பொழுது கும்பெனியாரிடம் பணி செய்வதற்கு விருப்பம் இல்லாதவர்களாக இருந்தனர். காரணம் அவர்கள் கும்பெனியாரது தொழில் மையங்களில் பணியாற்றுமாறு

For more ebooks vist: http://getmyebook.in/

கட்டாயப்படுத்தப்பட்டனர். மேலும் அவர்களுக்கு வழங்கப்பட்ட கூலிக்கு கூடுதலான துணியை நெய்து கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தமும் இருந்தது. அவர்கள் பெற்ற கூலியில் ஒரு பீஸ் துணிக்கு நாலனா வீதம் தலைமை நெசவாளியினால் பிடித்தம் செய்து கொள்ளும் வழக்கமும் இருந்தது.[5] இதனைப் போன்றே நெசவாளிக்கு வழங்கப்படும் முன் பணத்திலும் ஒரு பகுதியை கும்பெனியாரது குமாஸ்தா இருத்தி வைத்துக் கொள்வார். அத்துடன் உற்பத்தி செய்த துணியின் தரத்தை குறைவாக மதிப்பிட்டு அதற்கு குறைவான கூலி கொடுக்கும் முறையும் இருந்து வந்தது.[6] இவைகளுக்கெல்லாம் மேலாக, அப்பொழுதைக்கப் பொழுது அதிகாரிகளது இடையீடும் தொந்தரவும் இருந்து வந்தன.[7]

நெசவாளர்களது வாழ்க்கை நிலை இவ்வளவு சிரமங்கள் நிறைந்ததாக இருந்தும், அன்றைய காலக் கட்டத்தில் அவர்களது தொழில் லாபம் தருகின்ற பெருந்தொழிலாக மதிக்கப்பட்டது. அதன் காரணமாக மறவர் சீமையின் மேலாதிக்கத்தை நவாப்பிடமிருந்து கும்பெனியார் பெற்றவுடன் மறவர் சீமையில் தங்களது தொழில் மையம் ஒன்றை துவக்கி கைத்தறி துணிகளை, முழுதுமாக கொள்முதல் செய்யும் திட்டம் ஒன்றை அவர்கள் தீட்டினர். கி.பி. 1792 டிசம்பரில் அங்குள்ள தறிகளையும், அவைகளின் உற்பத்தி விபரங்களையும் சேதுபதி மன்னருக்குத் தெரியாமல் மிகவும் ரகசியமாக சேகரித்து அனுப்பிய கடிதத்தில், இராமநாதபுரம் பருத்தித்துணிகளுக்கு கூடுதலாக கோரப்பட்டுள்ள விலைகளை ஏற்றுக்கொள்ளாமல்

For more ebooks vist: http://getmyebook.in/

இராமநாதபுரத்தில் கைத்தறித் துணி உற்பத்திக்கு முதலீடு செய்யுமாறு அந்தக் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டிருந்தது.[8] அத்துடன் அப்பொழுது நாகூரில் கும்பெனியாரது வர்த்தகப் பிரதிநிதியாக இருந்த மைக்கேல் என்பவரை மறவர் சீமைக்கு அனுப்பி அங்குள்ள நெசவுத்தொழில் பற்றிய நிலையை நேரில் அறிந்து வருமாறு செய்தனர். அவரும் நாகூரில் இருந்து கடல் மார்க்கமாக தேவிபட்டினம் துறைமுகத்தில் 24-1-93-ல் கரை இறங்கினார். இராமநாதபுரம் சீமையில் உள்ள நெசவாளர் குடியிருப்புகளுக்கு சென்றுவிட்டு 12-2-1793-ம் தேதியன்று சென்னை கவர்னருக்கு விரிவான அறிக்கையொன்றை அனுப்பி வைத்தார். இந்த அறிக்கையில் இராமநாதபுரம் சீமையின் கிழக்கு, மேற்கு வடக்குப் பகுதிகளில் உள்ள 800 தறிகளில் உற்பத்தியாகின்ற நெசவுத் துணியின் அளவு, அவை அனைத்தும் இராமநாதபுரம் மன்னருக்கோ அல்லது பாண்டிச்சேரியில் உள்ள பிரெஞ்சுக்காரர்களுடைய ஏஜண்டுகளுக்கோ கிடைக்காமல் செய்து கிழக்கு இந்தியக் கம்பெனிக்கு கிடைப்பதற்கான வழிமுறைகளையும் அதில் கோடிட்டு காண்பித்து இருந்தார். அவ்விதம் செய்வதினால் இராமநாதபுரம் சீமையின் நெசவு தொழிலில் புதிய உத்திகளைப் புகுத்தி நெசவின் தரத்தையும் உயர்த்துவதுடன் நெசவாளர்களது நிலையிலும் நல்ல முன்னேற்றம் காண முடியும் என்றும், அதன் காரணமாக இராமநாதபுரம் சீமையில் மட்டும் ஆண்டு தோறும் நானூறு முதல் ஐந்நூறு பொதிகள் கைத்தறித்

For more ebooks vist: http://getmyebook.in/

துணிகளைக் கொள்முதல் செய்வதன் மூலம் ஏனைய வெளிநாட்டார் இத்துறையில் கொண்டுள்ள வணிகத் தொடர்புகளை தடுத்து நிறுத்திவிட முடியும் என்றும் உறுதிபட வரைந்து இருந் தார். மேலும், 1793 மார்ச்சில் நாகூர் கமர்ஷியல் ரெஸிடெண்டுக்கு எழுதப்பட்ட மடலில் 'மன்னரது முழு ஒத்துழைப்புடன்[9] தங்களது திட்டத்தை அமுல்படுத்தப் போவதாக கும்பெனியார் குறிப்பிட்டிருந்தனர். ஆனால், அவர்களது பேராசையின் பிரதி ரூபம் விரைவில் வெளிப்பட்டு விட்டது. ஒரு அறிவிப்பு வடிவில் வரையப் பெற்ற நகல் ஒன்றை 15-3-1793-ல் பேண் குஷ் கலெக்டர் ஜேம்ஸ் லாண்டன் சேதுபதி மன்னரிடம் காண்பித்து அதற்கான ஒப்புதலைக் கோரினார்.[10]

அந்த அறிவிப்பின்படி, மறவர் சீமையில் உள்ள அத்தனை தறியாளர்களும் ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கு மட்டும் துணிகளை தயாரித்துக் கொடுக்க வேண்டும். வேறு எந்த சில்லறை அல்லது மொத்த வியாபாரியிடமும் அவர்கள் தொடர்பு வைத்துக் கொள்ளுதல் கூடாது.

தறிக்காரரிடம் எவ்வித வரியும் தறிக்கென வசூலிக்கப்பட மாட்டாது. அவர்களது குடியிருப்புக்களுக்கும். அல்லது விற்பனை செய்யும் துணிக்கும் எவ்வித வரியோ அல்லது கட்டணமோ வசூலிக்கப்பட மாட்டாது. அவர்கள் கோயில்களுக்கு மகமையோ பிராமணர்களுக்கு எவ்விதத் தர்மமோ கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இல்லை.

For more ebooks vist: http://getmyebook.in/

கும்பெனியார், நெசவாளர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும், அவர்களது உடமைக்கும் உரிய பாதுகாப்பு வழங்குவர்.

இராமநாதபுரம் சீமை நெசவாளர் உபயோகத்துக்கென பக்கத்து மாவட்டங்களிலிருந்து கொண்டுவரப்படும் பஞ்சு அல்லது நூலுக்கு எவ்வித சுங்கமும் வசூலிக்கப்பட மாட்டாது.

இதைப் போன்று மறவர் சீமைக்குள் கொண்டு வரப்படுகிற அல்லது வேறு மாவட்டங்களுக்கு கும்பெனியாரால் வற்றுமதி செய்யப்படுகிற துணிக்கு, சாலைகளிலும், படகுத் துறைகளிலும், சுங்கம் எதுவும் வசூலிக்கப்பட மாட்டாது.

சேதுபதியின் துறைமுகமாகிய பாம்பனில் இறக்குமதி செய்யப்படுகிற பொருள்களுக்கு எவ்வித சுங்கவரியும் கிடையாது.

இன்னும், இவைபோன்ற விபரங்கள் அடங்கிய அறிவிப்பை கலெக்டர் லாண்டன் இராமநாதபுரம் மன்னரிடம் கொடுத்து அவரது ஒப்புதலுடன் சீமை முழுவதும் பிரசித்தம் செய்யுமாறு கேட்டுக் கொண்டார். அதனைப் பரிசீலித்து தமது பதிலை அளிப்பதாக அரசர் சொல்லிவிட்டார். கலெக்டரும் அரசரது ஒப்புதலைப் பெறுவதற்காக இராமநாதபுரத்தில் ஒரு வாரம் காத்திருந்தார். பொறுமையிழந்த கலெக்டருக்கு மன்னரிடமிருந்து வந்த முரண்பாடான பதில்

For more ebooks vist: http://getmyebook.in/

ஏமாற்றத்தை அளித்தது முதலில் கும்பெனியாரது இந்த அறிவிப்பை நடைமுறைப்படுத்தி விட்டு பிறகு தமக்குள்ள சிரமங்களை கவர்னருக்கு அறிவிக்குமாறு மன்னரை கலெக்டர் வற்புறுத்தினார். அறிவிப்பில் கண்டுள்ளவை தமது நிர்வாகத்திற்கு இடையூறானவை என்று தெரியப்படுத்திவிட்டு கும்பெனியாரது உத்திரவை அமுல்படுத்த மன்னர் மறுத்துவிட்டார்.[11] இதனால் பெரிதும் வெறுப்படைந்ததாக 31-3-1793-ந் தேதி கவர்னருக்கு எழுதிய கலெக்டரது கடிதத்தின் வாசகம் தெரிவிக்கிறது.[12] அரசருக்கு தகுந்த கல்வி ஞானம் இல்லாத காரணத்தினாலும், தமது ஊழியர்கள் மீது நம்பிக்கை கொள்ளாமல் சேதுபதி மன்னர் செயல்படுவதாகவும், கும்பெனியாரிடமும் ஏனைய ஐரோப்பியரிடமும் மிகுந்த வெறுப்புடன் நடந்து கொள்வதாகவும் அதன் காரணமாக அவரது அலுவலர்கள் அனைவருமே பரங்கிகளிடம் அதே வெறுப்பு உணர்வைக் காட்டுவதாகவும் அறிவித்திருந்தார். தமது எண்ணத்தை எதிர்க்காத தமது இனத்தவரும், பணியாளர்களும் சூழப்பெற்ற அரசர், தமக்கென சுதந்திரமான பொய்மைச் சிந்தனைகளில் ஈடுபட்டிருப்பதாகவும், அந்த மடலில் குறிப்பிட்டி ருந்தார், நல்ல வேளையாக அந்த கலெக்டர் கும்பெனியாரது பணியில் நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை. !

சுங்கம் மூலமான வருவாயும் வரிவிதிப்பும் இல்லாது எந்த அரசும் செயல்பட முடியாது என்ற உண்மையை ஆங்கிலேயர் அறியாதவர்கள் அல்ல. என்றாலும்,

For more ebooks vist: http://getmyebook.in/

மறவர் சீமையின் கைத்தறித் தயாரிப்பு முழுவதையும் தாங்களே பெற்றுக் கொள்ளை இலாபம் அடித்து, இலாபக் கொள்ளையை இங்கிலாந்திற்கு ொடுத்து செல்ல வேண்டும் என்பது அவர்களுடைய பேராசை, ஆற்காட்டு நவாப் வழங்கிய அரசியல் ஆதிக்கம் என்ற ஆயுதத்தைப் பயன்படுத்தி அவர்கள் அரசரை பயமுறுத்திப் பாத்தனர். பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சுவது இல்லை என்பதை அறிந்த பின்னர், அரசரது எதிர்ப்பு காரணமாக தொழில் மையம் அமைக்கும் திட்டத்தை கைவிட்டு விட்டனர். ஆனால் அந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நேரத்தை மீண்டும் அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்!

வடக்கே வங்காளத்தில் தங்களது நிலையை நிரந்தரப்படுத்திக் கொள்ள கும்பெனியார் அங்கிருந்த நவாப் சுராஜ் உத்தௌலாவிற்கு எதிராக அவரது உதவியாளர்களையே ஐந்தாம் படையாக உருவாக்கினர். மீர் ஜாபர், மீர் காசிம் என்ற அந்த பொம்மைகளைக் கொண்டே மாற்று அரசினை எற்படுத்தி அதற்கு கூலியாக அவர்களிடம் லட்சக்கணக்கான ருபாய்களை லஞ்சமாகப் பெற்றனர். அத்துடன் வங்க மாநிலத்தையும் தானமாகப் பெற்று, இந்த நாட்டில் ஆக்கிரமிப்பிற்கு அடித்தளம் இட்டனர்.[13] இத்தகைய ராஜதந்திரத்தில் சிறந்த அதே கும்பெனியார் தமிழகத்தில் அப்பொழுது இருந்த இரண்டு தன்னரசுகளில் ஒன்றான மறவர் சீமையை அடிமைப்படுத்த சேதுபதி மன்னரது பிரதானியை, அவருக்கு பாதகமாகப் பயன்படுத்தினர். அந்தப் பிரதானி முத்து இருளப்பபிள்ளை என்பவர்.

For more ebooks vist: http://getmyebook.in/

முதுகுளத்துர் பகுதியில் பிறந்தவர். மேல்நாட்டுக் கல்வியில் பயிற்சியும் கும்பெனியாரது தொடர்பும் பெற்றிருந்தார். அவரை, தளபதி மார்ட்டின்ஸ் சேதுபதி மன்னரிடம் பரிந்துரைத்து கி.பி. 1782-ல் இராமநாதபுரம் பிரதானியாக நியமனம் பெற உதவினார்.[14]

மன்னரது நிர்வாகத்திற்கு நன்கு உதவிய இவர், நாளடைவில் மன்னரது நம்பிக்கையை இழந்து கும்பெனியாருக்கும் ஆற் காட்டு நவாப்பிற்கும் விசுவாசம் உடையவராக மாறினார். இவரைப்பற்றி சேது சமஸ்தானப் புலவர்கள் பாராட்டிப் பாடிய பாடல்களுக்குக் கூட தாம் அருகதை அற்றவர் என்பதை அவரது பிந்தைய நடவடிக்கைகள் புலப்படுத்தின. நாட்டு நிர்வாகத்திற்கும் அரசியலுக்கும் மிகவும் புதியவரான இளம் மன்னருக்கு இரு கண்களாக இருந்து, பாரம்பரியம் மிக்க சேது நாட்டை வழிநடத்திச் செல்ல வேண்டிய பொறுப்புள்ள அவர், தமது சுயநலத்திற்காக இராஜ விசுவாசத்தை இழந்தார். கி.பி. 1796-ல் சென்னைக் கவர்னருக்கு மன்னர் வரைந்த கடிதம் ஒன்றில் முத்து இருளப்பபிள்ளை கும்பெனி தளபதி மார்ட்டின்சுடன் கொண்டிருந்த நட்பு காரணமாக தமது நாட்டின் நிர்வாக விஷயங்களை தெரிந்துகொள்ள இயலாத வகையில் தம்மை இந்தப் பிரதானி நடத்தினார், என்ற குற்றச்சாட்டிலிருந்து அந்த உண்மை உறுதிப்படுகிறது.[15]

மேலும் அவர் சேதுபதி மன்னரது பிரதானி என்ற எண்ணமே இல்லாதவாறு மதுரைக்குச் சென்று, அங்கு கும்பெனியாரது குத்தகைதாரராக பதவிபெற்று

For more ebooks vist: http://getmyebook.in/

மதுரையிலேயே வாழத் துவங்கினார். விபரம் அறிந்தபின்னர் அரசர் தமது பணியாட்களை அவரிடம் அனுப்பி அவரிடமிருந்து பிரதானிப் பதவிக்குரிய முத்திரை மோதிரத்தையும், இதரப் பொருள்களையும் பெற்று வருமாறு செய்தார்.[16] பின்னர் மதுரையில் மிகக் கொடூரமான, அடாவடியான நடவடிக்கைகளுக்கு அவர் காரணமாக இருந்ததுடன், மேலூார் கள்ளர்கள் அசம்பாவிதமான செயல்களில் ஈடுபடுவதற்கு அவர் தூண்டுதலாகவும் இருந்தார் என்ற குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி மதுரைக் கலெக்டரால் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.[17] மீண்டும் இராமநாதபுரத்திற்கு திரும்பிய அவர், தளபதி மார்ட்டின்சின் பாதுகாப்பில் இருந்து கொண்டு சமஸ்தானம் சம்பந்தப்பட்ட வரவு செலவுக் கணக்குகளை ஒப்படைக்காமல், காலம் கடத்தி வந்தார். சென்னையிலுள்ள கும்பெனியாரது தலைமையிடத்திற்கும், ஆற்காட்டு நவாப்பிற் கும், இராமநாதபுரம் மன்னர் இது சம்பந்தமாக பல ஒலைகள் அனுப்பியும் பலன் எதுவும் ஏற்படவில்லை.

மன்னரது மூத்த சகோதரி மங்களேஸ்வரி நாச்சியார் அரசுப் பதவிக்கு போட்டியிட்டு மன்னருக்கு எதிராக கவர்னரிடம் அளித்துள்ள புகார் மனுவில் பிரதானி முத்து இருளப்பபிள்ளையப் பற்றியும் குறிப்பிட்டு இருந்தார். தமது பணியை அவர் நேர்மையுடனும் விசுவாசத்துடனும் நிறைவேற்றவில்லை என்றும், வரவு செலவுக் கணக்குகளை ஒப்பைடக்கவில்லை என்றும், மோசடி மூலமாகச் சேர்த்துள்ள

For more ebooks vist: http://getmyebook.in/

அரசுப்பணத்தை இப்பொழுது விண்செலவு செய்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.[18] அதிகாரபூர்வமான இத்தகைய புகார்களையெல்லாம் முத்து இருளப்பபிள்ளைக்குக் கிடைத்த சிறந்த சான்றிதழ்களாக கருதி மீண்டும் அவருக்கு தக்க பதவி அளிக்குமாறு தளபதி மார்ட்டின்ஸ் கவர்னருக்குப் பரிந்துரைகள் அனுப்பிக் கொண்டிருந்தார்.[19] அத்துடன் சேதுபதி மன்னர் மக்களைக் கொடுமைப்படுத்தி ஆட்சி செய்வதாக புனைந்து உரைத்த அறிக்கைகளையும் அனுப்பிக் கொண்டிருந்தார்.[20] ஏற்கெனவேயுள்ள எதிரிகளையும் சேர்த்து இப்பொழுது சேதுபதி மன்னருக்கு இவர்களும் புதிய வில்லன்களாக ஏற்பட்டனர். அவர்கள் வைத்த வத்திகள் பல வழிகளிலும் வேகமாக பற்றி எரியத் தொடங்கின.

ஆனால், இவர்களையெல்லாம் சேதுபதி மன்னர் பொருட்படுத்தவில்லை. தமது நலன்களைக் காக்க கும்பெனியாருடன் நேரடியாக மோதுவதற்கு தயாராகிக் கொண்டிருந்தார். முத்திருளப்ப பிள்ளை, பிரதானியாக இருக்கும்பொழுது செய்த அனாவசியமான செலவுகளுக்கு அவரது முகாந்திரத்தை பெற வேண்டியதிருப்பதால் அவரை கும்பெனியாரது பாதுகாப்பிலிருந்து தம்முடைய வீரர்களது காவலுக்கு மாற்றிக் கொடுக்கு மாறு கவர்னரைக் கோரினார்.[21] இந்த கோரிக்கைக்கு இணங்காமல் பிரதானியை பத்திரமாக

For more ebooks vist: http://getmyebook.in/

பாதுகாப்பதற்காக தங்களது காவலில் வைத்திருப்பதாகவும், அவர் குற்றவாளியென நிரூபிக்கப்பட்டு விட்டால் அவருக்குரிய தண்டனை வழங்கப்படும் என்றும் அரசருக்கு கும்பெனியார் சமாதானம் சொல்லினார்.[22] வரவு செலவுக் கணக்குகளை நேர் செய்வதில் ஓராண்டு காலமாக காலம் கடத்தி வருவதாகவும், அரசுப் பணியாளர்களை அவமரியாதையான முறையில் பேசிவருவதாகவும் முத்து இருளப்ப பிள்ளைப் பற்றி மீண்டும் மன்னர் குறை கூறி கவர்னருக்குத் தெரிவித்தார்.[23] அதற்கும் எவ்விதப் பலனும் இல்லை.

கி.பி. 1794-ல் மழை வளம் குறைந்து, மறவர் சீமை எங்கும் வறட்சி காணப்பட்டது. அதனைக் காரணமாக வைத்து கும்பெனியார் தஞ்சைச் சீமையிலிருந்து நெல்லை வர வழைத்து சிவகங்கை, இராமநாதபுரம் சீமைகளில் தானிய வியாபாரத்தில் இறங்க முற்பட்டனர். அதற்கு ஆதரவாக இறக்குமதி செய்யவிருக்கும் தானியத்திற்கு சுங்க வரிவிலக்கு வழங்க வேண்டுமென கும்பெனியார் கோரிக்கை விடுத்தனர்.[24] அவ்விதமே செய்கிறோம் என்று சிவகங்கைச் சேர்வைக்காரர்கள் இணக்கமான பதில் கொடுத்து கும்பெனியாருக்கு நல்ல பிள்ளைகளாகி விட்டனர்.[25] ஆனால், சேதுபதி மன்னர், கும்பெனியாரது கோரிக்கையை முற்றாகப் புறக்கணித்தார். அவர் சிந்தனை வேறுவிதமாக செயல்பட்டது. மறவர் சீமையில் வறட்சி என்பது

For more ebooks vist: http://getmyebook.in/

புதுமையான நிகழ்ச்சியல்ல. அங்கு ஆண்டு தோறும் மழை வளம் ஒரே சீராக இருப்பது இல்லை. அங்குள்ள மக்கள் அந்த உண்மையை நன்கு அறிந்து அதில் அனுபவப் பட்டவர்கள். அவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு தேவைப்படும் தானியம் எவ்வளவு என்பதும் அரசருக்குத் தெரியும். இறை ஆயிரம் கொண்டான்' என்ற இராமநாதபுரம் அரண்மனைக் களஞ்சியத்தில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு இருப்பு குறைந்து விட்டால், மக்களுக்குத் தேவையான நெல், அல்லது அரிசியை மன்னரே தமது வியாபாரப் பிரிவு மூலமும், தமது நாகூர் ஏஜண்டு சாமி செட்டி மூலமும், தஞ்சைப் பகுதியிலிருந்து கொள் முதல் செய்து, மக்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்து வருவது உண்டு. இந்த விபரங்கள் இராமநாதபுரம் சமஸ்தான 1790, 1794 ஆண்டு வரவு செலவுக் கணக்குகளிலிருந்து தெரிய வருகிறது. [26]

ஆதலால், மறவர் சீமை மக்களுக்கு உதவ கும்பெனியார்தான் தானியங்களைக் கொண்டு வந்து வழங்க வேண்டுமென்பதும் இல்லை. அந்த ஆண்டைவிட மிகவும் மோசமான முந்தைய ஆண்டுகளில் இடர்ப்பாடான சூழ்நிலைகளை சேது மன்னர்கள் சமாளிக்கவில்லையா? கும்பெனியார் தானியங்களைக் கொண்டு வந்து வியாபார முறையில், மறவர் சீமையில் விற்க முன்வரும் பொழுது, அதற்கு உரிய சுங்கத்தை செலுத்தினால் என்ன? இதற்கு ஏன் வரிவிலக்கு கோர வேண்டும்? சென்ற ஆண்டில் கைத்தறி துணிக் கொள்முதலில்,

For more ebooks vist: http://getmyebook.in/

ஏகபோக உரிமை கொள்ள முயன்றது போல, இப்பொழுதும் தமக்கு எதிராக தானிய வியாபாரத்திலும் கும்பெனியார் நிலை கொள்வதற்கான சூழ்ச்சி இதுவென சேதுபதி மன்னர் சந்தேகம் கொண்டார். எற்கனவே திருநெல்வேலி சீமையில் கும்பெனியாரும் இன்னும் சில பரங்கிகளும் பரவலாக தானிய வியாபாரத்தில் ஈடுபட்டி ருந்ததையும் மன்னர் அறிவார்.[27] வறட்சியைக் காரணமாகக் கொண்டு மறவர் சீமை அரசியலில் அவர்கள் நுழைவதற்கான மறைமுக முயற்சி என நம்பினார்.

மேலும், அப்பொழுதைய வறட்சி நிலை மறவர் சீமையில் மட்டும் நீடிக்கவில்லை. கும்பெனியாரது நேரடிப் பொறுப்பிலுள்ள திருநெல்வேலிச் சீமையிலும் அது பரவியிருந்தது. அங் கெல்லாம் கும்பெனியார் இத்தகைய அவசர இறக்குமதி நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்பதை ஸ்ரீவில்லிப்புத்துார் கோட்டையிலுள்ள தளபதி ஒருவர் சென்னைக்கு அனுப்பிய அவசர ஓலை ஒன்றிலிருந்து தெரியவருகிறது. அந்தக் கடிதத்தில் வறட்சி காரணமாக தானிய விலை மிக மிக அதிகமாக உயர்ந்து விட்டது என்றும் கும்பெனியாரது போர்வீரர்கள் தானியங்களை வாங்க இயலாமல் மிகுந்த அல்லலுக்கு ஆளாகி உள்ளனர் என்ற விபரத்தைத் தெரிவித்து இருந்தார்.[28] இந்த நிலையில் இராமநாதபுரம் மன்னர் கும்பெனியார் கோரினவாறு தஞ்சையிலிருந்து இறக்குமதியாக இருக்கும் தானியத்துக்கு சுங்கவரி விலக்கு வழங்க மறுத்து

For more ebooks vist: http://getmyebook.in/

விட்டார். உடனே கும்பெனியார் ஆற்காட்டு நவாப்பை அணுகி இராமநாதபுரம் மன்னருக்கு தகுந்த உத்திரவை அனுப்பி வைக்கச் செய்து தங்களது கோரிக்கையை அங்கீகரிக்குமாறு முயற்சி செய்தனர்.[29] இதனைத் தொடர்ந்து ஆற்காட்டு நவாப்பின் கண்டிப்பான உத்திரவையும் ஏற்க சேதுபதி மன்னர் மறுத்து விட்டார். மறவர் சீமையின் நலன்களுக்கு எதிரான நடவடிக்கை எந்தத் திக்கில் இருந்து வந்தால் என்ன?

அடுத்து அடுத்து பல உத்தரவுகள். அதிகார ஆர்ப்பாட்டங்கள், மிரட்டல்கள், எதனையும் சேதுபதி மன்னர் செவிமடுக்கவில்லை. பொருட்படுத்தவில்லை. [30] இதற்கிடையில் சிவகங்கைச் சேர்வைக்காரர்கள் இராமநாதபுரம் சீமையின் வடமேற்குப் பகுதிகளில் புகுந்து நடத்தி அத்துமீறல்களை விரிவாக எடுத்துரைத்து அவர்களை ஒடுக்குவதற்கு உதவியாக சிவகங்கைச் சீமையை தமது மேற்பார்வையில் மாற்றி உத்தர விடுமாறு கும்பெனியாரை மன்னர் கோரினார்.[31] இந்த கோரிக் கையை ஏற்றுக் கொள்ள இயலாவிட்டால் தமது முயற்சிக்கு ஆதரவாக இராணுவ உதவியாவது வழங்குமாறும், அவர் கேட்டிருந்தார்.[32] அத்துடன் சிவகங்கைச் சீமைக்காரர்கள் அதீதமான முறையில் சிவகங்கை அரசி வேல்நாச்சியாரையும் இளவரசி வெள்ளச்சியையும், சிவகங்கை அரண்மனைக்குள் சிறை வைத்திருப்பதாகவும், அந்த அரச வழியினரான படமாத்துார் கவுரி வல்லபத் தேவரை சிவகங்கை சேர்வைக்காரர்கள் கொன்றுவிடச்

For more ebooks vist: http://getmyebook.in/

செய்த முயற்சியினின்று தப்பிய அவர் இராமநாதபுரம் கோட்டையின் அடைக்கலம் பெற்றிருப்பதாகவும் தெரிவித்து இருந்தார். மேலும், சிவகங்கை அரசியாரை சிறை மீட்பதற்கும், அந்தச் சீமை அரசை கவுரி வல்லபத் தேவருக்கு வழங்கி நல்லாட்சி நடைபெற உதவுமாறும் யோசனைகள் தெரிவித்திருந்தார். கும்பெனியார் அவரது பரிந்துரைகளை ஏற்றுக் கொள்ளவில்லை.[33] என்றாலும் பொறுமையைக் கையாளுமாறு கும்பெனியாரும் நவாப்புமாக சேதுபதி மன்னருக்கு வழங்கிய அறிவுரைகளுக்கு மட்டும் பஞ்சம் இல்லை.[34]

பொறுமை என்பது நல்ல பண்புதான், ஆனால் அதனை எப்பொழுது கடைப்பிடிப்பது? தன்மான உணர்வுகளை முறுக்கிவிட்டு, தலைக்குனிவை ஏற்படுத்தி, பொதுமக்களது கண்ணிரையும், செந்நீரையும் சிந்தச் செய்து அவலம் மிகுந்த ஆற்றொணாத நிலையை எய்திய பிறகு எங்ஙனம் பொறுமையாக இருப்பது? கைகட்டி வாய் புதைத்து வீணாக வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பது பொறுப்புள்ள மன்னருக்கு பொருத்தமான செயல் அல்லவே. வன்முறைகளை ஒழிக்க சரியான வழி வன்முறைதான். மறக்குடிப் பிறந்த வீர மறவனது பிறவிப் பண்பும் அதுதானே. இவ்வாறுதான் சேதுபதி மன்னரது சிந்தனை சிறகடித்தது.

இராமநாதபுரம் படைகள் தங்களது சீமைக்குள் புகுந்து மக்களது உயிருக்கும் உடலுக்கும் இழப்புகளை ஏற்படுத்தி வருவதாக சிவகங்கைச் சேர்வைக்காரர்கள்,

For more ebooks vist: http://getmyebook.in/

கும்பெனியாருக்கும் நவாப்பிற்கும் பலமுறையீடுகளை அனுப்பிவைத்தனர்.[35] கும்பெனியாரது ஒற்றனான மார்ட்டின்சும் இராமநாதபுரம் மன்னருக்கு மேல் இடத்து உத்தரவுகளை மதித்து நடக்கும் மனோபாவம் இல்லை என்று தெரிவித்து இருந்ததுடன் இப்பொழுதைய பூசல்களுக்குக் காரணம் சிவகங்கைச் சீமையை மீண்டும் இராமநாதபுரத்துடன் இணைத்துவிட வேண்டும் என்ற சேதுபதி மன்னரது இடைவிடாத எண்ணந்தான் என்பதையும் தனது அறிக்கையில் தெரிவித்திருந்தான்.[36] இத்தகைய பயனற்ற பிரமையில் ஈடுபட்டுள்ள சேதுபதி மன்னரிடமிருந்து அறியாமைமையையும் கொடுமை மிகுந்த அட்டுழியங்களையும் தவிர வேறு எதனை எதிர்பார்க்க முடியும் என்று தனது கணிப்புக்களை அவன் இன்னொரு கடிதத்தில் குறிப்பிட்டிருந்தான்.[37]

தொடர்ந்து சேதுபதி மன்னருக்கும் சிவகங்கைச் சேர்வைக்காரர்களுக்கும் நவாப் அறிவுரைகள் அனுப்பி வந்தார். அவர்கள் இருவரும் தங்களது வன்செயல்களைத் தவிர்த்து அமைதிப் போக்கை கைக்கொள்ள வேண்டும் என்பது அவரது அறிவுரைகளின் சுருக்கமாகும்.[38] ஆனால் அதே சமயம் கும்பெனி கவர்னருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் அடங்காப்பிடாரியான' சேதுபதியை சிறையில் வைத்து விட்டால் மறவர் சீமையின் சிக்கலைத் தீர்த்துவிடலாம் என்ற கருத்தையும் அவர் குறிப் பிட்டிருந்தார்.[39] தங்களது தலைமை நிலையமான கல்கத்தாவிற்கு இந்த விவரங்களைத் தெரிவித்த

For more ebooks vist: http://getmyebook.in/

கும்பெனியார் மேல் நடவடிக்கை பற்றிய ஆலோசனைகளைக் கோரினார். சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும் தண்டித்து ஒடுக்குமாறு கவர்னர் ஜெனரலது பதில் கிடைத்தது.[40] இதற்கிடையில் ஆற்காட்டு நவாப் திருச்சிக் கோட்டையிலுள்ள தமது மகன் உம்தத்துல் உம்ராவிற்கு அவசர ஓலை அனுப்பி, இராமநாதபுரம் பேஷ் குஷ் கலெக்டரை சந்தித்து, மறவர் சீமை பிரச்சினைக்கு முடிவு ஏற்படுத்துமாறு கட்டளை பிறப்பித்து இருந்தார்.[41] அதுவரை நிகழ்ந்துள்ளவைகளை கலெக்டர் பவுனி இளைய நவாப்பிற்கு தெரிவித்து அந்த நிகழ்ச்சிகளின் பின்னணியான காரணங்களையும் விளக்கிக் கூறினார். சிவகங்கைச் சேர்வைக்காரர்களின் நடவடிக்கைகளில் உள்ள அநீதிகளை அவர் சுட்டிக் காண்பித்ததுடன், அவர்கள் கும்பெனியாரது கட்டளைகளைப் பெற்றவுடன் அவைகளுக்கு கட்டுப்பட்டு பணிந்துள்ள நிலையையும், இராமநாதபுரம் மன்னர் கும்பெனியாரது கட்டளைகளுக்குப் பிறகும் சிறிதுகூட அடக்கமும் பணிவும் இல்லாமல் தங்குதடையற்ற அடாவடித்தனத்தில் ஆழ்ந்து இருப்பதையும் இளைய நவாப்பிற்குத் தெரிவித்தார்.

மேலும், இந்த இருதரப்பினருக்கு இடையே எழுந்துள்ள பிணக்கு, பூசல்களுக்கு ஆதாரமான சிக்கல் அப்படியே முடிவு பெறாமல் இருந்து வருவதாலும், சேதுபதி அரசரது சுயேச்சையான மனோபாவம், சுதந்திரமான செயல்முறை ஆகியவைகளிலிருந்து-அவரது போக்கில் மாற்றம்

For more ebooks vist: http://getmyebook.in/

ஏதும் ஏற்படும் என தமக்கு நம்பிக்கையில்லை என்ற கருத்தையும் தெரிவித்தார். அத்துடன் இராமநாதபுரம் அரசரால் எந்தச் சூழ்நிலையிலும் பன்னிரண்டாயிரம் போர் வீரர்களை களத்தில் இறக்கிவிடும் வாய்ப்பு இருப்பதுடன், சிவகங்கைச் சீமையைக் கொள்ளையிட்டுப் பாழாக்கிய மேல்நாட்டுக் கள்ளர்களையும், திருநெல்வேலிச்சீமை பாளையக்காரர்களையும், தமது அணியில் சேதுபதி மன்னர் ஆயத்தமாக வைத்துள்ளார் என்றும் அரசியல் சூழ்நிலையில் மாற்றம் ஏற்படுமானால் அவர்கள் ஆயுதம் தாங்கியவர்களாக சேதுபதி மன்னரது உதவிக்கு ஓடோடி வருவார்கள் என்றும் அதன் விளைவை தம்மால் விவரித்துச் சொல்ல இயலாத நிலையில் இருப்பதாக கலெக்டர் இன்னொரு அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.[42]

அதனை ஆராய்ந்த சென்னைக் கவர்னர், மன்னரை நேரில் விசாரித்து அவரது சுயேச்சையான போக்கிற்கு முகாந்திரத்தை பெற்று அனுப்புமாறு கலெக்டருக்கு உத்தரவு அனுப்பினார். தொண்டியில் உள்ள கச்சேரியில் தம்மை வந்து சந்திக்குமாறு சேதுபதி மன்னருக்கு கலெக்டர் பவுனி 'சம்மன்' அனுப்பி வைத்தார்.[43] பேஷ்குஷ் கலெக்டரது தலைமையிடமாக அப்பொழுது தொண்டி இருந்து வந்தது. மணப்பாறையிலிருந்து திருநெல்வேலி வரையிலான பகுதி பாளையக்காரர்களது வரவு செலவுக் கணக்குகளைத் தணிக்கை செய்து அவர்கள் செலுத்த வேண்டிய பேஷ்குவி தொகையை நிர்ணயம் செய்யும்

For more ebooks vist: http://getmyebook.in/

ஜமா பந்தியை அங்கு கலெக்டர் நடத்தி வந்தார். சிவகங்கைச் சீமையின் பகுதியான தொண்டிக்கு வருவதில் சேதுபதி மன்னருக்கு ஆட்சேபணை இருந்தால், அந்த ஊருக்கு அண்மையிலுள்ள இராமநாதபுரம் சீமையான முத்துராமலிங்கபுரம் சத்திரத்தில் தங்களது சந்திப்பை வைத்துக் கொள்ளலாம் என்ற மாற்று யோசனையும் கலெக்டரது உத்திரவில் கண்டிருந்தது.[44] ஆனால் பின்னர் சென்னைக் கோட்டைக்கு அனுப்பிய மடலில் தமது இந்த உத்தரவை இராமநாதபுரம் மன்னர் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை என்ற ஆத்திரத்தை கலெக்டர் வெளியிட்டிருந்தார்.[45] இராமநாதபுரம் மன்னரது இத்தகைய அவமரியாதையான நடவடிக்கையை புறக்கணித்து விட்டால், இராமநாதபுரம் மன்னரைச் சார்ந்த ஏனைய பாளையக்காரர்களும் கும்பெனியாரது உத்தரவுகளுக்கு கீழ்ப்படியாது உதாசீனமாக நடந்து கொள்ளும் நிலை தோன்றிவிடும் என்ற குறிப்பினையும் சேர்த்திருந்தார். திருமலை நாயக்க மன்னரது ஆட்சிக்காலம் தொட்டு மதுரை நெல்லை சீமையிலுள்ள எழுபத்து இரண்டு பாளையக்காரர்களுக்கும் மறவர் சீமையின் மன்னர்தான் தலைவராக அப்பொழுது கருதப்பட்டு வந்தார்.[46]

இந்தச் சூழ்நிலையில் தூத்துக்குடியில் இருந்து பாம்பன் நீர்வழியைக் கடந்து, சென்னை செல்லும் கும்பெனியாரது இரண்டு சரக்குக் கப்பல்களை

For more ebooks vist: http://getmyebook.in/

பாம்பன் துறைமுகத்தில், மன்னரது பணியாளர்கள் தடுத்து நிறுத்தினர். ஒரு கப்பலுக்கு சுங்கச் சோதனையிலிருந்து விலக்குப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக கும்பெனியார் தரப்பில் விளக்கம் தரப்பட்டும், ஏனைய கப்பல்களைப் போன்று வரிசைக் கிரமத்தில் உரிய சோதனையையும், சுங்க விதிப்பையும் முறையாக முடித்தபிறகுதான் கும்பெனியாரது இரண்டு கப்பல்களும் பாம்பனை விட்டு புறப்படுவதற்கு சேதுபதி மன்னரது பணியாளர்கள் அனுமதித்தனர். இதனால் திட்டமிட்டபடி அவைகள் சென்னைக்குப் போய்ச் சேர்வதில் வீணாகத் தாமதம் ஏற்பட்டு அதனால் சென்னையிலிருந்து இங்கிலாந்திற்கு புறப்படும் கப்பலும் தாமதமாகப் புறப்படும் நிலை ஏற்பட்டதென கும்பெனியார் ஆயாசப்பட்டனர்.[47] மன்னர் மீது ஆத்திரங் கொண்டனர். சர்வ வல்லமை படைத்த ஆங்கிலேயருக்கு மறவர் சீமையில் தகுந்த மதிப்பு இல்லை என்பதும், சேதுபதி மன்னரது நிர்வாகம் தங்களுக்கு சிறிதளவு கூட வளைந்து கொடுக்க முன்வரவில்லை என்பதும் அவர்களுக்கு உள்ளப் புழுங்கல். மன்னரது உதாசீனத்திற்கு இந்த நிகழ்ச்சியையும் ஒரு எடுத்துக்காட்டாகக் கலெக்டர் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.[48]

இவைகளையெல்லாம் அறிந்த கும்பெனியாரது மேலிடம், சேதுபதி மன்னர்மீது கடும்சினம் கொண்டு சீறியது. கலெக்டரது சமன்களுக்கு மன்னர் ஆஜராக வேண்டும் என்றும், ஏற்கெனவே அறிவித்திருந்தவாறு தஞ்சையிலிருந்து இறக்குமதி செய்யவிருக்கும்

For more ebooks vist: http://getmyebook.in/

தானிய பொதிகளுக்கு சுங்க விதிப்பிலிருந்து விலக்கு வழங்க வேண்டுமென்றும் கட்டளைகள் அனுப்பி வைக்கப்பட்டன. இந்த முரண்பட்ட சூழ்நிலையை பயன்படுத்தி, ஆழ்ந்த சிந்தனையும் கவனமும் இல்லாமல் வெள்ளையருக்கு விட்டுக் கொடுத்த மறவர் சீமையை மீண்டும் பெறுவதற்கு நவாப் முயற்சி செய்தார். அதன் தொடர்பாக தமது நம்பிக்கைக்கு உரியவராக நடந்து கொள்ளும் முந்தைய பிரதானி முத்து இருளப்பபிள்ளையை இராமநாதபுரம் சீமை பேஷ்காரராக நியமித்து சேதுபதி மன்னரது கொடுமைகளைக் களைந்து விடலாம் என்ற யோசனையை நவாப் கும்பெனியாருக்குத் தெரிவித்தார்.[49] ஆனால் நவாப்பைவிட, இப்பொழுது மறவர் சீமையில் கும்பெனியார் மிகுந்த அக்கறையுடன் இருந்தனர். தக்க சூழ்நிலையையும், சந்தர்ப்பத்தையும் அவர்கள் எதிர்பார்த்து வந்தனர். ஆதலால், நவாப்பின் அனுமதியோ ஆலோசனையோ அவர்களுக்கு தேவைப்படவில்லை.

சேதுபதி மன்னரது ஆயுதக் கிடங்கு, வெடி மருந்து இருப்பு, போர் வீரர் எண்ணிக்கை பற்றிய முழு விபரங்களையும் மற்றும் மன்னரது நிலக்கொடை பெற்று, அனுபவித்து வரும் போர்ப் பயிற்சி பெற்ற நாலாயிரம் வீரர்கள் நாட்டுப்புறத்தில் பல கிராமங்களில் வசித்து வருவதையும் இன்னும் பலவித ஆயுதங்களை ஏந்தக்கூடிய ஆறாயிரம் மக்கள், மன்னரது அறிவிப்பு பெற்ற உடனே கோட்டையில் குழுமிவிடக் கூடியவர்களாக இருக்கின்றனர் என்றும் தமது அறிக்கையில் மார்ட்டின்ஸ் துலக்கி இருந்தார்.

For more ebooks vist: http://getmyebook.in/

என்றாலும் அங்கு அப்பொழுது வறட்சி பரவி இருந்ததால் வறட்சியின் கொடூரத்தையும் கும்பெனியாருக்கு தளபதி மார்ட்டின்ஸ் அனுப்பிய மடல் பிரதிபலித்தது. பஞ்சம் பிழைப்பதற்கு குடி மக்கள் கூட்டம் கூட்டமாக சொந்த ஊர்களை விட்டு வெளியேறினார்கள். எங்கும் புல், பூண்டுகூட காணப்பட வில்லை. பொது மக்களுக்கும் குடிமக்களுக்கும் கால்நடைகளுக்கும் குடிநீர் இல்லை. கிணறுகளில் இருந்து கிடைக்கும் தண்ணிரும் பருகுவதற்கு தகுதியற்ற உவர்நீராக இருந்தது. தஞ்சையிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ள அரிசிதான் மக்கள் உயிரைக் காத்து வருகிறது. இத்தகைய சூழ்நிலையில் அங்கு ராணுவப் படையெடுப்பை மேற்கொண்டால் குதிரைப்படை அணிக்கும், பாரவண்டி மாடுகளுக்கும் தீவனத்திற்கு என்ன செய்வது என வினவி இருந்தார்.[50] கும்பெனியார் தங்களது இரகசியத் திட்டத்தை அப்பொழுது மேற்கொள்ள முனைய வில்லை. அங்கு மழைவளம் ஏற்படும் வரை காத்து இருந்தனர்.

ஆதலால் இராமநாதபுரம் சீமை மீதான கும்பெனியாரது இரகசியப் படையெடுப்பு தாமதப்பட்டது.

1. ↑ Venkataraman, K. S. Handloom Industry in South India (1940)
2. ↑ Dodwell, H., Madras Weavers under the company (1910), p. 41
3. ↑ Robert Oorme, Historical Fragments of Mogul Empire, p. 413
4. ↑ Dodwell, Indian Historical Records Commission Proceedings Meetings, Vol. IV. (1922), p. 42

For more ebooks vist: http://getmyebook.in/

5. ↑ Dodwell, H., Madras weavers under the Company, p. 45
6. ↑ Ibid
7. ↑ Ibid
8. ↑ Revenue Consultations, Vol. 50, 1793, pp. 657-58. 2. Public Consultations, Vol. 182-A, 12-2-1793, pp. 852-862
9. ↑ Guide to the Records, Tanjore District, Vol. No. 3345, 27-2-1793
10. ↑ Revenue Consultations, Vol. 50 A. (1793), pp. 539-56
11. ↑ Revenue Consultations, 50 A (1793), pp. 586, 87
12. ↑ Ibid pp. 552-78
13. ↑ Edmond Burke-Impeachment of Warren Hastings (London), 19 () 8, Vol. I
14. ↑ Revenue Consultations, Vol. 62, 10–4–1795, pp. 1 268, 69
15. ↑ Revenue Consultations, Vol. 62, 10-4-1795, p. 1268, 69
16. ↑ Revenue Consultations, Vol. 62, 10–4–1795, p. 69
17. ↑ Alexandar Nelson, Manual of Madurai Country. Vol. V, p. 112.
18. ↑ Revenue Consultations, Vol. 63 B, 23-3-1795, p. 1282, 83
19. ↑ Military Country Correspondence. Vol. 45, 27-8–1794. p. 333–38
20. ↑ Military Consultations, Vol. 174, (1793), pp. 1688-95
21. ↑ Military Country Correspondence, Vol. 44. (1793). pp. 127-28
22. ↑ Military Country Correspondence, Vol. 44, 11-4-1793, pp. 137-38
23. ↑ Ibid., 2-4-1793, p. 127
24. ↑ Military Consultations, Vol 182, 7–1–1794, p. 79
25. ↑ Military Consultations, Vol. 183, 1-9-37, pp. 996-10 04
26. ↑ Revenue consultations, Vol. 62 A, (1795), pp. 1296-97
27. ↑ Secret consultations, Vol. 10 B, pp. 177-94
28. ↑ Military Miscellaneous Book, Vol. 41, 31-5-1794, pp. 527
29. ↑ Military country correspondence, Vol. 45, 7-3-1794, pp. 2729

For more ebooks vist: http://getmyebook.in/

30. ↑ Military Consultations, Vol. 184, 25–3-1794, pp. 1236-70
31. ↑ Military Country Correspondence, Vol 45, 6-5-1894, pp. 101-104
32. ↑ Military Country Correspondence, Vol.45. 5-6-1794, pp. 159-60.

|bid. 14-6-94, pp. 1-116.

33. ↑ Military Consultations, 185, 10–5–1794, pp. 1762-68
34. ↑ Military Country Correspondence Vol. 45, pp. 232-233
35. ↑ Military country correspondence, Vol. 45, 12-6-1794. 19-7-1794 pp. 108-200, 234-238.

Military, consultations, Vol. 186, 17-6-1794, pp. 2348-420

36. ↑ Military consultations, Vol. 187, 4-7-1794, pp. 2948-67
37. ↑ Military consultations, Vol. 186, 21-6-1794, p. 2757-60
38. ↑ Military country correspondence, Vol. 45, 3-7-1794, pp. 201-203
39. ↑ Military country correspondence, 26-6-1794, p. 194-201
40. ↑ Military Consultations, Vol. 187, 28-7-1794, p. 3293-343
41. ↑ Military Country Correspondence, Vol. 45, 27-8-1794 D. 292-94.
42. ↑ Military consultations, Vol. 189 B, 29-8-1794 p. 39.10
43. ↑ Military consultations, Vol. 189 A, 26-9-1794, p. 39.10
44. ↑ Ibid., 7-9-1794, pp. 3923, 24
45. ↑ Ibid., 13–9–1794, pp. 3920-28
46. ↑ Rajaram Row. T., Ramnad Manual (1891), p. 216
47. ↑ Military Consultations, Vol. 189 A, 1794, pp. 2924–38
48. ↑ Military consultations, Vol. 190, 1794, pp. 4266–83, MIII tary Country Correspondence, Vol. 45, 25-10-1794 - pp. 8 O'l -86
49. ↑ Military Country Correspondence, Vol. 45, 17-10-1794, p. 348-52. Military Consultations, Vol. 189, 14-10-1794, pp. 4180-267
50. ↑ Military Consultations, Vol. 188 A, 21-7-1794, pp. 8302-08

For more ebooks vist: http://getmyebook.in/

## 8

## வஞ்சகத் தாக்குதல்

1795-ம் ஆண்டு-ஜனவரி மாதம்

பரங்கிகள் புத்தாண்டு விழாக் கொண்டாட்டங்களையும் விருந்துகளையும் முடித்திருந்த நேரம். சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் கவர்னரது அறையில் முக்கியமான கூட்டம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. கும்பெனியின் பொறுப்புள்ள அலுவலர்களான எட்வர்டு சாண்டர்ஸும் எர்னஸ்ட் வில்லியம் டால் போல்ட்டும் கலந்து கொண்டனர். நீண்டநேர பரிசீலனைக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வந்தனர்.[1] அதுவும் ஒரு மிக முக்கியமான முடிவாக இருத்தல் வேண்டும். ஏனெனில் சிறிது நேரத்துக்குள்ளாகவே ரகசியக் கடிதங்களைப் பெற்றுக்கொண்ட அந்தக் குதிரை அணிகள் திருச்சிக் கோட்டைக்கும் பாளையங்கோட்டைக்கும் புறப்பட்டன. அன்றைய காலகட்டத்தில் சென்னையிலிருந்து திருச்சி, குதிரை மூலமாக நான்கு நாட்கள் பயணத்திலும், பாளையங்கோட்டை 8 நாட்கள் பயணத்திலும், எட்டும் நிலையில் இருந்தன.

பிப்ரவரி மாதம் எட்டாம் நாள்.

வைகறைப் பொழுது. கதிரவனின் மங்கிய கதிர்கள் இன்னும் கிழக்கில் எழவில்லை. என்றாலும் அந்தக்

For more ebooks vist: http://getmyebook.in/

காலை இருட்டோடு இருட்டாக இராமநாதபுரம் கோட்டையின் தென்மேற்குத் திசையிலிருந்து வந்த கும்பெனியாரின் படை அணிகள் பல, கோட்டைக்குள் நுழைந்தன. நிமிட நேரத்தில் சேதுபதி மன்னரது அரண்மனையைச் சூழ்ந்து கொண்டன. அந்த ஆரவாரத்தினால் கண்விழித்த மக்கள் கும்பெனிப்படையின் முகத்தில்தான் விழித்தனர். யாரும் எதிர்பாராத இந்தச் சூழ்நிலையில், மக்களது முகத்தில் துக்கக் கலக்கத்துடன் குழப்பமும் வியப்பும் கலந்து பிரதிபலித்தன. இராமநாதபுரம் கோட்டையின் பொறுப்பு கி.பி. 1772 முதல் கும்பெனித் தளபதி மார்ட்டின்ஸ் பொறுப்பிலிருந்ததால் கும்பெனியாரது படைஅணி கோட்டைக்குள் நுழைவதில் எவ்விதத் தடங்கலும் இல்லாது போயிற்று. கோட்டைத் தளபதி மார்ட்டின்ஸ்-சடன் படை அணிகளின் தளபதி ஸ்டீவன்சனும் அரண்மனைக்குள் சென்றனர். இராமநாதபுரத்திலிருந்து ஸ்டீவன்சன் சென்னைக் கோட்டைக்கு அனுப்பிய மடலில், ...திருநெல்வேலியிலிருந்து 5.ம் தேதி புறப்பட்டேன். தளபதி பௌவேடிர் தமது அணியுடன் கயத்தாற்றில் என்னுடன் சேர்ந்து கொண்டார். விரைவான பயணத்தை மேற்கொண்டு இன்று (8-2-1795) இங்கு வந்து சேர்ந்தோம். தளபதி மார்ட்டின்ஸின் வீரர்கள் எங்களை கோட்டைக்குள் அனுமதித்தனர். தளபதி பௌவேடிரின் அணி, அரண்மனையைக் கைப்பற்றியது. சிறிது நேர தயக்கத்திற்குப் பிறகு எங்களிடம் சச்சரவிட்ட மன்னர் அரசு ஆணைக்குக் கட்டுப்பட்டார். நாளை அல்லது மறுநாள் கலெக்டர்

For more ebooks vist: http://getmyebook.in/

பவுனி இங்கு வந்து சேர்ந்ததும், பிற நடவடிக்கைகளை மேற்கொள்ளுவோம்... எனத் தெரிவித்திருந்தார்.

இராமநாதபுரம் கோட்டைக்கு வந்த கலெக்டர் பவுனி சென்னை கவர்னருக்கு அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்தார். அதில் முதல்நாள் இரவு, அரசருக்கு எதிராக படைகள் வந்து கொண்டிருப்பது பற்றிய தகவல் அவருக்கு கிடைத்ததாகத் தெரிகிறது. அதனால் தப்பிச் செல்வதற்கான எல்லா முயற்சி களையும் அவர் செய்திருந்தார். ஆனால் நமது துருப்புக்களின் அசாதாரண முயற்சியினால் ஆச்சரியப்படும் வகையில் அவரை சிக்கவைத்து விட்டனர். இன்று காலையில் தளபதி பௌவேடிர் பொறுப்பில் அவரை மேலுருக்கு அனுப்பி வைத்துள்ளேன். திருச்சிக் கோட்டைத் தளபதி அங்கு வந்தால் அவரிடம் மன்னரை ஒப்படைக்கும் படியும் இல்லையெனில் நேரே திருச்சிக்குச் சென்று ஒப்படைத்துவிட்டு வருமாறும் அறிவுறுத்தி இருக்கிறேன். இங்குள்ள படைகளை ஏற்கனவே திட்டமிட்டபடி இப்பொழுதைக்குச் சிவகங்கை அனுப்பவில்லை.[2] நமது நட வடிக்கையின் எதிரொலி எப்படி இருக்கிறது என்பதை நோட்டமிட்டு வருகிறேன். படைப்பிரிவுகளை இங்கிருந்து அனுப்பிவிட்டால் வன்செயல்கள் நிகழும்பொழுது அவைகளை கட்டுப்படுத்த இயலாமல் போய்விடும். மற்றும் மன்னரைப் பற்றி மிகுந்த கவனத்துடன் இருந்தும், அவரை இங்கிருந்து அகற்றுவது தவிர்க்க முடியாததாகி விட்டது. நமது கட்டுப்பாட்டிற்குள் இருந்த அவரது போக்கு

For more ebooks vist: http://getmyebook.in/

சூழ்நிலைக்கு ஒவ்வாதவாறு இருந்தது. அவரது சொத்துக்கள் அனைத்தும் அவரது ஊழியர்கள் பொறுப்பிலும் அரண்மனையில் நிறுத்தப்பட்டுள்ள தளபதி மார்ட்டின்ஸின் வீரர்களின் பாதுகாப்பிலும் உள்ளன' என்று தெரிவித்திருந்தார்.[3]

மறவர் சீமை இதிகாசத்தின் இணையற்ற இறுதிப்பகுதி தொடங்கி விட்டது. பாண்டியர், சோழ பாண்டியர், மதுரை சுல்தான்கள், மதுரை நாயக்கர்கள் ஆகியோரது ஆயிர வருட ஆட்சிக் காலத்தில், அந்தந்த ஆட்சியாளருக்கு உறுதுணையாக இருந்து தங்களது மானத்தையும், வீரத்தையும் நிலை நிறுத்திய மறவர்கள் நிலைகுலைந்து விட்டனரா? அவர்களது புகழ் பரப்பும் பரணியும், போர் மணக்கும் வஞ்சியும் காஞ்சியும், பொன்றி விட்டனவா? மதுரையை மைசூர் படையெடுப்பில் இருந்து மீட்டு திருமலை நாயக்கரது ஆட்சியைக் காத்தவர்கள்-சொக்கப்ப நாயக்கரை திருச்சியிலிருந்து சிறை மீட்டவர்கள்-தென் பாண்டிச் சீமை முழுவதிலுமுள்ள அனைத்துப் பாளையக்காரர்களது தலைவராக திகழ்ந்து வீரக் கழல் சூடி இருந்தவர்கள் அவர்களது வீறுகொண்ட தோள்களில் விளையாடிய வீரம் எங்கே? கண்ணை மறைக்கும் விண்ணை சாடிட வெகுண்டெழுந்த இமயமும் வீழ்ச்சி பெற்ற வரலாறும் உண்டா? இல்லையே!! தர்மத்தின் வாழ்வதனை சூது கவ்வ, தர்மம் மறுபடியும் வெல்லும் என்ற இயற்கை மர்மம் எப்பொழுது வெளியாகும்? இந்த வினாக்களுக்கு விடையளிக்க காலந்தான் கனிந்து வர வேண்டும்!

For more ebooks vist: http://getmyebook.in/

மறவர் சீமை முழுவதும் கும்பெனியாரின் கைக்குள் வந்து விட்டது. சேதுபதி மன்னரது சொத்துக்கள் அனைத்தையும் கும்பெனியார் பறிமுதல் செய்து தமதுடமையாக்கிக் கொண்டனர்.[4] எதிர்பாராத வகையில் இடர்ப்பாடுற்ற முகவை மன்னர் என்ன செய்வது எனப் புரியாமல் திகைத்தார். அவர்களைப் பயமுறுத்துவதற்காக பீரங்கி வண்டிகளும், வெடிமருந்து பொதிகளும், இராமநாதபுரம் கோட்டையைச் சுற்றி வரிசை வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. கும்பெனியார்களது ஒற்றர்களான மார்ட்டின்ஸாம், பவுனியும் இராமநாதபுரம் அரண்மனையைக் கொள்ளையிட்டனர். அந்த பகல் கொள்ளையை, அவர்களது நாகரீகமான சொற்களில், மன்னரது சொந்த கருவூலத்திலிருந்து 'புதையல்களை' கண்டுபிடித்து சர்க்கார் கணக்கில் சேர்த்து விட்டதாக கலெக்டாது அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தப் பகல் கொள்ளையில் நூற்றி இருபது சாக்குப் பைகளில் இருந்த 50,455 சூழிச்சக்கரம் பணத்தையும், அந்தப்புரத்திலிருந்த அரசரது பெண்டுகளிடமிருந்து பத்து சாக்குப் பைகளிலிருந்த 10,000-ம் ஸ்டார் பக்கோடா பணத்தையும், 41 பைகளில் வைத்திருந்த 20,475 சூழிச்சக்கரம் பணத்தையும் கைப்பற்றினர்.[5] மற்றும் சேதுபதி மன்னரது கருவூலக் கணக்குகளையெல்லாம் பரிசீலித்த பிறகு, 58,751.14.0 ஸ்டார் பக்கோடா பணத்தைக் கைப்பற்றி இருப்பதாகவும், மேலும் 99,945.15.70 ஸ்டார் பக்கோடா பணத்திற்கு விபரம் தேவைப்படுவதாகவும், இதில் மன்னர் நவரத்தினங்கள் வாங்குவதற்காக

For more ebooks vist: http://getmyebook.in/

காயல்பட்டினம் மரைக்காயரிடம் கொடுத்திருந்த 44,165.87.49 ஸ்டார் பக்கோடாக்களும், திருச்சிக்கு அழைத்துச் செல்லப்படும் பொழுது அவர் எடுத்துச் சென்ற 6,041.15.0 ஸ்டார் பக்கோடாக்களும், திருச்சிக்கு அழைத்துச் செல்லப்படும் பொழுது அவர் எடுத்துச் சென்ற 6.04.1.15.0 ஸ்டார் பக்கோடாக்களும் ஆக 50,206.0.0.0 ஸ்டார் பக்கோடாக்களை நீக்கி எஞ்சிய தொகையை-அல்லது 'புதையலை' (அவர்களது கருத்துப்படி) கைப்பற்ற பெரு முயற்சி செய்தனர். இவ்வளவு பெருந்தொகையான 'புதையலை' கலெக்டர் கைப்பற்றியதற்கு கவர்னர் அவருக்கு பாராட்டுக்கள் தெரிவித்தார்.[6]

அரசரது அந்தரங்கப் பணியாளர்களான இராமசாமி சேர்வைக்கார், முத்தழகு, வீராசாமி, நாச்சியப்பன், சமையல் வெங்கட்டராம நாயுடு ஆகியவர்களை திருச்சிக் கோட்டையிலிருந்து வரவழைத்து விசாரித்தனர். அவர்களில், ஒருவரது வாக்குமூலத்திலிருந்து ஒரு கிணற்றுக்குள் ஒளித்து வைக்கப்பட்டிருந்த சில பணப்பைகளையும் கைப்பற்றினர்.[7] மேலும், சேதுபதி மன்னர் இராமநாதபுரத்திலிருந்து திருச்சி புறப்படும் சமயம் எடுத்துச் சென்ற பணப்பெட்டி, நகைப்பெட்டி ஆகிய இரண்டு பெட்டிகளைப் பற்றிய விபரங்களை தெரிந்து கொள்ளுவதற்காக அரண்மனையிலுள்ள நான்கு கணக்கப்பிள்ளைகளை படாதபாடுபடுத்தினர். இவ்விதம் இராமநாதபுரம் அரசை கைப்பற்றியதுமல்லாமல், இராமநாதபுரம் அரசரது சொந்த சொத்துக்களையும். அணி மணிகளையும்

For more ebooks vist: http://getmyebook.in/

கைப்பற்றுவதற்கு எல்லாவித நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர்.

இவை பரங்கிகள் இராமநாதபுரத்தில் மட்டும் மேற்கொண்ட நடவடிக்கைகள் அல்ல. அவர்களது ஏகாதிபத்திய கொள்கையின் உள்ளடக்கமான பகல்கொள்ளையை, இந்திய நாட்டில் எங்கெல்லாம் தன்னரசு மன்னர்களை அவர்களது ஆட்சியிலிருந்து அகற்றி, தங்களது இரும்புப் பிடியை இறுக்கிக் கொண்டார்களோ, அங்கெல்லாம் இத்தகைய இழி செயல்களில்தான் அவர்கள் ஈடுபட்டனர். தஞ்சாவூர், குடகு, நாகபுரி, பேரார் மன்னர்களிடத்திலும் அவர்களது இராஜ குடும்பங்களிலும் பரங்கிகள் நடத்திய முறைகேடான கொள்ளைகளுக்கு வரலாற்றில் ஏராளமான எடுத்துக்காட்டுகள் உள்ளன.[8] இத்தகைய ஈனச் செயல் களில், ஈடுபட்டிருந்த தங்களது பணியாளர்களை அன்றைய இங்கிலாந்து நாட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் மனம் வெதும்பி மன்றத்தில் கண்டனத் தீர்மானம் ஒன்றை கி.பி. 1784-ல் நிறைவேற்றி கண்டனம் தெரிவித்தனர். அதன் ஒரு பகுதி, கும்பெனியாரது நடவடிக்கைகள் முழுவதும், ஊழல் நிறைந்ததாகவும், எந்தக் குறிக்கோள்களுக்காக அந்த நிறுவனம் அமைக்கப்பட்டதோ அதற்குப் புறம்பானதாகவும் உள்ளன. போர்க்காலத்திற்கும் அமைதி காலத்திற்குமாக கும்பெனியாருக்கு அளிக்கப்பட்டிருந்த உரிமைகள் மீறப்பட்டு எல்லா நிலைகளிலும் வெறுப்பைத் தூண்டக்கூடியதாக இருக்கின்றன. அவர்கள் கையெழுத்திட்டுள்ள உடன்படிக்கைகள் பொது மக்களது நம்பிக்கையை

For more ebooks vist: http://getmyebook.in/

இழக்கச் செய்வதற்குக் காரணமாகவும், செல்வவள மிக்க நாடுகளை அழிவிற்கும், அவமானத்திற்கும் ஆளாக்கி நமது வலிமைக்கும், தேசிய கவுரவத்திற்கும் குந்தகம் விளைவிப்பதாக உள்ளன...' எனத் தொடர்கிறது. பின்னர், அதே பாராளுமன்றத்தில் பேசிய சர். ஜார்ஜ் கான்வெல் பிரபு என்பவர், உலகத்தின் எந்த மூலையிலும் இத்தகைய லஞ்ச லாவண்யமும், பேராசையும், துரோகமும் நிறைந்த அமைப்பு அப்பொழுது இருந்தது கிடையாதென ஆங்கிலக் கிழக்கு இந்தியக் கம்பெனிக்கு 'பாராட்டுக்கள்' வழங்கினார்.[9]

இத்தகைய சாடுதல்களின் பிரதிபலிப்பாக 'இந்தியச் சட்டம்' என்ற பெயரில் ஒரு புதிய ஆணையை இங்கிலாந்து பாராளுமன்றம் கி.பி. 1784-ல் நிறைவேற்றியது. ஆனால் 1786 ஜூலை மாதத்தில் நடைபெற்ற கும்பெனி இயக்குனர்களது இரகசியக் கூட்டம், கும்பெனியின் கவர்னர் ஜெனரலை இந்தச் சட்டத்திற்கு புறம்பான முறையில் செயல்படுமாறு அறிவுறுத்தியது. ஏனெனில் அவர்களது வியாபார நோக்கம் இங்குள்ள செல்வங்களை தங்கள் நாட்டிற்கு வாரிச்செல்வது என்பது, ஆற்காட்டு நவாப் அவர்களுக்கு அளித்த அதிகார வரம்பைக் கொண்டு தங்களது ஆதிக்க வெறியினை நிறைவு செய்து கொண்டனர். மேலும் அவர்களது வியாபாரத்தில் இன்னொரு ரகசியமும் இருந்தது. பொதுவாக ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டில் வியாபாரம் செய்பவர்கள், தங்கள் நாட்டுப் பொருள் களை அடுத்த

For more ebooks vist: http://getmyebook.in/

நாட்டிற்கு எடுத்துச் சென்று விற்றுவிட்டு தங்கள் நாட்டிற்குத் தேவையான பொருட்களை அங்கிருந்து பெற்று வருவது வழக்கம். 18ம் நூற்றாண்டு இறுதியில், இந்தியாவில் விற்பனை செய்ய ஆங்கிலேயரிடம், அரசர்களுக்குரிய ஆடம்பரப் பொருட்களைத் தவிர வேறு பொருள் எதுவும் அவர்களிடத்தில் இல்லை. அவர்களுக்குத் தேவையான கைத்தறித் துணிகள். மிளகு, வாசனைத் திரவியங்கள் போன்றவற்றிற்கு விலையாகத் தங்கம், வெள்ளி நாணயங்களைக் கொடுத்து வாங்கவேண்டிய நிலை, தங்கத்திற்கு அவர்கள் எங்கே போவார்கள்? ஆதலால் முதல் இல்லாத வியாபாரம் செய்தனர்! அதாவது கொள்ளை -இந்தியப் பாட்டாளிகள் பாடுபட்டு உற்பத்தி செய்தவைகளையும், சேமித்து வைத்திருந்தவைகளையும் வன்முறையில் கொள்ளையடிப்பது. இதன் காரணமாக, கி. பி. 1763-ல் இந்தியாவிலிருந்து 30 லட்சம் பவுன் தொகையை இலாபமாக இங்கிலாந்திற்கு எடுத்துச் சென்றதாகக் ஸ்கிராப்டன் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.[10] அவர்கள் நாட்டிலிருந்து ஒரு அவுன்சு அளவு தங்கத்தையோ, வெள்ளியையோ கொண்டு வந்து இந்தியாவில் முதலீடு செய்ய முடியாதவர்கள். இவ்வளவு தொகையை அப்பொழுது இலாபமாக ஈட்டியிருப்பது ஆச்சரிய மான செயல் அல்லவா?

1. ↑ Military Consultations, Vol. 193 A, 27–1–1759, pp. 96-106
2. ↑ Military consultations, Vol. A, 8-2-1795, pp. 322-23
3. ↑ Ibid., 9–2–1795, pp. 323–27
4. ↑ Madurai Dist. Records, Vol. 1133, 4-9-1801

For more ebooks vist: http://getmyebook.in/

5. ↑ Revenue Consultations, Vol. 62 A, 13-3-1795, p. 964
6. ↑ Revenue Consultations, Vol. 62 B, 11-4-1795, p. 1320
7. ↑ Revenue Consultations, Vol. 62 A, 24-3-1795, pp. 1112, 1136-230
8. ↑ Srinivasachari. C.S., The Inwardness of British Annexation in India (1951), p. 68
9. ↑ Palmi Dutt., R., India Today (1947), p. 89
10. ↑ Palmi Dutt. R., India Today (1947), p. 90

---

For more ebooks vist: http://getmyebook.in/

## 9
# திருச்சியில் மீண்டும் சிறை

திருச்சிராப்பள்ளிக் கோட்டை, மேற்கு வாசல், அன்று மாலையில் விறுவிறுப்பான நிலையில் காணப்பட்டது. கோட்டை அரங்கத்தின் மேலே அமர்ந்திருந்த போர் வீரர்கள் ஏனைய வீரர்களை உஷார்ப் படுத்தும் வகையில் குழல்களை ஊதினர். தெற்கே விராலிமலை திசையிலிருந்து குதிரைப்படை அணி ஒன்று திருச்சி நோக்கி வந்து கொண்டிருந்தது. நொடி நேரத்தில் ஆங்காங்கு இருந்த வீரர்கள் அனைவரும் தங்கள் ஆயுதங்களுடன் கோட்டை வாயிலில் அணிவகுத்து நின்றனர்.

மீண்டும் குழல் ஒலித்தது. அதன் ஒலியிலிருந்து அச்சப்படத் தக்கது ஒன்றும் இல்லையென்றும், மரியாதை செலுத்தும் வகையில், வீரர்களது அணிவகுப்பு இருக்க வேண்டும் என கட்டளையிடப்பட்டது. மேலூர் கோட்டைக்குச் சென்றிருந்த திருச்சி தளபதி பிலாயிட்டின் குதிரை அணிதான் வந்து கொண்டு இருந்தது. சிறிது நேரத்தில் நீலத் துணியில் வெள்ளை சிவப்பு வண்ண குறுக்குக் கோடுகள் இட்டு இங்கிலாந்து நாட்டு அரசு சின்னமான சிங்கமும் குதிரையும் வரையப் பெற்ற பெரிய கொடி ஒன்றினை தாங்கிப்பிடித்த வீரனது குதிரையைத் தொடர்ந்து பல குதிரை வீரர்கள் மெயின் கார்டு வாயில் வழியாக கோட்டைக்குள் புகுந்தனர். அவர்களை அடுத்து, பரங்கித் தளபதி பிலாய்ட்டும் அவரை தொடர்ந்து, இராமநாதபுரம்

For more ebooks vist: http://getmyebook.in/

சேதுபதி மன்னரும் அவரது பணியாட்களும் இருபது குதிரைகளிலும் ஒரு ஒட்டகத்திலும் கோட்டைக்குள் நுழைந்தனர்.[1]

அதே அகழி, உச்சிப் பிள்ளையார் கோவில், ஆற்காட்டு நவாப் அரண்மனை, கவனத்து மைதானம் அவைகளை அடுத்து வரிசை வரிசையாக பழைய கட்டிடங்கள். பதினான்கு ஆண்டு களுக்கு முன்னர் அதே கட்டடங்களின் ஒன்றில் தான் அரசியல் கைதியாக தமது தாயாருடனும் தமக்கைகளுடனும் பத்து ஆண்டுகளை அங்கு கழித்த சிறை வாழ்க்கை அவரது சிந்தனையில் நிழலாடியது. அந்த இல்லத்திலேயே தனது அருமைத் தாயார் நாட்டை இழந்த கவலையினால் நோயுற்று இறந்ததும் அவரது எண்ணத்திரையில் எழுந்து மறைந்தது. அந்தக் கசப்பான நினைவுகள்-இனந்தெரியாத கிளர்ச்சிகளை அவரது இதயத்தில் உருவாக்கின. சற்று உறுதியான குரலில் அவரையும் அறியாது சில வார்த்தைகள் அவரது வாயிலிருந்து வெளிப்பட்டன. அவரது குதிரையை ஒட்டி வந்து கொண்டிருந்த இன்னொரு குதிரையிலுள்ள அவரது அந்தரங்கப் பணியாளர் இராமசாமி சேர்வைக்காரர் 'மகாராஜா' என்று பணிந்த குரலில் கேட்ட பொழுதுதான். அவருக்கு சுய நினைவு வந்தது. அப்பொழுது அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட கட்டிடத்தின் அருகில் தமது குதிரையை நிறுத்தி தளபதி பிலாய்டு கீழே இறங்கியதுடன் மன்னரையும் இறங்கி வருமாறு அழைத்தார். அவர்கள் அந்த கட்டிடத்திற்குள் சென்றனர். அன்று முதல் அந்த இடம்

For more ebooks vist: http://getmyebook.in/

மன்னரது தனிமை வாழ்க்கைக்கு உரிய வீடாக அமைந்தது.

O O O

நாட்கள் பலவாகி விட்டன. இராமநாதபுரம் அரண்மனை வாழ்க்கை ஒரு பிரமை போல மன்னருக்குத் தோன்றியது. காலையில் இராஜ ராஜேசுவரி அம்மன் கோவில், திருப்புல்லாணி பெருமாள் கோவில், முத்துராமலிங்கசுவாமி கோவில் ஆகிய ஆலயங்களின் பிரசாதங்களுடன் ஆஜராகி ஆசீர்வதிக்கும் அத்தியானப் பட்டர்கள், மங்களகரமான காலைப் பொழுதை நினைவூட்ட கருங்குரங்கு, கண்ணாடி, யானை, ஒட்டகை ஆகியவைகளை கொண்டு வந்து நிறுத்தி, வணங்கி, அன்பளிப்புப் பெற்றுச் செல்லும் பணியாளர்கள், பண்டைய மன்னர்களது வாழ்க்கை நியதிகளை விளக்கும் புலவர்கள், விருந்தாளிகளின் வருகையைத் தெரிவிக்கும் கட்டியக்காரர்கள், துபாஷ், வக்கீல், பிரதானி, அரண்மனைக் கணக்கு உரையாடும் பொழுது காளாஞ்சி ஏந்தி நிற்கும் அடைப்பக்காரர்கள், கவரி வீசுபவர்கள், பணிக்கம் தாங்கும் பணியாளர்கள், எடுபிடி வேலைக்காரர். நேரத்தை நினைவூட்டும் நகரா அடிப்பவர்கள், சொல்லுகின்ற கட்டளைகளை பதிவு செய்யும் பாரசீக, ஆங்கில, தமிழ் எழுத்தர்கள், அஞ்சல்காரர்கள், பட்டோலை எழுதுபவர்கள், ஃபிடில் வாசிப் பவர்கள், சிற்றுண்டி பரிமாறும் வெயிட்டர்கள், சோக்தார்கள், கித்வால், தானாபதி, பூந்தோட்டத்தைப் பராமரிக்கும் தோட்டக்காரர்கள், தங்கள் உடல் வலிமையைக் காட்டி மகிழ்விக்கும் மொலகு செட்டி

For more ebooks vist: http://getmyebook.in/

என்ற மல்லர்கள், சிந்திகள், சிலம்பக்காரர்கள், பாடகர்கள், நட்டுவர்கள், இன்னும் கூடார லஸ்கர், சேரியட், பீட்டன், தட்டுவண்டி சாரதிகள், பல்லக்குத் துக்கிகள் பெண் பணியாளர்கள், அலிகள், சமையல்காரர், மசால்ஜிகள் தையல்காரர், மருத்துவர், குயவர், தச்சர், பாராக்காரர்கள், இரவு பாரி வலம் வருபவர்கள், ஒப்பனைக்காரர்கள், குதிரை, யானை, ஒட்டகை பாகர்கள், காவல்காரர்கள் என பல வகையான பணியாளர்கள் அரசரது வாய் அசைவிற்கும், கண் இமைப்பிற்கும் காத்து நிற்கும் காட்சி. ஆனால் இங்கே தம்மைத் துாரத்திலிருந்து வெறித்துப் பார்க்கும் பரங்கி சிப்பாய்களை மட்டும் பகல் முழுவதும் சேதுபதி மன்னர் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதாக இருந்தது. உறவையும், உரிமைச் சுற்றத்தையும் நீங்கி தமது இலட்சியம் எட்டப்படாத நிலையில், வாழ்நாளெல்லாம், சிறைக் கைதியாக வாழ வேண்டிய சிறுமையை எண்ணி அவரது இதயம் ஏங்கியது. இந்த வாழ்க்கை இன்னும் எவ்வளவு காலத்திற்கு?

O O O O O

இராமநாதபுரம் அரண்மனையில், அரச குடும்பத்தினரும், பெண்டுகளும் வசிக்கும் தனிமைப் பகுதிக்கு (அந்தப்புரம்) தளபதி மார்ட்டின்சும், கலெக்டர் பவுனியும் சென்றது. அவர்களின் அணிகலன்களையும், பணத்தையும் பறித்துச் சென்றிருப்பது,[2] தம்முடைய சகோதரி மங்களேஸ்வரி நாச்சியார் இராமனாதபுரம் பட்டத்திற்கு வர தீவிரமாக

For more ebooks vist: http://getmyebook.in/

முயற்சி செய்து வருவது,[3] தமது முந்தையப் பிரதானி முத்து இருளப்ப பிள்ளையை இராமனாதபுரம் சீமையின் பேஷ்காரராக கும்பெனியார் நியமனம் செய்திருப்பது,Revenue consultations, Vol. 62, 25-3-1795, pp. 1060-61 ஆகிய செய்திகள் அடுத்து அடுத்து அவரது காதுகளில் நாராசம் போல் துளைத் தன. இதில் உள்ள சிறப்பு என்னவென்றால் இவ்வளவு கொடுமைகளையும் அவருக்கு இழைத்த கும்பெனியார் அவரது சிறை வாழ்க்கைச் செலவிற்காக மாதம் ஆயிரம் ரூபாய் வழங்க மிக தாராளமான மனதுடன் முன்வந்திருப்பது.

கலெக்டர் பவுனியிடமிருந்து கிடைத்துள்ள இந்தச் செய்தியை நேரில் தெரிவிக்க தளபதி பிலாய்டு அரசரது அறைக்கு வந்தார். யாருக்கு யார் பிச்சை அளிப்பது? வந்தவர்களுக்கெல்லாம் வாழ்த்தி, மகிழ்ந்தவர்களுக்கெல்லாம், பொன்னையும், மணியையும், பிடிபிடியாக அள்ளி வழங்கிய கைகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய்-பரம்பரை பரம்பரையாக, சூரிய சந்திரர்கள் நிலைத்திருக்கும் வரை சிறப்பாக வாழ வேண்டும் என்பதற்காக அந்தணர்களுக்கு அகரங்களை சதுர்வேதி மங்கலங்களை, காணிகளை, ஊர்களை தானம் வழங்கிய கைகளுக்கு ஆயிரம் ரூபாய். மண்ணை ஆண்ட மன்னருக்கு நேற்று வந்தவர்கள் தானம் வழங்குவது! நவாப்பின் அனுமதியுடன் வியாபாரம் செய்து பொருள் சம்பாதிக்க வந்தவர்கள், அளவு கோலைப் பிடிப்பதற்குப் பதில் ஆட்சிக்கோலைப் பிடித்துள்ள அவலம். மன்னர் தனது

For more ebooks vist: http://getmyebook.in/

மனக்குமுறல்களை மறைத்துக் கொண்டு கும்பெனியாரிடமிருந்து பிச்சை பெறுவதற்கு தமக்கு விருப்பம் இல்லை என்பதை தளபதியிடம் தெரிவித்தார்.[4] அத்துடன் சென்னைக் கோட்டையிலுள்ள கும்பெனியாரது கவர்னருக்கு தனது உள்ளக் கிளார்ச்சிகளை கட்டுப்படுத்தியவராக தம்மீதுள்ள குற்றச்சாட்டுக்களை வெளியிடுமாறும், நீதி விசாரணை நடத்த வேண்டும் என்றும், இராமநாதபுரத்தில் கும்பெனியார் நடத்தும் கொடுமைகளை தடுத்து நிறுத்தி ஆணையிடுமாறும் அவர் பல மடல்களில் கோரினார்.[5] அந்த மடல்களின் சில பகுதிகள்.

15.3-1795-ம் தேதியிட்டு அனுப்பிய மடலில்'[6]... அவமானம் விளைவிக்கும் வகையில் எனது ஊரில் எனது அரண் மனையில் கும்பெனியாரது படைகள் சூழ்ந்து என்னைக் கைதியாக இங்கு கொண்டு வந்துள்ளனர். ஆட்சியாளர்களாக இருந்த எனது மூதாதையரைப் போன்று என்னையும், எனக்குள்ள உரிமைகளுடன், எனது நாட்டில் நிலை பெறச் செய்தல் வேண்டும் என்ற கருத்தில் இங்கு, சிலவற்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். எனது எதிரிகள் என்மீது வெறுப்பு ஏற்படும் வகையில் குறிப்பாக தளபதி மார்ட்டின், பேஷ்குவி-கலெக்டர் பவுனி, எனது மைத்துனர் சாமித் தேவன், இன்னும் எனது ஊழியர் முத்து இருளப்பபிள்ளை ஆகியோர் தங்களது உள்ளத்தில் தவறான புகார்களை நிறைத்துள்ளனர்.

For more ebooks vist: http://getmyebook.in/

'நான் பிறந்த எழுபத்து இரண்டாவது நாள், எனது மூதாதையரின் பாரம்பரிய அரச பதவிக்கு நியமனம் செய்யப் பட்டேன். எனது தாயாரும் பிரதானியும், நாட்டின் நிர்வாகத்தைக் கவனித்து வரும் பொழுது, நவாப்பினது அதிருப்தியைப் பெற்றுக் கொண்டனர். அப்பொழுது நான் இளம் பிள்ளையாக இருந்ததால் அதற்கான காரணம் என்னவென்று எனக்குத் தெரியாத நிலை. நவாப்பினுடைய படைகளது ஒத்துழைப்புடன் கும்பெனியார் இராமநாதபுரம் கோட்டையை வளைத்துப் பிடித்து, செல்வமனைத்தையும் கைப்பற்றி என்னையும், எனது தாயார், சகோதரிகள் இன்னும் சிலரையும் இந்த திருச்சிக் கோட்டையில் பத்து ஆண்டுகள் காவலில் வைத்தி ருந்தனர்.

1780-ம் வருடம் மன்னர் ஹைதர் அலிகான் கர்நாடக சீமைக்குள் புகுந்து தனது குதிரைப்படையைக் கொண்டு எல்லாப் பகுதிகளிலும் கொள்ளையும் அழிமானமும் ஏற்படுத்திய பொழுது, மாப்பிள்ளைத் தேவரும் எனது தமக்கையின் கணவனான சாமித் தேவனும், எதிரிகளிடம் சேர்ந்து இராமநாதபுரம் சிமைக்கு கள்ளர்களை திரட்டி வந்து இராமநாதபுரம் கோட்டையைப் பிடித்தனர். அவர்கள் சீமையைக் கொள்ளையிட்டது அல்லாமல், அமில்தார்களை துரத்திவிட்டு கும்பெனியாருக்கும் நவாப்பிற்கும் இடர்ப்பாடுகளை ஏற்படுத்தினர். அப்பொழுது பல அணிகளது தலைவர்களாக இருந்த அலுவலர்களுக்கு இந்தப் படையெடுப்புப் பற்றிய முழு விபரமும் தெரியும். இந்தப் போரில் சின்ன மருது சேர்வைக்காரனும்,

For more ebooks vist: http://getmyebook.in/

அவனது தமையன் வெள்ளை மருது சேர்வைக்காரனும், எதிரிகளது படைகளை அழைத்து வந்து, எனது சீமையைக் கொள்ளையிட்டனர். நவாப்பினது சோழவந்தான் கோட்டை அதிகாரி முல்லாராவை சின்ன மருது கொன்றுவிட்டு மதுரை, சிவகங்கை, காளையார் கோவில், திருப்பத்துார் ஆகிய பகுதிகளுக்கான போக்குவரத்தையும் துண்டித்து விட்டான். மேலும், எனது முந்தைய பிரதானி பிச்சைப்பிள்ளையையும், நவாப்பின் சில வீரர்களையும், மதுரைக்கு அண்மையில் கொன்றுபோட்டதுடன் ஏராளமானவர்களையும் காயப்படுத்தி அவர்களது தளவாடங்களையும் கைப்பற்றிக் கொண்டான்.

இந்த விபரங்களை அறிந்த மக்கார்த்தி பிரபுவும், ஆற்காட்டு நவாப்பும் என்னைக் காவலில் இருந்து விடுவித்து எனது பரம்பரை ஆட்சி உரிமையை எனக்கு வழங்கி என்னை மன்னராக ஆக்கினர். அத்துடன், இராமநாதபுரம் சீமையிலிருந்தும், சின்ன மறவன் சீமையிலிருந்தும், எதிரிகளை அடித்து விரட்டுமாறு கேட்டுக் கொண்டனர். மே 1781-ல் எனக்கு கும்பெனி வீரர்களது பாதுகாப்பு அளித்து திருச்சியிலிருந்து இராமநாதபுரம் திரும்புவதற்கு ஏற்பாடும் செய்தனர். வழியில் எதிரிகள் மிகுந்த பலத்துடன் என்னைத் தாக்கினர். நானும் அவர்களுடன் போராடி அவர்களைத் தோற்கடித்துவிட்டு இராமநாதபுரம் திரும்பினேன். தளபதி மார்ட்டின்ஸினுடைய நட்பைப் பெற்று மாப்பிள்ளைத் தேவனையும் சின்னமருது சேர்வைக்காரனையும் பிடிப்பதற்கு நடவடிக்கை

For more ebooks vist: http://getmyebook.in/

மேற்கொண்டேன். மாப்பிள்ளை தேவன் பின்வாங்கி ஓடிவிட்டான். சின்னமருது சேர்வைக்காரன் சுல்லிவன் மூலமாக கும்பெனியாரின் நண்பனாகி விட்டான். போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, போக்குவரத்து துவங்கப்பட்டது. இப்பொழுது சென்னையிலுள்ள சாமித் தேவனுக்கு எனது சகோதரியை திருமணம் செய்து கொடுத்து சில கிராமங்களையும் ஜாகீர்களாக வழங்கினேன். சிலரது தூண்டுதலினால் என்மீது குற்றம் சுமத்துவதற்கு அவன் காத்திருக்கிறான்.

நான் இராமநாதபுரம் திரும்பிய சிறிது காலத்தில் முத்திருளப்பபிள்ளையை பிரதானியாக ஏற்றுக் கொள்ளுமாறு மார்ட்டின்ஸ் சிபாரிசு செய்தார். அவரது நட்பை மதித்து சீமையின் நிர்வாகப் பணிக்கு அவரை பிரதானியாக நியமித்தேன். எட்டு, ஒன்பது ஆண்டு காலப் பணியில் முத்திருளப்பபிள்ளை மார்ட்டின்சுடன் சேர்ந்து கொண்டு அரசியலுக்கு புதியவனான எனக்கு எவ்வித விபரமும் தெரியாத வகையில் அவரே நிர்வாகத்தை நடத்தி வந்தார். குறிப்பாகச் சொல்லப்போனால் நான் அவர்களது கைதிபோல் இருந்தேன். கி.பி. 1790-ல் முத்திருளப்ப பிள்ளை எனது அனுமதியை எதிர்பார்க்காமல், மேக்லாய்டு துரையிடமிருந்து மதுரைச் சீமையை குத்தகைக்குப் பெற்று மதுரைக்குச் சென்றுவிட்டார். வெறுப்படைந்த குடிமக்கள், அவர் சென்ற பல்லக்கை நொறுக்கி அவரது பணியாட்கள் இருவரைக் கொன்று அவரையும் மிக மோசமாக அவமானப்படுத்தினர். இந்த விபரம் தளபதிக்கும் மற்றவர்களுக்கும் பிறகு தான் தெரியவந்தது. எனது பணியாளர்களை அனுப்பி

For more ebooks vist: http://getmyebook.in/

அவரிடத்திலிருந்த முத்திரை மோதிரத்தைப் பெற்றுவரச் செய்தேன். மதுரையிலிருந்த அவரை மார்ட்டின்ஸ் வரவழைத்து தமது சொந்தப் பாதுகாப்பில் வைத்துக் கொண்டார். சாமித்தேவனை சென்னைக்குச் செல்லுமாறு வற்புறுத்தி சர்க்காரிடம் எனக்கு எதிராக புகார் மனுக் கொடுக்கச் செய்தார். எனக்குக் கீழ்ப்படிந்து நடக்காமல் இருக்குமாறு குடிமக்கள் சிலரையும் தூண்டி விட்டார்...

நான் இப்பொழுது அனுபவிக்கும் சிறை வாழ்க்கைக்கான காரணங்கள் தங்களுக்குத் தெரியாமல் இருக்க முடியாது. எனது குடும்பத்திலிருந்து என்னைப் பிரித்து, இங்கே அடைத்து வைக்கப்பட்டிருக்கிறேன். எனது அறையின் முகப்பில் பரங்கி வீரர்களும் சுதேசிச் சிப்பாய்களும் காவலுக்குப் போடப்பட்டுள்ளனர். இறைவழிபாடு செய்ய இயலாதவாறு அந்த வீரர்கள் பூஜை நேரத்தில் கூட, என்னைத் தொடர்ந்து வருகிறார்கள். இந்த நாட்டு சமயத்தையும் சம்பிரதாயங்களையும் பற்றி ஒழுகும் எனக்கு, வழிபாட்டின் பொழுதும், உணவு நேரத்தின் பொழுதும் பணியாளர் பலரது பணி தேவைப்படுகிறது. ஆனால் என்னைக் கவனிப்பதற்கு இப்பொழுது ஒரே ஒரு பணியாள் மட்டும் உள்ளான். இது எனக்கு மிகுந்த இடர்ப்பாட்டினை தருவதாக உள்ளது. நான் இருக்கும் வீடு இரவு நேரத்தில் பூட்டப்பட்டு கண்காணிக்கப்படுகிறது. வழக்கமாக இரவு ஒன்பது அல்லது பத்து மணிக்கு நான் உணவு உட்கொள்ள முடியாமல் தடுக்கப் பட்டு விட்டேன்.

For more ebooks vist: http://getmyebook.in/

எவ்வித-விசாரணையுமில்லாமல், எந்தக் குற்றச்சாட்டுமில்லாமல், இவ்விதம் கொடூரமாக நடத்தப்படுவதைத் தங்க ளுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இவைகளுக்கான காரணங்களை தங்களிடமிருந்து நான் வலிந்து பெற முடியாது. என்றாலும், நீதி என்பது எல்லோருக்கும் பொதுவான ஒன்று. ஆதலால் எனது சிறைத் தண்டனைக்கான குற்றச்சாட்டுப் பிரதி ஒன்றை எனக்கு அளிக்குமாறும் கேட்டுக் கொள்கிறேன். அல்லது என்னையோ, அல்லது எனது பிரதிநிதியையோ வைத்து நேர்முக விசாரணை ஒன்றை நடத்தினால் குற்றச் சாட்டுகளுக்கு மறுப்புத் தெரிவிக்கக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக தங்களுக்கு எழுதிய ஆங்கிலக் கடிதத்திற்குப் பிறகு, இராமநாதபுரத்தில் நடந்துள்ளவைகளையும் இங்கு விவரித்துச் சொல்ல விரும்புகிறேன். மாசி மாதம் இருபது அல்லது இருபத்து ஒன்றாம் தேதி பவுனியும், மார்ட்டின்சும், இன்னும் இருவரும் ஒரு துபாஷாடன் எனது அரண்மனை முகப்புக்குச் சென்று, அங்கிருந்த எனது பிரதானியின் மகனை எனது மேல் விட்டிற்கு அழைத்துச் சென்று. அரண்மனையின் உள்ளே ஏராளமான பொன்னும் பொருளும் மறைத்து வைக்கப்பட்டு இருப்பதாகவும் அவைகளைக் கொண்டுவந்து ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டனர். அவை பற்றி தனக்கு ஒன்றும் தெரியாது என்ற அவனது பதிலைக் கேட்டவுடன், அங்கிருந்து அவனை ஏசி துரத்தி அனுப்பினர்.

For more ebooks vist: http://getmyebook.in/

பின்னர், அவர்கள் பெண்டுகள் இருக்கும் தனிமைப் பகுதியின் வாசலுக்குச் சென்று, அங்கிருந்த பணியாளர்களிடம் தாங்கள் அந்தக் கட்டிடத்துக்குள் நுழையப் போவதாகத் தெரிவித்தனர். எனது அனுமதியில்லாமல், யாரையும் உள்ளே அனுமதிக்கக் கூடாது என்பது அவர்களுக்குரிய எனது உத்தரவாகும். இது எனது நாட்டிலுள்ள நடைமுறை மட்டுமல்லாது பொதுவாக கர்நாடகம் முழுவதற்குமேயுள்ள பழக்கமாகும். பெரிய இடத்துப் பெண்கள் உள்ள பகுதிக்குள் புகுவது பற்றிய தகாத தன்மையை தெரிவித்த காவலாளிகளை மார்ட்டின்சும், பவுனியும் பயமுறுத்தி, அவர்களை உதைத்தனர். அதனால் பயந்துபோன அவர்கள் உள்ளிருந்து வந்த பெண் பணியாட்களை அழைக்க, அவர்களும் உள்ளே போய் அங்கிருந்தவரை அழைத்து வருமாறு பயமுறுத்தினர். அவர்களிடம் அரண்மனையின் உட்பகுதியில் ஏராளமான பணம் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது என்றும், அதனை ஒப்படைத்து விடுவது அரசரது மனைவிக்கு நல்லது என்றும், இல்லையென்றால் சிப்பாய்களை அனுப்பி அவைகளைக் கைப்பற்ற வேண்டியது ஏற்படும் என்றும் மிரட்டினர். இத்தகைய நடவடிக்கையினால், அரசரது பெண்டுகள் உயிரை விட்டுவிடுவர் என பணியாளர்கள் பதிலளித்தனர். பணத்தை ஒப்படைக்காவிட்டால் உள்ளே சிப்பாய்களை அனுப்புவது தவிர்க்க முடியாது என்பதை மீண்டும் பவுனி தெரிவித்தார்.

அந்தப் பணிப்பெண்கள் மிகவும் பீதி அடைந்தவர்களாக எனது மனைவியிடம் சென்று

For more ebooks vist: http://getmyebook.in/

விபரத்தைத் தெரிவித்தவுடன், தங்களது மானத்தையும், உயிரையும் காத்துக் கொள்ள தங்களிடம் உள்ள பொன்பொருள் அத்தனையையும் அவர்களிடம் கொடுத்துவிட்டு வருத்தப்பட்டனர். அப்பொழுதும் திருப்தி அடையாத பவுனியும், மார்ட்டின்சும், இன்னும் கூடுதலான பொருள்கள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால், அவைகளையும் ஒப்படைத்துவிட வேண்டும் என்றும், தவறினால் அடுத்தநாள் காலை அங்கு சிப்பாய்கள் அனுப்பப்படுவர் என்றும் பயமுறுத்திவிட்டுத் திரும்பினர். இத்தகைய வார்த்தைகளை அதுவரை கேட்டிராத அந்தப் பெண்மக்களின் உள்ளப்பாங்கு எவ்விதம் இருந்திருக்கும் என்பதைத் தாங்களே உணர்ந்து கொள்ளுமாறு தங்களது சிந்தனைக்கு விட்டுவிடுகிறேன்.

கும்பெனியாரால் சிறைப்படுத்தப்பட்டுள்ள நான் என்னிடம் கோரப்படுகிற எல்லாவற்றிற்கும் பதிலளிக்க தயாராக இருக்கிறேன். ஆனால் பெண்களை இவ்விதம் நடத்துவது கர்நாடகத்தில் அரசர்களது குடும்ப கவுரவத்தின் உயர்வை எவ்விதம் குறைவுபடச் செய்யும் என்பதை தாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். எனது மச்சு வீட்டை, பவுனி ஆக்கிரமித்து வசித்து வருகிறார். இராமலிங்க விலாசம் என அழைக்கப்படும் கொலுமண்டபத்தில் அவரது கச்சேரி நடத்தப்பட்டு வருகிறது. இந்த மண்டபத்தில்தான் எனது முடிசூட்டுவிழா சடங்குகள் நடைபெற்றன. இந்தப் புனித இடத்திற்கு வியாபாரிகளையும் மற்றவர்களையும் வரவழைத்து இந்தச் சீமையின்

For more ebooks vist: http://getmyebook.in/

உரிமை யாருக்கு உரியது என்பதை தெரிவிக்குமாறு பவுனி கேட்டு வருகிறார். தனக்குச் சாதகமான பதிலைச் சொல்லாதவர்களைத் தமது எதிரியாக நடத்துவதுடன், அவர்களிடமிருந்து அவருக்குச் சாதகமான விபரங்களை மட்டும் ஏற்றுக்கொண்டு வருகிறார். ஆதலால் என்னையும் எனது எதிரிகளையும் நேரில் அழைத்து விசாரித்து தகுதியானது தகுதியற்றது எவை என்பதைத் தெரிந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

"நான் துரைத்தனத்தாருடன் பொதுவாக பாரசீக மொழியில் தான் கடிதங்கள் பரிமாறிக் கொள்ளுவது வழக்கம். ஆனால் எனது முன்ஷி லாலா சாகிபுவை கைது செய்து கொண்டு சென்றுவிட்டதால், எனது கடிதங்களை எழுதுவதற்கு வேறு யாரும் இல்லை. எனது எண்ணங்களின் பிரதிபலிப்பில் ஏதும் குறைகள் இருந்தால் அதனை ஒரு பொருட்டாகக் கருதாமல், எனக்கு விரைவான பதிலை அனுப்பி வைப்பீர்கள் என எண்ணு கிறேன்....' இவ்வாறு அந்தக் கடிதத்தில் இராமநாதபுரம் சேதுபதி மன்னர் குறிப்பிட்டிருந்தார்.

12-4-1795-ல் எழுதிய இன்னொரு மடலில்,[7] ...இங்கிலாந்து நாட்டில், நீதி வழங்குதலையும் நன்கு அறிந்திருக்கிறேன். அந்த நாட்டில் யாராவது ஒருவர் மீது குற்றம் சுமத்தப்பட்டால், அவர் அந்தக் குற்றச்சாட்டினின்றும் காத்துக் கொள்வதற்கு வாய்ப்பு அளிக்கப்படும். அதன் பிறகு தான் அவர் சிறையில் அடைக்கப்படுவார். நானும் நன்கு ஆட்சி செய்து அனுபவம் பெற்றிருக்கிறேன். விசாரணையின் பொழுது குற்றவாளியென

For more ebooks vist: http://getmyebook.in/

உறுதிப்படுத்தப்பட்டாலொழிய ஒருவரை முடிவான குற்றாளியாகக் கருதுவது இல்லை. எனக்குத் தெரிந்தவரை யில் பவுனி, மார்ட்டின்ஸ் ஆகியோரது நடவடிக்கையினால் ஏற்பட்டுள்ள அவமானம், துயரம் ஆகியவைகளைத் தங்களுக்கு தெரியப்படுத்தியிருக்கிறேன். இதற்கிடையில் இராமநாதபுரம் பகுதிகளில் பறையறைந்து அறிவிப்பு ஒன்று கொடுத்துள்ளனர். இனிமேல் என்னை இராமநாதபுரம் சீமையின் மன்னராகக் கருதப்படக்கூடாது என்றும், இன்னும் மூன்று ஆண்டுகளுக்கு சீமையின் நிர்வாகம் கும்பெனியாரின் நிர்வாகத்தில் இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. தகாத வழியிலும், நேர்மையற்ற முறையிலும் மக்களை நான் கொடுமைப்படுத்தியதாக சான்று வழங்குமாறும் அதற்கு மறுப்புத் தெரிவிப்பவர்களை கண்டனம் செய்தும் வருகின்றனர். தன்னிச்சையாக யாரும் என்மீது புகார் கொடுக்காத நிலையில் அவர்களிடம் புகார் கொடுக்கத் தூண்டுவது எங்குமே இல்லாத புதுமையாக உள்ளது!

'கோட்டைக்குள் சின்ன மருது சேர்வை வரவழைக்கப்பட்டு அவருக்கு அரசு மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது. எனது பிரதானி நீக்கப்பட்டு முத்திருளப்ப பிள்ளைக்கு நிர்வாகம் அளிக்கப்பட்டுள்ளது. அரண்மனையிலுள்ள பெண்டுகள் தொடர்ந்து பயமுறுத்தப்படுகின்றனர். எனது முந்தைய கடிதத்திற்குப் பிறகும் கூட, பெண்டுகளிடமிருந்து ஒன்பதினாயிரம் பக்கோடா பணம் பறித்துச் செல்லப்பட்டுள்ளது. இரண்டு மூன்று

For more ebooks vist: http://getmyebook.in/

நாட்களுக்கு ஒருமுறை கலெக்டர் பவுனி ஒரு பெண் பணியாளரை அனுப்பி எனது பெண்டுகள் உடையதும் என்னுடையதுமான அணி மணிகளை அளித்து விடுமாறு நிர்ப்பந்தித்து வருகிறார். கும்பெனியாரது இத்தகைய கொடுஞ்செயலை நான் எப்பொழுதும் கேட்டதும் இல்லை, கண்டதும் இல்லை.

'தங்களது ஆணை என்று கூறி தளபதி பிலாய்டு எனது சமையல்காரரையும், இன்னும் மூன்று சேர்வைக்காரர்களையும் இராமநாதபுரத்திற்கு கைதிகளாக அனுப்பி வைத்துள்ளார். இதனால் இங்குள்ள எஞ்சிய பணியாளர்களும் என்னை விட்டு அகலுவதற்கு ஏற்ற நடவடிக்கையாக உள்ளது. ஏற்கெனவே உள்ள சிப்பாய்களுக்கும் கூடுதலாக, நவாப்பினது வீரர்களும், என்னைக் கண்காணிப்பதற்கு இங்கு அமர்த்தப்பட்டுள்ளனர். எனக்கு ஒதுக்கப்பட்டுள்ள சிறு அறை பகல் நேரத்தில் திறக்கப்பட்டு, இரவு நேரத்தில் பூட்டி வைக்கப்படுகிறது. மன்னர்களை நடத்தும் முறை இது அல்ல. என்னையும் எனது பெண்டுகளையும் இத்தகைய கொடுமைகளுக்கு உட்படுத்துவது முறையற்றதாகும்.

'இத்தகைய இழிவான நடவடிக்கைகளுக்குக் காரணம் கோரிய எனது முந்தைய இரண்டு கடிதங்களுக்கும், இதுவரை பதில் அளிக்காமல் இருப்பது எனக்கு வேதனையையும் வியப்பையும் அளிக்கிறது. நான் இழைத்த குற்றம் என்ன என்பதை தெரிவிக்க முன் வந்தால், அதனைப் புரிந்து கொண்டு அதற்குரிய பதிலையும் அளிக்க இயலும், தாங்கள் எனது கோரிக்கையை நேர்மையுடன் ஆராய்ந்து

For more ebooks vist: http://getmyebook.in/

சரியான தீர்வுக்கு வருவதற்கும் அது உதவும். இறைவன் பொருட்டாவது எனது கோரிக் கையை மிகுந்த கவனத்துடன் ஆராய்ந்து நான் அனுபவித்து வருகின்ற இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தொடர்ந்து இராமநாதபுரம் மன்னர் அனுப்பிய இன்னொரு கடிதத்திலிருந்து சில பகுதிகள்.[8] "...பெறுபவர் இராமநாதபுரம் பாளையக்காரர், இராமலிங்கம்' என தவறுதலாக கடிதத்தின் துவக்கத்தில் குறிப்பிட்டிருப்பது போல, எனது மூதாதையர்களை பாண்டிய மன்னர்களோ வேறு வேந்தர்களோ, நாயக்க அரசர்களோ, அல்லது வாலாஜா நவாபோ ஏன்? தங்களது கும்பெனி கவர்னர்களோ இவ்விதம் நாகரீகமற்ற முறையில் குறிப்பிட்டது கிடையாது. தாங்கள் கும்பெனி பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு எனக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூட இவ்விதம் தவறாகவோ அல்லது அநாகரீகமாகவோ குறிப்பிட்டது கிடையாது. தங்களது ரெவின்யூ துறையைச் சேர்ந்த வெப் என்பவர், ஒரு பணியாளுக்கு எழுதும் பாணியில் அந்தக் கடிதத்தை எனக்கு வரைந்துள்ளார். இவ்விதம் எழுதுவதற்கு நீங்களும் அனுமதி வழங்கியிருக்க மாட்டீர்கள் என நம்புகிறேன். அதனால்தான் இதனைத் தங்களுடைய கவனத் திற்குக் கொண்டு வந்துள்ளேன். ஏற்கனவே எனக்கு எழுதப் பட்டுள்ள கடிதங்களையும் இப்பொழுது எழுதப்பட்டிருப்பதையும், தங்களது மொழி பெயர்ப்பாளர் அலுவலகத்திலிருந்து வரவழைத்து பரீசீலித்தால், இந்த விபரம் புலப்படும்.

For more ebooks vist: http://getmyebook.in/

என்மீதான சில புகார்கள் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டிருந்தன. அவைகளுக்கான மறுப்பையும் கீழ்க்கண்டவாறு தெரிவித்துக் கொள்கிறேன்.

**முதலாவது** : எனது குடிகளிடம் கடுமையாகவும் கொடுரமாகவும் நடந்துகொண்டதாக சொல்லப்பட்டுள்ளது.

**பதில்** : எனது நாட்டின் நேரடியான நிர்வாகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக இருந்து வந்துள்ளேன். எப்பொழுதும் யாரிடத்தும் நான் கடுமையாக நடந்துகொண்டது கிடையாது. முத்திருளப்பபிள்ளை எனது பிரதானியாக எட்டு அல்லது ஒன்பது ஆண்டுகள் வருவாய்த்துறையை நிர்வகித்து வந்தார். என்னை ஒரு கைதிபோல் நடத்தி, எனது குடிகளையும் கொடுமைக்கு உட்படுத்தி நடத்தி வந்துள்ளார். குயிட்ரென்ட்டைக் கூடுதலாக விதித்தும், புஞ்சை நிலங்களுக்கான வரியை உயர்வு செய்தும் உத்தரவிட்டார். இதனால் அதிருப்தி அடைந்தவர்கள், இந்தக் கொடுமைப்பற்றி நவாப்பிற்கும் கும்பெனியாருக்கும் புகார் செய்தனர்.

**இரண்டாவது** : சிவகங்கைச் சீமையின் மீது நான் படையெடுத்ததாகச் சொல்லப்பட்டுள்ளது.

**பதில்** : திரு லாண்டன் கலெக்டராக இருக்கும் பொழுது சிவகங்கைச் சீமையைச் சேர்ந்த சின்ன மருது சேர்வைக்காரன் எனது நாட்டைக் கொள்ளையிட்டான். இராமநாதபுரம் சீமையிலுள்ள அபிராமம், பரமக்குடி சாலைக்கிராமம், இராஜசிங்க மங்கலம் ஆகிய ஊர்களைத் தீயிட்டு முக்கியமான குடிகளில் இருவரைக் கொன்றும், அவர்களது நெல்

For more ebooks vist: http://getmyebook.in/

பொதிகளைக் கடத்தியும் சென்றான். மேலும் 500 ஆட்களுடன் ஒரு நாள் இரவு 12 மணிக்கு அமில்தாரரைப் பிடித்துக் கட்டிப்போட்டு அவரது மனைவியின் காதை அறுத்து பணியாள் ஒருவரைக் கொன்று, அமில்தாரரைச் சிறைப்பிடித்துச் சென்றான். எனது வக்கீல் பாலாஜி ராவ் மூலமாக திரு லாண்டனுக்கு இந்த விபரங்களைத் தெரியப்படுத்தினேன். இத்தகைய அத்துமீறலை விசாரணை செய்யுமாறு கோரி ஐந்தாறு கடிதங்கள் அவருக்கு எழுதினேன். எனது சீமையிலுள்ள ஏரிகளுக்கு ஆற்றுநீர் போய்ச் சேராமல் வரத்துக்கால்களை அடைத்தும், அவைகளில் தடுப்பு ஏற்படுத்தியும் சிவகங்கைச் சேர்வைக்காரர் இடைஞ்சலை ஏற்படுத்தினனார்கள். இந்த விபரங்களை திரு லாண்டனுக்குத் தெரியப்படுத்தினதனால் அவர், ஒரு ஹரிக்காராவையும், ஒரு வில்லை சேவகரையும் அனுப்பி, ஆற்றுவெள்ளத்தைத் தடை செய்யாமலிருக்கு மாறு உத்தரவிட்டார். அந்த உத்தரவிற்கு மாறாக தண்ணிரைத் திறந்து விடுவதற்கு சின்ன மருது மறுத்துவிட்டான். இது சம்பந்தமாக திரு லாண்டன் அரசாங்கத்தாருக்கும் வருவாய் வாரியத்திற்கும் அறிக்கைகள் அனுப்பியிருப்பார். அவைகளைப் பரிசீலித்தால் இத்தகைய அக்கிரமங்களில் சின்ன மருது ஈடுபட்டு உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தி, கலெக்டரது உத்தரவைப் புறக் கணித்திருப்பதைப் புரிந்து கொள்ளலாம். இவைகளைப் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பது சரியல்ல என்பதை உணர்ந்த நான், சில ஆட்களை

For more ebooks vist: http://getmyebook.in/

அனுப்பி வரத்துக்கால்களின் தடுப்புகளை அகற்றுமாறு அனுப்பினேன். அப்பொழுது, சின்ன மருதுவும், வெள்ளை மருதுவும், ஒரு படையுடன் வந்ததால், இருதரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதனை நிறுத்துமாறு கவர்னர் எனக்கும், எதிரிக்கும் உத்தரவுகள் அனுப்பினார். ஆனால் வரத்துக்கால்கள் பல இன்று வரை மூடப்பட்டுத்தான் உள்ளன.

**மூன்றாவது** : கவர்னர் ஜெனரலது உத்தரவைப் பெற்றுக் கொண்ட பிறகும் ஒரு எதிரியைப் போல நடந்து கொண்டது.

**பதில்** : எந்த சந்தர்ப்பத்தில் அவ்விதம் நடந்து கொண்டேன் என்பதைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**நான்காவது** : கலெக்டர் உத்தரவுப்படி நடக்க மறுத்தது.

**பதில்** : கலெக்டர்களாக முன்னர் பணியாற்றிய, சுள்ளிவன், இர்வின், மக்லாய்டு, லாண்டன் ஆகியோர்களைப் புறக்கணித்ததாக புகார்கள் இல்லை. தொண்டியிலுள்ள தற்பொழுதைய கலெக்டரான பவுனி, அங்கு வந்து தன்னைச் சந்திக்க விருப்பம் தெரிவித்திருந்தார். நடைமுறைப் பழக்கங்களுக்கு புறம்பாக நான் நடந்து கொள்ளமுடியாது என்பதை அவருக்குத் தெரிவித்தேன். முந்தைய கலெக்டர்கள் எனது சீமையின் எல்லைக்கு வரும்பொழுது, அவரை அழைத்து வருவதற்கு எனது பிரதானியை அங்கு அனுப்பி வைப்பது வழக்கம். அவர்கள் இராமநாதபுரம் கோட்டைக்கு வரும்பொழுது நான் கோட்டைக்கு

For more ebooks visit: http://getmyebook.in/

வெளியே சென்று அவர்களை வரவேற்பதுதான் எங்களது சம்பிரதாயம். பவுனி எனது கோட்டைக்கு வருவதாக இருந்தால் அவரை அவ்விதம் சந்திப்பதற்கு சித்தமாக இருப்பதைத் தெரிவித்தேன். தனது சீமையில் உள்ள தொண்டியில், கலெக்டருக்காக சிவகங்கைப் பாளையக்காரர்கள் காத்திராத பொழுது, நான் அவருக்காக எவ்விதம் தொண்டிக்குச் செல்ல இயலும் என்று முடித்திருந்தார்.[9]

25-5-1795 அன்று இன்னொரு கடிதத்தையும்.[10] இராமநாதபுரம் மன்னர் கவர்னருக்கு அனுப்பி வைத்து, தமது பதவி நீக்கம், சிறை வாசம் ஆகியவைகளுக்கான காரணங்களைத் தெரிவிக்குமாறும், இயலுமானால் நான்கு ஐரோப்பியர்களை திருச்சிக்கு அனுப்பி வைத்து தன் முன்னால் விசாரணை நடத்துமாறும் கோரியிருந்தார். அதற்கும் பதில் இல்லை. அதிகாரச் செருக்கும் ஆணவப்போக்கும் மிகுந்த ஆங்கிலேயரிடம், இந்த நாட்டின் மண்ணிற்கு உரிய நியாயத்தையும், நேர்மையையும் எதிர்பார்ப்பதில் பலனில்லைதான். அத்துடன் ஆங்கிலேயர்கள் ஆட்சியாளர் அல்லவே. கீழை நாடுகளின் கலைப் பொருட்களையும், மிளகு, பாக்கு, சந்தனம் போன்ற இயற்கை வளங்களையும் அள்ளிச் சென்று, வணிகம் நடத்த வந்தவர்கள் தானே? தமிழ்நாட்டின் துரதிர்ஷ்டம் காரணமாக ஒற்றுமை இழந்த மன்னர்களை ஒடுக்குவதற்கு ஊழல் நிறைந்த முகம்மதலி நவாப்பிற்கு உறுதுணையாக வந்தவர்கள்தானே இந்தப் பரங்கிகள்!

For more ebooks vist: http://getmyebook.in/

வாய்ப்புகள் ஏற்படும் பொழுதெல்லாம், தங்களது படையின் வெடிமருந்துத் திறனைக் காண்பித்து, தமிழகத்தில் வீர மறவர்களின் தன்னாசுகளை அவர்கள் தமது உடமையாக்கிக் கொண்டார்கள். தங்களது இந்தக் குறிக்கோளுக்காக எல்லா விதமான தந்திர மந்திரங்களையும். உபாயங்களையும் உத்திகளையும், பழிக்கு எதிரான பண்புகளாகக் கையாண்டார்கள். அவர்களைப் பொறுத்த வரையில், பழி, பாவம், இழிவு எல்லாம் எண்ணிச் செயல்பட வேண்டிய பண்பாடுகள் அல்ல. ஆனால் இவர்களுக்கெல்லாம், மூல குருவாக கும்பெனியாரின் மிகச் சிறந்த பிரதிநிதியாக விளங்கிய வாரன்ஹேஸ்டிங்ஸ் வங்காளத்திலும், அயோத்தியிலும் செய்யாத அக்கிரமங்கள் இல்லை. லஞ்சம், ஊழல், சூழ்ச்சி, கொலை, கொள்ளை, கிழக்கிந்தியக் கும்பெனியின் பெயரால் நேர்மையுள்ளங் கொண்ட எட்மண்டு பர்க் பிரபு, இங்கிலாந்து பாராளுமன்றத்தில் வாரன்ஹேஸ்டிங்ஸ் மீது ஊழல் குற்றம் சாட்டினார். தமது குற்றச் சாட்டுக்களுக்கான ஆதாரங்களை எடுத்துக்காட்டி எட்டு ஆண்டுகள் திறமையான முறையில் மக்களுக்கு புரியும்படி புள்ளி விவரங்களுடன் நிருபித்தார். முடிவு ஹேஸ்டிங்ஸ் குற்றவாளியல்ல என்பது ஆகும். அந்தக் காலத்தில் ஜனநாயகத்தின் பெட்டகமென வர்ணிக்கப்பட்ட அந்தப் பாராளுமன்றத்தின் ஆதரவும் பாதுகாப்பும் இருக்கும் வரை அதற்குக் கட்டுப்பட்ட பணியாளர்கள் இந்திய நாட்டில் எதையும் சாதிக்கலாம் அல்லவா? மனிதாபிமானத்துக்கு அந்த நாட்டு சட்டங்களில் இடம் இல்லை போலும்!!

For more ebooks vist: http://getmyebook.in/

இராமநாதபுரம் கோட்டையைப் பிடித்து, சேதுபதி மன்னரை திருச்சிக் கோட்டையில் சிறையில் அடைத்ததுடன், கும்பெனியார் நிம்மதி கொள்ளவில்லை. மன்னருக்கு ஆதரவாக எங்காவது மக்கள் கிளர்ந்து எழுந்து விடுவார்களோ என்ற பயம் அவர்களுக்கு கோட்டையையும் கோட்டைக்கு வெளியே அமைந்துள்ள மறவர்களது நாடுகளையும், மிகவும் கவனமாகக் கண்காணித்து வந்தனர். காரணம், முதுகுளத்துார் வட்டத்திலுள்ள ஆப்பனுார், சித்திரங்குடி, பேரையூர் நாடுகளைச் சேர்ந்த மறவர்கள், மிகவும் கொடுரமானவர்கள். மேல் மலைநாட்டுக் கள்ளர்களை விட அவர்கள் பழி பாவத்திற்குப் பயப்படாத பழங்குடியினர். கி.பி. 1772-ல் சேதுபதி மன்னரைத் திருச்சியில் அடைத்து வைத்திருந்த பொழுது நவாப்பின் பணியாளர்களும், பரங்கியரும் அவர்களிடம் பட்டபாடு,[11] அவர்கள் நினைவில் நீங்காத பயத்தை ஏற்படுத்தியிருந்தது.

சேதுபதி அரசர் கொடுங்கோல் ஆட்சி புரிந்து மக்களைத் துன்புறுத்தி வந்ததாகவும், அன்றாடத் தேவைப் பொருள்களையும் வாணிபத்தில் ஏகபோக உரிமை கொண்டு, விலைவாசிகளை உயர்த்தி மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தியதாலும், கலெக்டரது உத்தரவுகளுக்குக் கீழ்ப்படியாததாலும், அரச பதவியிலிருந்து அவரை அகற்றி இருப்பதாக சென்னை கவர்னரது விளம்பரம் ஒன்று பொது மக்களுக்குத் தெரிவித்தது.[12] அதைத் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு முழு நிர்வாகத்தையும், நவாப்பிடமிருந்து கும்பெனியாரே

For more ebooks vist: http://getmyebook.in/

பெற்றிருப்பதாகவும், இராம நாதபுரம் பொது மக்களும், அலுவலர்களும், கும்பெனியாருக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென, நவாப்பின் தாக்கீது ஒன்று தெரிவித்தது.[13] தொடர்ந்து, கும்பெனியாருக்கு ஆதரவான ஒருவரை. இராமநாதபுரம் அரசு கட்டிலில் அமர்த்துவதற்கான முயற்சியும் நடைபெற்று வந்தது. சேதுபதி மன்னரது ஒரே வாரிசான, எட்டு வயது பெண்ணுக்கு அந்த உரிமையை வழங்குவதா? அல்லது பல மனுக்கள் மூலம் தன்னை இராமநாதபுரம் அரசியாக அங்கீகரிக்கும்படி வற்புறுத்தி வந்த மங்களேஸ்வரி நாச்சியாரை ஏற்றுக் கொள்ளுவதா? என்பதைப் பரிசீலித்து வந்தனர். இது சம்பந்தப்பட்ட நடைமுறைகள் என்ன என்பதையும், உள்ளூரிலும் வெளியூரிலும் இருந்த சில முக்கியமான குடிகளிடமும், இராமேஸ்வரம் பண்டாரம், உத்திரகோசமங்கை கோவில் குருக்கள், நயினார் கோயில் பட்டர் ஆகியோரது கருத்துக்களையும், தெரிந்து கவர்னருக்கு கலெக்டர் அறிக்கை செய்தார்.[14]

இந்தக் குழப்பத்தை தமக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டு, முத்துராமலிங்க சேதுபதி மன்னரது மைனர் பெண்தாம் பொருத்தமான வாரிசு என்பதை முத்திருளப்பபிள்ளை வலியுறுத்தி வந்தார். அவரது கோரிக்கையை தளபதி மார்ட்டின்சும், மேலிடத்திற்குப் பரிந்துரைத்தார். அந்தப் பெண் தகுந்த வயது வரும் வரை சீமை நிர்வாகத்தை ரீஜெண்டாக இருந்து கவனித்து வரலாம் என்பது முத்து இருளப்பபிள்ளையின் திட்டம். அதனைப் புரிந்து கொண்ட மங்களேஸ்வரி நாச்சியார், இராமநாதபுரம்

For more ebooks vist: http://getmyebook.in/

பட்டத்திற்கு தனக்கு மட்டும்தான் உரிமை உள்ளது என்றும், தமது கோரிக்கையின் நியாயத்தைப் பற்றி அண்டை நாடுகளான, புதுக்கோட்டை, தஞ்சை, திருவாங்கூர் மன்னர்களிடம் விசாரித்து தெரிந்து கொள்ளுமாறும் கும்பெனியாரை அவர் வற்புறுத்தி வந்தார். அத்துடன் முத்திருளப்ப பிள்ளையின் சூழ்ச்சிக்கு இணங்கிவிடக் கூடாது எனவும் கவர் னரை வலியுறுத்தி வந்தார்.[15]

இதற்கிடையில், முத்துராமலிங்க சேதுபதி மன்னர், பரங்கியரையும் நவாப்பையும் எதிர்த்து இறுதிப் போர் நடத்துவதற்காக தீட்டியிருந்த ரகசியத் திட்டத்தின் தடயங்களை கலெக்டரும் மார்ட்டின்ஸ்-ம் கண்டுபிடித்தனர். தமது ஆட்சியின் கடைசி மூன்று ஆண்டுகளில், சேதுபதி மன்னர் ஒரு முடிவுக்கு வந்திருந்தார். தமக்கும், சிவகங்கை அரசுக்கும், எதிரிகளாக இருந்த மருது சகோதரர்களை அழித்து, சிவகங்கையில் மறவரது பாரம்பரிய ஆட்சியை நிலை நிறுத்த வேண்டும். குறிப்பாக சிவகங்கை மன்னர் வழியினரான படைமாத்துர் கவுரி வல்லபத் தேவரை அங்கு அரசராக நியமிப்பது என்பதாகும். இந்த முயற்சியில் தனக்கு எதிராகவும், மருது சகோதரர்களுக்கு ஆதரவாகவும், செயல்பட்ட கும்பெனியாரையும் நவாப்பையும் ஒழித்துக் கட்டுவது. இராமநாதபுரம் சீமையையும், சிவகங்கைச் சீமையையும், முந்தைய மகோன்னத தன்னரசு நிலைக்கு கொண்டுவருதல் என்பது அவரது திட்டம்.

திட்டம் தெளிவானது தான். ஆனால் அதனை நிறைவேற்றத் தொடுக்கும் மாபாரத போருக்கு

For more ebooks vist: http://getmyebook.in/

பெருந்தொகை தேவைப்பட்டது. வெடிமருந்துச் சாதனங்களை, வெளி நாட்டாரிடமிருந்து பெற வேண்டியதாக இருந்தது. அப்பொழுது தென்னிந்திய அரசியலில், டச்சுக்காரர்களும், பிரெஞ்சுக்காரர்களும் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். டச்சுக்காரர்களின் செல்வாக்கு பெரும்பாலும் ஒடுங்கிய நிலையில் இருந்தது. பிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயருக்கு எதிரான சக்திகளையும், தேசாபிமான உணர்வுகளையும் ஊக்கி வந்தனர். என்றாலும் ஆங்கிலேயருக்கு எதிராக வியாபாரத்திலும், வேறு துறைகளிலும் விறுவிறுப்பாக பங்கு கொள்ளும் நிலையில் இல்லை. ஐரோப்பாவில் நடந்த எட்டு, ஆண்டுப் போரில் ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டது. கி. பி. 1790ல்-பிரெஞ்சுப் புரட்சி துவங்கி, முடியாட்சி ஒழிந்து மக்கள் சர்வாதிகார ஆட்சி ஏற்பட்டது. இந்தியா போன்ற கடல்கடந்த நாடுகளில் அவர்களது நிலையைப் பலவீனப்படுத்தியிருந்தது. ஏற்கனவே சேதுபதி மன்னர் கி.பி. 1787-ல் பிரெஞ்ச் நாட்டை அரசியல் ரீதியாக அணுகியிருந்தும். எவ்விதப் பலனும் கிட்டவில்லை.[16] என்றாலும், இத்தகைய இடர்ப்பாடுகளினால், மனம் தளராமல், தமது இலட்சியத்தை நிறைவேற்றியே தீருவது என்ற திட்டத்துடன் அவர் செயல்பட்டு வந்தார்.

அவருக்கு ஆதரவாக, திருவாங்கூர் மன்னரும், எட்டையாபுரம், சிவகிரி ஆகிய திருநெல்வேலிப் பாளையக்காரர்களும் இருந்துவந்தனர். அந்த நாட்டுப் போர்வீரர்கள் இராமநாதபுரம் பேட்டையில்

For more ebooks vist: http://getmyebook.in/

நிலைகொண்டிருந்ததை ஏற்கெனவே கலெக்டர், மெக்லாய்டு, சென்னை கவர்னருக்குத் தெரிவித்திருந்தார்.[17] அதே போன்று, இராமநாதபுரத்திற்கு அண்மையிலிருந்த திருப்புல்லாணி, பரமக்குடி, பள்ளிமடம் கோட்டைகளில் மறவர் அணிகள் பலப்படுத்தப்பட்டு வந்ததை, தளபதி மார்ட்டின்சின் அறிக்கையும் தெரிவித்தது.[18] மேலும் இராமநாதபுரத்தில் புதிதாக குதிரைப்படை அணி ஒன்றும் துவக்கப்பட்டு இருந்தன.[19]

சேதுபதி மன்னர் திடீரென கும்பெனிப் படையினால் குழப்பட்டு சிறைப்பிடிக்கப்பட்டதால், அவரது இராணுவத் திட்டத்தை எளிதில் தகர்த்து விட முடிந்தது. மேலும். தங்களுக்கு மரண பூமியாக விளங்க வேண்டிய மறவர் பூமியை தான பூமியாக நவாப்பிடமிருந்து பெற்றனர். இராணுவ நடவடிக்கைகளுக்கென தனியாக அரண்மனையில் சேதுபதி அரசர் சேமித்து வைத்திருந்த பெருந்தொகையை புதையல் எனக்கூறி கைப்பற்றி விட்டனர். அத்துடன் வங்காளத்துடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பினால், மன்னருக்கு அங்குள்ள சொத்துக்களையும் கைப்பற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தனர். மறவர் சீமைக்கு தென்மேற்கே உள்ள கயத்தாரில் இருந்து பரங்கியரது அணி வடகிழக்காக முன்னேறி இராமநாதபுரம் கோட்டையைக் கைப்பற்றியதால், தெற்கே திருப்புல்லாணியிலும், மேற்கே பரமக் குடியிலும், நிலைகொண்டிருந்த படை அணிகளுடன் தொடர்பு இல்லாது செயல் இழந்து விட்டன.

For more ebooks vist: http://getmyebook.in/

இதற்கெல்லாம் மேலாக சேதுபதி மன்னர் தமது ரகசிய திட்டத்தின் ஒரு பகுதியாக கீழைக்காட்டில் நிறுவியிருந்த பீரங்கி உற்பத்தி சாலையையும் கண்டுபிடித்து அதனைக் கும்பெனியார் கைப்பற்றி விட்டனர்.[20] இந்த உற்பத்திசாலை இராமநாதபுரம் கோட்டைக்கு பத்துக்கல் தொலைவில் நெருக்கமான காட்டுப் பகுதிக்குள் அமைக்கப்பட்டிருந்தது. இந்த உற்பத்தி சாலைக்கு எந்த நாடு உதவியது என்பது தெளிவாகத் தெரியவில்லை. பெரும்பாலும், டச்சுக்காரர்கள்தான் இந்தத் திட்டத்திற்கு உதவியிருக்க வேண்டும் என ஊகிக்கப்படுகிறது. ஏனெனில், முதன்முறையாக கி.பி. 1722-ல் இராமநாதபுரத்தில் பீரங்கிப் படை அமைப்பதற்கு அவர்கள்தான் உதவியிருந்தார்கள்.[21] அடுத்து கி.பி. 1757-லும் கி.பி. 1767-லும் வணிக ஒப்பந்தங்கள் மூலம் டச்சுக்காரர்கள் தான் மறவர் சீமையுடன் நெருங்கிய தொடர்புகள் வைத்திருந்தனர். மன்னரது இராணுவத் திட்டம் முழுவதும் காகிதத் திட்டமாக்கப்பட்டு விட்டது! அவரது சுதந்திர எண்ணங்கள் இழைந்த சிந்தனைகள், முனைந்து துவக்கிய முயற்சிகள், முழுமை பெறாத கனவாகி விட்டன!

எதிர்காலத்தைப்பற்றிய நம்பிக்கை எதுவும் இல்லாத நிலையில், அவரது திருச்சி சிறைவாழ்க்கை சிறிது சிறிதாக மாமூல் வாழ்க்கையாகிக் கொண்டிருந்தது. இராமநாதபுரம் கோட்டையிலிருந்து வந்து செல்லும் இவரது பணியாட்கள் அவரது சீமை பற்றிய செயல்களை அப்பொழுதைக்கப்பொழுது தெரிவித்து வந்தனர். அவரது தனிமையையும் வருத்தத்தையும்,

For more ebooks vist: http://getmyebook.in/

ஒரளவு தணிக்கும் வாய்ப்பாக இந்தத் தொடர்புகள் இருந்து வந்தன. இவையும் சில சமயங்களில் அவருடைய ஆற்றொணாத தன்மையையும் அளவு கடந்த அவலத்தையும் மிகுதிப்படுத்தும் கருவியாகவும் மாறின. குறிப்பாக அவரது தமக்கை மங்கலேஸ்வரி நாச்சியார், அவரது இக்கட்டான நிலைக்கு அணுவளவுகூட அனுதாபம் கொள்ளாமல் அவரது அரசுக்கட்டிலுக்கு முயற்சித்து வருவது, இராமநாதபுரம் அரசுக்குச் சொந்த மான பல்லாயிரக்கணக்கான பணத்தை விழுங்கிவிட்ட முன்னாள் பிரதானி முத்திருளப்பபிள்ளையை சீமைக்கனுப்பி, நேர் செய்து கொடுக்க வலியுறுத்துமாறு கும்பெனியாரை கேட்டு அலுத்துப்போன நிலையில், மீண்டும் அவரையே இராமநாதபுரம் பேஷக்காரராக நியமனம் செய்திருப்பது ஆகிய செய்திகள்[22] சேதுபதி மன்னருக்கு பலவிதத்திலும் அதிர்ச்சியை அளித்தன. மறவர் சீமையைச் சூழ்ந்துள்ள இந்தச் சோதனையை எவ்விதம் நீக்குவது? அவற்றிற்கான வழிவகைகள் எவை? என்ற வினாக்கள் சேதுபதி மன்னரது சிந்தனையில் அடிக்கடி சலனத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தன.

1. ↑ Revenue Consultations, 62 A, 24-3-1795, p. 1118
2. ↑ Revenue consultations, Vol. 62, 15-3-1795. pp. 1275-76
3. ↑ Revenue consultations, Vol. 61, 18-2–1795, pp. 452-59
4. ↑ Revenue consultations, Vol. 64 A, 1795, p. 2278
5. ↑ Revenue consultation, Vol. 62, 15-3-1795, p. 1277. Ibid., Vol. 63, 12-4-1795, pp. 1800-801

For more ebooks vist: http://getmyebook.in/

6. ↑ Revenue consultations, Vol. 62, 15-3-1795, pp. 1260-79
7. ↑ Revenue consultations, Vol. 63 B, 12-4-1795, pp. 1798 1802
8. ↑ Revenue consultations, Vol. 63 B, 21-4-1795, pp. 1868-78
9. ↑ Revenue consultations. vol. 62B。 25–5-1795, pp. 2040-43
10. ↑ Edmund Burke, Impeach ment on Warren Hastings (1908), pp. 14-15
11. ↑ Madurai Collectorate Records, Vol. 1157, 6–5–1797, pp. 14-15
12. ↑ Revenue consultation, Vol. 63 B, 12-5-1795
13. ↑ Military Consultation, Vol. 193 A, 4–3-1795
14. ↑ Military Consultations, Vol. 179, 25-2-1795
15. ↑ Revenue Consultations, Vol. 61, 18-2-1795, pp. 452-59
16. ↑ Kathirvel, S., Dr., History of Marawas (1972), p. 182
17. ↑ Fort St. George Diary consultations, 21-6-1795, p.2757
18. ↑ M. C. Vol. 188 A, 21-7-1794, pp. 3302–03
19. ↑ Diary consultations of Fort St. George, Letter dated 22-6-1794 from collection Madras
20. ↑ Military consultations, Vol. 190, 25–2—1795, pp. 512-19
21. ↑ Letter dated 20–2–1722 of Dutch Governor in Ceylon quoted by her. S. Kadirvelu
22. ↑ Revenue consultations, Vol. 62, 25-2-1795, pp. 1060-62

---

For more ebooks vist: http://getmyebook.in/

## 10
## புரட்சிப் பாதையில்

மறவர் சீமையில், மன்னர் இல்லாத, கும்பெனியாரது ஆட்சி நடைபெற்று வந்தது. சேதுபதி மன்னரை சிறையில் அடைத்து விட்டதால், நாட்டின் நலிவுகள் அனைத்தும் நீங்கிவிட்டது போன்ற நாடகம் நடத்தப்பட்டது. கடந்த ஆண்டு வறட்சியின் பொழுது பஞ்சம் பிழைக்க தஞ்சை சென்ற மக்கள் அனைவரும் திரும்பி வந்து விட்டதாகவும் சம்பிரதிகளும், மணியக்காரர்களும் தங்களது கடமையை மிகுந்த விசுவாசத்துடன் நிறைவேற்றி வருவதாகவும் இவை எல்லாம் மகத்தான கும்பெனியாரது ஆட்சியில் ஏற்பட்ட அற்புதங்கள் என தளபதி மார்ட்டின்ஸ் பாராட்ட கலெக்டர் அவைகளைத் தமது அறிக்கையின் மூலமாக கவர்னருக்கு அனுப்பி வைத்தார். சீமை பேஷ்கார் முத்திருளப்ப பிள்ளை கும்பெனியாரது அடியார்க்கும் அடியாராக பணியாற்றி வந்தார். கும்பெனியாருக்கு வரவேண்டிய வரிபாக்கிகள் அனைத்தையும் மிகுந்த திறமையுடன் வசூலித்து வந்தார். மூன்று ஆண்டுகள் ஓடிவிட்டன.

கி.பி. 1797-ம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதி வாரம், மறவர் சீமையின் தெற்குப் பகுதியில் ஒரு சலசலப்பு ஏற்பட்டது. தொடர்ந்து வரவிருக்கும் சூறாவளி ஒன்றின் முன் அறிவிப்பு போல குடிமக்கள் கிளர்ந்து எழுந்தனர். வரி செலுத்துவதற்கு மறுத்து வந்தனர்.[1] பாஞ்சைப் பகுதியின் பாளையக்காரர் வீரபாண்டிய கட்டபொம்மு இந்தக் கிளர்ச்சியை ஊக்குவித்து

For more ebooks vist: http://getmyebook.in/

வந்தார். இன்னும் சில பாளையக்காரர்களும் கிளர்ச்சிக்காரர்களுக்கு ஆதரவளித்து கும்பெனியாரது பொறுப்பில் இருந்து வந்த சர்க்கார் கிராமங்களைக் கொள்ளையிட்டு வந்தனர். ஆனால் புதிதாகப் பதவி ஏற்ற கலெக்டர் ஜாக்சன் கிளர்ச்சியை மேலும் பரவவிடாமல் ஒடுக்கினார்.[2] நாளடைவில் ஜாக்சனின் நிர்வாகம் ஒருபுறம் மக்களிடத்தில் இருந்தும் மற்றொருபுறம் அரசாங்கத்திடமிருந்தும் வெறுப்பையும் பழியையும் பெற்றது. வீரபாண்டிய கட்டபொம்முவை இராமநாதபுரம் அரண்மனையில் அவர் நடத்தியவிதம்,[3] தஞ்சைச் சீமை தானியங்களை மறவர் சீமையில் இறக்குமதி செய்ய மறுத்து, பரங்கியரின் வியாபாரத்துக்கு ஒத்துழைக்கத் தவறியது.[4] கும்பெனியாருக்கு கிஸ்தியாக வசூலித்த தானியங்களை அவரும் அவரது துபாஷ் ரெங்கப்பிள்ளையும் சேர்ந்து விற்று பல ஆயிரக்கணக்கான ரூபாய்களைக் கையாடல் செய்த ஊழல்,[5] ஆகிய காரணங்களினால் ஜாக்சன் பதவி விலகிச் சென்றார். அவரைத் தொடர்ந்து லூஸிங்டன் பதவி ஏற்றார்.[6]

இதற்கிடையில் மறவர் சீமையை தமது உடைமையாக மாற்றிய பிறகு, கும்பெனியார் தென்பகுதியில் உள்ள எந்தப் பகுதியையும் பற்றி அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. அவர்களது உள்ளத்தில் நிறைந்துவிட்ட ஆதிக்க வெறியை கி. பி. 1794-க்கும் கி. பி. 1795-க்கும் இடைப்பட்ட காலநடவடிக்கைகள் பிரதிபலித்தன. மணப்பாறை,

For more ebooks vist: http://getmyebook.in/

திண்டுக்கல் பகுதிகளில் அவர்களது அட்டகாசம் முதலில் துவங்கியது. லெட்சுமி நாயக்கர் என்ற மனப்பாறை பாளையக்காரரது பரம்பரை உரிமையை ஒழித்தனர்.[7] புனிதத்தலமாகிய பழனிக்கோயிலின் பரம்பரை அறங்காவலரும் பழனி பாளையத்தின் தலைவருமான பாளையக்காரரை திண்டுக்கல் கோட்டைச் சிறையில் தள்ளியதுடன் அவரது பதவியையும் பறித்தனர்.[8] எர்ரமக்கோட்டை பாளையக்காரரை அவர்கள் பயமுறுத்தியதில் அவருக்கு பைத்தியமே பிடித்து விட்டது. அந்த பாளையமும் கும்பெனியாரது சொத்தாகியது. இதனைத் தொடர்ந்து மாம்பாறை பாளையத்துக்கும் குமாரவாடி பாளையத்துக்கும் இதே கதி ஏற்பட்டன.[9]

திண்டுக்கல் சீமையில் உள்ள எப்ரவாடு, சங்கம்பட்டி, மாத்துர் பாளையங்களும் கி.பி. 1796-ல் பறிக்கப்பட்டு கும்பெனியாரது உடமையாக்கப்பட்டன.[10] மதுரைச் சீமையில் உள்ள சாப்டுர் பாளையக்காரர் காமைய நாயக்கரும், செந்நெல்குடி பாளையக்காரர்களும், தங்கள் பாளையங்களை இழந்தனர்.[11] அடுத்த இரண்டு ஆண்டுகளில் நெல்லைச் சீமையில் உள்ள பாஞ்சை, காடல்குடி, குளத்துர், நாகலாபுரம், ஏழாயிரம் பண்ணை ஆகிய பாளையங்களும், கும்பெனியாருக்குச் சொந்த மாக்கப்பட்டன.[12] தமிழகத்தில் மட்டுமல்லாமல் அண்டை மாநிலமான ஆந்திரம், கன்னடம், கேரளம் ஆகிய பகுதிகளிலும் இத்தகைய நிலையை கும்பெனியார் பின்பற்றி வந்ததை வரலாறு சொல்லுகின்றன. பாளையக்காரர்களது

For more ebooks vist: http://getmyebook.in/

பாளையங்களைப் பிடுங்கி, தலைமுறை தலைமுறையாக அவர்கள் பேணிவந்த பதவிகளைப் பறித்து, அவர்களது கோட்டைகளையும் தரைமட்டமாக்கினர். சொந்தப் பாதுகாப்புக்கு அவர்கள் படை வீரர்களை வைத்துக் கொள்வதைக்கூட தடை செய்தனர்.[13] அவர்களுக்கு ஆண்டுதோறும் குடிகள் செலுத்திவந்த தேச காவல் காணிக்கைகளையும் பெற்றுக் கொள்ள இயலாது செய்து விட்டனர்.[14] குடிமக்கள் பாளையக்காரர்களுக்கும், நாட்டாண்மைக்காரர்களுக்கும் தாமாகவே உழைத்துக் கொடுக்கும் முறையையும் ஒழித்தனர்.

கி.பி. 1799-ல் கும்பெனியார் வெளியிட்ட உத்தரவில் பொதுமக்கள் ஆண்டுதோறும் பாளையக்காரர்களுக்கு அளித்து,வந்த தேசகாவல் தொகையை நேரடியாக கும்பெனியாரது அலுவலர்களிடம் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டது.[15] இதனை நடைமுறைப்படுத்த தங்களது ஆயுத பலத்தைக் காண்பித்து பயமுறுத்தி வந்தார்.[16] அடுத்து தீர்வை வசூலிப்பதிலும் தங்களது கைவரிசையைக் காட்டி வந்தனர். மைசூர் ராஜ்யத்தில் திப்பு சுல்தானும் மறவர் சீமையில் முத்துராமலிங்க சேதுபதியும் முன்னர் குடிகளைக் கொடுமைப்படுத்தி வரி வசூலித்ததாக பறைசாற்றினர். ஆனால் அவர்கள் அந்தப் பகுதிகளை தமது உடைமையாக்கிய பிறகு மைசூர், சேலம் பகுதிகளில் திப்பு சுல்தான் விதித்த தீர்வையை விட 93 சதவீதம் கூடுதலாகவும் கோவையில் 118 சதவீதம் கூடுதலாகவும் தீர்வை விதித்து வசூலித்தனர். இத்தகைய இரக்கமற்ற

For more ebooks vist: http://getmyebook.in/

முறையில் குடிகளை கசக்கிப் பிழிந்து கொடிய வரிவசூல் செய்த கலெக்டர் மன்றோவையும், கலெக்டர் மக்லாய்டையும் கும்பெனியாரது வருமானத்தைப் பெருக்கியதற்காக கும்பெனி கவர்னர் பாராட்டுகள் தெரிவித்தார்.[17] அவர்களது முன் மாதிரியைப் பின்பற்றி திண்டுக்கல் சீமை கலெக்டர் குர்திஷ், கம்பம், கூடலூர், பழனிப் பகுதிகளில் வரிகளை உயர்த்தி வசூலித்தார்.[18] கூடலூரில் மட்டும் விதிப்பு 96 சதவீதம் உயர்வு பெற்றது. நெல்லைச் சீமை கலெக்டர் பாளையக்காரர்களிடமிருந்து பறித்துச் சேர்த்த பாளையங்களில் பாளையக்காரர்கள் வசூலித்த தொகையைவிட 117 சதவீதம் கூடுதலாக வரி வசூலித்தார்.[19]

மறவர் சீமையில் 739 கிராமங்களின் மகசூல் விளைச்சல் கி.பி. 1797-98ல் ஸ்டார்பக்கோடா 53,500 என மதிப்பிடப்பட்டது. ஆனால் அந்த கிராமங்களுக்கு வரியாக ஸ்டார் பக்கோடா 71,629 என விதிக்கப்பட்டது. இதனால் குடிகள் விளைவித்த மகசூல் அனைத்தையும், கும்பெனியார் வசூலித்ததுடன் எஞ்சிய வரித்தொகையை எவ்விதம் வசூலிப்பது என்ற சிந்தனையில் முனைந்தனர். உழவு மாடுகள், தட்டுமுட்டுச் சாமான்கள் எதையும் விட்டு வைக்கவில்லை. உயிர் வாழ்வதற்குத் தேவையான விளைச்சலில் ஒரு மணிகூட உழவர்களுக்குக் கிடைக்கவில்லை. பசிக்கொடுமையால் மிகுதியான மக்கள் மடிந்தனர். பலர் அந்நியப் பகுதிகளுக்கு ஓடி உயிர் பிழைத்தனர்.[20]

For more ebooks vist: http://getmyebook.in/

வெயிலையும் குளிரையும் தாங்கி விவசாயம் செய்த விவசாயிகளின் இந்த அவல நிலையைவிட, நெசவாளர்களின் நிலை இன்னும் மோசமாக இருந்தது. கெடுபிடி வசூல், குழப்பம், கிளர்ச்சி ஆகிய காரணங்களினால் நெசவு உற்பத்தியும், விற்பனையும் பாதிக்கப்பட்டன. கும்பெனியார் பல ஊர்களில் நெசவாளிகளை பலவந்தப்படுத்தி, அவர்கள் உற்பத்தி செய்த துணிகளை மிகக் குறைந்த விலைக்கு எடுத்துக் கொண்டனர். இன்னும் சில ஊர்களில் உற்பத்தி செய்த துணி மடி ஒவ்வொன்றிலும் தங்களது முத்திரையைப் பதிவு செய்து அதற்கான தீர்வை ஒன்றையும் கும்பெனியார் வசூல் செய்தனர். இந்த முத்திரை வரியைச் செலுத்தினால்தான் நெசவாளிகள் தங்களது துணியை விற்கலாமென்ற நிலை ஏற்பட்டது. உற்பத்தி செய்த எல்லா மடிகளுக்கும் தீர்வை செலுத்தியதைத் தெரிந்து கொள்வதற்காக ஆங்காங்கு உள்ள நெசவாளர்களது இல்லங்களில் திடீரென நுழைந்து அவர்களது துணிகளைக் கைப்பற்றினார்.[21] இத்தகைய காரணங்களினால் நெசவுத்தொழில் நசித்ததுடன் வெளியே விற்பனை செய்ய முடியாத தேக்க நிலையும் தோன்றி யது.[22] கும்பெனியாரைத் தவிர துணிகளைப் பெருமளவில் வாங்குவதற்கு தனியார்யாரும் அப்பொழுது தயாராக இல்லை. துணி வியாபாரிகள் தொடர்ந்து தொழில் நடத்தத் தயங்கினர். [23]

மேலும் மன்னர்களது செங்கோலுக்குச் சான்றாக விளங்கி, மாதம் மும்மாரி பெய்த வானம் கி. பி. 1798-ல் பொய்த்தது. நெடுங்கடலும் நீர் சுருங்கிய கொடும்

For more ebooks vist: http://getmyebook.in/

வறட்சி. பசுமை என்ற வண்ண ஆடையை பூமித்தாய் களைந்து எறிந்து விட்டது போன்று கண்ணைக் கெடுக்கும் காட்சி.[24]

பஞ்சம் பிழைப்பதற்காக மக்கள் கூட்டம் கூட்டமாக தஞ்சைத் தரணிக்கு விரைந்தனர். வான் பொய்ப்பினும் தான் பொய்க்காதே காவேரிப் படுகையிலும் தானியங்கள் மறைந்து போயின.[25] இத்தகைய கடுமையான பஞ்ச காலத்தில் பொதுமக்களைப் பற்றிய கவலை சிறிது கூட இல்லாமல் ஆளவந்தார்களான கும்பெனி நிர்வாகம் செயல்பட்டது. தங்களது படை அணிகளுக்கு தேவையான தானியங்களை மட்டும் வட மாநிலங்களிலிருந்து பெற்று இருப்பு வைத்துக்கொண்டனர்.[26] ஏற்கெனவே கும்பெனியாரும் இதர வெளிநாட்டாரும் குடிகளிடம் வரியாக அல்லது கிரையமாகப் பெற்று ஆங்காங்கு இருப்பு வைத்திருந்த தானியங்களை மிகவும் கூடுதலான விலைக்கு விற்று, கொள்ளை லாபம் சம்பாதித்தனர். இந்தக் காரணத்தினால் பக்கத்து பகுதியிலிருந்து தானியங்களை இறக்குமதி செய்வதற்கு தடை விதித்தனர். இதனையும் மீறி தலைச் சுமை யாக சொந்த உபயோகத்துக்கு வாங்கி வந்த தானியப் பொதிகளை பறிமுதல் செய்தனர். அல்லது அவைகளுக்கு மிகுந்த வரி விதித்தனர்.[27]

மற்றும் சில வியாபாரிகள் தஞ்சை, புதுவை, இலங்கை போன்ற கடற்கரைப் பகுதியிலிருந்து தோணிகள் மூலம் மறவர் சீமைக்குள் தானியங்களை இறக்குமதி செய்வதை கும்பெனிக் கலெக்டர்கள்

For more ebooks vist: http://getmyebook.in/

பவுனியும், ஜாக்சனும் தடுத்தனர். பரங்கியரது சேமிப்புக் கிடங்குகளில் பல ஆண்டுகளாக இருப்பில் இருந்து உளுத்துப்போன தானியங்களுக்கு கிராக்கியும், கூடுதல் விலையும் கிடைப்பதற்காக.[28] அத்துடன் விவசாயத் தொழிலுக்கு மூலதனமான காளை மாடுகள் அனைத்தையும் கைப்பற்றி மைசூர்ப்போரில் பாரவண்டிகள் இழுவைக்காக அனுப்பினர்.[29] மழை பெய்தால் கூட விவசாயம் செய்ய முடியாத நிலையைத் தோற்றுவித்தனர்.

இங்ஙனம் மறவர் சீமையின் கிராமப் பொருளாதாரத்தை அழித்து, வளமையாகப் பின்பற்றப்பட்ட மரபுகளையும், பழக்க வழக்கங்களையும் ஒழித்து, மேனாட்டு தண்டனை அடிப்படையிலான சமூக நியதிகளை நிறுவ முயன்றனர். இத்தகைய செயல்களை ஏற்கெனவே கும்பெனித் தளபதி புல்லர்ட்டன் கடுமையாக விமர்சித்திருந்தபொழுதும்[30] அந்தக் கொள்கையை மாற்றம் இல்லாமல் அப்படியே கடைப்பிடித்து வந்தனர். அதனால் விளையும் எத்தகைய பிரதிபலிப்புகளையும் சமாளித்துவிடலா மென்பது அவர்களது தீர்க்கமான முடிவாக இருந்து வந்தது. பஞ்சத்தாலும் பசியாலும் பரிதவித்துக் கொண்டிருந்த மக்கள் கும்பெனியாருக்கு எதிரான மனிதாபிமான உணர்வுகளால் உந்தப்பட்டு எழுச்சிபெறும் நிலை அப்பொழுது உருவாகிக் கொண்டிருந்தது.

கி.பி. 1799-ம் ஆண்டு ஏப்ரல் 24-ந் தேதி காலை, அமைதியைக் குலைத்து முதுகுளத்தூரில்

For more ebooks vist: http://getmyebook.in/

துப்பாக்கிகள் படபடக்கும் முசை கேட்டது. சர்க்கார் கச்சேரி முன்னர் வேலும் வாளும் நாட்டுத் துப்பாக்கிகளும் பிடித்த மறவர் கூட்டம் ஒன்று திரண்டு நின்றது. கச்சேரிக்குள்ளிருந்த அமில்தார் அடித்து இழுத்து வரப்பட்டார். அங்கு காவலில் இருந்த கும்பெனி சிப்பாய்களது துப்பாக்கிகள் அனைத்தும் பறிக்கப்பட்டன. மறுத்த சிப்பாய்களுக்கு உதை விழுந்தது. அடுத்து அபிராமம் கச்சேரியைத் நாக்கி அங்கும் ஆயுதங்களைக் கைப்பற்றினர். அமில்தாரை அழைத்துச் சென்று கும்பெனியாரது துணிக் கிடங்கை திறந்து விடுமாறு பலவந்தப் படுத்தினர். கூடி நின்ற மக்கள் சர்க்கார்த் துணிகளை கொள்ளையிட்டு அள்ளிச் சென்றனர். இதனைப் போன்றே கமுதிக் கச்சேரியிலும் ஆயுதங்களும் தானியக்கிடங்கும் கைபபறறபபடடன.[31]

பொது மக்கள் கும்பெனியாருக்கும் எதிராக கிளர்ந்து எழுந்து வன்முறையில் ஈடுபட்ட இத்தகைய நிகழ்ச்சி, அன்று முதுகுளத்துார் தொடங்கி அபிராமம், கமுதி ஆகிய ஊர்களில் தொடர்ந்து நடைபெற்றன. இந்தக் கிளர்ச்சியை தலைமை தாங்கி நடத்தியவர், மயிலப்பன் என்ற குடிமகன் ஆவார்.

அவரது அறிவுரைப்படி குடிமக்கள் கும்பெனியாருக்கு செலுத்த வேண்டிய தீர்வைப் பணத்தைச் செலுத்த மறுத்தனர். இந்த நிகழ்ச்சி ஒரு பெரும் இயக்கமாக மறவர் சீமையில் உருவெடுத்தது. எண்ணற்ற கிராம மக்கள் இந்த இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.[32] மேலும் அவர்களது காணிகளை மேனாட்டு முறைப்படி அளவிடுவதற்கு

For more ebooks vist: http://getmyebook.in/

(சர்வே) ஈடுபட்டுள்ள கும்பெனியார் ஊழியர்கள் அவர்களது கடமைகளைச் செய்யவொட்டாமல் தடுத்தனர். அவர்களுக்கு இடைஞ் சல்களை ஏற்படுத்தினர்.[33]

இந்தக் கிளர்ச்சிகளின் பாதிப்புபற்றி மதுரைச் சீமை வரலாற்றில் இவ்விதம் குறிப்பிடப் பட்டுள்ளது.[34]

"...மறவர் சீமையின் வருமானம் பெருத்த அளவு குறைந்தது. கி.பி. 1795-96-ம் ஆண்டில் ரூ. 1,31,207 ஆகவும், கி.பி. 1796-97-ம் ஆண்டில் ரூ.1,33,391 ஆகவும் இருந்த வருமானம், கி.பி. 1797-98-ல் ரூ. 94882/-ஆகவும் 1798-99-ல் ரூ. 65,127/ஆகவும் குறைந்துவிட்டது. சிறையில் உள்ள சேதுபதி மன்னரை மீண்டும் பதவியில் இருத்த வேண்டும் என்ற இலட்சியத்தில், 23-4-1797 ல் துவக்கப்பட்டது போன்ற புதிய கிளர்ச்சியொன்று கும்பெனியாருக்கு எதிராக உருப்பெறுவது போல தோன்றியது. பக்கத்துச் சீமைகளிலும் பெரும் குழப்பம் நிலவின. பொதுவாக, தென்னகத்தில் அப்பொழுது ஏற்பட்டு இருந்த பாளையக்காரர்களது கிளர்ச்சியின் வாடை, இராமநாதபுரம் சீமையைப் பாதித்துள்ளது...'

மயிலப்பன் ஏற்கெனவே இராமனாதபுரம் அரசில் சேர்வைக்காரராக இருந்தவர். முதுகுளத்துரை அடுத்த சித்திரங் குடியில் பிறந்த விவசாயி. அன்று இந்த சிற்றுார் வீரத்தின் விளைநிலமாக விளங்கி வந்தது. கி.பி. 1772-ல் கும்பெனியாரும் நவாப்பும் கூட்டாக இராமனாதபுரத்தைப் பிடித்த பொழுது நிகழ்ந்த போரிலும், கி.பி. 1781-ல் மாப்பிள்ளைத் தேவன் தலைமையில் ஆன புரட்சி அணியுடன் இளைஞர்

For more ebooks vist: http://getmyebook.in/

முத்துராமலிங்கம் போரிட்ட_ பொழுதும், தங்கள் உயிரை காணிக்கையாகத் தந்து, மறவர் சீமையின் மாண்பை உயர்த்யவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் இந்த சித்திரங்குடி ஊரினர். இந்தக் கிளர்ச்சிக்காரர்களுக்கு உதவியாக காடல்குடி பாளையக்காரரும் தளபதி மயிலப்பனது உதவிக்கு முன்னுறு வீரர்களை அனுப்பி வைத்ததுடன், சர்க்கார் சீமைக் கிராமங்களில் தமது ஆட்களுடன் அவர் கொள்கைகளை மேற்கொண்டார்.[35][36] 'பாஞ்சைப் பாளையக்காரரது ஆட்கள் கீழக்கரை வட்டத்தில் புகுந்து பயங்கரமான அட்டுழியங்களை நடத்தினர்.[37] நாகலாபுரம், எட்டையாபுரம் பாளையக்காரர்களும், இந்தக் கிளர்ச்சியில் பங்கு கொண்டனர் என்பதை தளபதி டிக்போரினது கடிதங்களிலிருந்து தெரிய வருகிறது. நாகலாபுரம், பாளையக்காரரது தம்பி சின்ன நாயக்கன், முன்னுாறு வீரருடன் பள்ளி மடம் பகுதிக்குள் நுழைந்து அருப்புக்கோட்டையைக் கொள்ளையிட்டார். அவரிடம் இருந்த ஜிங்கால் என்ற பீரங்கியின் தாக்குதல் பலமான சேதத்தை ஏற்படுத்தியது.[38] சாத்துார் பாளையக்காரரது சிப்பந்தி வீரர்கள் சாத்துார் தாசில்தாரைத் தாக்கினர்.[39] பாஞ்சை, நாகலாபுரம், வீரர்கள் சிவகிரியிலிருந்து இராமனாதபுரம் கோட்டைக்கு சென்று கொண்டிருந்த கிஸ்திப் பண வண்டி பாதுகாப்பு அணியைத் தாக்கி, சர்க்கார் பணப்பெட்டிகளைக் கொள்ளையிட முயற்சித்தனர்.[40] மறவர் சீமையின் தெற்குப்

For more ebooks vist: http://getmyebook.in/

பகுதியின் நிலைமை இவ்விதம் மிகுந்த சீர்கேடு அடைந்திருந்தது.

அங்குள்ள கும்பெனியாருக்கு எவ்விதம் உதவி அனுப்புவது என்பது புரியாமல், கலெக்டர் லூவிங்டன் தவித்துக் கொண்டிருந்தார். அனுப்பப்படும் வெடிமருந்து பொதிகளும் ஆயுதங்களும், கிளர்ச்சிக்காரர்கள் கையில் கிடைத்து விட்டால் எரிகின்ற கொள்ளியில் எண்ணெய் சேர்ந்தது போலல்லவா ஆகிவிடும்? கிளர்ச்சிக்காரர்கள் கை ஓங்கியிருந்தது. இதனைச் சமாளிக்க சிவகெங்கையிலிருந்து மருது சகோதரர்களின் வீரர்களை வரவழைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளில் கலெக்டர் பயன்படுத்தினார். மேலும், கூடுதலாக உதவி தேவைப்பட்டதால், இராணுவ அணி ஒன்றையும், நூறு குதிரை வீரர்களையும் அனுப்பி வைக்குமாறு கலெக்டர் மேலிடத்திற்கு அவசர அறிக்கை அனுப்பி வைத்தார்.[41] இதற்கிடையில் கிளர்ச்சிக் காரர்கள் இன்னொரு துணிகரமான முயற்சி ஒன்றை மேற்கொண்டனர். இராமனாதபுரத்தில் கலெக்டர் தங்கி இருந்த வீட்டின் மீது தாக்குதல் தொடுத்தனர். தற்செயலாக அவர் உயிர் தப்பினார்.[42] இந்தக் கிளர்ச்சியின் விவரம் பற்றி கலெக்டர் லூவிங்டன் பாளையங்கோட்டையிலுள்ள தளபதி பானர் மேனுக்கு தகவல் அனுப்பியதுடன் இராணுவ உதவி அனுப்புமாறு கோரினார்.[43] மேலும் கிளர்ச்சி பற்றிய விவரங்களை விளக்கமான அறிக்கை ஒன்றில் சென்னையில் உள்ள கவர்னருக்கு தெரிவித்தார்.[44]

For more ebooks vist: http://getmyebook.in/

இராமனாதபுரத்தில் உள்ள தமது இல்லத்தின் மீதும் நெல்லைச் சீமையிலிருந்து இராமனாதபுரம் கோட்டைக்கு வந்து கொண்டிருந்த பொக்கிஷ வண்டிக்கு பாதுகாப்பாக வந்த படை வீரர்கள் மீதும், மறவர் சீமை கிளர்ச்சிக்காரர்கள் தொடுத்த தாக்குதல்கள் பற்றிய முழு விவரங்களையும் கலெக்டர் லூஷிங்டன் கும்பெனி கவர்னருக்கு அறிக்கை செய்தார். அத்துடன் தமது உதவிக்குப் பெரும் படையினை சிவகெங்கைப் பிரதானிகள் அனுப்பி வைத்து இருப்பதையும் அந்த அறிக்கையில் அவர் தெரிவித்து இருந்தார்.[45] அத்துடன் மறவர் சிமைக் கிளர்ச்சியினால் குடிகள் யாரும் பாதிக்கப்படவில்லை என்றும், கிளர்ச்சியின் பொழுது கும்பெனி வீரர்களது ஆயுதங்களைப் பறிப்பதில் கிளர்ச்சிக்காரர்கள் காட்டியுள்ள அக்கறையில் இருந்து, இந்தக் கிளர்ச்சிகள். சிறிய கொள்ளைகளை நடத்துவதைவிட உயர்ந்த குறிக்கோள் ஒன்றை, கோடிட்டுக் காட்டுவதாகவும் தெளிவு படுத்தி இருந்தார்.

அந்தக் கிளர்ச்சி ஒரு முக்கியமான குறிக்கோளுடன், சிறையில் உள்ள சேதுபதி மன்னரை விடுவிப்பதற்காக துவக்கப்பட்டுள்ளது என்றும் அதனை கும்பெனி தளபதி மார்ட்டின் சின் விசாரணைகள் உறுதிப்படுத்துவதாகவும் குறிப்பிட்டிருந்தார். சேதுபதி மன்னரிடம் சேர்வைக்காரராக பணியாற்றிய மயிலப்பன் என்பவர் அந்தக் கிளர்ச்சிக்கு தலைமை தாங்கி வருவதாகவும் அவர் அண்மையில் திருச்சி கோட்டைக்குச்சென்று சேதுபதி மன்னரை சந்தித்து திரும்பிய பிறகு கிளர்ச்சியை

For more ebooks vist: http://getmyebook.in/

முடுக்கிவிட்டிருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவித்து இருந்தார்.

சேதுபதி மன்னரிடம் பணியாற்றிய பல அலுவலர்கள் தொடர்ந்து திருச்சியில் உள்ள சேதுபதி மன்னருடன் தொடர்பு கொண்டு இருப்பதால் மயிலப்பனது முயற்சிக்கு சேதுபதியின் ஆதரவு இருந்து வருவது நம்பத்தக்கதாக உள்ளது. அதன் காரணமாக மறவர் சீமையில் உள்ள நாட்டுத் தலைவர்கள் பலருக்கும் மயிலப்பன் ஒலைகள் அனுப்பி, சேதுபதி மன்னருக்கு ஏற்பட்டுள்ள சிறுமையைக் களையவும். கும்பெனியாரிடம் இருந்து மறவர் சீமையை விடுவிக்கவும் குடிகள் அனைவரும் கிளர்ந்து எழுமாறு கோரிக்கை விடுத்து இருப்பதாகவும், அந்த அறிக்கையில் குறிப்பிட்டு இருந்தார். ஆகையால் இந்தக் கிளர்ச்சி நடவடிக்கைகளை முழுமையாகத் தடுத்து நிறுத்த தவறினால் விபரீதமான விளைவுகள் எதிர்கொள்ள இருக்கின்றன என்று அச்சுறுத்தி இருந்தார். சேதுபதி மன்னர் திருச்சிக் கோட்டையில் இருந்து தப்பிச் செல்ல இயலாத முறையில் பாதுகாப்பு, நடவடிக்கைகளை பலப்படுத்துமாறும், இயலுமானால் சேதுபதி மன்னரை நெடுந்தொலைவில் உள்ள நெல்லூர் இராணுவ தளத்திற்கு அனுப்பி வைத்து பாதுகாவலில் வைக்குமாறும் யோசனை தெரிவித்து இருந்தார்.[46]

இதற்கிடையில் மக்களின் கிளர்ச்சி பங்குனி மாத பகற்பொழுதுபோன்று கடுமையாகிக் கொண்டு வந்தது. கும்பெனியாரது கூலிப்பட்டாளத்திடம் துப்பாக்கி போன்ற ஆயுதங்களைக் கைப்பற்றுவது,

For more ebooks vist: http://getmyebook.in/

அவர்களது இருப்புக் கிடங்குகளில் உள்ள துணிகள், தானியங்களை சூறையாடி பேரிழப்பு ஏற்படுத்துவது போன்ற நடவடிக்கைகளில் மட்டும் கிளர்ச்சிக்காரர்கள் ஈடுபட்டு இருந்தனர். அபிராமத்திலும், கமுதியிலும் தவிர்க்க முடியாத நிலையில் பொதுமக்கள் இருவர் கொல்லப்பட்டனர். இதைத் தவிர வெறுக்கத்தக்க போக்கு வேறு எதுவும் கிளர்ச்சியில் காணப்படவில்லை. என்றாலும் கிளர்ச்சி வேகமாகப் பரவியது. பாப்பான்குளம், பள்ளிமடம் ஆகிய பகுதிகளில் கிளர்ச்சிக்காரர்கள் முனைந்து நின்றனர். பொதுவாக வைகைப் பகுதிக்கும், குண்டாற்றுக்கும் இடைப்பட்ட நீண்ட பகுதியில் கிளர்ச்சி உச்சநிலையில் இருந்தது. அதனைக் கிளர்ச்சித் தலைவர் மயிலப்பனின் சொற்களில் சொல்ல வேண்டுமானால், 'இந்த இயக்கம் காட்டாற்று வெள்ளம் போல பரந்து பரவிக் காணப்பட்டது. பன்னிரண்டாயிரம் மக்கள் அதில் பங்கு கொண்டனர்.[47]

கிளர்ச்சியின் போக்கு பற்றிய விரிவான விவரங்களை அறிந்து கொள்ள கலெக்டர் லூவிங்டன் இராமனாதபுரத்தில் இருந்து தமது சேவகர்களை முதுகுளத்தூர் அமில்தாரிடம் அனுப்பி வைத்தார். அவர்களில் ஒருவன் கிளர்ச்சிக்காரர்களிடம் அகப்பட்டு கலெக்டரது கடிதத்துடன் சரணடைந்ததுடன் தமது உடைகளையும் இழந்து அவமானப்பட்டு வந்த வழியிலே இராமனாதபுரத்திற்கு திரும்பிவந்தான் . அடுத்து, நான்கு கள்ளர்களை முதுகுளத்தூர் பகுதிக்கு கலெக்டர் அனுப்பி வைத்தார். அவர்கள் கிளர்ச்சிக்காரர்களது ஆதரவாளர்கள் போல நடித்து

For more ebooks vist: http://getmyebook.in/

கிளர்ச்சி பற்றிய விவரங்களை கலெக்டருக்கு அனுப்பி வைத்தனர்.[48] அவைகளில் இருந்து கிளர்ச்சியின் போக்கு, தாக்கம், கிளர்ச்சிக்காரர்களது எண்ணிக்கை, இயல்பு ஆகியயவைகளை நன்கு புரிந்து கொண்டு கிளர்ச்சிப் பகுதிகளுக்கு கும்பெனி பட்டாளத்தை அனுப்பிவைக்க கலெக்டர் ஏற்பாடுகள் செய்தார்.

கும்பெனியாரது முதல் அணி முதுகுளத்துருக்கு இராமனாதபுரம் கோட்டையிலிருந்து தளபதி மார்ட்டின்ஸ் தலைமையில் புறப்பட்டது. வழியில் அந்த அணி மறைந்து இருந்த கிளர்ச்சிக்காரர்களால் பலமாகத் தாக்கப்பட்டது. கும்பெனிப் பட்டாளத்தில் ஐவர் மடிந்தனர். மார்ட்டின்ஸ் மேலும் முன் னேறிச் செல்ல இயலாது இராமனாதபுரம் கோட்டைக்குத் திரும்பினார்.[49] இன்னொரு அணி மேஜர் கிரீம்ஸ் தலைமையில் 100 பேர்களுடன் 50 துப்பாக்கிகளுடனும் 200 ஈட்டிக்காரர்களுடனும் மற்றொரு வழியாக மேற்கே காமன் கோட்டை பாதையில், தெற்கே முதுகுளத்துருக்குப் புறப்பட்டது. ஆனால் இந்தக் குழுவினரும் தங்களது திட்டப்படி முதுகுளத்துாரை அடைய முடியவில்லை.[50]

மிகவும் பீதியடைந்த கலெக்டர் லூவிங்டன், பாளையங்கோட்டையுடன் தொடர்பு கொண்டு மேஜர் பானர்மேனைப் புறப்பட்டு வருமாறு கேட்டுக் கொண்டார்.[51] அவரும் மூன்று பவுண்டர் பீரங்கி அணியுடன் புறப்பட்டு 26-5.1799-ல் பள்ளிமடம் வந்து சேர்ந்தார். மதுரையிலிருந்து மேஜர் டிக்பர்ன் தலைமையில் இன்னொரு சிறிய அணியும்

For more ebooks vist: http://getmyebook.in/

பள்ளிமடம் வந்து மேஜர் பானர்மேனுடன் சேர்ந்து கொண்டது. பிறகு கமுதியை நோக்கி ஒரு அணியும் ஆப்பனூரரை நோக்கி இன்னொரு அணியுமாகப் புறப்பட்டன. மற்றொரு சிறிய அணி தளபதி கிரிப்பிஸ் தலைமையில், குமாரகுறிச்சிக்கு சென்றது. இதிலிருந்து பிரிந்த இன்னொரு சிறிய அணி காக்கூர், சாமிப்பேட்டை வழியாக குமாரகுறிச்சிக்கு சென்றது. சேதுபதி மன்னரது முன்னாள் பிரதானியான முத்தையாபிள்ளையின் சகோதரர் முத்துக்கருப்ப பிள்ளையின் தலைமையில் கிளர்ச்சிக்காரர்கள் கிடாத்திருக்கை அருகே பரங்கிப் பட்டாளத்தை ஆவேசத்துடன் எதிர்த்தனர்.[52]

நானூறு பேர்கள் கொண்ட அந்த அணியில் அத்தனைபேரும் ஆயுதங்களைத் தாங்கியவர்களாக இருந்தனர். ஒரு சிலரிடம் துப்பாக்கிகளும் 'மாட்ச்லாக்கும்' இருந்தன. ஊருக்கு அரை மைல் தொலைவில் இருந்த வெளியில், பட்டப்பகலில் தங்களது தாக்குதலை பயமின்றித் தொடுத்தனர். இராமனாதபுரம் அரசரது முன்னாள் பிரதானியாக இருந்த முத்துக்கருப்ப பிள்ளை, ஒரு கருப்புக்குடையை பிடித்துக் கொண்டு கிளர்ச்சிக் காரர்களுக்கு அப்பொழுதைக்கப்பொழுது கட்டளைகளை பிறப்பித்தும், போராட ஊக்குவித்தும் வந்தார். போரின் பொழுது முதுகுளத்தூர் அமில்தார், ஆப்பனூர் சேர்வைக்காரர்கள் கும்பெனிப்படைக்கு அளித்து வந்த உதவிகள் காரணமாக கிளர்ச்சிக்காரர்கள் பலத்த காயங்களுடன் பக்கத்தில் இருந்த காட்டிற்குள் பின்வாங்கினர்.[53] சேதுபதி

For more ebooks vist: http://getmyebook.in/

மன்னருக்கு பரம வைரியான அபிராமம் வீசுகொண்டத் தேவர் என்ற துரோகியினாலும் கிளர்ச்சிக்காரர்களுக்கு மிகுந்த இழப்புகள் ஏற்பட்டன.[54]

அன்றைய கிளர்ச்சியின் முக்கிய தலமாக கமுதிக்கோட்டை விளங்கியது. முழுவதும் கல்லினாலாகிய இந்த வலிமையான அரணை பிரஞ்சுப் பொறியாளர்களைக் கொண்டு அமைத்தவர் விஜயரகுநாத சேதுபதி மன்னர் (கி.பி. 1711-21). அதனுடைய முக்கியத்துவம் எண்பது ஆண்டுகளுக்குப் பிறகு இந்தக் கிளர்ச்சியின் பொழுதுதான் இருதரப்பினராலும் உணரப்பட்டது. ஒன்பது கொத்தளங்களுடன் அமைந்து இருந்த இந்தக் கோட்டையிலிருந்து வெடிகுண்டு போய்விழும் தொலைவு வரை நெருக்கமான காடு சூழ்ந்து இருந்தது.[55] கோட்டை இருப்பதையே மறைத்துக் கொண்டு இருந்தது. இதனை தங்களுக்கு மிகவும் சாதகமான பாதுகாப்பு இடமாக கிளர்ச்சிக்காரர்கள் பயன்படுத்தி வந்தனர். கிளர்ச்சிக்காரர்களின் தலைவர்களான சிங்கன்செட்டி, பட்டுர், மயிலப்பன் ஆகியோர்களது நடமாட்டமும் அங்கு மிகுந்து இருந்தது. கும்பெனிப் படைக்கும் கிளர்ச்சிக்காரர்களுக்கும் இங்கு பயங்கர மோதல்கள் பல ஏற்பட்டன. மறவர்களிடையே விர சாகலங்கள் மிகுந்து இருந்த பொழுதும் கும்பெனியாரது சக்தி வாய்ந்த வெடிமருந்துத் திறனுடன் இயங்கிய பீரங்கிகளுக்கு முன்னர், கிளர்ச்சிக்காரர்களது தாக்குதல் பயனற்றுப் போயின. அந்த வீர மரணப் போரில் தங்களது தோழர்கள் பலரை கள பலியாகக்

For more ebooks vist: http://getmyebook.in/

கொடுத்துவிட்டு கிளர்ச்சிக்காரர்கள் வட திசையில் நழுவினர். அவர்களைப் பின் தொடர்ந்த சுபேதார் ஷேக் மீரானும், அவனது அணியும் கிளர்ச்சிக்காரர்களை வீர சோழன், அபிராமம் ஆகிய பகுதிகளில் இருந்து விரட்டி இராமனாதபுரத்தின் தெற்குப் பகுதிக்கு பின்னடையுமாறு நிர்ப்பந்தம் செய்தனர்.[56] மயிலப்பனும் அவரைச் சூழ்ந்து நின்ற நானுறுக்கும் அதிகமான மறவர்களும் கீழ்க்குளம் காட்டிற்குள் நுழைந்தனர்.[57]

அதே சமயத்தில் இராமனாதபுரத்திலிருந்து கலெக்டர் லூவிங்டன், சிவகங்கை சேர்வைக்காரர்களிடமிருந்து பெற்ற கூலிப்படையின் பாதுகாப்பில் கமுதி கோட்டைக்கு வந்து சேர்ந்தார்.[58] பெரும்பாலும் அவர் மானாமதுரையிலிருந்து திருச்சுழி வழியாக கமுதிக்கு வந்து இருக்க வேண்டும். கிளர்ச்சியினால் ஏற்பட்டுள்ள அழிமானம் மிகவும் பரந்த அளவில் இருப்பதாக லூவிங்டன் அறிக்கையொன்றில் தெரிவித்து உள்ளார்.[59] கிளர்ச்சியை ஒடுக்கும் பணியில் அவர் தீவிரமாக முனைந்தார். இப்பொழுது அவர் கையாண்ட தந்திரம் இராமனாதபுரம் சீமை மறவர்களது எழுச்சியை அடக்க சிவகங்கை சிமை சேர்வைக்காரர்களது படையை பயன்படுத்துவது, நமது கைவிரலை எடுத்து நமது கண்ணைக் குத்துவது அவரது திட்டம்.

கீழ்க்குளம் காட்டில் சண்டை தொடர்ந்தது. கிளர்ச்சிக்காரர்கள் வீரப் போரிட்டு முப்பது மறவர்களை இழந்தன. ஐம்பது பேருக்கு படுகாயம், நாற்பத்தின்மர்

For more ebooks vist: http://getmyebook.in/

சிறைபிடிக்கபட்டனர்; எஞ்சியவர்கள் வெள்ளக்குளம் சென்றனர். கும்பெனிப் படையினருடன் இங்கு சிவகங்கையாரது அணியில் சேர்ந்து கொண்டு கிளர்ச்சிக்காரர்களை நெருக்கி வளைத்தன.[60] சிங்கன் செட்டியும் இன்னும் சிலரும் அங்கு நடந்த போராட்டத்தில் தியாகிகள் ஆயினர். கிளர்ச்சிக்காரர்களான தேவர்களும், சேர்வைக்காரர்களும் சிதறியோடினர். மயிலப்பனும் அவருடன் நின்று போரிட்ட முப்பது பேர்களைக் கொண்ட அணி கிழக்கில் காக்கூரை நோக்கி பின்வாங்கியது, இந்தப் போரில் கும்பெனியாருக்கு பக்கபலமாக பெரிய மருதுவின் மகன் தலைமையில் போரிட்ட சிவகங்கை அணியை கும்பெனியார் பிறகு பாராட்டி தங்கப்பதக்கம் வழங்கினர்.

மறவர் சீமையில் சேதுபதி மன்னருக்கு இழைக்கப்பட்ட கும்பெனியாரது கொடுமைக்கு எதிராக கிளர்ந்து எழுந்த மக்கள் எழுச்சி நாற்பத்து இரண்டு நாட்கள் நீடித்து வரலாறு படைத்தது. சொக்கப்பனை போல் சுடர்விட்டு எரிந்த மக்களது ஆவேசம், மோசமான அடக்கு முறையினாலும் சிவகங்கை சீமை சேர்வைக்காரர் துரோகத்தினாலும் ஒடுக்கப்பட்டு ஒய்ந்தது. போரில் கொல்லப்பட்ட கிளர்ச்சிக்காரர்கள் சிலரது தலைகளை கும்பெனியார் நீண்ட ஈட்டி நுனிகளில் சொருகி பல கிராமங்களில் ஆங்காங்கு நட்டுவைத்து தங்களது நாகரீக ஆட்சியை பாமர மக்களும் புரிந்து கொள்ளும்படி யாகச் செய்தனர்.[61]

ஏற்கெனவே கிளர்ச்சியின் ஈடுபாடு காரணமாக பலவித இழப்புகளுக்கு ஆளாகிய குடிமக்கள், இந்தக்

For more ebooks vist: http://getmyebook.in/

கொடூர நடவடிக்கைகளினால் பெரும் பீதியடைந்தனர். இறந்தவர்களுக்கு மன முவந்து மிக்க மரியாதை செய்யும் இந்த புனித பூமியில், அவர்களது சடலங்களை இங்ங்னம் இழிவுபடுத்துவதை அவர்களால் எண்ணிப் பார்க்க முடியாததொன்றாக இருந்தது.

அப்பொழுது மறவர் சீமை எங்கும் இராமனாதபுரம் கலெக்டர் பகிரங்கப்படுத்திய பொது மன்னிப்பு விளம்பரத்தையும், வேண்டுகோளையும்[62] தொடர்ந்து குடிகள் வீடுகளுக்குத் திரும்பினர். ஆனால் இந்த மன்னிப்பு கிளர்ச்சியை தலைமை தாங்கி நடத்திய மயிலப்பனுக்கும், முத்துமருப்பபிள்ளை ஆகிய இருவருக்கு மட்டும் பொருந்தாது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் அவர்களை உயிரோடு பிடிப்பதற்கு திட்டமிட்டனர். அவர்கள் தலைக்கு விலையாக பரிசுகளும் ஏற்படுத்தி இருந்தனர். மயிலப்பன் கடலாடி வழியாக காடல்குடிக்கும் பின்னர் பிள்ளையார் குளம், வில்லார் கோயில் ஆகிய ஊர்களுக்கும் சென்று சில நாட்களைக் கழித்த பிறகு கமுதிக்குள் நுழையாமல் மண்டல மாணிக்கத்திற்கு வந்தார். அங்குள்ள நிலவரங்களை நன்கு புரிந்து கொண்டு மாறு உடையில் தஞ்சைப் பகுதிக்கு தப்பிச் சென்றார். அங்கு சிலகாலம் விவசாயக் கூலியாக தலைமறைவு வாழ்க்கை நடத்தியதாகவும் தெரிகிறது. [63]

மக்களது ஆவேசம், நியாய உணர்வுகள் இவைகளின் உந்துதல்கள் அலைகடலைவிட வேகமாக விரைவாக பொங்கிப் பொருமி வீரமரணப் போராட்டமாக

For more ebooks vist: http://getmyebook.in/

பரிணமித்து பெரும் புயலாக மாறுகிறது. ஆனால் இடைப்படுகின்ற சின்னஞ்சிறு நிகழ்ச்சிகள் அந்த சண்ட மாருதத்தையும் சாந்தமடையச் செய்து விடுகின்றன. விண்ணை நொறுக்கி விடுவதுபோல வெடி முழக்கம் செய்கின்ற பேரிடி பூமியில் விழுந்தவுடன் நொடி நேரத்தில் மறைந்து விடுவதைப் போல் தயக்கமும் தளர்ச்சியும் இல்லாமல் தாய்நாட்டிற்காக, தன்னரசு ஆட்சிக்காக, தங்களது அரிய உயிரையும் உதவ ஓடோடி வந்தவர்கள், இழப்புகளைக் கருதாமல் இலட்சியத்தை நோக்கி ஓடியவர்கள், போராட்டத்தின் இறுதியில் இவ்வாறாக மாறிவிட்டனரே ஏன்? அநாகரிகமான முறையில் அவர்கள் மீது அவிழ்த்து விடப்படுகின்ற அடக்குமுறைக் கொடுமைகள், அவைகளை எதிர்த்து மேலும் முன்னேற இயலாத மனப்பக்குவம் காரணமா? அல்லது கிளர்ச்சியின் விளைவுகள் எதிர்பார்த்த அளவிற்கு எய்தப் பெறவில்லையே என்ற ஏமாற்றமா?

ஜூன் மாதம். இரண்டாவது வாரம், மறவர் சீமை முழுவதும் அமைதி நிலவியது. வேகமாக வெடித்துப் பரவி, பின்னர் நொடித்துவிட்ட மக்களின் கிளர்ச்சிக்குப் பிறகு இத்தகையதொரு மயான அமைதி நிலவியது, வியப்பான சம்பவமாக தோன்றியது. மற்றுமொரு ஆயுதப் புரட்சிக்கு தயாராக மக்கள் எடுத்துக் கொண்ட அவகாசமாக இருக்குமோ என கும்பெனியார் அஞ்சினர். அதனால் சீமை முழுவதும் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளில் பரங்கிகள் ஈடுபட்டு இருந்தனர். ஆனால் இந்தக் கிளர்ச்சியின் தொடர்ச்சி நெல்லை சீமையிலும், மதுரை, திண்டுக்கல்

For more ebooks vist: http://getmyebook.in/

சீமைகளில் மட்டுமே எதிரொலித்தன. தொடர்ந்து நீடித்தன.

1. ↑ குரு. குகதாஸப்பிள்ளை, திருநெல்வேலிச் சீமைச் சரித்திரம் (1928), பக். 214
2. ↑ Revenue Consultations, Vol. 89, 15-10-1798, pp. 3869-70
3. ↑ Revenue Despatches to England, Vol. 26, 9-8-1797, pp. 367-412
4. ↑ Revenue Despatches to England, Vol. 6, 15-10-1799, pp. 186-189
5. ↑ Revenue Consultations, Vol. 95, 13-4-1799, pp. 881-88
6. ↑ குரு. குகதாஸ்ப்பிள்ளை, திருநெல்வேலி சீமைச் சரித்திரம் (1928), பக். 214
7. ↑ Board of Revenue General Report, Vol. II, 31–8–1795, pp. 74
8. ↑ Ibid., p. 95
9. ↑ Ibid., pp. 165-69
10. ↑ Madurai District Records, Vol. 1236, 4-8-1796, pp. 45-48
11. ↑ Board of Revenue proceedings, Vol. 292, 12-10-1801. p. 12844
12. ↑ Ibid., Vol. 178, 1-6-1797, p. 3057
13. ↑ Ibid., Vol. 299, 12-10-1801, pp. 12344-46
14. ↑ Revenue Despatches to England, Vol. VII, 22-1-1800, p. 21
15. ↑ Board of Revenue proceedings Vol. 239, 18-11-1799
16. ↑ Revenue Despatches to England; Vol. VII. 22-1-1800, pp. 18-19
17. ↑ Ibid., pp. 78-79
18. ↑ Board of Revenue General Report, Vol. II D, 1-10-1797, part II, p. 13
19. ↑ Madura District Records, vol. 1179 D, 1-8-1800, p. 193
20. ↑ Revenue Consultations, Vol. 91, 14-12-1798, pp. 4440-45
21. ↑ Public Consultations, Vol. 244, 9-5-1800, pp. 1415-21
22. ↑ Commercial Despatches to England, Vol. XIV, pp. 31–32
23. ↑ Military Country Correspondence, Vol. 49, 13-10-1789, p. 354

For more ebooks vist: http://getmyebook.in/

24. ↑ Revenue Consultations, Vol. 91 D, 14-12-1798, pp. 4191-96
25. ↑ Military consultations, Vol. 256, 6-8-1799, p. 4613
26. ↑ Political Despatches to England Vol. V. D, 13-3-1709. p. 323
27. ↑ Military Consultations, Vol. 256, 6–8-1799, p. 478 | -88
28. ↑ Board of Revenue Proceedings, Vol. 192 D, 26-1-1798 p. 505. Revenue Despatches to England, Vol. v D, 15-10-1798, pp. 300-302.
29. ↑ Military Con sultations, Vol. 251, 27–3–1799, p. 1445
30. ↑ Military Sundries, Vol. 66 D, 13-8-1784, pp. 241-250
31. ↑ Madurai Collectorate Records, Vol. 1139, 24–4–1799. pp. 45-50
32. ↑ Board of Revenue Proceedings, Vol. 226, 2–5–1799. pp. 3782-86
33. ↑ do 26-4-1799, pp. 3815-16
34. ↑ Alexander Nelson, Madurai Dist. Manual (1868), Part IV, Chap. VII, p. 155
35. ↑ Madurai collectorate Records, Vol. 1157, 6-5-1799
36. ↑ Ibid., 29-4-1799
37. ↑ Ibid., Vol. 1122, 11–5–1799
38. ↑ Revenue consultations, Vol. 95 A, 9–5–1799 and 16-5-1799, pp. 998-1014
39. ↑ Madurai Collectorate, Vol. 1122, 22-5-1799
40. ↑ Ibid., 25–5–1799
41. ↑ Revenue consultations, Vol. 95 A. 20-5-1799, pp. 1998
42. ↑ Madurai collectorate, Vol. 1122, 25–5–1799
43. ↑ Madurai collectorate Records, Vol. 1157, 24-4-1799, p. 69
44. ↑ Ibid., 25-4-1799, p. 71
45. ↑ Madurai Collectorate Records, Vol. 1122, 25-5-1799
46. ↑ Military Consultations, Vol. 105 A, 4-9-1800, p. 2611
47. ↑ Madurai Collectorate Records. Vol. 1139 (1802)
48. ↑ Ibid., Vol. 1157, 30-4-1799.

For more ebooks vist: http://getmyebook.in/

49. ↑ Madurai Collectorate Records, Vol. 1157, 2-5-1799

50. ↑ Ibid., 27-4-1799.

51. ↑ Military consultations, Vol. 253 A, 17-5-1799, p. 2972.

52. ↑ Revenue consultations. Vol. 92 (A). 9-5-1799. pp. 998-1000.

53. ↑ Revenue consultations, Vol. 95 A, 15-5–1799, p. 1007.

54. ↑ Revenue consultations. Vol. 95 A, 15-5-1799 pp. 1007-21.

55. ↑ Military country correspondence, Vol. 2 1 (1772), pp. 159-65

56. ↑ Military country correspondence, Vol. 253 A (179 pp. 3031, 3146-49.

57. ↑ Madurai collectorate Records Vol. 1139, p. 45.

58. ↑ Revenue consultations, 22.9, 30-5-1799, p. 48.

59. ↑ Madurai collectorate Records. Vol. 1157, 25-4-1799 pp. 70-71.

60. ↑ Ibid., 29.5.1799, pp. 3246-48.

61. ↑ Revenue Cousulations, Vol. 229, 29.5.1799, p. 4849.

62. ↑ Proclamation dated 24-5-1799, and Madurai Collectorate Records, Vol. 1139, pp. 45-49.

63. ↑ Madurai District Collectorate, Vol. 1139, p. 45.

---

For more ebooks vist: http://getmyebook.in/

## 11

# கிளர்ச்சியின் தொடர்ச்சி

அந்நிய எதிர்ப்பு உணர்வும் ஆவேசமும் கொண்டு போர்க் கோலம் பூண்ட மறவர்கள், அதற்குள்ளாக அடங்கி விட்டனரா? கிளர்ச்சியின் போக்கு பற்றிய விவரங்களை கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக ஆர்வத்துடன் கேள்விப்பட்டு வந்த சேதுபதி மன்னருக்கு மறவர் சீமையின் நிலை வியப்பையும் வேதனையையும் அளித்தது. ஐந்து ஆண்டுகளாக திருச்சிக் கோட்டையில் அனுபவித்து வந்த அவலத்தின் ஆயிரம் மடங்கு அந்த ஒரு நொடிப்பொழுதில் அவரது நெஞ்சத்தில் மிஞ்சி நின்றது.

தொன்று தொட்டு வந்துள்ள மறவர் மக்களின் தன்னரசைப் புறக்கணித்து அவர்களது சுதந்திர உணர்வுகளை மதிக்காது ஆட்சி செய்கின்ற பரங்கியரையும் நவாப்பையும் தங்களது நாட்டினின்றும் அகற்ற வேண்டும்; மாற்றானுக்கு அடிபணியாத, மானம் மிகுந்த, சுதந்திர மண்ணாக மறவர் சீமையை என்றென்றும் மிளிரச் செய்ய வேண்டும்; என்ற சிறப்பான இலட்சியங்களைச் செயல்படுத்த துடித்துக் கொண்டிருந்தவர் அல்லவா. சேதுபதி மன்னர். சிறகொடிந்த பருந்தாக சிறைக்குள் அடைக்கப்பட்டுக் கிடக்கும் அவருக்கு முதுகுளத்தூர் பகுதியின் மக்கள் கிளர்ச்சி தமது கனவை நனவாக்க உதவும் என்று நம்பி இருந்த நிலையில் கிளர்ச்சி

For more ebooks vist: http://getmyebook.in/

தளர்ந்த செய்தி கிடைத்தது. கிளர்ச்சிகளைத் தலைமை தாங்கிய மயிலப்பன், வீரம் மணக்கும் முதுகுளத்துர் மண்ணில் பிறந்த மாவீரன் ஆயிற்றே. மாப்பிள்ளைத் தேவனுடன் நடத்திய மோதல்களில் பங்கு கொண்டு இராமனாதபுரம் அாசுக்கு சிறந்த சேவை செய்த சேர்வைக்காரர். ஏற்கெனவே சேதுபதி மன்னரை திருச்சி கோட்டைக்குள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த பொழுது பாண்டிச்சேரியில் உள்ள பிரஞ்சுக்கார்களுடன் ராணுவ உதவி கோரி பேச்சு வார்த்தை நடத்தியவர்.[1] அத்துடன் சிறையில் உள்ள சேதுபதி மன்னரை திருச்சிக் கோட்டையில் இருந்து தப்புவிக்க திட்டம் தீட்டி செயல்படுத்தி தோல்வி கண்டவர்.[2] கிளர்ச்சி நடந்த பகுதிகளையும் அங்குள்ள மக்களையும் நன்கு அறிந்தவர். நிலைமைகளை நன்கு தெரிந்து தக்க திட்டங்களுடன் எதிரிக்கும் பலமான இழப்பையும் தோல்வியையும் ஏற்படுத்தக்கூடிய அரசியல் தலைவன். கமுதிக்கோட்டையிலிருந்து பின்வாங்கி, கீழ்க்குளம் காட்டிற்குள் அவர் சென்றிருக்கக் கூடாது. தொடர்ந்து வரும் எதிரியை சரியான முறையில் தெரிந்துகொள்ள இயலாது. சிலந்தி வலைக்குள் சிக்கிக் கொண்டதுபோல் ஆகிவிட்டதே; அவரது அணிக்கு மரண அடி கொடுத்த எட்டப்பனது சிப்பாய்களும் மருது சேர்வைக்காரர்களின் படைகளும் முதுகுளத்துார் மறவர்களைவிட எந்த வகையில் உயர்ந்தவர்கள்? வாள்வீச்சிலா? வேல் பாய்ச்சலிலா? அல்லது துப்பாக்கி சுடுவதிலா? என்ன இருந்தாலும் மயிலப்பன் பிறந்த மண்ணைச் சேர்ந்த சித்திரங்குடி நாட்டாரும், ஆப்பனுர்

For more ebooks vist: http://getmyebook.in/

தேவர்களும் அவனுக்கு எதிரான அணியில் சேர்ந்து இவ்விதம் துரோகம் செய்திருக்கக் கூடாது...

இப்படி எத்தனையோ கேள்விகளை சேதுபதி மன்னர் தமக்குள் தொடுத்துக்கொண்டு விடையும் சொல்லிக்கொண்டார். தமது சீமையில், இத்தகைய இழிநிலை ஏற்பட சிவகங்கை சீமை சேர்வைக்காரர் படை உதவி வழங்கியதுடன், போரிலும் பரங்கியருக்கு பக்க பலமாக இருந்ததை[3] நினைக்க மன்னரது சிந்தனையெல்லாம் சினத்தால் கொப்பளித்தது. இப்பொழுதே புறப்பட்டுப்போய் அந்த சின்ன மருதுவை...எதிரே பலமான சிறைக்கதவுகள் இருப்பதை அப்பொழுது அவர் உணர்ந்தார்.

சிறைக்கதவுகள்-மனிதனது எல்லையற்ற கற்பனையோடு இயைந்த உணர்வு இழைகள், எண்ணங்கள், ஆசைகள், இலட்சியங்கள்-இவைகளுக்கான இயக்கங்கள் அனைத்தையும் தனது வலிய குறுக்குச் சட்டங்களினால் குலைத்துத் தடுத்துவிடும் ஆற்றல் சிறைக்கதவுகளுக்கு மட்டும்தான் உள்ளது. அதிகார பலம்கொண்டு ஆட்சி செய்தவர்கள், ஆன்ம வலிமை கொண்டு கொடுமைகளைச் சாடி, சமுதாய நீதி கோரியவர்கள், அவர்கள் எத்தகையவராய் இருந்தாலும் சிறைக்கதவுகளுக்குப் பின்னால் அவைகளின் ஆற்றலை எதிர்த்து எக்காளமிட முடியாதவாறு நம்பிக்கை இழந்தவர்களாக அடங்கி ஒடுங்கி விடுகின்றனர். இவர்களில் ஒரு சிலரை மட்டும் தியாகி என வரலாறு வாழ்த்து கிறது.

For more ebooks vist: http://getmyebook.in/

சேது மன்னரின் சிறை வாழ்க்கை சாரமற்றதாக கழிந்து கொண்டிருந்தது. என்றாலும் அவரது தன்னம்பிக்கையும், திடமான உறுதியும் உடைந்து விடவில்லை. எப்பொழுதாவது இராமனாதபுரத்திலிருந்து சேவகர்கள் செய்தி கொண்டு வருவார்கள். அவரது குடும்பத்தினர் பற்றியும், அருமை மகள் சிவகாமி பற்றியும், அவர்கள் தெரிவிக்கும் விவரங்களைக் கேட்டு, அவரது உள்ளத்தில் ஏற்படும் சலனங்கள், இனிமை, ஏக்கம் ஏமாற்றம் ஆகிய உணர்வுகள்-நெளிந்து மறையும் நீர்க்கோடுகளைப் போல் அவர் முகம் பிரதிபலிக்கும். தொடர்ந்து வேதனைப் பின்னல்கள், விரக்தியான தோற்றம், இதுவே அவருடைய அன்றாட சிறை வாழ்க்கையாக இருந்தது.

O O O O O

தஞ்சைத் தரணியில் தலைமறைவாக இருந்த தளபதி மயிலப்பன், மறவர் சீமைக்குத் திரும்பினார். அவரையும் அவரது கிளர்ச்சி ஆதரவாளர்களையும் அடக்கி ஒடுக்க முன்பு கும்பெனியாருக்கு சிவகங்கைப் படைகளைக் கொடுத்து உதவிய மருது சகோதரர்கள், இப்பொழுது மயிலப்பனை, தங்களுக்கு பக்கபலமாக, பரங்கியருக்கு எதிரான புரட்சித் திட்டத்தில் பங்கெடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டனர். மயிலப்பனது மனநிலையில் மாற்றம் ஏற்பட்டது. அவரது மனத்தில் மங்காது ஒளிர்ந்து கொண்டிருந்த மறவர் சீமைப் பற்றிய விடுதலைக் கனவுகள் மகிழ்ச்சி அளித்தன. மருது சேர்வைக்காரர்கள் மீது கொண்டிருந்த பகைமையை மறந்து, பொதுஎதிரியான

For more ebooks vist: http://getmyebook.in/

பரங்கியரை அழிக்க, அவர்களுடன் இணைந்து பணியாற்றினார். அவரது தாக்குதல்கள் இப்பொழுது மிகவும் கடுமையானதாக இருந்தது. பரங்கிகளது குறிப்புகளில் மயிலப்பனுக்கு முரடன் (Rogue) என்ற அடைமொழி சேர்க்கப்பட்டது. அவரது பேராற்றலையும் பகைவரைச் சின்னாபின்னப் படுத்தும் சீற்றத்தையும் கண்டு வியந்த சின்னமருதுவும் பாஞ்சைப் பாளையக்காரரும், அவருக்கு பல அன்பளிப்புகளை வழங்கிச் சிறப்பித்தனர்.[4] மேலமாந்தையிலிருந்து மறவமங்கலம் வரையிலான பரந்த பகுதியில் அவரது குதிரையின் கால் குளம்புகள் படாத இடம் இல்லை, என்னும் அளவிற்கு சுழன்று சுழன்று போரிட்டு வந்தார். கும்பெனியாரது தானியக் கிடங்குகள், அவர்கள் கைக்கூலிகளது பொருட்கள், கால்நடைகள் அனைத்தையும் அவரது கொள்ளைப் பொருட்களாகின. மைசூர் மன்னர் திப்புசுல்தானுடன் தொடுத்த போர் அப்பொழுது முடிந்து விட்டதால் தங்களது மூல பலம் முழுவதையும் மறவர் சீமையின் மீது முடுக்கி விட்டனர் கும்பெனியார். பரங்கி அணிகள் பல இராமனாதபுரம் சீமையையும் சிவகங்கை சிமையையும் துளைத்து தொல்லைகள் கொடுத்து சுடுகாடாக்கின.

கி.பி. 1800-ம் ஆண்டு ஜனவரி மாதம் சேதுபதி மன்னரது வங்க நாட்டு வணிகப் பிரதிநிதி தருமப்பிள்ளை கல்கத்தாவிலிருந்து திரும்பி வந்தார். திருச்சிக் கோட்டையில் அரசரைச் சந்தித்து உரையாடி விட்டு வெளியே வந்தார். அவரை எதிர் பார்த்துக் காத்திருந்த கும்பெனி வீரர்கள் அவரைக் கைது

For more ebooks vist: http://getmyebook.in/

செய்து இராமனாதபுரத்திற்கு அழைத்துச் சென்றனர்.[5] கலெக்டர் லூவிங்டனது கச்சேரியில் கொண்டு போய் நிறுத்தினர். தருமப்பிள்ளை கல்கத்தாவில் தங்கி இருந்து சேதுபதி மன்னருக்காக சங்கு விற்பனையில் ஈடுபட்டிருந்ததை கும்பெனியார் அறிவர். ஆதலால் அவரை விசாரித்து சேதுபதி மன்னரது சொத்துக்கள், வங்கத்தில் முடக்கியுள்ள முதலீடுகள் ஆகியவைகளை அறிந்து கைப்பற்றுவது கும்பெனியாரது திட்டம்! கலெக்டர் அவரை நீண்ட நேரம் விசாரித்தார். அவரிடத்தி லிருந்த கணக்குகளையும் பார்வையிட்டார். 1794-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் இரண்டு இலட்சத்து இருபதினாயிரம் சங்குகள் அடங்கிய சாக்குப் பொதிகளுடன் தேவிப்பட்டினம் துறை முகத்திலிருந்து வங்காளத்திற்குப் பயணம் சென்று வந்த விவரத்தைத் தெரிவித்தார் தருமப்பிள்ளை.[6]

கிழக்கரையைச் சேர்ந்த எல்லத்தண்டல் என்ற மாலுமி செலுத்திய கப்பலில் 40 நாட்களில் கல்கத்தா துறைமுகம் சென்று அடைந்ததையும், அங்கு சங்குகளில் ஒரு பகுதியை 20,000-தங்க முகராக்களுக்கு விற்பனை செய்து, அவைகளைக் கொண்டு சிறந்த வகை அரிசி, பட்டு, மற்றும், பலவிதமான சாமான்களைக் கொள்முதல் செய்து இராமனாதபுரத்திற்கு அனுப்பிவிட்டு, தாம் அங்கிருந்து வியாபாரத்தில் ஈடுபட்டதையும், அப்பொழுது கலெக்டர் ஜாக்ஸன் தூண்டுதலின் பேரில் ராணி மங்களேஸ்வரி நாச்சியார், இராமனாதபுரம் மன்னருக்குச் சொந்தமான சங்கு வியாபார முதலீடுகளை, அவரது பதவி நீக்கத்திற்குப் பின்னர், தமக்கே சொந்தமானவை என

For more ebooks vist: http://getmyebook.in/

கல்கத்தா சுப்ரீம் கோர்ட்டில் தொடுத்த வழக்கை[7] இராமனாதபுரம் மன்னர் சார்பாக அவர் வாதாடி வெற்றி கொண்டமையும், சங்கு வியா பாரத்தில் ஈட்டிய வருவாயை அப்பொழுதைக்கப்பொழுது திருச்சிக் கோட்டையில் உள்ள சேதுபதி மன்னருக்கு, யாழ்ப்பாணம் வைத்தியநாதன். நாகப்பட்டினம் சுப்பராயப்பிள்ளை, வீரப்பெருமாள்பிள்ளை, கீழக்கரை அகமது நெய்னா, மீரா நெய்னா ஆகியவர்கள் மூலம் அனுப்பி வைத்த விவரங்களை, தருமபிள்ளை கலெக்டரது விசாரணையில் தெரிவித்தார்.[8]

இந்த வங்காள வியாபாரத்தின் ஒரு பகுதியைக்கூட பறிமுதல் செய்ய இயலாமல் போய்விட்டது. ஒருபுறம் கும்பெனியாருக்கு ஏமாற்றம் தந்தாலும், இன்னொரு முக்கிய விஷயம் அவர்களுடைய சிந்தனையை தீவிரமாகக் கவர்ந்தது. அதாவது கடந்த ஐந்தாண்டுகளில், வங்காளத்திலிருந்து இராமனாதபுரம் ஆசருக்குக் கிடைத்த பணம் முழுவதும், முதுகுளத்துர் பகுதியில் கிளர்ந்து எழுந்த கிளர்ச்சிக்கு பயன்பட்டிருக்க வேண்டும் என்ற உறுதியான முடிவிற்கு கலெக்டர் வந்தார். அதனை தமது மேலிடத்திற்கும் அறிக்கை செய்தார்.[9] இதனைத் தொடர்ந்து திருச்சிராப்பள்ளிக் கோட்டையில், இராமனாதபுரம் அரசரைச் சந்தித்து விட்டுச் செல்லுபவர்கள் மீது கண்காணிப்பு கடுமையாக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து மறைந்துவிட்டன. இராமனாதபுரம் அரசர் மிகவும் சோர்வுடன் காணப்பட்டார். சிவகங்கைச் சீமைகளில்

For more ebooks vist: http://getmyebook.in/

சென்ற ஆண்டு ராணி வேலுநாச்சியார் மறைந்த பிறகு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் எதுவும் இல்லை.

தென்னிந்தியாவில் கும்பெனியாரது கொடுங்கோன்மைக்கு எதிராக இயங்கிய கிளர்ச்சிக்காரர்கள் அனைவருடனும் தொடர்பு கொண்டார். சிவகங்கை பிரதானி சின்னமருது சேர்வைக்காரர் திண்டுக்கல்லில் மைசூர் தளபதி தூந்தியாவின் தலைமையில் கூடிய புரட்சிக்காரர்களது கூட்டத்தில் அவர் கலந்து கொண்ட விவரம், கும்பெனியாரின் காதுகளுக்கு எட்டியது.[10] அன்றிலிருந்து அவரது நடவடிக்கையை கும்பெனியார் ரகசியமாக கண்காணித்து வந்தனர். அதுவரை சின்னமருது சேர்வைக்காரரை, தங்களது 'விசுவாசமுள்ள நண்பராகவே' அவர்கள் கருதி வந்தனர். கும்பெனியார் பணியில் இருந்த தளபதி மார்ட் டின்ஸ்-தளபதி வெல்ஷா, கலெக்டர் சல்லிவன் ஆகிய வெள்ளையரின் பாராட்டுதலையும் நட்பையும் அவர் பெற்றிருந்தார். சிவகங்கைக்குத் தனியாக வேங்கன் பெரிய உடையாத் தேவர் என்ற அரசர் இருப்பதை மறந்து சிவகங்கை சீமை சம்பந்தப்பட்ட கடிதப் போக்குவரத்துக்களை சிவகங்கை பிரதானி சின்ன மருது சேர்வைக்காரர் என்றே எழுதி வந்தனர். கும்பெனியார் சிவகங்கைச் சீமையில் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்த தளபதி மயிலப்பனைப் பிடித்துக் கொடுக்குமாறு கூட கலெக்டர் லூவிங்டன் சின்ன மருதுவிற்கு ஒருமுறை கடிதம் எழுதினார்.[11] அந்த அளவிற்கு சிவகங்கைப் பிரதானி மீது கும்பெனியாரது நம்பிக்கை இராமநாதபுரம் சீமையில் கலெக்டர்

For more ebooks vist: http://getmyebook.in/

ஜாக்ஸன் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த 'ரங்கபிள்ளை ஊழல்' சம்பந்தப்பட்ட விசாரணை அறிக்கையை தயாரித்து அனுப்புவதில் கலெக்டர் ஈடுபட்டிருந்தார். பாஞ்சைப் பகுதியில் பதட்டம் நிலவி வந்தது. அந்த பாளையத்தின் பாளையக்காரர் ஆன கட்டப்பொம்மு நாயக்கரை பிடித்து கயத்தாற்றில், தூக்கில் தொங்கவிட்டு பாஞ்சாலங்குறிச்சியை தரைமட்டமாக்கிய பிறகும், கும்பெனியாரிடையே ஒருவித பயமும் அருவருப்பும் இருந்துவந்தது. அதனால் அரசு ஆவணங்களில் அந்தக் கோட்டையின் பெயர்கூட. இடம் பெறாதவாறு செய்தனர்.[12]

இதற்கு வலுவூட்டும் வகையில் பாளையங்கோட்டைச் சிறையில் இருந்து ஊமைத்துரை தமது நண்பர்களுடன் 2-2-1801 அன்று இரவு தப்பித்து ஓடியச் செய்தி அமைந்தது.[13] அழிந்த பாஞ்சை மீண்டும் உருப்பெற்று எழுந்தது. ஊமைத்துரை மீது கும்பெனியாரது தாக்குதல் தொடுக்கப்பட்டது.[14] போரின் முடிவு பரங்கியருக்கு சாதகமாக அமைந்ததால் ஊமைத்துரை பலத்த காயங்களுடன் சிவகங்கை மருது சேர்வைக்காரர்களிடம் தஞ்சம் புகுந்தார்.[15] அதுவரை கும்பெனியாரது செல்லப் பிள்ளைகளாக இருந்து வந்த சிவகங்கைச் சேர்வைக்காரர்கள், கும்பெனியாரது சினத்துக்கு ஆளானார்கள். மருது சகோதரர்களும் இந்த சூழ்நிலையை எதிர்பார்த்து தக்க முன்னேற்பாடுகளில் முனைந்து இருந்தனர். திண்டுக்கல், மதுரை, பாளையங்கோட்டை, தஞ்சாவூர்

For more ebooks vist: http://getmyebook.in/

ஆகிய இராணுவ நிலைகளில் இருந்த கும்பெனிப்படைகள் மறவர் சீமையிலும், சிவகங்கைச் சீமையிலும் பாய்ந்து புகுந்தன. வழக்கம் போல எட்டப்பனும் தொண்டைமானும் கும்பெனியாரது அணியில் சேர்ந்துகொண்டு அவர்களுக்கு ஆதரவான 'தொண்டுகளை' செய்து வந்தனர். மறைந்திருந்த மயிலப்பனும், நெல்லைச் சீமையைச் சேர்ந்த காடல்குடி, குளத்தூர் பாளையக்காரர்களுடன், மதுரைச் சீமையின் விருப்பாச்சி, திண்டுக்கல், கோம்பை, பழனி பாளையக் காரர்களும் சிவகங்கைச் சேர்வைக்காரர்களுக்கு ஆதரவாக நின்றனர். மறவர் சீமையில் மக்கள் கிளர்ச்சி வலுவுடன் நிறை வேற, பல பகுதிகளில் கும்பெனிப் படைகளுடன் பயங்கரமாக மோதினர்.

1801-ம் வருடம் அக்டோபர் திங்கள்.

கடந்த ஏழு மாதங்களாக நடைபெற்று வரும் பரங்கியர் எதிர்ப்பு போர் முடிவு நிலைக்கு வந்து கொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் அந்நிய எதிர்ப்பு உணர்வு பொங்கிய வீர மறவர்களது எழுச்சி, போராட்டம், இரத்த வெள்ளம், பிணக்காடு, தெற்கே பள்ளிமடத்திலிருந்து வடக்கே பிரான்மலை வரையான பகுதி அனைத்தும் பரவலாக போர்கள் பல தொடர்ந்தன. என்றாலும், இறுதி வெற்றி பரங்கியர் பக்கமே இருந்தது. மானம், வீரம் என்ற சொற்களுக்கும் உள்ள பொருளும் பயனும் துரோகம், கைக்கூலி என்ற சொற்களுக்கும் அமைந்திருந்தன. பரங்கியரை எதிர்த்துப் போரிட்ட வீரர்களிடையே சாதிப்

For more ebooks vist: http://getmyebook.in/

பிரிவினையை புகுத்தி கும்பெனியார் அவர்களது ஐக்கியத்தைப் பலவீனப்படுத்தினர். முந்திய சிவகங்கை அரசப் பரம்பரையைச் சேர்ந்த படமாத்துார் ஒய்யத் தேவருக்கு சோழபுரம் ஆலயத்தில் ஜமீன்தார் பட்டம் சூட்டப்பட்டு சிவகங்கையின் அதிகார பூர்வமான ஆட்சியாளராக பிரசித்தம் செய்யப்பட்டார்.[16] அதுவரை தோளொடு தோள் சேர்த்து கும்பெனியாருக்கு எதிராக போரிட்ட வீரர்கள் இப்பொழுது சிவகங்கை ஜமீன்தார் பக்கமும், மருது சேர்வைக்காரர்கள் பக்கமும் பிரிந்து நின்றனர். தேவர், சேர்வைக்காரர் என்ற ஜாதி அடிப்படையிலான இரண்டு அணிகள் உருவாகியதால் பரங்கியர் எதிர்ப்பு அணி நிலைகுலைந்தது.

மருது பாண்டியரும் அவர்தம் குடும்பத்தினர், தோழர்கள். உறவினர், குடிமக்கள் அனைவரும் போரில் களபலியாயினர், அல்லது ஆங்காங்கு கோட்டை வாசல்களில் தூக்குக் கயிற்றில் தியாகிகளாகி தொங்கினர். கும்பெனியாரின் மூர்க்கத்தனமான கோரச் செயல்களினால் இந்தப் பகுதிகளில் மக்கள் கிளர்ச்சி இப்பொழுது மூன்றாவது முறையாக நசுக்கப்பட்ட பொழுதும்[17] அவர்களது மேலிடம் எதோ ஒரு வகையான இயல்பு அற்ற நிலைமையினால் பீதி கொண்டிருந்தது. மீண்டும் ஒரு கிளர்ச்சி ஏற்பட்டால்? காரணம் மருது சகோதரர்களின் தலைமையில் இயங்கிய கிளர்ச்சிக்காரர் மயிலப்பனையும் மதுரை மாவட்ட பாளையக்காரர்கள் சிலரையும் எவ்வளவோ முயற்சித்தும் கும்பெனியாரால் கைது செய்ய முடியவில்லை. அவர்கள் கிளர்ச்சியை மீண்டும் துவக்கினால் அவர்களுக்கு ஆதரவு அளிக்கத்தக்க

For more ebooks vist: http://getmyebook.in/

வேறு தலைவர்கள் இருக்கின்றனரா என்பதை கும்பெனியார் சிரத்தையுடன் ஆராய்ந்து பார்த்தனர். ஆம்! இன்னும் ஒருவர் இருக்கிறார். மிகவும் பாதுகாப்பான சிறைக்குள்! அவர் இராமனாதபுரம் அரசர் முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதி என்பது அவர்கள் கண்ட முடிவு.

திருச்சிராப்பள்ளிக் கோட்டையில் அவரைத் தொடர்ந்து சிறையில் வைத்திருப்பது தங்களுக்கு ஆபத்தாக முடியும் என கும்பெனியார் கருதினர். முதுகுளத்துார் புரட்சியின் போது அவரை தொலை துாரத்தில் உள்ள ஆந்திர மாநிலத்திற்கு அப்புறப்படுத்த வேண்டும் என கலெக்டர் லூவிங்டன் பரிந்துரைத்திருந்தார்.[18] ஆதலால் திருச்சிக் கோட்டையில் இருந்து அவரை அப்புறப்படுத்துவது என்ற முடிவு ஏற்பட்டது. அதனை செயல்படுத்தினால் தான் தெற்கேயுள்ள கும்பெனி கலெக்டருக்கும் மற்ற தளபதிகளுக்கும் மனநிம்மதி ஏற்படும் என்ற நிலை!

1. ↑ Kathirvelu, S. Dr., History of Marawas, (1972), p. 220.
2. ↑ Board of Revenue Proceedings, Vol. 226 (2-5-1799), pp. 3782-86.
3. ↑ Madurai Collectorate Records, Vol. 1122 (1799), 25–5–1799.
4. ↑ Madurai Collectorate Records, Vol. 1146 (1803. AD), p. 45.
5. ↑ Military Consultations, Vol. 1054, 4-9-1800, p. 2 б13.
6. ↑ Military consultations, 105 A, 4-9-1800, p. 2613
7. ↑ Military consultations, Vol. 105 A, 4–9–1800, p. 2608-22.
8. ↑ Revenue consultations, Vol. 105, 21–8–1800, pp. 2615-16.
9. ↑ Military consultations, Vol. 10.5 A, 4-9-1800, pp. 2611-12, 265 2.
10. ↑ Rajayyan, K. Vol. South Indian Rebellion, 1800, 1801. p. 114.

For more ebooks vist: http://getmyebook.in/

11. ↑ Madurai Collectorate Records. Vol. 1133. 17-3-1801. p. 197.

12. ↑ Date I. C. 5., Tinnenely Gazetteer (1917), p. 85.

13. ↑ குரு குகதாஸப்பிள்ளை, திருநெல்வேலி சீமைச் சரித்திரம் (1931), பக். 263.

14. ↑ குரு. குகதாஸப்பிள்ளை, திருநெல்வேலி சீமைச் சரித்திரம் (1931), பக். 271.

15. ↑ Military Consultations, Vol. 285 A, 11-6-1801. pp. 5051-52.

16. ↑ Military consultations, Vol. 285 A. 6-7–1801, p. 4875 Revenue consultations, Vol. 110, 24-7-1801, p. 1361-69.

17. ↑ Military consultations, Vol. 289, 29-10-1801, p. 7728

18. ↑ Madurai collectorate Records, Vol. 1157, 27-4-1799 pp. 75-78.

---

For more ebooks vist: http://getmyebook.in/

# 1 2
# சென்னைக் கோட்டையில்

1802-ம் ஆண்டு பிறந்தது.

மறவர் சீமையின் மகத்தான மக்கள் புரட்சி மூன்றாவது முறையாக வரலாற்றில் தோல்வி கண்டது. கிளர்ச்சியைத் தலைமை தாங்கிய மயிலப்பனையும் முத்துக்கருப்பத் தேவரையும் கைக்கூலிப் படைகள் தேடிப்பிடித்து கும்பெனியாரிடம் ஒப்படைத்தது. அவர்களது முயற்சிக்கான சம்மானத்தையும் பெற்றனர்.[1] தங்களை எதிர்ப்பதற்கு மாற்றாரே இல்லையென்னும் அளவில் மறவர் சீமையை அடிமைப்படுத்தி விட்ட மறவர்களது மகுடமான கோட்டைகளை ஆங்காங்கு இடித்துத்தள்ளினர். தங்களது உடன் பிறப்புகளாக உதவும் ஆயுதங்களையும் மறக்குடி மக்களிடமிருந்து கைப்பற்றினர்.[2] மீண்டும் தங்களுக்கு எதிராக இந்த மக்கள் ஆயுதம் ஏந்திவிடக் கூடாது என்ற அச்சமும் கவலையும் கும்பெனியாருக்கு இருந்தது. அடுத்து, அதுவரை இல்லாத அளவு, வறுமையிலும், வறட்சியிலும், நைந்து போன குடிமக்களைக் கசக்கிப் பிழிந்து கிஸ்திப்பணம் வசூலித்தனர். கும்பெனியாரது நிர்வாகத்தில் மறவர் சீமையில் முந்தைய நான்கு ஆண்டுகளில் அவ்வளவு பணம்-அதாவது ரூ. 6,49,889 (1,85,285 ஸ்டார் பக்கோடாக்கள்)-வசூலிக்கப்படவில்லை.[3]

தமிழ்நாட்டின் வட எல்லையில் உள்ள சென்னை செயின்ட் ஜார்ஜ்கோட்டை ஆங்கில கிழக்கிந்திய

For more ebooks visit: http://getmyebook.in/

கம்பெனியின் தலைமை இடமாக இருந்து வந்தது. அங்கு வெடிகுண்டினால் கூட சேதமுறாத பிறைவட்ட அறை ஒன்றிற்கு இராமனாதபுர மன்னர் மாற்றம் செய்யப்பட்டார்.[4] கோட்டை தளபதி பிராக்கிலி எப்பொழுதாவது அவரைச் சென்று சந்திப்பார். அவரிடத்தில் பாணர் எதைப் பற்றியும் உரையாடுவது இல்லை. வெள்ளையரைக் கண்டாலே வெறுப்பும் வேதனையும் அடையும் நிலையில் உள்ள அவரிடம் உரையாடுவதற்கு என்ன இருக்கிறது; ஓரிரண்டு சொந்த பணியாட்கள் மட்டும் மன்னருடன் சென்னைக் கோட்டைக்குள் தங்கி இருந்தனர். முன்னைப் போல இராமநாதபுரத்திலிருந்து அடிக்கடி செய்திகள் பெறுவதற்கு இயலாத நிலை - என்றாலும் இராமனாதபுரத்திலிருந்து அவரைச் சந்திப்பதற்காக வந்த ஊழியர்களும் உறவினர்களும் அவரை விட்டு பிரிந்து செல்ல மனம் இல்லாமல் சென்னையிலேயே தங்கி விட்டனர்.[5] இராமன் இருக்கும் இடம் தானே அயோத்தி கும்பெனியாரது ஆவணம் ஒன்றில் கண்டுள்ளபடி அவர்களது மொத்த எண்ணிக்கை 99 ஆகும்.[6] மன்னருக்கு தனிமையும் எமாற்றமும் விரக்தியும் தோன்றாதவாறு அவர்கள் கவனித்து வந்தனர்.

அங்கும் ஏழு ஆண்டுகள் ஓடி மறைந்து விட்டன.

மொத்தத்தில் பதினான்கு ஆண்டுகள் கோட்டைக்குள் சிறைவாசம், கோட்டைச் சுவற்றிற்குள் இரும்புக்கதவுகளின் வல்லைக்குள் எழுதரிய

For more ebooks vist: http://getmyebook.in/

பெருங்கொடுமைச் சிறைவாழ்க்கை. நொடிப்பொழுதில் அதனை எண்ணிப் பார்ப்பது எளிதானது அல்ல. நைந்து நலிந்த உணர்ச்சிகளை மாய்த்து, உள்ளத்தை முடுக்கி விடும் ஒவ்வொரு விநாடியும் அங்கு எத்தனையோ யுகங்களுக்கும் கூடுதலான காலவரையை உடையனவாக இராமனாதபுரம் மன்னர் கருதினார். இத்தனை ஆண்டுகளையும் சிறைக்குள் கழித்ததே இணையற்ற சாதனையாகும்!

1809-ம் வருடம் ஜனவரி மாதம்.

சிறை வாழ்க்கையினால் செல்லரித்துப் போன மன்னரது உடலில் நலிவு ஏற்பட்டது, நீடித்தது. உணவு எதையும் உட் கொள்ள இயலாத இறுதிநிலை வந்துவிட்டது.[7] கோட்டையிலுள்ள இராணுவ மருத்துவர் டாக்டர் ஒயிட் அளித்துவந்த மருத்துவ உதவி பயன் அளிக்கவில்லை. மன்னருக்கு அவரது இறுதிநிலை புரிந்துவிட்டது. இத்தனை ஆண்டுகால சோதனைக்கு இடையில் தாம் விரும்பி வாழ்வதற்குரிய சுதந்திர மண் கிடைக்கவில்லை என்றாலும் சாவதற்காவது இருக்க வேண்டும் என அவர் எண்ணி இருத்தல் வேண்டும். வெள்ளைப் பரங்கிகளின் அடிமைச் சிறையில் அவரது வாழ்வை முடித்துக் கொள்ள விழையாததால் அவரது உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது.

இதனை உணர்ந்த மன்னரது நண்பர் சர்க்காரியாபுரம் வெங்கடாசலம் செட்டியார் மன்னருக்கு இடமாற்றம் ஏற்படுத்தினால் நல்லது என நம்பினார். கும்பெனியாரது மருத்துவர் ஒயிட்டும்

For more ebooks vist: http://getmyebook.in/

மன்னரது உடல் நலம் பெற இடமாற்றமும் புதிய காற்றும் பயன்படும் என்பதை கோட்டைத் தளபதி மேஜர் பிராக்கிலியிடம் தெரிவித்தார். செட்டியாரது பிணையிலும் பொறுப்பிலுமாக கோட்டையிலிருந்து, சென்னை கோட்டைக்கு அடுத்துள்ள பிளாக் டவுனில் உள்ள செட்டியாரது விட்டிற்கு மன்னரை அனுப்பி வைக்க தளபதி இசைந்தார். 22-1-1800 அன்று மாலையில் வீரர் ஒருவர் பாதுகாப்பில் மன்னரை பிளாக் டவுனுக்கு அனுப்பி வைத்தார். உற்றாருக்கும் ஊழியருக்கும் ஆறுதல் அளிக்கும் வகையில் ஒருநாள் முழுவதும் உணர்வுடன் இருந்த சேதுபதி மன்னர் 23 24-1-1809 அன்று இரவு வரலாற்றில் வாழும் பொன்றாத புகழ் உடம்பு எய்தினார்.[8]

மன்னரது மறைவு பற்றிய செய்தியை அறிந்த தளபதி பிராக்லி அவருக்கு செய்ய வேண்டிய இறுதிக் கடன்களை முறைப்படி நிறைவேற்றி வைக்குமாறு வெங்கடாச்சலம் செட்டியாரை கேட்டுக்கொண்டார். கும்பெனியாரது காவலில் இருந்த சேதுபதி மன்னர் இறந்துவிட்டார் என்ற செய்தி சென்னைப் பட்டினத்தில் காட்டுத்தி போல் பரவியது. பட்டினமே திரண்டு வந்தது போன்று மக்கள் கூட்டம், மன்னருக்கு இறுதி அஞ்சலி செலுத்த பிளாக்டவுனில் குழுமியது.[9] மன்னரது இறப்பு அவரது சொந்த சீமையில், சொந்த ஊரில் ஏற்பட்டிருந்தால் அவருக்கு இறுதி சடங்குகள் எந்த அளவுக்கு ஆடம்பரமான கண்ணியமான முறையில் மேற்கொள்ளப்படுமோ அதே முறையில் 24- I-1.1809 அன்று நிறைவேற்றி வைக்கப்பட்டன.[10]

For more ebooks vist: http://getmyebook.in/

இந்த வைதீக முறைப்படியான கோதானம், பூதானம், சொர்ணதானம், தசதர்மம், பூரி, சொர்ணபுஸ்பம் ஆகிய வைதீக சடங்குகள் முடிந்தவுடன் அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் அரச உடையில் மன்னரது சடலம் கிடத்தப்பட்டது. வெண்குடை முன்னே எடுத்துச் செல்ல கட்டியக்காரர்கள், சாமரம் வீசுபவர்கள், காளாஞ்சி ஏந்துபவர்கள், ஆலவட்டம் பிடித்தவர்கள், தேவரடியார்கள், தீவட்டிக்காரர்கள் ஆகியோர் முன்னே நடந்து செல்ல தாரை, தம்பட்டை, மேள தாளம் முழங்க, பணியாளர்கள் வழியெங்கும் பூக்களைச் சிதற வாணவேடிக்கைகளுடன், பல்லக்கு ஊர்வலம் மயான கட்டம் அடைந்தது. அங்கு ஐம்பது வாழை மரங்கள் நடப்பட்டு தோரணங்களுடன் மயான மேடை அமைக்கப்பட்டு இருந்தது. முப்பது வீசை நிறையுள்ள சந்தனக் கட்டைகள் அடுக்கிய சிதையில் சேதுபதி மன்னரது உடல் வைக்கப்பட்டது. மக்களது இறுதி அஞ்சலிக்குப் பிறகு அவரது மூன்றாவது நான்காவது மனைவிகளின் மைந்தர்களான பட்டாபி இராமசாமித் தேவர், நெருஞ்சித் தேவர் என்ற இளம் சிறுவர் இருவர், சிதைக்குத் தீ மூட்டினர். கும்பெனியார் மீது மன்னர் கொண்டிருந்த வெஞ்சினம் வெளிப்பட்டது போல, சிதையின் நாலாபுறமும் சீறி எழுந்த அக்கினிச் சூழலில் மன்னரது உடல் எரிந்து, மறைந்து சாம்பல் ஆகியது.

மறவர் சீமையின் மானத்தையும் ஐக்கியத்தையும் காக்க அந்நியரை எதிர்த்த இணையற்ற மாவீரன், மறவர் திலகம் மறைந்து விட்டார். தம்முடைய நாற்பத்து எட்டு ஆண்டுகால வாழ்க்கையில் இருபத்து நான்கு

For more ebooks vist: http://getmyebook.in/

ஆண்டுகள் கும்பெனியாரது வெஞ்சிறையில் கழித்த தியாகி மறைந்து விட்டார். அவரது கம்பீரமான தோற்றத்தையும் கடுமையான நடவடிக்கைகளையும் கண்டு அஞ்சிய கும்பெனியாரது கட்டுப்பாட்டினின்றும் மறைந்து விட்டார். முற்றுப்பெறாத தமது போராட்டத்தில், வாழ்வின் முடிவு வந்து விட்டதே என்ற வேதனையில் மன்னர் மறைந்து விட்டார். ஆனால் மறவர் சீமை வரலாற்றில் முத்துராமலிங்க சேதுபதி மறைந்து விடவில்லை. செயற்கரிய சாதனைகளைச் செய்தவர்களை, புராணங்களிலும் இலக்கியங்களிலும் சிரஞ்சீவிகளாக என்றென்றும் வாழ்கின்றன என வழுத்துகின்றன அல்லவா? அவர்களைப் போன்று. சேதுபதி மன்னரும் விடுதலைப் போர் இலக்கியத்தில் அந்நிய எதிர்ப்பை அடியோடு சாடிய இதிகாசத்தில், என்றென்றும் வாழ்ந்துகொண்டே இருக்கிறார். இந்தத் துறையில் இவருக்கு, முன்னாள் இருந்தவர்களை பலவகையிலும் விஞ்சியவராக பின்னால் வந்தவர்களுக்கு பெருமை சேர்க்கும் பாரம்பரியத்தை உருவாக்கிய முன்னோடியாக இவர் விளங்குகிறார் என்பதை வரலாறு விளம்புகிறது.

* * *

கி.பி. 1736-ல் நாயக்க அரசு முடிந்து, ஆற்காட்டு நவாப்பு ஆதிக்கம் தமிழகத்தில் புகுத்தப்பட்ட பொழுது, தன்னரசாக விளங்கியவர்கள் தஞ்சாவூர் அரசரும், இராமனாதபுரம் சேதுபதி மன்னரும் ஆவர். நெல்லை, மதுரை, திருச்சிப் பகுதிகளில் முந்தைய நாயக்க மன்னருக்கு கட்டுப்பட்டிருந்த பாளையக்காரர்களில் சிலர் புதிய எஜமானரான ஆற்காட்டு நவாப்பை

For more ebooks vist: http://getmyebook.in/

எதிர்க்கும் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இவர்களுக்கு தலைமை தாங்கியவர் நெற்பட்டும் செவ்வலைச் சேர்ந்த பூலித்தேவர். ஆற்காட்டு நவாப்பை அவர் எதிர்த்தாரே ஒழிய அவரது தமையனாரது மதுரை ஆளுநருமான மகபூஸ்கானை அவர் எதிர்க்க வில்லை. இன்னும் சொல்லப்போனால் அவரையும் தமது அணியில் சேர்த்துக்கொண்டு ஆற்காட்டு நவாப்பை பூலித்தேவர் எதிர்த்துப் போரிட்டார்.[11] அவரது இயக்கத்திற்கு நெல்லைச் சீமை பாளையக்காரர்கள் அனைவரும் முழுமையான ஆதரவு அளிக்கவில்லை. [12] மறக்குடி மக்களது மூத்தக் குடிமகனான செதுபதி மன்னரது உதவியையும் அவர் பெறவில்லை. அத்துடன், நவாப்பின் படைகள், பரங்கியருடன் இணைத்து தலைமை தாங்கிய கம்மந்தான் கான்சாகிப்பின் பண்பட்ட போர்த்திறனுக்கு முன்னால் பூலித்தேவரது படை சிதறி ஓடியது[13] தோல்வியைத் தாங்க முடியாத பூலித்தேவர் நெல்லைச்-சீமையிலிருந்து தப்பி வந்து மறவர் சீமையில் தஞ்சம் புகுந்தவராக அங்கேயே கி.பி. 1761-ல் மறைந்து போனார்.[14] அவரது காயமும் பேராற்றலும் காட்டில் ஒளிர்ந்த நிலவாக பயனற்றுப் போய்விட்டன.

அடுத்து தமிழக வரலாற்றில் ஆற்காட்டு நவாப்பையும் கும்பெனியாரையும் எதிர்த்து தியாகியானவர் கம்மந்தான் கான் சாகிபு. இவை பாளையக்காரரோ அல்லது குறுநிலக்கிழாரோ அல்ல. மறவர் சீமையைச் சேர்ந்த பனையூர் என்ற சிற்றூரில் பிறந்த சாதாரண குடிமகன். கும்பெனியாரின் சுதேசி

For more ebooks vist: http://getmyebook.in/

வீரர் களது அணிக்கு தளபதியாக இருந்தவர். காலமெல்லாம் கும்பெனியாருக்கு தனது உதிரவேர்வையை உழைப்புடன் வடித்து வழங்கி உன்னத பதவிக்கு வந்தவர். தமது வீரத்தால், நிர்வாகத் திறமையால், நவாப்பின் சொத்தாக தக்கவைத்து நலம் பல விளைய காரணமாக இருந்த மதுரைச் சீமையை, தம்முடைய கோரிக்கைக்கு புறம்பாக, மாற்றானுக்கு நவாப் குத்தகை வழங்கியதால் அவர்மீது கொண்ட வெஞ்சினத்தால் வீறுகொண்டு எழுந்தவர். நவாப்பின் பின்னே வலிமைமிக்க கும்பெனியாரின் ஆயுத பலம் இருப்பது தெரிந்தும் மக்கள் பலத்துடன் மாற்றானை போரில் சந்தித்தார். அதுவரை அவரிடம் தோழமையுடன் இருந்து வந்த திருவாங்கூர் அரசரும், இராமனாதபுரம், சிவகங்கை மறவர்களும், அவருக்கு உதவிசெய்ய முன்வரவில்லை. அவர்களை உதவவிடாமல் கும்பெனியாரும் நவாப்பும் தடுத்து விட்டனர்.[15] என்றாலும் தமது தாளாத ஆற்றலில் நம்பிக்கை கொண்ட கான்சாகிப் தம்மைப் பொருதிய நவாப்பையும் அவரது துணைவரான வலிமை மிக்க பரங்கியரையும் மதுரை கோட்டை முற்றுகையில் திக்குமுக்காடச் செய்தார். ஓராண்டுக்கு மேலாக அந்த முற்றுகைப்போரில் பல உத்திகளைப் பயன்படுத்தியும், பயன் அளிக்காததினால், இறுதியாக நவாப், துரோகிகளைக்கொண்டு கான்சாகிப்பை பிடித்து 16-10-1764-ல் தூக்கில் போட்டுக் கொன்றார்.[16]

அன்றைய தமிழ்நாட்டில், ஏன், இந்திய துணைக்கண்டத்தில் இந்த இருபெரும் வீரர்களைத் தவிர, அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து போர் முழக்கம்

For more ebooks vist: http://getmyebook.in/

செய்தவர் வேறு யாரும் இலர். அந்த தியாகிகளது நாட்டுப்பற்றுக்கும் போற்றலுக்கும் தமிழ் மறவர் என்றென்றும் தலைதாழ்த்தி மரியாதை செய்ய கடமைப் பட்டுள்ளனர். இந்த நாட்டின் விடுதலைப் போர் என்ற பார காவியத்தின் பல்வேறு பகுப்புகளில், அவர்களது தனித்தன்மை, இலட்சியம், அரசியல் நோக்கு, மக்கள் ஆதரவு, போன்ற பண்புகளை ஒப்பு நோக்கி ஆராயும் பொழுது, ஆண்டிலும் அனுபவத்திலும் மிகவும் இளையவரான இராமனாதபுரம் முத்து ராமலிங்க சேதுபதி மன்னர் இந்த இருபெரும் வீரரையும் பல வகையிலும் விஞ்சி நிற்கின்றார். முதலாவதாக அவர் ஒரு தன்னரசு பரம்பரையில் வந்தவர். அவரது இளம் உள்ளத்தில் அந்நிய ஆதிக்க எதிர்ப்பு மிகப்பெரும் அளவில் வேரோடி நின்றது. அவரது குறுகிய கால வாழ்க்கை நிகழ்ச்சிகளின் சிறப்பு பகுதிகள் அவர் ஒரு சுதந்திர வீரர், விடுதலை வேட்கை கொண்டவர் என்பதை விளம்புகின்றன. இன உணர்வும் மறப்பண்பும் மிகுந்த அவர், கும்பெனியாரது ஒவ்வொரு கட்டளையையும் எதிர்த்து புறக்கணித்ததுடன் அவர்களது ஆதிக்கப் பேராசைக்கு குறுக்கே நின்று வந்தார். இதன் காரணத்தினால் இந்த நாட் டில் நடைபெற்ற அந்நிய எதிர்ப்பு கிளர்ச்சியில், பரங்கியரை அழித்தொழிக்கும் புரட்சித் தலைவராக ஒளிவீசி உயர்ந்து உள்ளார்.

அவரைத் தொடர்ந்து, பிற்காலத்தில் தமிழகத்தில் பாஞ்சைப்பதி வீரபாண்டிய கட்டபொம்மு, சித்திரங்குடி மயிலப்பன். சிவகங்கை மருது சேர்வைக்காரர்கள், மீனங்குடி முத்து கருப்பத்தேவர், தேவதானப்பட்டி

For more ebooks vist: http://getmyebook.in/

பூசாரிநாயக்கர், விருபாட்சி கோபால நாயக்கர், பழனி முத்து சேர்வைக்காரர், காடல்குடி நாயக்கர், குளத்துார் நாகராச மணியக்காரர் ஆகிய மக்கள் தலைவர்கள் வெள்ளையருக்கு எதிராக வீறு கொண்டு எழுந்து அவர்களுடன் இறுதிப்போர் நடத்துவதற்கு முன்னோடியாக இந்த சேதுபதி மன்னரது விடுதலைப் போக்கும் தியாக வாழ் அம் வழிகாட்டியாக ஒளியூட்டுவதை வரலாறு காட்டுகிறது.

இன்னும் தெளிவாக குறிப்பிடுவது என்றால், இந்திய துணைக்கண்டத்தில், இன்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் வெள்ளையருக்கு எதிரான விடுதலைக் கிளர்ச்சி, தெற்கிலிருந்து துவங்கி, நாடு தழுவிய தேசியப் புரட்சியாக பரிணமித்து எழுவதற்கு முன்னர், வெள்ளையரது ஆதிக்க கொள்கையை அரும்பு பருவத்திலே அழித்து ஒழிக்க தன்னரசு முழக்க மிட்டவர் இந்த சேதுபதி மன்னர். இவரது இலட்சியச் சிந்தனையை, பிற்காலத்தில் எழுந்த சின்னஞ்சிறு கிளர்ச்சிகளும், ஆயுதப் போராட்டங்களும் மகத்தான மக்கள் இயக்கங்களும், எதிரொலித்தன . மாற்றானை நாட்டை விட்டு விரட்டச் செய்த மகோன்னத புரட்சியாக மலர்ந்தது. ஆனால் சேது மன்னரது பரங்கியர் ஆதிக்க எதிர்ப்பு போக்கிற்கு ஏற்ற பரிசாக அவரை வாழ்நாள் முழுவதும் சிறையில் அடைத்து வைத்துக் கொன்றனர். தங்களை எதிர்க்கும் நாட்டுப்பற்று மிக்கவர்களை பயமுறுத்தி நடுங்க வைப்பதற்காக கும்பெனியார் கையாண்ட உத்தி இது.

அவர்களுடைய ஆவணங்கள் இந்த வரலாற்று உண்மையை மூடிமறைப்பதற்காக சேதுபதி மன்னர்

For more ebooks vist: http://getmyebook.in/

கொடுமையாக ஆட்சி செய்தார். குடிகளிடம், குறிப்பாக நெசவாளர்களிடம் கூடுதலான வரிகளை வசூலித்தார் என்ற புனைந்துரைகளை வரைந்துள்ளன. அவை அனைத்தும் உண்மை என்றே ஏற்றுக் கொண்டாலும் கூட, அவரை 8-2-1795 Political Despatches to England, Vol. II. 4-3-1795, pp. 338-40. அன்று மறவர் சீமையின் ஆட்சிக் கட்டிலிலிருந்து நீக்கிய பிறகும்கூட, அவரை இறக்கும்வரை தொடர்ந்து பதினான்கு ஆண்டுகள் ஏன் சிறைக்குள் அடைத்து வைத்திருக்க வேண்டும்?

சிவகங்கைச் சேர்வைக்காரர்களுக்கு எதிராக சேதுபதி போர் தொடுத்தார் என்பது மற்றொரு புனைந்துரை. ஆங்கிலேயரது செல்லப்பிள்ளைகளாக ஆரம்பகாலத்தில் நடித்துவந்த அதே மருது சேர்வைக்காரர்களை கும்பெனியார் தங்களது எதிரிகள் என பகிரங்கமாக அறிவித்ததுடன் அவர்களது கிளர்ச்சியையும் தங்களது மிருக பலத்தாலும், துரோக உபாயங்களாலும் தோல்வியுறச் செய்து, அவர்களையும் திருப்பத்துரர் கோட்டையில் 2 1-10-1801-ல் தூக்கில் தொங்கவிட்டனர்.[17] அதற்குப் பிறகும் கூட சேதுபதி மன்னரை ஏன் சிறையில் வைத்திருக்க வேண்டும்?

அப்பொழுது தமிழ்நாட்டிலிருந்து மற்றொரு தன்னரசைான தஞ்சாவூரின் அரசர் அமீர்சிங்கை ஆளத் தகுதியற்றவர் என நீக்கிவிட்டு கும்பெனியார் தங்களுக்குச் சாதகமாக இருந்த இளவல் சரபோஜிக்கு மன்னர் பட்டம் சூட்டிய பின்னர் அவருக்கு ஒய்வு வழங்கி தஞ்சை தரணியையும் தங்களது சொத்தாக சேர்த்துக் கொண்டனர்.[18] அதனைப் போன்று

For more ebooks vist: http://getmyebook.in/

இராமநாதபுரம் மன்னரை பதவிநீக்கம் செய்த பின்னர் அவரது வாரிசுக்கு ஆட்சியுரிமை அளிக்கப்போவதாக அறிவித்தனர். எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு பெருந்தொகையை கையூட்டாகப் பெற்றுக் கொண்ட பிறகு மங்களேஸ்வரி நாச்சியாரை மறவர் சியையின் பிரதிநிதியாக (ஜமீன்தாரினி) 20-2-1803-ல் ஏற்படுதினர்.[19] அதன் பின்னரும் கூட முத்துராமலிங்க சேதுபதியை விடுதலை செய்யவில்லையே ஏன்?

திருச்சிக் கோட்டையில் கைதியாக இருந்த சேதுபதி மன்னர் தாம் செய்த குற்றம் என்ன என கும்பெனி கவர்னரை கோரினார். பல மடல்களை அனுப்பி வைத்தார். பதில் ஏதும் வேலை. பார் புகழும் மறவர் சீமையின் மன்னராக இருந்த தங்கள் முன்னோர்களைப் போன்று முறை தவறாத ஆட்சி செய்தது குற்றமா? அல்லது காடு திருத்தி கழனி சேர்த்து, கண்மாய் நிறைத்து, கோவிலும் மடமும் சமைத்து, பஞ்சமும் பசியும் நீக்கி, வளமை சேர்த்தது குற்றமா? தம்மீதான குற்ங்களை ஆராய்ந்து தீர்ப்பு வழங்க, விசாரணை ஏற்படுத்துமாறு அவர் கோரினாரே அந்த குற்றச்சாட்டுகள் விசாரனை செய்யப்பட்டனவா? அல்லது அந்த குற்றங்களுக்கு தண்டனை இல்லை என முடிவு செய்யப்பட்டதா? இல்லையே ஏன்? பரங்கியரின் பெரும் பிரதிநிதிகளான சென்னை கவர்னரும் கல்கத்தா கவர்னர் ஜெனரலும், மன்னரது கோரிக்கையை ஏற்று ஏன் நீதி விசாணை செய்யவில்லை? அவர்கள் நாட்டு நீதி வழியில் கூட செயல்படவில்லை. ஏன்?

For more ebooks vist: http://getmyebook.in/

அநீதி நிகழ்ந்து இருந்தால்தானே குற்றச்சாட்டுகளும் நீதி விசாணையும் தேவைப்படும். ஆனால் அன்றைய அரசியலில், அநீதிக்கு அடைக்கலம் கொடுத்து அவைகளை அமுல்படுத்தும் அக்கிரமக்காரர்களாக வெள்ளையர்கள் விளங்கிக் கொண்டிருந்த அவர்களது அக்கிரம ஆட்சியின் பிரதிபலிப்பாக அவர்களது இனத்தவர்களே, அமெரிக்க நாட்டில் கி.பி. 1776-83 வரை அவர்களை எதிர்த்துப் போரிட்டனர். வெற்றியும் விடுதலயும் பெற்றனர். உலக வரலாற்றில் அந்த இயக்கம் அமெரிக்க நாட்டு விடுதலைப் போராக இன்றும் போற்றப்படுகிறது. அவர்களது சிறந்த அரசியல்வாதியான எட்மண்ட்பர்க் இந்திய நாட்டில், பரங்கியர் இழைத்த கொடுமைகளை இங்கி லாந்து பாராளுமன்றத்தில் எடுத்துக்காட்டி எட்டு ஆண்டுகள் ஆங்கில ஆட்சியையும் பிரதிநிதிகளையும் சாடியபொழுதும் வரலாற்றின் படிப்பினை புரிந்து கொள்ளாமல் நாடு பிடித்து ஆளும் நசிவுக் கொள்கையில் அவர்கள் நிலைத்து நின்றனர்.

நீதியும் நேர்மையும் சேதுபதி மன்னரை சிறையில் இருந்து விடுதலை செய்ய வேண்டும் என அவர்களை நினவூட்டி இருக்கலாம். ஆனால், அதே நேரத்தில் அவர்கள் நெஞ்சிலே மறவர் சீமையைப் பற்றிய பயமும் பீதியும் நிரந்தரமாக நிறை , திருக்க வேண்டும். சேதுபதி மன்னர் சிறையில் இருந்து வெளியே வந்தால் ஏற்படும் நிலைமையை அவர்களால் எங்ஙனம் கட்டுப்படுத்த முடியும்? திருச்சிக் கோட்டை சிறையில் இருக்கும் பொழுது அவரது பெயரைப் பயன்படுத்தி பதினாயிரக்கணககான மறவர்களை

For more ebooks vist: http://getmyebook.in/

மயிலப்பன் மன்னருக்கு ஆதரவாக கிளர்ந்தெழுமாறு செய்தார். இப்பொழுது மன்னரே நேரில் வந்து மறவர்களது உதவி கோரினால், மறவர் சீமையில் உள்ள அவைவரும் அல்லவா பரங்கியருக்கு எதிராகப் புறப்படுவர். அத்துடன் நெல்லைச்சீமை பாளையக்காரர்களும் திருவாங்கூர் அரசர் வீரர்களும், மேல்நாட்டு கள்ளர்களும் இன்னும் சிவகங்கை சீமை, படமாத்துார் மறவர்களும் அல்லவா சேதுபதி மன்னாது உதவிக்கு ஓடி வருவார்கள். பிறந்த மண்ணின் மீதுள்ள பற்றும். அந்நிய எதிர்ப்பு உணர்வும், உள்ளத்தில் நிறைத்து அணி திரளும் மக்களை எந்த சக்தியினால் எதிர்க்க முடியும்?

இதனால் தான் சேதுபதி மன்னரை மக்களிடமிருந்து பிரித்து கொடுஞ்சிறையில் அடைத்து அவரது வாழ்நாள் முழுவதையும் பாதுகாப்புக் கைதியாகவே கழித்து முடிக்குமாறு செய்தனர். தீரர் திப்புசுல்தானுக்கும், வீரர் கான்சாகிப்புக்கும் அஞ்சாத கும்பெனியார் மறவர் சீமையின் சேதுபதி மன்னருக்கு அஞ்சி நடுங்கினர், என்பது வரலாறு காட்டும் உண்மையாகும். மன்னரது வாழ்வுடன் மக்களது தன் மான உணர்வும், விடுதலை வேகமும் மங்கி மறைந்துவிடும் என்பது அவர்கள் கொண்டிருந்த முடிவு. ஆனால் அடுத்தடுத்து நிகழ்ந்த நிகழ்ச்சிகள் அவர்களது கணிப்பைப் பொய்யாக்கின. 1799-ல் வெடித்த முதுகுளத்து கிளர்ச்சி பாஞ்சாலங்குறிச்சிப் போர், 1800-ல் மதுரை, திண் டுக்கல் பகுதி பாளையக்காரர்களது தீவிரமான கிளர்ச்சி, 1801-ல் மருது சகோதரர்கள் ஆங்கிலேயருக்கு எதிராக தொடுத்த

For more ebooks vist: http://getmyebook.in/

போர். 1806 ல் வேலூர் கோட்டையில் கும்பெனித் தளபதிகளைக் கொாறு சிப்பாய்கள். கோட்டையை கைப்பற்றிய கிளர்ச்சி 1808 ல் ராமன் நாயரது வயநாட்டுக் கிளர்ச்சி, 1809 -ல் முருவாங்கூரில் தளவாய் வேலுத்தம்பியின் எதிர்ப்பு. 1857-ல் மாநிலங்களில் பரவிய சிப்பாய்களது சூறாவளிப் புரட்சி...

இவ்விதம் நீண்டு தொடர்ந்து, வெள்ளையருக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்த இயக்கங்கள், புரட்சிகள், இவையனைத்தும் மாறவர் சீமையில் மட்டும் அல்லாது இந்திய துணைக்கண்டத்தின் வடகோடிவரை பரவின; தொடர்ந்தன. சுமார் இருநூறு ஆண்டு காலம் நீடித்த இந்த வீர வரலாற்றின் முடிவு நமக்கு சுதந்திரத்தை விடுதலையை பெற்று வழங்கியது. ஆதிக்க வெறியர்களுக்கு மரண அடி அளித்தது அவர்களை நமது நாட்டை விட்டு ஓடச் செய்தது.

இறைவனது சந்நிதானத்தில் இணைந்து சுடர்விடும் இலட்ச தீபங்களை ஒளி ஏற்றுவதற்கு ஒரே ஒரு சுடர்தான் பயன்படுகிறது. அதைபோன்று இந்த நாட்டில் இலட்சக்கணக்கான தொண்டர்கள், தீரர்கள். தியாகிகளது உள்ளங்களில், உரினும் மேலான தாய்நாட்டுப் பற்றையும், தியாக சிந்தனையயும் ஊட்டி, வெள்ளை அரசினருக்கு எதிராக வெகுண்டு எழச்செய்து, வெற்றி காண்பதற்கு, சுதந்திர தேவியின் சந்நிதானத்தை சுடர் மிகுந்த ஆலயமாக்குவதற்கு, மறவர் சீமையின் முத்துராமலிங்க சேதுபதி என்ற அக்கினிக் கொழுந்து பயன்பட்டு இருப்பதை விடுதலை வரலாறு விளம்புகிறது. அந்த வேள்வியில் தன்னையே ஆகுதியாக அளித்து பெருமை பெற்றுள்

For more ebooks vist: http://getmyebook.in/

தியாகிகளின் பட்டியலில் முதலிடத்தில் விளங்குபவர் இந்த சேதுபதி மன்னர். அவரது நினைவிற்கு நமது விடுதலை இயக்கம் என்றென்றும் அஞ்சலி செலுத்தும் என்பதில் ஐயமில்லை.


1. ↑ Madurai collectorate Records, Vol. 1139, 14-4-1802/ 1146, 24-9-1803.
2. ↑ Madurai collectorate Records, Vol. 1140, 10-1-1803.
3. ↑ Rajaram Row, T., Ramnad Manual (1891), p. 257.
4. ↑ Revenue Consultations, Vol. 167 (1809), pp. 315-17, p. 222
5. ↑ Madurai collectorate Records, Vol. p. 1163 (1815) pp. 206-207.
6. ↑ Ibid., p. 320.
7. ↑ Madurai collectorate Records, Vol. 1197. 1-2-1809 p. 136.
8. ↑ Ibid., 1-2-1809, pp. 135-37.
9. ↑ Madurai Collectorate Records, Vol. 1197. 1-2-1809 pp. 135-40.
10. ↑ Revenue consultations, Vol. 167, 14–2-1809, pp. 312-31.
11. ↑ Military Country Correspondence, Vol. VI, 9-1-1758, p. 6
12. ↑ Rajayyan, K., Dr., Rise and Fall of Polegars of Tamilnadu (1974), pp. 48–50.
13. ↑ Military Country Correspondence, Vol. IX, 25-5-1761, p. 58.
14. ↑ Kathirvelu, S., Dr., History of Marawa (1972), p. 140.
15. ↑ Military Country Correspondence, Vol. X., 13-7-1763 p. 99.
16. ↑ Hill, S.C.. Yousuffkhan, the Rebel Commandant (1914).
17. ↑ Military Despatches to England, Vol. 33, 20-10-1802, p. 668.
18. ↑ Revenue Despatches to England, Vol. VII. 9-5-1803, pp. 528-40.
19. ↑ Rajaram Row, T., Ramnad Manual (1891), p. 248


---

For more ebooks vist: http://getmyebook.in/

## இணைப்பு 1

சேதுபதி மன்னரது மறைவு, அடக்கம் பற்றி, சென்வனை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையின் பொறுப்பு அலுவலர், தளபதி பர்க்லி சென்னை கவர்னருக்கு 1-2-1809 தேதி அனுப்பிய அறிக்கை நகல் (தமிழில்)

" ......அரசின் ஆணைப்படி இந்தக் கோட்டையில் பாதுகாப்புக் கைதியாக வைக்கப்பட்டு இருந்த இராமநாதபுரம் மன்னர் முத்து இராமலிங்க சேதுபதி, நோயாளியானதால், மருத்துவ உதவி அளிக்குமாறு மருத்துவரையும் உதவி தளபதியையும் அறிவுறுத்தினேன். அவர்களும் முறையாக அவரை கவனித்து வந்தனர். மன்னரது நிலை நாளுக்குநாள் மோசமடைந்து வந்ததால், அவருக்கு இடமாற்றம் அளிப்பது தேவை என்று தெரிவித்ததால், நானும் அதற்கு இசைந்தேன். அவ்விதமே 22-ம் தேதி ஒரு பாதுகாப்பு வீரர் பொறுப்பில் அவரை ஜார்ஜ் டவுனுக்கு அனுப்பி வைத்தேன். ஆனால் 24-ம் தேதி இறந்து விட்டதாக (மருத்துவர்) மிஸ்டர் ஒயிட் எனக்கு, அறிக்கை செய்தார்.

அவரது அடக்கப்பணிகளை மேற்கொள்ளுமாறு சென்னை சர்க்காரியாபுரம் வெங்கிடாசலம் செட்டி என்ற கனவானை . கேட்டுக் கொண்டேன். அதனை, எல்லாவகையிலும் சிறப்பான முறையில் இறந்த மன்னரது தகுதிக்கும் அவரது சாதி ஆசாாப் படிக்கும் நடத்தி வைக்குமாறு. இதனை மன்னருக்கு மாதம்

For more ebooks vist: http://getmyebook.in/

தோறும் வழங்கிவந்த படிச்செலவான ரூபாய் ஆயிரத்தில் இருந்து செலவு செய்து கொள்ளலாம் என்று. எனக்கு கிடைத்த தகவல்களின்படி, அந்த ஈமச்சடங்குகள், மன்னரைச் சார்ந்து இங்கிருந்தவர்களின் அறிவுரைப்படியும், அவர்களுக்கு மனநிறைவு கொள்ளும் வகையிலும் மிகத்திரளான மக்களது முன்னிலையிலும் நடைபெற்றுள்ளன.

இவைகளை அரசினர் ஒப்புதல் வழங்குவார்கள் என்று நம்புகிறேன். எனக்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்த செலவான ரு 1000/யும் வழங்குமாறு கோருகிறேன். அந்தச் செலவிற்கான முழுப்பட்டியல் இணைக்கப்பட்டு இருக்கிறது. இந்தச் சடங்கில் பயன்படுத்தப்பட்ட சில சாமான்களின் அளவு சடங் கிற்கு முன்னதாக மதிப்பீடு செய்ய இயலாத காரணத்தினால் ரூ 114| கூடுதல் செலவு தவிர்க்க முடியாததாகிவிட்டது. இந்ததக் காரணத்தினால் மரியாதைக்குரிய கவர்னர், இந்தச்சடங்கு சம்பந்தமான முழுச்செலவினையும் அங்கீகரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சேதுபதி மன்னருடன் இங்கு சில பெண்கள் இருந்தனர். இவர்க ளைப்பற்றி அரசு ஆவணங்கள் எதிலும் குறிப்பிடப்பட வில்லை. மன்னரைச் சந்திக்கச் செல்லும் பொழுது, அவரும் அவர்களைப் பற்றி எதுவும் தெரிவித்ததும் கிடையாது. மன்னரை ஜார்ஜ் டவுனுக்கு அனுப்ப முனைந்த பொழுது அவர்கள் என்னைச் சந்திக்க விருப்பம் தெரிவித்தனர். ஆனால் அவர்களை அப்பொழுது சந்திக்க இயலவில்லை. அவர்களும் அவருடன் சென்று விட்டனர். பிறகு அவர்களைப் பற்றி விசாரித்ததில் அவர்கள் மூன்று

For more ebooks vist: http://getmyebook.in/

பேர் என்றும், அவர்களுக்கு மூன்று குழந்தைகள் - (இரு பையன்கள்) இருந்தனர் என்றும் தெரியவந்தது. மன்னரது இறப்பிற்குப் பிறகு அவர்களிடமிருந்து எந்தத் தகவலும் இல்லை. ஆனால், தற்பொழுது அவர்களது ஆசாரப்படியான இழவு காலம் முடிந்த பிறகு, அவர்கள் எதாவது முறையீடுகளுடன் வருவார்கள் என எண்ணுகிறேன்.

கோட்டையில் மன்னர் தங்கி இருந்த அறையில் அவரது சில பெட்டிகள் உள்ளன. அவைகளைப் பூட்டி காவலர் ஒரு வரது பொறுப்பில் அரசு ஆணையை எதிர்பார்த்து வைத்து இருக்கிறேன்.

இராமநாதபுரம் மன்னர் முத்து ராமலிங்க விஜய ரகுநாத செதுபதி அவர்களது அடக்கம் சம்பந்தமாக 23-1-1809 க்கும் 27-1-1809 க்குமிடைப்பட்ட காலத்தில் செய்யப்பட்ட செலவு விவரம்:

| | | |
|---|---|---|
| 23-1-1809 | மன்னரது உயிர் இரவில் பிரிவதற்கு ஏதுவாக பால்மாடும் கன்றும் தானம் கொடுக்க வாங்கியது | பக்கோடா பணம் 7.0.0 |
| | தானத்தைப் பெற்றுக்கொண்ட பிராமணருக்கு அன்பளிப்பு | 6. 0.0 |
| | இதர பிராமணர்களுக்கு | 1. 19.10 |
| | தூபதானம் | 2.38.20 |
| | சில்லரைச் செலவுகள் மற்றும் பூரி | 5.31.70 |
| 24-1- | மன்னாது சடலத்தை அலங்கரிக்க | 40.0.0 |

For more ebooks vist: http://getmyebook.in/

| | | |
|---|---|---|
| 1809 | கிள்ளாத் மற்றும் துணிகள் | |
| | தங்க தேவர்கள் பட்டம், தங்கப்பூக்கள், 10 பக்கோடா பண நிறையில் | 11.11.20 |
| | வெள்ளி மலர்கள் 62. 5. பக்கோடா பண நிறையில் | 5.00 |
| | இவைகளைத் தயாரித்த பொற்கொல்லாது கூலி | 0. 22.40 |
| | சடங்குகள் செய்ய செப்பு பாத்திரங்கள் வாங்கியது | 20.2.40 |
| | வெள்ளை மஸ்லின் துணி 1. பீஸ் | 1.0.0 |
| | சாயத்துணி 1. பீஸ் | 1.0.0 |
| | அரச பெண்டிரை கோட்டையிலிருந்து ஜார்ஜ்டவுனுக்கு பல்லக்கில் சுமந்துவந்த பல்லக்கு கூலி, பல்லக்கு தூக்கிகள் கூலி | 1.11.20 |
| | மன்னரது குமாஸ்தாவிற்கு கொடுத்தது, தர்மச்செலவிற்காக | 8.25.10 |
| | மன்னரது பணியாட்களுக்கு வெற்றிலை பாக்குச்செலவு | 7.0.0 |
| | சாமரத்திற்கு தரமான மஸ்லின் துணி வாங்கியது | 5.0.0 |
| | நீலவிளக்குகள் வாங்கிய வகை | 2.0.0 |
| | வெடி வாணங்கள் தீவெட்டி செலவு | 1.0.0 |
| | பூக்கள் | 5.0.0 |
| | ஆலவட்டங்கள், வெள்ளைக்குடை, மற்றும் சில்லரைச் சாமான்கள் | 15.33.0 |
| | தீபங்களுக்கு எண்ணை | 11.22.0 |

For more ebooks vist: http://getmyebook.in/

| | |
|---|---|
| 30 விசை சந்தனக்கட்டை | 7.22.4 |
| கூலி | 0.6.0 |
| விறகு, எருவாட்டி | 2.12.0 |
| பல்லக்கு வாடகை | 0.25.40 |
| பல்லக்கு துக்கிகள் கூலி | 3.10.10 |
| பல்லக்கில் கட்ட நூல் கயிறு | 0.25.40 |
| பந்தல் பாவட்டா, மரம், மூங்கில் கழிகள் வாடகை | 2.11.20 |
| இடுகாடு செல்வதற்கு முன் வழங்கப்பட்ட பூர் | 2. 31.70 |
| மன்னரது மக்கள் சடங்கு செய்த வகையில் செலவு | 0.30.20 |
| தசதர்மம் | 5. 6. 20 |
| சடங்குச் செலவுகள் | 0. 25.40 |
| சில்லரைச் செலவுகள், பூரி | 5.37.20 |
| மன்னரது பணியாட்களுக்கு | 0.12.60 |
| இழவு வீட்டிலும், இடுகாடு செல்லும் வரையிலும் நடபாவாடை விரித்தவர்களுக்கு | 2. 0. 0 |
| சதிராடிய தேவதாசிகளுக்கு, | 5.31.20 |
| குடிமகன், வண்ணார்கள் | 1. 9. 10 |
| 25. 1. 1809 இரண்டாவது நாளில் எரிப்பதற்கு விறகு, எருவாட்டி, | 0. 39 .0 |
| பால் | 1. 5.3 0 |
| மன்னரது மூன்று குழந்தைகளுக்கு | 3. 0.0 |

For more ebooks vist: http://getmyebook.in/

| | |
|---|---|
| தலைப்பாகை - கோபாலசெட்டி பற்று | |
| தீப எண்ணை | 4.0.0 |
| மன்னர் குடும்பத்தினரது சாப்பாட்டுச் செலவு - கோபாலசெட்டி, செல்லையா பிள்ளை பற்று | 14.19.10 |
| வெற்றிலை, பாக்கு புகையிலை பச்சையப்பன் பற்று | 8. 25.50 |
| இரண்டாவது நாள் தானம் வழங்க பசுமாடும் கன்றும் வாங்கியது | 8 0. 0 |
| ஷை தானம் பெற்றுக்கொண்ட பிராம்மணர்களுக்கு | 6. 0. 0 |
| தசதானம் | 4.1.2. 60 |
| சில்லரைச் செலவுகள் - பூரி | 30.0. 0 |
| மன்னரது பணியாட்கள் - முஸ்லிம்கள் | 0. 12.60 |
| தாணாச் சேவகர்கள் தலையாரிகள் | 2.38.20 |
| கூலியாட்கள் - 3 நாள் கூலி | 5.31.70 |

| | |
|---|---|
| பறையர்கள் - வண்டி இழுத்த கூலி | 3. 0. 0 |
| வண்டிக்காரர்கள் | 5. 31. 70 |
| பறையடித்ததற்கு, சாமான்கள் ஏற்றக் கூலி | 2.36.20 |
| மலபாரிகள் | 2.28.20 |
| சதிர் ஆட்டக்காரிகள் | 1. 19. 10 |
| திருவல்லிக்கேணி, பறையடித்தது | 2. 38. 20 |
| செயிண்ட் தாமஸ் மவுண்டிற்கு வண்டிக்கூலி | 5. 31. 70 |

For more ebooks vist: http://getmyebook.in/

| | | |
|---|---|---|
| 26-1-1809 | மன்னரது சாமான்கள் ஏற்றிச்செல்ல வண்டிக்கூலி | 3.22.40 |
| | சாப்பாடு தயார் செய்த பிராமணர்களுக்கு | 0.38.20 |
| | குடிதண்ணிர் கொண்டுவர | 0. 25. 40 |
| 27.1. 1809 | மன்னரது ஆட்களுக்கு சாப்பாடு | 2.0.0 |
| | சுத்தம் செய்த பணியாளர்கள் கூலி | 0.25.40 |
| | படிச்செலவு | 0.7.30 |
| | | --------------- |
| | மொத்தம் பக்கோடா பணம் | 327. 00 |
| | | --------------- |

[1]

1. ↑ Tamilnadu Archives, Madras — Madurai Dist. Records. Vol. 1197 - 1.2.189 - pp. 135.

For more ebooks vist: http://getmyebook.in/

## இணைப்பு 2

இராமநாதபுரம் மன்னர் முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதி அவர்களது குடும்பத்தினராகிய ஏழு மனைவிகளும் லெட்சுமி, சந்திரமதி, பூரணம், பர்வதம், முத்தியாலு, லெட்சுமி காமாட்சி ஆகியோரும், அவர்களது குமாரர்களும், மகளும், அண்ணாரது பரம்பரைக் குமாஸ்த்தாக்களும் பணியாட்களுமாகிய சுப்பிரமணிய பிள்ளை மற்றும்முள்ளோரும் அனுப்பும் பணிவான விண்ணப்பம் :

நாங்கள், சேதுபதி மன்னருக்குப் பிரியமானவர்கள். அவரது அரண்மனை அந்தப்புரத்தைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில் அவரது 14வருட சிறை வாழ்க்கையிலும், அவரைத் தொடர்ந்து கவனித்து வந்துள்ளோம். திருச்சிராப்பள்ளியில் ஏழு ஆண்டுகளும், எஞ்சிய காலம் சென்னையிலும். அவரது பகைமையுணர்வு காரணமாக கும்பெனியாரால் அவரது பாரம்பரிய இராமநாதபுரம் ஜமீன்தாரியில் இருந்து நீக்கப்பட்டு சிறயில் அடைக்கப்பட்டதால் அவரது சிறைவாழ்க்கையில் பல விதமான சிரமங்களையும், கட்டுப்பாடுகளையும் நாங்களும் பங்கு, கொண்டு வந்தோம். அவருக்கு வழங்கப்பட்ட மாத ஊதியத்தொகையான ரூபாய் ஆயிரத்தையும் எங்களுக்குப் கொடுத்து கொடுத்து வந்தார். அந்தத்தொகை, எங்களது ஜீவியத்திற்குப் போதுமானதாக அமையாததால் வெளியில் கணிசமான தொகைக்கு கடன்பட்டுள்ளோம். தொடர்ந்து மன்னரைக் கவனித்து வந்தோம்.

For more ebooks vist: http://getmyebook.in/

எங்களது நம்பிக்கையெல்லாம், நாங்கள் வணங்கும் தெய்வம் கருணை புரிந்து எங்கள் மன்னரது பிரச்சனை பற்றி விசாரித்து அவரது குற்றமற்ற தன்மையை முடிவு செய்து அவருக்கு மீண்டும் ஆட்சியுரிமை நல்கப்படும் என்பதும், அதன்வழி எங்களது இன்னல்கள் எல்லாம் தீர்ந்துவிடும் என்பதுதான். ஆனால் மூன்று மாதங்களுக்கு முன்னர் எங்களது மன்னர் நோயுற்றார். நாளுக்கு நாள் மிகுதியான நோயினால் உணவுமீது வெறுப்பு ஏற்பட்டு அவரது உடல் தளர்ந்தது. தாங்கள் கருனை கூர்ந்து மத்துவர் ஒயிட்டை அனுப்பிவைத்து பலவித மருந்துகளைக் கொடுக்குமாறு செய்திர்கள். வெங்கிடாசலம் செட்டியாரது பிணையை ஏற்று மன்னரைக் கோட்டையிலிருந்து வெளியேற அனுமதித்து, மன்னரது உடல் நலம்பேண ஜியாஜ் டவுனிற்கு செல்ல அனுமதி வழங்கினீர்கள். என்றாலும், தவறான சில ஆலோசனையினால் அவரது இறுதி வந்து எய்தியது. இறைவனது ஆணைக்கு யார் மாற்றம் செய்யமுடியும்?

தாங்கள் வழங்கிய அறிவுரை காரணமாக வெங்கிடாசலம் செட்டி, மன்னரது இழப்பிற்கு முன்னும் பின்னும் சில சடங்குகளை மிகவும் விரிவாகவும் ஆடம்பரமாகவும் நிறைவேற்றினார். எங்களது மன்னர் இராமநாதபுரத்தில் இறந்து இருந்தால் எவ்விதம் நடைபெற்று இருக்குமோ அந்த அளவில், அந்தச் செட்டியார் மன்னரது சடலத்தை மிகச்சிறப்பாக அலங்காரம் செய்யப்பட்ட பல்லக்கில் வைத்து சென்னை நகர வீதிகளில் பவனி வருமாறு செய்தார். மிகுந்த மரியாதையுடன், எராளமான மக்கள் ஊர்வலமாக சுடுகாடு வரை சென்றனர். இவ்விதம் அவரது அந்திமச்

For more ebooks vist: http://getmyebook.in/

சடங்குகள் சிறப்பாக நடைபெற்றன. அடுத்தநாள் அஸ்திமீது பால் தெளிக்கும் சடங்கும் மிகுந்த செலவில் வைதீக ஆசாரத்துடன் நிறைவேற்றப்பட்டது. அடுத்து மன்னரது இழப்பினால் மிக்க வேதனையுற்றவர்களாக தங்களையும் தங்களது அரசாங்கத்தையும் அனைத்து சென்னை நகர மக்களும் எதிர் நோக்கி உள்ளனர். ஏனென்றால், தாங்கள் இந்த நாட்டு பழக்க வழக்கங்களையும் நன்கு புரிந்தவர்கள்தானே !

நாங்கள் மேலே குறிப்பிட்ட வெங்கடாசலம் செட்டி அவர் களுக்குச் சொந்தமான வீடு ஒன்றில் இருந்து வருகிறோம். அவரிடத்தில் மன்னரது அஸ்தியைக் கொண்ட சம்புடம் இருந்து வருகிறது. ஆதலால், நாங்கள் தங்களை வேண்டிக்கொள்வது.

1) அந்த அஸ்திக் கலசத்தை, சிப்பாய்களது பாதுகாப்பில் இராமநாதபுரத்திற்கு அனுப்பிவைத்து, மேலும் நிறைவேற்றி வைக்க வேண்டிய சடங்குகளைச் செய்வதற்காக அதனை எங்களது எஜமானியான ராணி ராஜேஸ்வரி நாச்சியாரிடம் ஒப்படைக்குமாறு செய்யவேண்டியது.

2) மேலும், எங்களது எஜமானியின் பொறுப்பில் எங்களது ஜீவிய காலம் வரை, பராமரிப்பதற்காக எங்களுக்கு மாத உபகாரச் சம்பளம் நிகுதிசெய்து வழங்க வேண்டும். மற்றும், 3) நாங்கள் எங்களது எஜமானியிடம் போய்ச் சேருவதற்கு எங்களுக்கு அனுமதி அளித்து பயணப்படியும் வழங்குமாறும், கோட்டை அறையில் உள்ள எங்களது மன்னரது சாமான்களை எங்களுடன் அனுப்பிவைக்குமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

For more ebooks vist: http://getmyebook.in/

4) எங்களது மன்னரது நினைவாக இரு நினைவுச் சின்னங்கள் அமைக்கப்படல் வேண்டும். ஒன்று இராமநாதபுரத்தில், மன்னர்களது மரபினைப் பின்பற்றி இந்த மன்னரது முன்னோர்களது சமாதிகளின் அருகில், இவரது அஸ்தியும் புதைக்கப்படும் இடத்திலும், இன்னொன்று இந்த சென்னையில் மன்னரது சடலம் தகனம் செய்யப்பட்ட இடத்திலும்.

5) இறுதியாக, இந்த சடங்குகளுக்கான செலவு தொகையையும், கட்டுமானத் தொகையையும் உடனடியாக ஒதுக்கீடு செய்து வழங்கப்படல் வேண்டும்.

5) மேலும், இங்கு இன்னொன்றையும் குறிப்பிட வேண்டியதாக உள்ளது. இறந்த மன்னரது வாழ்நாளில் வழங்கப்பட்ட பராமரிப்புத் தொகை அவரதுபட்டமகிஷி ராஜராஜேஸ்வரி நாச்சியாருக்கும் அவரது மகள் சிவகாமி நாச்சியாருக்கும், இராமநாதபுரம் அரண்மனை அந்தப்புரத்தில் உள்ள அனைத்துப் பெண்களுக்கும், தொடர்ந்து வழங்கப்படும் தொகை ராணி மங்களேஸ்வரி நாச்சியாருக்கு அனுமதிக்கப்படும் வருட பராமரிப்புத் தொகையிலிருந்து கொடுக்கப்படுகிறது. இராமநாதபுரம் மன்னர் மரபினரது பாரம்பரிய வம்சாவளியையும் வரலாற்றையும் ஆய்வுசெய்தால் இராமநாதபுரம் ஜமீன்தாரியின் உரிமை எந்தவகையிலும் ராணி மங்களேசுவரி நாச்சியாருக்கு பொருத்த மற்றது என்பதும் புரியும்.

எங்களுக்கு கிடைத்துள்ள தகவலின்படி எங்களது எஜமானி, மன்னரது மறைவைத் தாங்க இயலாத நிலையில் தீக்குளிப்பதற்கு முடிவு செய்தார் என்றும், அவரை கர்னல் மர்ட்டினல் மிகவும் ஆறுதல் சொல்லி தடுத்துவிட்டார் என அறிகிறோம். மேலும் மன்னரது

For more ebooks vist: http://getmyebook.in/

அஸ்தி இராமநாதபுரம் வரப்பெற்றவுடன் அதனைக் கைப்பற்றி, அவரே உரிய சடங்குளைச் செய்ய இருப்பதாக இருக்கிறோம். ஆனால், இத்தகைய செயல் எங்களது சமய ஆசாரங்களுக்கு முரணானது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த விண்ணப்பத்திலும், இத்துடன் கவர்னருக்கு அனுப்பப்படும் மனுக்களிலும் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை கனம் பொருந்திய பிரபு அவர்கள் ஆய்வு செய்து, பொருத்தமான முறையில் தலையிட்டு, விண்ணப்பதாரர்களுக்கு தக்க பரிகாரம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

| | | | |
|---|---|---|---|
| (ஒப்பம்) | 1) | கோவிந்த சாமிநாத | லட்சுமி அம்மாள் |
| | 2) | - | கோமதி அம்மாள் |
| | 3) | - | பூரணம் |
| | 4) | _ | பர்வதம் |
| | 5) | - | முத்தாதி |
| | 6) | - | (தெலுங்கில்) |
| | 7) | _ | காமாட்சி |
| | 8) | ரணா சிங்கத்தேவர் | |
| | 9) | கோவிந்த சாமிநாத குப்புத்தேவர் | |
| 10) | சின்னச்சாமி | 11) | மட்டுவார் குழலி நாச்சியார் |

For more ebooks vist: http://getmyebook.in/

| | | | |
|---|---|---|---|
| 12) | மலைவளர்காதலி நாச்சியார் | 13) | சிதம்பரம் |
| 14) | வீரபத்திரன் | 15) | முத்துவீறு |
| 16) | நாகலிங்கம் | 17) | லெட்சுமணன் |
| 18) | முத்துவயிறு | 19) | |
| 20) | அர்ச்சுனன் | 21) | ராமசாமி |
| 22) | ஆதிஜயன் | 23) | ஈசுவர ஜயன் |
| 24) | ஆணிமுத்து | 25) | முத்து |
| 26) | முத்துப்பையன் | 27) | குப்பராசா |
| 28) | மல்லாபன் | 29) | முத்துக்கருப்பன் |
| 30) | வீரன்செட்டி | 31) | போடிகான் |
| 32) | சின்னமுத்து | 33) | முத்து நாராயணன் |
| 34) | வீரபத்திரன் | 35) | பெருமாள் |
| 36) | தோரான் | 37) | இராமன் |
| 38) | வேலாயுதம் | 39) | சங்கிலி |
| 40) | குழந்தைவேலு | 41) | வெள்ளையன் |
| 42) | நாகலிங்கம் | 43) | அருணாச்சலம்செட்டி |
| 44) | சித்திரன் | 45) | சிலைமான் |
| 46) | சிலைமான் | 47) | கறுப்பன் |
| 48) | முத்துக்கறுப்பன் | 49) | சங்கரநாராயணன் |
| 50) | அகமதுகான் | 51) | காதர்சாயபு |
| 52) | தலைப்பாக்கட்டிகாதர் | 53) | |
| 54) | சவுந்தரநாதன் | 55) | மகம்மது |
| 56) | | 57) | அருணாச்சலம் |

For more ebooks vist: http://getmyebook.in/

| | | | |
|---|---|---|---|
| 58) | அளகப்பன் | 59) | முத்துக்கிருஷ்ணன் |
| 60) | கறுப்பணன் | 61) | வீரப்பெருமாள் |
| 62) | | 63) | மாரியாயி |
| 64) | அகிலாண்டம் | 65) | கமலாயி |
| 66) | மோகனா | 67) | தனுசு |
| 68) | கங்கராயி | 69) | உலகாயி |
| 70) | அங்காளம்மை | 71) | சிலம்பாயி |
| 72) | முத்துவடுகு | 73) | பேச்சி |
| 74) | சுந்தரம் | 75) | லட்சுமியம்மாள் |
| 76) | காத்தாயி | 77) | மங்கத்தாயி |
| 78) | சின்னக்குட்டி | 79) | லட்சுமி |
| 80) | முத்தம்மா | 81) | தாச்சி |
| 82) | கமலாயி | 83) | மங்கம்மா |
| 84) | முத்துமணிபண்டாரம் | 85) | இராமசாமி நாயக்கர் |
| 86) | லட்சுமணன் | 87) | கீதை |
| 88) | சதாசிவன் | 89) | வண்ணான் காத்தவராயன் |
| 90) | அம்பட்டராக்கன் | 91) | வெங்கடேசன் |
| 92) | சுப்பன் -- | இன்னும் எழுபேர் | |

[1]

1. ↑ Tamilnadu Archives, Madras - Revenue Consultations. Vol. 167 pp. 312-320

For more ebooks vist: http://getmyebook.in/

# இணைப்பு 3

## இராமநாதபுரம் முத்துராமலிங்க சேதுபதி அவர்கள் வழங்கிய நிலமான்யங்கள்

| **1. அன்னசத்திரங்கள்** | **அறக்கொடையாக வழங்கப் பட்ட கிராமங்கள்** |
|---|---|
| 1. அலங்கானுர் சத்திரம் | 1. கிளத்து சேரி (கழுவான்<br>2. அலங்கானூர் சேரி) |
| 2. ஆத்தாங்கரை-சத்திரம் | நகரிகாத்தான் |
| 3. இராமேஸ்வரம்-கஜானா வெங்கட்டராவ் சத்திரம் | மூப்பையூர் |
| 4. இராமேஸ்வரம் முத்துக் குமாரு பிள்ளை சத்திரம் | 1. கட்டனுர் 2. சேந்தனி |
| 5. கடுகுசந்தை சத்திரம் | கடுகு சந்தை |
| 6. கோட்டைபட்னம் சத்திரம் | கொடிக்குளம் |
| 7. தனுஷ்கோடி முகுந்தராய சத்திரம் | போத்தனதி |
| 8. திருப்புல்லானி-புருஷோத்தம பண்டித சத்திரம் | கழுநீர் மங்கலம் |
| 9. தீர்த்தாண்டதான சத்திரம் | 1. முத்துராமலிங்க பட்டினம்<br>2. இளையாத்தன்வயல் |

For more ebooks vist: http://getmyebook.in/

| | |
|---|---|
| | 3. காடன்குடி |
| 10. பரமக்குடிவேலாயுதபுரம் சத்திரம் | 1. வேலாயுதபுரம் |
| | 2. மதலைக்குளம் |
| | 3. இலுப்பக்குளம் |
| | 4. சின்னயன்யேந்தல் |
| | 5. சிறுமுதலைக் குளம் |
| | 6.வலையநேந்தல் |
| 11. தேவிபட்டினம் சத்திரம் | 1. தென்பொதுவக்குடி |
| | 2. சிலுக்குவார்பட்டி |
| | 3.அடந்தனக் கோட்டை |
| 12. பால்குளம் ராமசாமி மடம் சத்திரம் | கடுக்காய் |
| 13. பிள்ளை மடம்-சத்திரம் | சாத்தக்கோன்வலசை |
| 14. மண்டபம்-சத்திரம் | துரத்தி ஏந்தல் |
| 15. முத்துராமலிங்கபட்டினம் சத்திரம் | 1. பிரம்பு வயல் |
| | 2. கரந்த வயல் |
| | 3. பெரிய கரையான் |
| | 4. சின்னக்கரையான் |
| 16. முடுக்கன்குளம்-சத்திரம் | மரக்குளம் |
| 17. மண்டபம் தோணித் துறை சத்திரம் | 1. மண்டபம் |
| | 2. தேர்போகி |
| | 3. வளமாவூர் |

For more ebooks vist: http://getmyebook.in/

| | |
|---|---|
| | 4. மேலவயல் |
| 18. நாகநாத சமுத்திரம் சத்திரம் | இளந்தோடை |

**||. மடங்கள்**

| | |
|---|---|
| 1. திருவாவடுதுறை மடம் திருவாவடுதுறை | வல்லக்குளம் |
| 2. தியாகராஜ பண்டார மடம் திருவாரூர் | சூரியன்கோட்டை |
| 3. சுவாமியானந்த மடம் முத்துராமலிங்கபுரம் | கள்ளிக்குடி |
| 4. சிதம்பரகுருக்கள் மடம் (திருவாரூர்) தாமோதரபுரம் | மாடக்கோட்டை |
| 5. நாகாச்சிமடம் | பெருமானேந்தல் |
| 6. சொக்கநாத மடம் | கிழக்கோட்டை |
| செட்டி ஏந்தல் | செட்டி ஏந்தல் |

|||. **கிறித்தவ தேவாலயம்**

| | |
|---|---|
| 1. சர்வேசுரன் தேவாலயம் முத்துப்பேட்டை | 1. முத்துப்பேட்டை |
| | 2. தெஞ்சியேந்தல் |

**IV. ஆலயங்கள்**

| | |
|---|---|
| 1. இராமேஸ்வரம் பர்வதவர்த்தினி திருக்கோயில் | 1. பள்ளக்குளம் |
| | 2. நிலமழக்ய மங்கலம் |

For more ebooks vist: http://getmyebook.in/

| | |
|---|---|
| 2. திருப்புல்லாணி தர்ப்பசயன மழகியார் திருக்கோயில் | 1. உப்பானைக்குடி |
| | 2. தச்சங்குளம் |
| | 3. அனிகுருந்தான் |
| | 4. பாம்புவிழுந்தான் |
| | 5. நாவல்கரையான் |
| | 6. நெல்லியம்பதி |
| 3. மங்கைநாதர் திருக்கோவில் திருஉத்திரகோசமங்கை | 1. வித்தானூர் |
| | 2. காராம்பல் |
| | 3. பரந்தன் |
| 4. முத்துராமலிங்கசாமி திருக்கோயில் இராமநாதபுரம் | 1. சொக்கானை |
| | 2. மத்தியல் |
| | 3. கல்லுப்பொறுக்கி |
| 5. சாமிநந்தா சாமிகோயில் கோட்டைவெளி, இராமநாதபுரம் | 1. ஆதியரேந்தல் |
| 6. நஞ்சுண்டேசுவரசாமி ஆலயம் நயினார் கோயில் | 1. நாகலிங்கபுரம் |
| | 2. சின்ன ஆனைக்குளம் |
| 7. திலகேசுவரர் ஆலயம் தேவிபட்டினம் | 1. கடம்பவனசமுத்திரம் |
| 8. சுந்தரேசுவரர் ஆலயம், கமுதி | 1. சூரன்குடி |

For more ebooks vist: http://getmyebook.in/

| | |
|---|---|
| | 2. கொடிக்குளம் |
| 9. வரக்குணஈசுவர ஆலயம், சாலைக்கிராமம் | 1. சின்னஉடைநாச்சினேந்தல் |
| 10. கைலாசநாதசுவாமி கோயில், ஆர்.எஸ்.மங்கலம் | 1. முத்தியனாவயல் |
| 11. நரசிங்கப்பெருமாள் கோயில் கப்பலூர் | 1. நயினாவயல் |
| 12. திருமேனியாண்ட ஈசுவரர் கோயில், திருச்சுழியல் | 1. அஞ்சான்குத்தி |
| | 2. கள்ளத்திகுடி |
| | 3. கல்யாணசுந்தரபுரம் |
| | 4. தொண்டமான்குளம் |
| | 5. குறிக்காரகுளம் |
| 13. அங்காளபரமேஸ்வரி ஆலயம் ஆத்தங்கரை | 1. நாகாச்சி |
| 14. ஐயனார்கோயில், காட்டுப் பரமக்குடி | காட்டுப்பரமக்குடி |
| 15. மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயம் மதுரை | (உச்சிக்கால கட்டளை) |
| | 1. வெங்கலக்குறிச்சி |
| | 2. குரங்கனைக்குளம் |
| | 3. தொட்டியன்குளம் |

For more ebooks vist: http://getmyebook.in/

| | |
|---|---|
| | 4. கூவர்குளம் |
| | 5. வெள்ளக்குளம் |
| | 6. சிறுவேப்பங்குளம் |
| | 7. தொண்டைமான் ஏந்தல் |
| | 8. அனுப்பனேந்தல் |
| | 9. குறிஞ்சாக்குளம் |
| | 10. மேலஓடைக்குளம் |
| | 11. கீழஒடைக்குளம் |
| | 12. கீழகள்ளிகுளம் |
| | 13. பனிந்த ஏந்தல் |
| | 14. புளுகனைக்குண்டு |
| 16. பூலங்கால் வாள் ஐயனார் | பூலாங்கால் |

## V. குடிமக்கள் பெற்ற நிலக்கொடைகள்

### 1. வேதவிற்பன்னர்கள்

| | |
|---|---|
| 1. .ராமையர், சுப்பையர் | சிங்கனேந்தல் |
| 2. ஆழ்வார் ஐயங்காரும் பிறரும் | நரியனேந்தல் |
| 3. வெங்குஜயர் | முத்துவயல் |
| 4. முத்துராமலிங்கஜயர் | மேலச்சீத்தை |
| 5. சிதம்பரம் ஐயரும் பிறரும் | குவளன் சாத்தான் |
| 6. திருவேங்கடஜயர் | அருங்குடி |
| 7. வெங்கடேசுவரர் ஐயர் | முத்துரெகுநாதபுரம் |

For more ebooks vist: http://getmyebook.in/

| | |
|---|---|
| 8. அனந்தகிருஷ்ண ஐயங்கார் | அச்சங்குளம் |
| 9. நாராயண ஐயன், ராமஐயன் | உலகனேந்தல் |
| 10. நரசிங்கஐயன் | சுப்புராயபுரம் |
| 11. வெங்கிடசேஷய்யன் | வல்லக்குளம் கொத்தமங்கலம் |
| 12. சுப்பிரமணியன் கோபால் மங்கலாபதி ஐயர் | கீழஏந்தல் |
| 13. உச்சையன் | பாப்பானேந்தல் |
| 14. ஜகந்நாத ஐயன் | மாவிலங்கை |
| 15. சுந்தரமையர் | தீட்சிதர் ஏந்தல் |
| 16. வெங்கிட்டராமையர் | நெட்டையேந்தல் மேலக்கோட்டை |
| 17. நாகையர் | உடையான் சத்திரம் |
| 18. கிருஷ்ணஐயங்கார் | செப்பேடு கொண்டான் |
| 19. மதுரை மீனாட்சி கோவில் அலங்கார பட்டர் - குலசேகர பட்டர் | பொட்டாம்பட்டி |
| 20. சங்கரலிங்க குருக்கள் | முடித்தனாவயல் |
| 21. சுப்பையன் மற்றும் பதின்மர் | அனுமநேரி |
| 22. பெரிய ஐயன் | பரளச்சி (பகுதி) |
| 23. ராமகோவிந்தையர் | கீழப்பனையூன் (பகுதி) |
| 24. பண்டித மருங்கள் | சக்கரக்கோட்டை |
| 25. வெங்கடசுப்ரமணியன் | சம்பை |
| 26. சாமிபெருமாள்ஐயன் | ஈராங்கால் |

For more ebooks vist: http://getmyebook.in/

| | |
|---|---|
| 27. சுப்பையன் | குமார மங்கலம் |
| 28. பழநிபாபா | சாத்தனூர் |
| 29. பருவதம்மா | நிலையாம்பூண்டி |
| 30. பாலகுருவா நாயக்கர் | திருவடியேந்தல் |
| 31. பேரையூர் | கொல்லனகுளம் |
| 32. வெங்கிட கிருஷ்ண ஐயர் | கொண்டவாள |

**VI தமிழ்ப் புலவர்கள்**

| | |
|---|---|
| 1. மீர் ஜவ்வாதுப்புலவர் | சுவாத்தன் |
| 2. சங்கரப்புலவர் | உளக்குடி |
| 3. முத்தையாப்புலவர் | ஊரணிக்கோட்டை |
| 4. கங்கமுத்துப்பிள்ளை | பொது ஏந்தல் |
| 5. மாசிலாமணிப்புலவர் | அனுமந்தக்குடி (பகுதி) |
| 6. மன்னா ரெட்டி | வடகரை, தென்கரை |

**VII சிறந்த அலுவலர்கள்**

| | |
|---|---|
| 1. சிவகுருநாதபிள்ளை | (மணியக்காரர்) சிறுகம் பையூர் (பகுதி) |
| 2. அய்யம் பெருமாள் | (மணியக்காரர்) சிறுகம் பையூர் (பகுதி) |
| 3. குடியன் | (அம்பலக்காரர்), அஞ்சுக்கோட்டை (பகுதி) |
| 4. ராமக்கவண்டன் | (அம்பலக்காரர்) கல்லூரணி |

For more ebooks vist: http://getmyebook.in/

5. லிங்கம நாயக்கர் (காவல்) பானிசுக்குளம்

**VII தேவரடியார்**

| | |
|---|---|
| 1. தாசிநந்தகோபாலம் | (திருச்சுழியல்) மூனாடைப்பு (பகுதி) |
| 2. தாசிமுத்தாள் | (திருச்சுழியல்) மூனாடைப்பு (பகுதி) |
| 3. தாசிமுத்தாள் | (திருச்சுழியல்) கலியான சுந்தரபுரம் |

For more ebooks vist: http://getmyebook.in/

# இணைப்பு 4

## முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதி மன்னர் பற்றிய சில தனிப்பாடல்கள்

1. அமிரிக்க யாளன் முத்து ராமலிங்க
சேதுபதி அவனிக் கெல்லாம்
சமூகப் ரதாப னெங்கள் முத்திருளப்ப
பேந்த்ர மந்திரி துலங்குநாளிற்
சமருக் கென்றெதிர் மன்னர் தரையிலிலை
மதனொரு வன் தவிர மின்னார்
குமரிக்குட் கன்னியா குமரி யல்லால்
மந்நிலைப் பெண் குமரிதானே. - தனிப்பாடல்

2. கிளையாள்ன் சேதுபதி ரகுநாயகன் கிஞ்சுக வாய்
இளையார் கல்வி யிடத்து நம்மீசரிடத்து மன்றி வளையாத
பொன்முடி சற்றே வளையு மகுட மன்னர் தளையாடிய
கையிற் காளாஞ்சி எந்துஞ் சமயத்துமே!
- வரகவி மீர்ஜவ்வாதுப்புலவர்

3. நதியாம் விரிசிலை நன்னகர் பொற்கோட்டை
பதியாந் துறைசைப் பதிக்கு-விதியாகத்
தானமிட் டான் சேதுபதி தாரணி தானுள்ளளவும்

For more ebooks vist: http://getmyebook.in/

ஈனமிலை யாகு மென்று.
- தனிப்பாடல்

4. சேதுபதி காத்த முத்து ராமலிங்க
துரை ராச சிங்க மந்திரி
மாதுபதி முத்திருளப்பன் கொடிய
வரிவேங்கை வளரா திக்கம
கோதுறு பாமரக்காடு கருணிகர்
மும்மதக் கொல்யானை மற்றோர்
மோதுபெருந் புலிக்காடு கல்வி
மான்களுந் திரிந்தால் மோசந்தானே!
- நமச்சிவாய புலவர்

For more ebooks vist: http://getmyebook.in/

# இணைப்பு 5
# இந்த வரலாற்று ஒவியத்திற்கு உதவிய ஆவணங்கள்-பட்டியல்

**CONSULTATIONS : Tarmilnadu Archives, Madras.**

I. Military Consultations :

Volumes : 42, 42B, 43, 75, 128, 129, 136, 143, 155, 158, 174, 182, 183, 184, 185, 185B, 186. 187, 188, 188A, 189, 189A, 189B, 190, 191, 192, 193, 193A, 193B, 253, 215, 254 A, B, 285, AB, 289, 256.

II. Revenue Consultations :

Volumes : 50, 50A, 58, 6.1, 62A, 63, 64A, 65, 66, 67, 68, 69B, 88, 89, 93, 94, 95, 96, 97, 98, 99, 100, 102, 103, 104, 105, 167.

III. Secret Consultations :

Volumes : 2, 104, 10B, 8.

IV. Board's Consultations :

Volumes: 105, 167, 256A, Misc. Volumes : 6, 10, 11.

V. Public Consultations :

For more ebooks vist: http://getmyebook.in/

Volurhäs : 182, 227A, 204.

VI. Marine Consultations :

Volume : 99

VII. Military Country Correspondence :

Volumes : 4, 19, 21, 35, 44, 44A, 45, 64, 65, 279,280.

VIII. Military Misc. Book.

Volumes : 31, 35, 36, 37, 38, 39, 40, 41, 42, 43, 44, 45, 46, 47, 48.

IX. Revenue Sundries:

Volumes : 21, 26.

X. Revenue Despatches :

Volumes : 6, 26, 64.

Xl. Political Despatches :

Volumes : 2, 3, 5.

XII. District Collectorate Records :

1. Madura District Volumes : 11.03, 1122, 1133, 1139. 1140, 1152, 1155, 1157, 1197, 1202.

2. Tanjore District Volumes : 3345, 3348, 4443,

For more ebooks vist: http://getmyebook.in/

3. Tirunelveli District Volumes: 3589, 3570, 3578, 3.579

XIII. Press lists :

Volumes : for 1793, AD, 1794, AD,
1795, AD, 1796, AD,
1797, AD, 1798, AD,
1799, AD, 1800, AD,

XIV. Board of Revenue Records :

Miscellaneous Registers.

For more ebooks vist: http://getmyebook.in/

# இணைப்பு 3

## சில விளக்கக் குறிப்புகள்

### சேதுபதி மன்னரது குடும்பம்

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாரத நாட்டின் பல்வேறு பகுதிகளையும் ஆக்கிரமித்து அடிமைப்படுத்திய ஆங்கில ஏகாதிபத்தியவாதிகள் அந்தப் பகுதியில் ஆட்சி செய்த மன்னர் குடும்பங்களை மாற்றாந்தாய் மக்களைப் போல நடத்தினர். அவர்களது இந்த மனிதாபிமானமற்ற போக்கிற்கு இராமனாதபுரம் மன்னரது குடும்பமும் விலக்கு அளிக்கப்பட்டவர்கள் அல்ல. விடுதலை வேட்கையின் வடிவாக விளங்கிய இராமனாதபுரம் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதி மன்னரது அரச வாழ்வை அழித்து, அவரது உடமைகளை தமதாக்கி, அவரை சிறையில் தள்ளியதுடன், அவரது குடும்பத்தினரும் அல்லற்பட்டு, ஆற்றாது அழுத கண்ணிருடன் ஊமைகளாகக் காலமெல்லாம், வறுமையிலும், வாழ்வின் சிறுமையிலும் நலிந்து அல்லலுமாறு செய்தனர்.

சென்னைக் கோட்டையில் சேதுபதி மன்னர் இறந்த செய்தி அறிந்து, அவரது முதல் மனைவி ராஜேஸ்வரி நாச்சியார், நமது கைம்மையை கருத்தில் கொண்டு இராமனாதபுரம் அரண்மனையில் தீக்குளிக்கத் தயாரானார். கொடுமையின் உருவாக இருந்த தளபதி

For more ebooks vist: http://getmyebook.in/

மார்ட்டின்ஸின் கடிய மனதைக்கூட கரைத்தது. ராணியாரின் நிலை கிழக்கிந்திய கும்பெனி துரைத்தனத்தாரின் பிரதிநிதி என்ற முறையில், ராணியாரை நேரில் சந்தித்து அவரது முயற்சியைக் கைவிடுமாறு செய்து அவருக்கு ஆறுதல் கூறினார். அத்துடன் மறைந்த மன்னரது குடும்பத்தினர் அனைவரும் எவ்வித இடர்ப்பாடும் இல்லாமல் வாழ்வதற்கு வழி செய்வதாகவும் வாக்களித்தார். ஒன்பது மாதங்களுக்குத் தொடர்ந்து பராமரிப்புத் தொகை வழங்கப்பட்டது. மாதம் ஓராயிரம் ரூபாய்கள். ஆடம்பரமாக எல்ல வசதிகளுடன் வாழ்ந்த அந்தக் குடும்பத்தினர் - நான்கு மனைவிகளும், அவர்களது குழந்தைகளும், பணியாளர்களும்-அந்தத் தொகையில் தங்கள் வாழ்க்கையை சமாளித்து வந்தனர்.

ஆனால் கி.பி. 1809 அக்டோபர் முதல் அந்தத் தொகையும் நிறுத்தப்பட்டு விட்டது. பெண்பாலரான அவர்கள் அனை வரும் படாத பாடு பட்டனர். மேலிடத்திற்கு பல முறையீடுகள் அனுப்பினர். பலன் எதுவும் இல்லை. அவர்களது கண்ணிர் கதைகள் கும்பெனியாரது ஆவணங்களே கூறியுள்ளன. ஆனால் அன்றைய ஆளவந்தார்களுக்கு அந்த ஆவணங்கள் பொழுதுபோக்கு புதினமாக இருந்து இருக்க வேண்டும்! மன்னரது குடும்ப நலிவு பற்றி அவர்கள் கொஞ்சமும் அக்கறை கொள்ளவில்லை. ஆனால் அதே நேரத்தில் இறந்துபோன மன்னரது அஸ்தியை யாரிடம் ஒப்படைப்பது? அவர் சென்னைக் கோட்டையில் விட்டுச் சென்றுள்ள பெட்டகங்களுக்கு

For more ebooks vist: http://getmyebook.in/

வாரிசு தாரர் யார்? என்பன போன்ற வீணான பிரச்சினைகளில் ஓராண்டிற்கும் மேலாக ஈடுபட்டு இருந்தனர்.

இதற்கிடையில், பசியிலும், பட்டினிக் கொடுமையிலும் பரிதவித்துக் கொண்டிருந்த மன்னரது குடும்பத்தினர் நிலையைக் கேள்வியுற்ற இராமனாதபுரம் ராணி மங்களேசுவர நாச்சியார், அந்தக் குடும்பத்தினருக்கு சமஸ்தான நிதியில் இருந்து, மாதந் தோறும் உதவித் தொகை வழங்கி உதவினார். ஆனால், இந்த ஏற்பாடும், ராணியார் கி. பி. 1812-ல் இறந்தவுடன் தடைப்பட்டது. அப்பொழுது கலெக்டராக இருந்த ரூயிஸ் பீட்டர் மூலம், கும்பெனியாரது உதவியை அந்தக் குடும்பத்தினர் நாடினர். பரங்கியரான கலெக்டரது பரிந்துரைக்குக்கூட பயன் கிட்டவில்லை. இடையில் இராமனாதபுரம் சமஸ்தான நிர்வாகிகள் வேண்டா வெறுப்பாக அந்தக் குடும்பத்தினருக்கு சில சமயங்களில் உதவி வந்தனர். தாங்கள் குடியிருந்த விட்டின் இடிபாட்டைக்கூட பழுதுபார்க்க முடியாமல், கும்பெனியாரது உதவி கோரிய அவர்களது முறையீடுகளைப் பற்றிய ஆவணங்களைப் படிக்கும் யாரும் கண்ணிர் வடிக்காமல் இருக்க முடியாது.

இங்ஙனம், கி.பி. 1809-ல் தொடங்கிய அவர்களது கண்ணீர்க் கதை, வழிவழியாக, ஒரு நூற்றாண்டிற்கும் அதிகமாகத் தொடர்ந்து வந்து இருப்பதிலிருந்து அந்த அப்பாவிகளது அவலத்தின் மிகுதியையும், ஆழத்தையும் யாரும் எளிதில், புரிந்து கொள்ள இயலும். முத்து ராமலிங்க சேதுபதி மன்னரது மகன் கல்யாண ராமசாமித் தேவரது வழியினர், கி.பி. 1920-ல்

For more ebooks vist: http://getmyebook.in/

கூட 'காருண்யமிக்க' ஆங்கில ஆளுநருக்கு உதவி கோரிய முறையீடு ஒன்று உள்ளது. மன்னரது ஏனைய மக்களான பட்டாபி இராமசாமித் தேவர். நெருஞ்சித் தேவர் ஆகியோர் பற்றிய ஆவணங்கள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை. மாற்றானது ஆதிக்கம் மறவர் சீமையில் எற்படுவதைத் தடுத்த மாபெரும் குற்றத்திற்காக பரம்பரை அரசு உரிமையையும் பெருமைக்குரிய அரண்மனையையும். சொந்த உடமைகளையும் பகற்கொள்ளைகாரர்களான பரங்கியர்களிடம் பறிகொடுத்து, நாற்பத்து எட்டு ஆண்டு வாழ்வில் இருபத்து நான்கு ஆண்டுகளை இதந்தரு மனையில் நீங்கி, இடர்மிகு சிறையில் கழித்து அங்கேயே தமது வாழ்வை முடித்த அந்தச் சுதந்திரச் செம்மலின் குடும்பம், சமுதாயத்தின் பார்வையில் இருந்து விடுபட்டு, சிதைந்து. சீரழிந்து. மறைந்தது வரலாற்றின் வேதனை நிறைந்த பகுதியாக விளங்குகிறது.

**2. ஆற்காட்டு நவாப்**

இந்திய பேரரசராக இருந்த அவுரங்க ஜேப் தக்கானததில் உள்ள பேராரையும் கோல்கொண்டாவையும் கி.பி. 1685 88-ல் வெற்றிக் கொண்டார். செஞ்சிக்கோட்டை வரையிலான அவரது ஆதிக்கத்தில் உள்ள தென்னிந்திய பகுதிக்கு ஜுல்பிகார்கானை நவாப்பாக நியமனம் செய்தார். கி.பி. 1691-ல அவர் ஆற்காட்டை தலைமை இடமாகக் கொண்டு கர்நாடக நவாப் என இயங்கி வந்தார். முகலாய பேரரசரது மரணத்தியகுப் பிறகு, கிழக்கு, மேற்கு, தெற்கில் உள்ள அவரது பிரதிநிதிகள்

For more ebooks vist: http://getmyebook.in/

சுயேச்சை பெற்றனர். தக்காணப் பிரதிநிதியான நிஜாம், கர்நாடக நவாப்பான சாததுல்லாவை ஆற்காட்டு நவாப்பாக நியமித்தார். அவரும் ஆற்காட்டில் இருந்து கொண்டு வேலுர் . தஞ்சை, மதுரை ஆகிய ஊர்களில் உள்ள நாயக்க மன்னர்களிடம் கப்பம் வசூலித்து வந்தார்.

இவருக்கு வாரிசு இல்லாததால், அவரது சகோதரரின் மகன் தோஸ்து அலி கி.பி. 1732-40-ல் நவாப்பாக இருந்தார். அவரது உறவினரான சந்தா சாகிபு திருவாங்கூர் வரை படை எடுத்துச் சென்று கர்நாடகம் முழுவதையும் நவாப்பிற்கு கட்டுப்பட்டதாகச் செய்தார். கி.பி. 1740-ல் தோஸ்து அலி மராத்தியருடன் நடத்திய தமலாச்சேரி போரில் இறந்தார். அவரது மகன் ஸப்தார் அலி மராத்தியருக்கு கட்டுப்பட்டு நவாப்பாக இருந்தார். இதனைத் தொடர்ந்து சந்தாசாகிபு அரசியல் கைதி யாக மராத்தியரால் கொண்டு செல்லப்பட்டார். இதற்கிடையில் நவாப்பின் மைத்துனன் முர்த்தளலா அலி என்பவன் நவாப்பை படுகொலை செய்தான். இறந்தவரின் இளம் மகன் நவாப்பாக தெரிவு செய்யப்பட்டான். அந்த சிறுவனை அவனது பாதுகாப்பாளராக இருந்த அன்வர்தீனும், முர்த்தலா அலியும் சேர்ந்து சதி செய்து கொன்றனர். அடுத்து அன்வர்தீன் கர்நாடக நவாப் என்று பட்டம் புனைந்து கொண்டான்.

மராட்டிய மாநிலத்தினின்றும் தப்பி வந்த சந்தாசாகிபு, தமது உறவினரான நவாப்பைக் கொன்ற பாதகன் அன்வர்தினைப் போரில் கொன்று ஆற்காட்டைக் கைப்பற்றினார். அன்வர்தீன் மகன்

வாலாஜா என்ற முகம்மது அலி, சந்தா சாகிபுவிடமிருந்து தப்பி திருச்சிக் கோட்டைக்கு ஓடினார். நிஜாம் சந்தா சாகிபுவை நவாப்பாக அங்கீகரித்தார். பிரஞ்சுக் காரர்களும் அவரை ஆதரித்தனர். என்றாலும், ஆங்கிலேயரது உதவி கொண்டு முகம்மது அலி சந்தா சாகிபுவை எதிர்த்தார். சந்தா சாகிபுவை துரோகத்தால் கொன்று ஆற்காட்டு நவாப் ஆனார். ஆந்திரத்திலிருந்து திருவாங்கூர் வரையான பகுதிக்கு ஆதிக்க உரிமை கொண்டாடி அதனை நிலைநாட்ட பல போர்களை மேற்கொண்டார். ஆனால் திருநெல்வேலிச் சீமையில் பாளையக்காரர் அவரை தங்களது மன்னராக அங்கீகரிக்க மறுத்தனர். இவர்களுக்கு நெற்கட்டும் செவ்வல் பாளையக்காரரான பூலித்தேவர் தலைமை தாங்கினார்.

ஏறத்தாழ இருபது வருடங்கள், நீடித்த இந்த உள்நாட்டுப் போரிலும், மறவர் சீமை மன்னர்கள், தஞ்சை மன்னர், மைசூர் மன்னர், பிரஞ்சுக்காரர் ஆகியவர்களுடன் நடத்திய போர்களிலும் முகம்மதுஅலி ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியாரிடம் பெருங் கடனாளியானார். அவர்கள் இந்தப் போர்களில் நவாப்பிற்கு உதவியதற்காக பல சலுகைகளை நவாப்பிடமிருந்து பெற்ற பொழுதும், தங்களது கடனை வட்டியுடன் வசூலிக்கத் தவறவில்லை, இந்தக் கடன் கணக்கு எப்படி எழுதப்பட்டது என்பதற்கு ஒரு உதாரணம். கி.பி. 1758-59-ல் பிரஞ்சு தளபதி ஆங்கிலேயரின் சென்னைக் கோட்டை மீது தாக்குதல் நடத்தினார். அந்தப் போரில்

For more ebooks vist: http://getmyebook.in/

ஆங்கிலேயருக்கு ஏற்பட்ட செலவு அனைத்தும் முகம்மது அலியின் செலவாக கணக்கு எழுதப்பட்டது. முகம்மது அலியின் நண்பர்கள் அல்லவா ஆங்கிலேயர்! இதைப்போலவே கி.பி. 1761-ல் ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர்களது பாண்டிச்சேரிக் கேர்ட்டை மீது போர் தொடுத்தனர் . இந்தப் போர்ச் செலவும் நவாப்பின் பற்றுக் கணக்கில் எழுதப்பட்டது. காரணம் பிரஞ்சுக்காரர்கள் நவாப்பின் எதிரிகள் அல்லவா?

இவ்விதம் பாக்கிப்பட்டுப்போன கடனை வசூலிப்பதற்கு, கும்பெனியார் கி.பி. 178 , 1785, 1787, 1792 ஆகிய ஆண்டுகளில் நவாப்புடன் உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொண்னர். இதன் மூலமாக தென்னக அரசியலில் நேரடியாகத் தலையிட்டு தாங்களே மறைமுகமான ஆட்சியாளராக மாறினர். கி.பி. 1795-ல் நவாப் முகம்மது அலி இறந்தவுடன் அவரது மகன் உம்தத்துல் உம்ராவை நவாப்பாக மதிக்காததுடன் அவர் மீதும் அவரது இறந்த தந்தையின் மீதும் வீண் பழிகளை கும்பெனியார் சுமத்தினர். இந்தக் கவலையினால் மனம் உடைந்த நவாப் கி.பி. 1801-ல் இறந்து போனார். அவரது மகன் தாஜுல் உம்ரா நவாப்பாக இருப்பதற்கு தகுதி இல்லையென புறக்கணித்து விட்டு அவரது சிறிய தந்தையின் மகனான அஜிம் உத்தெளலாவை நவாப்பாக அங்கீகரித்தனர். அவரையும் மிரட்டி, அவரிடமிருந்து அதிகார பூர்வமாக தென்னகம் முழுவதற்கும் ஆளும் உரிமையைப் பறித்தனர். ஆற்காட்டு நவாப் என பெயரளவில் இருந்த அவர் கி.பி. 1819-லும் அவரது

மகன் கி.பி. 1825-லும் இறந்த பிறகு அவர்களது குடும்பத்தினரை சேப்பாக்கம் அரண்மனையில் இருந்து அகற்றிவிட்டு, அந்த மாளிகையைப் பொது ஏலத்தில் விற்பனைக்கு கொண்டு வந்தனர். குதிரை, வீரனைக் குழியில் தள்ளியதுடன் மண்ணை வாரி மூடிய கதை!

தமது கும்பெனி நண்பர்களுக்கு அண்மையில் இருக்க வேண்டுமென்பதற்காக, நவாப் முகம்மது அலி ஆற்காட்டில் இருந்து சென்னைக்கு வந்து கும்பெனியினரது கோட்டைக்கு அருகிலேயே இந்த மாளிகையை அமைத்து மிகுந்த ஆரவாரத் துடன் குடியேறினர். அன்றைய அந்த 'புதுமனை புகுதலை' மிகச் சிறப்பாக நடத்தினார். கோட்டையில் இருந்த கவர்னர் உள்ளிட்ட அனைத்துப் பரங்கிகளையும் தமது புதிய மாளிகைக்கு வரவழைத்து பெரும் விருந்து நடத்தி, அன்பளிப்பும் வழங்கி, அவர்களுக்கு கையில் 'இனாமு'ம் கொடுத்து அனுப்பி வைத்தார். இனாம் தொகை ரூ. 30,000/- கவர்னருக்கு கொடுத்தது மட்டும் ரூ. 7,000/- இதைத் தவிர இந்த அரண்மனையில் வெள்ளையருக்கு விருந்து நடக்காத இரவோ, பகலோ இல்லை யென்று சொல்லும் அளவிற்கு பரங்கிகளுடன் குலவிய நவாப் முகம்மது அலியின் குடும்பத்திற்கு கும்பெனியார் அந்த மாளிகையை ஏலத்தில் விடுவதைவிட வேறு என்ன கைம்மாறு செய்ய முடியும்?

இவ்விதம், கும்பெனியார் மீது கொண்டிருந்த பொய்மையான மயக்கத்தினால் அவர்களை முழுக்க முழுக்க நம்பி செயல்பட்ட முகம்மது அலி,

For more ebooks vist: http://getmyebook.in/

நாட்டுப்பற்றும் பேராற்றலும் மிக்க பூலித் தேவர், கம்மந்தான் சாகிபும், முத்துராமலிங்க சேதுபதி மன்னர் போன்ற ஒப்பற்ற வீரர்களை கும்பெனியாரது கொடுமைக்கு பலியாக்கினார். ஆனால் அந்த நவாப்பும், அவருடைய வாரிசு களும் அதே கும்பெனியாரின் கொடுமைக்கு தப்பியவர்கள் அல்ல என்பதை வரலாறு உணர்த்துகிறது.

### 3. தளபதி மார்ட்டின்ஸ்

ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனிச் சேவகத்தில் மறவர் சீமைக்கு வந்த போர்ச்சுக்கல் நாட்டு வீரன், கி பி. 1772-ல் ஆற்காட்டு நவாப் இராமநாதபுரம் கோட்டையைப் பிடித்தவுடன், அந்தக் கோட்டையின் பொறுப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டான். முத்துராமலிங்க சேதுபதி மன்னர் கி. பி. 1781-ல் விடுதலை பெற்று, மறவர் சீமையின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று கொண்ட பிறகும் தொடர்ந்து கோட்டைப் பொறுப்பு அலுவலராக இருந்து வந்தான். அத்துடன் கும்பெனியாருக்கும் நவாப்பிற்கும் மறவர் சீமை அரசியலை அந்தரங்கமாகத் தெரிவிக்கும் அரசியல் ஒற்றனாகவும் இருந்தான். இவனது 'அறிவுரை' யைக் கேட்டு வந்த இராமனாதபுரம் அரசரின் பிரதானி முத்து இருளப்பபிள்ளை, விரைவிலேயே கும்பெனியாரது 'செல்லப் பிள்ளை'யாக மாறிவிட்டார். இந்த இரு பிரமுகர்களின் பெரு முயற்சியினால் இராமநாதபுரம் சேதுபதி மன்னரது திட்டம் தோல்வியுற்று வாழ்நாள் முழுவதும் திருச்சி, சென்னைக் கோட்டைகளில்

For more ebooks vist: http://getmyebook.in/

அரசியல் கைதியாக இருந்து இறக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

கி. பி. 1781-ல் ஆறுமுகம் கோட்டை மாப்பிள்ளைத்தேவனும் கி. பி. 1801-ல் மீனங்குடி முத்துக்கருப்பத் தேவரும் கிளர்ச்சிக்காரர்களுடன் இராமனாதபுரம் கோட்டையை கைப்பற்ற முயற்சித்த பொழுதும், கி. பி. 1799-ல் முதுகுளத்துார் பகுதியில் மக்கள் கிளர்ச்சி வெடித்தபொழுதும், அவைகளை முறியடிக்க திட்டம் திட்டித் தந்தவனும் இந்த தளபதிதான். இலங்கை செல்லும் வழியில் கி பி 1797-ல் இராமனாதபுரம் கோட்டைக்கு வந்த தளபதி வெல்ஷ் தமது குறிப்புகளில் இவனைப்பற்றி வரைந்துள்ளான். உலகத்திலேயே விருந்தோம்பலுக்குப் பெயர் போன இந்த நாட்டில் இந்த வயோதிக தளபதி சிறந்து விளங்குவதாகவும் அவரது இல்லத்து நிலவறையில் சிறந்த ரக சாராயங்கள் சேமித்து வைக்கப்பட்டு இருந்ததையும், இந்த மனிதனது கோமாளித்தனமான தோற்றம், நடவடிக்கைகள் பற்றியும் நகைச்சுவையுடன் வரைந்து வைத்துள் ளான். கி. பி. 1801-ல் இராமனாதபுரம் வந்த ஜியார்ஜ் வாலண்டினா பிரபுவும் தமது புக் ஆல் டிராவல்ஸ்' என்ற நூலில், இந்தப் பரங்கியை குறிப்பிட்டுள்ளார்.

இராமனாதபுரம் கோட்டைக்குள் வட பகுதியில் உள்ள புராடஸ்டண்ட் தேவாலயத்தை நிர்ணயிப்பதற்கு இவன் பெரு முயற்சி எடுத்துக் கொண்டான். 7.10-1810-ல் இறந்த இந்த தளபதியின் சடலம் அதே தேவாலயத்தின் தென்பகுதியில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

For more ebooks vist: http://getmyebook.in/

## 4. பிரதானி முத்து இருளப்ப பிள்ளை

இராமனாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் பகுதியில் பிறந்த இவர் பிள்ளைப்பருவத்திலேயே தந்தையை இழந்தார். இவருக்கும் இவரது விதவைத் தாயாருக்கும் புகலிடம் கொடுத்துக் காத்தவர் உச்சிநத்தம் கிராம நிலக்கிழார் மல்லையரெட்டியார். அவரது ஆதரவில் வளர்ந்து கல்வியில் தேர்ந்த இவருக்கும் இராமனாதபுரம் கோட்டைத் தளபதி மார்ட்டின்ஸுக்கும் தொடர்பு ஏற்பட்டது. ஆங்கில மொழியில் அவர் பெற்று இருந்த சிறந்த ஞானம் அவருக்கு துணையாக அமைந்து இருத்தல் வேண்டும். தளபதியின் பரிந்துரையின் பேரில், சேதுபதி மன்னர், இவரைத் தயது பிரதானியாக பணியில் அமர்த்தினார்.

அவரது நிர்வாகத்தில், சேது நாடு பல புதிய மாற்றங்களைக் கண்டது. அவரது ஆர்வம் மிக்க நடவடிக்கைகளுக்கு மன்னரது முழு ஆதரவும் இருந்ததால் பிரதானி தமது பணியை எளிதாக நிறைவேற்றி வந்தார். நாடு முழுவதும் உள்ள விளை நிலங்களை அளவு செய்து அவைகளுக்கு உரிய தீர்வையை நிகுதி செய்தார். இயற்கையாக அமைந்துள்ள மண் வளத்திற்கு அக்கவாறு தீர்வையின் தரமும் அளவும் அமைக்கப்பட்டன. கண்மாய்களும் வரத்துக்கால்களும் செப்பனிடப்பட்டன. பல ஆண்டுகளுக்குப் பிறகு ரெகுநாத சமுத்திாம் என வழங்கப்பட்ட இராமனாதபுரம் பெரிய கண்மாயும் மராமத்து செய்யப்பட்டன.

இன்னும். கோயில்களைப் பராமரிக்க தரும மகமை, ஜாரி மகமை என்ற இரு பொது நிதிகள்

For more ebooks vist: http://getmyebook.in/

தோற்றுவிக்கப்பட்டன. மானியமாக வழங்கப்பட்ட நிலங்கள் மான்யதாரர்களால் தனியாருக்கு மாற்றப்படும் பொழுதும், தரிசு நிலங்கள் விளைநிலமாக மாற்றப்படும் பொழுதும், அவைகளும் வரிவிதிப்பிற்குள் கொண்டு வரப்பட்டன. நெசவாளர்களிடமிருந்து கைத்தறி துணியை வாங்குகின்ற வணிகர்களும் ஒப்பந்தக்காரர்களும் இடைத்தரகர்கரும் புதிய வரியொன்றை செலுத்துமாறு செய்தார். இத்தகைய புதிய இன வருவாய்களினால் திருக்கோவில்களும் மடங்களும், அன்னச் சத்திரங்களும் சிறப்பாக செயல்பட்டன. இவரது இன்னொரு சிறப்பான சாதனை வறட்சிமயமான மறவர் சீமைக்கு வருடம் முழுவதும் வைகை ஆற்று நீர் கிடைக்கத் தீட்டிய திட்டமாகும். மதுரை மாவட்டத்தில் வர்ஷநாட்டு மலைமுகட்டில் தோற்றம் பெறும் வைகை ஆற்றின் முழு அளவு தண்ணிரும் மறவர் சீமைக்கு கிடைக்கச் செய்வதுதான் அந்த திட்டம். சேதுபதி மன்னரது நிதி உதவியை மட்டும் கொண்டு அதனை நிறைவேற்ற இயலாத நிலை இருந்ததால் அந்த திட்டம் அப்பொழுது செயல் வடிவம் பெறவில்லை. அத்துடன் இந்தப்பிரதானி சேதுபதி மன்னரது சேவையில் நிலைத்து இருக்க வில்லை.

நாளடைவில், பிரதானியின் ராஜவிசுவாசம் குறைந்து, கும்பெனியாரிடத்து கூடுதலான விசுவாசம் கொண்டார். மன்னரது தன்னரசு நோக்கங்களுக்கு அவர் இடையூறாக இருப்பதையும், இராமனாதபுரம் சமஸ்தான போது நிதியில் பல ஆயிரக் கணக்கான ருபாய் செலவுகளுக்கு விவரம் அளிக்க இயலாதவ ராக

For more ebooks vist: http://getmyebook.in/

இருப்பதையும் சேதுபதி மன்னர் புரிந்து கொண்டவுடன், மன்னரது ஒப்புதல் இல்லாமல் மதுரைக் கலெக்டர் மக்ளாயிட்டின் கீழ் மதுரை மேலூர் பகுதிக்கு கும்பெனியாரது குத்தகைதாரராக மாறிவிட்டார். கள்ளர்களது வெறுப்பிற்கும் அவமதிப்பிற்கும் ஆளாகி கும்பெனி நிர்வாகத்திற்கு களங்கம் ஏற்படுத்தியதாக கி.பி. 1791-ல் கலெக்டர் அவரை குத்தகைதாரர் பதவியில் இருந்து நீக்கினார். இதற்கிடையில் இராமனாதபுரம் சமஸ்தான வரவு செலவு கணக்கை நேர் செய்து கொடுக்குமாறு பலமுறை அறிவுறுத்தப்பட்டும் அதில் கவனம் செலுத்தாமல் தமக்கு மன்னரால் தீங்கு ஏற்படலாம் என பயந்து தளபதி மார்ட்டின்ஸ் பாதுகாப்பில் இருந்து வந்தார். மாறாக, அவனுடன் இணைந்து மன்னருக்கு எதிரான பல புனைந்துரைகளை அனுப்பி, இராமனாதபுரம் சீமை அரசியலில் கும்பெனியார் நேரடியாகத் தலையிடுவதற்கு உதவி வந்தார். 8-2-1795-ல் கும்பெனியார் சேதுபதி மன்னரை பதவி நீக்கம் செய்து சிறையில் அடைத்த பிறகு, தற்காலிக பேஷ்காராாக, கும்பெனியாரால் நியமனம் செய்யப்பட்டார். மீண்டும் கம்பம், பெரியகுளம் பகுதிக்கு கும்பெனியாரது குத்தகைதாரராக நியமனம் பெற்றார்.

இவ்விதம் காலமெல்லாம், கும்பெனியாரது எடுபிடியாக இவர் பணியாற்றி வந்தார் என்பதை அவர்களது ஆவணங்கள் காட்டுகின்றன. சிறந்த நிர்வாகியென பெயர் பெற்ற இந்த சேது நாட்டு குடிமகன், தான் பிறந்த மண்ணிற்குரிய பண்புகளை மறந்து, மாற்றானுக்கு துணைபோனதை வரலாறு

For more ebooks vist: http://getmyebook.in/

மறக்காது. கம்மந்தான் கான் சாகிபுவைப் பிடித்துக் கொடுத்த சீனிவாஸ்ராவ், கட்டபொம்முவை காட்டிக் கொடுத்த புதுக் கோட்டைத் தொண்டமான், மருது பாண்டியர்களது வீழ்ச்சியை உண்டாக்கிய வன்னித்தேவன், கட்டை சேர்வைக்காரன் ஆகிய மக்கள் விரோதிகள் அணியில், முத்துராமலிங்க சேதுபதி மன்னரது முடிவிற்கு உதவிய முத்து இருளப்ப பிள்ளையையும் சேர்த்து, எண்ணப்படத் தக்கவராக உள்ளார்.

### 5. ராணி மங்களேசுவரி நாச்சியார்

கி.பி. 1795 வரை மறவர் சீமையை ஆண்ட இராமனாதபுரம் முத்துராமலிங்க சேதுபதி மன்னரது மூத்த சகோதரி இவர். மன்னரது தந்தையைத் திருமணம் செய்து கொள்வதற்கு முன்னர், இவரது தாயார் முத்துதிருவாயி நாச்சியார். ஏற்கெனவே மணம் புரிந்த கணவர் மூலம் இவர் பிறந்தார். தமது தம்பியியின் அந்நிய ஆதிக்க எதிர்ப்பு நடவடிக்கைகளால் அவரது அரச பதவிக்கு ஆபத்து ஏற்படும் சூழ்நிலை தோன்றிய பொழுது கி.பி. 1794-ல் இவரது உள்ளத்தில் பதவி ஆசை எழுந்தது. இராமனாதபுரம் பட்டத்தை தமக்கு அளிக்குமாறு ஆற்காட்டு நவாப்பையும் கிழக்கிந்திய கும்பெனி கவர்னரையும் அடுத்தடுத்து வலியுறுத்தி வந்தார். மறவர் சீமையின் ஆட்சி பீடத்தில் அமருவதற்கு பெண் மக்கள் பலர் அருகதையுடையவர்களாக முன்னர் இருந்தனர் என்ற ஆதாரங்களை கும்பெனியாருக்கு எடுத்துக்கூறி தனது உரிமையை நிலைநாட்ட முயன்றதுடன் அல்லாமல், தனது தம்பியின் மீது பல

For more ebooks vist: http://getmyebook.in/

அவதூறுகளையும் சுமத்தினார். பதவி வெறியின் முன்னர் இரத்தபாசம் பதுங்கிவிடும் என்பதற்கு இவர் ஒரு எடுத்துக்காட்டாகும்.

இத்துடன் தமது முயற்சியில் முழு வெற்றி பெறுவதற்காக, தமது கணவர் ராமசாமித்தேவன் என்ற மாப்பிள்ளைத் தேவனுடன் மூன்று ஆண்டுகள் சென்னையிலேயே தங்கி இருந்தார்.

ஆனால் கும்பெனியார் சேதுபதி மன்னரை கி.பி. 1795-ல் பதவி நீக்கம் செய்து சிறையில் அடைத்த பிறகும். இவரை இராமநாதபுரம் சீமையின் அரசியாக அங்கீகரிக்காமல் காலங்கடத்தி வந்தனர். ஆற்காட்டு நவாப்புடன் செய்து கொண்ட உடன்படிக்கைக்கு முரணாக மறவர் சீமையை அவர்கள் தங்கள் நிர்வாகத்தில் இருத்தி வைத்திருந்தனர். எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு, இவரிடம் ஏராளமான தொகையை கையூட்டாகப் பெற்றுக் கொண்ட பின்னர், 22-4-1803-ல் இராமனாதபுரம் அரசியாக அல்லாமல் ஜமீன்தாரினியாக நியமனம் செய்தனர். தலைமுறை தலைமுறையாக தன்னரசாக விளங்கிய மறவர் சீமை இவரது பதவிப் பேராசையால் தனது மகோன்னத நிலையை இழந்து கும்பெனியாரது தயவில் வாழும் குறுநிலமாக (ஜமீனாக) மாறியது; கோபுரம் இல்லாத கோயிலைப் போன்று.

ராணி மங்களேசுவரி நாச்சியார், தெய்வ பக்தியும் தரும சிந்தனையும் மிகுந்தவராக விளங்கினார். திருச்செந்தூருக்கு தலயாத்திரை மேற்கொண்டார். மதுரை மீனாட்சி அம்மன் கோயில் அர்த்தஜாமக் கட்டளையை நிறுவி அதற்காக பல கிராமங்களை

For more ebooks vist: http://getmyebook.in/

மானியங்களாக வழங்கினார். இராமேசுவரம் செல்லும் பயணிகளது வசதிக்காக, இராமநாதபுரத்திலும் புகலூரிலும் புதிய அன்ன சத்திரங்களை அமைத்தார். மல்லாங் கிணறு, பிடாரிசேரி ஆகிய ஊர்களில் இருந்த சிதைந்த அன்னச் சத்திரங்களையும் புதுப்பித்து இயங்குமாறு செய்தார். இவை தவிர, கல்விமான்களுக்கும் வேதவிற்பள்ளிகளுக்கும் இவர் வழங்கிய மான்ய கிராமங்கள் இராமநாதபுரம் சமஸ்தான ஆவணங்களில் 'தொன்னூற்று ஆறு தர்மாசனங்கள்' என குறிப்பிடப்படுகின்றன. இவரது நிர்வாகத்திற்கு உதவியாக இருந்தவர் பிரதானி தியாகராஜபிள்ளை என்பர்.

கி.பி. 1804-ல் இராமனாதபுரம் கோட்டைக்கு வருகை தந்த ஜியார்ஜி வாலண்டினோ என்ற இங்கிலாந்து நாட்டு பிரமுகர் இவரைச் சந்தித்து உரையாடியதை தமது பயண நூலில் குறித்து வைத்துள்ளார். .ஒல்லியான உயர்ந்த தோற்றமுடையவர். அண்மையில் அவரது கணவனை இழந்து விட்டதால், இந்தியர்களது வழக்கப்படி, அவர் எவ்வித அணிகலன்களும் அணிந்து இருக்கவில்லை. சீனப்பட்டும் வெண்மையான மஸ்லின் துணியும் புனைந்து இருந்தார். பொன்னாலான தொங்கட்டான்களுடன் கூடிய அவரது நீண்ட காதுகள், பளுவினால் தோள் பட்டைக்கும் கீழே தொங்கின. பெரிய இதழ்கள் சற்று கருமையான நிறம்...' என்று தொடர்கிறது அவரது குறிப்புக்கள்.

இவருக்கு மகட்பேறு இல்லாததால் தமது கணவரது உறவினரான அண்ணாசாமி என்பவரை தமது

For more ebooks vist: http://getmyebook.in/

வாரிசாகக் கொண்டிருந்தார். 18-7-1812-ல், இவர் இராமனாதபுரத்தில் காலமானார்.

**6. கும்பெனியார்**

ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியாரைக் குறிக்கும் சொல். ஆங்கிலேயர்கள் இந்தியா, சீனம் போன்ற கீழை நாடுகளுடன் வாணிகம் மேற்கொள்ளுவதற்காக இந்த அமைப்பு நிறுவப்பட்டது. இங்கிலாந்து நாட்டு அரசு வழங்கிய அனுமதியுடன் இந்தக் குழுவினர் கி.பி. 1600-ல் தில்லியில் முகலாயப் பேரரசராக இருந்த ஜஹாங்கீர் மன்னரைப் பேட்டி கண்டு, அவரது ஒப்புதல் பெற்று இந்திய நாட்டில் தங்களது வாணிபத்தை துவக்கினர். அதற்காக கி.பி. 1612-ல் சூரத்திலும், கி.பி.1639ல் சென்னையிலும் கி.பி. 1692-ல் பம்பாயிலும், கி.பி. 1692-ல் கல்கத்தாவிலும் தங்களது பண்டக சாலைகளை நிறுவினர்.

அவர்களது வியாபாரம் எப்படி நடைபெற்றது என்பதை வங்காள நவாப் இங்கிலாந்து நாட்டுப் பேரரசர்க்கு அனுப்பிய புகாரில் இருந்து எளிதாகப் புரிந்து கொள்ளலாம். ...தங்களது நாட்டு வியாபாரிகள் குடிகளிடமிருந்து உள்ளூர் வணிகர்களிடமிது பொருட்களை பயமுறுத்தி எடுத்துச் செல்கின்றனர். அவர்களது அடாவடித்தனத்திற்கு ஆளாகிய குடிமக்கள் ஐந்து ரூபாய் மதிப்புள்ள பொருளுக்கு விலையாக ஒரு ரூபாயைப் பெற்றுக் கொள்ள கொள்ள வேண்டியதாக உள்ளது.' இவ்விதம் வாணிபம் நடத்திய அவர்கள் நாளடைவில் வங்காளத்தில் இருந்த, முகலாயப் பேரரசரது பிரதிநிதிக்கு எதிரான சூழ்ச்சிகளிலும், சதிகளிலும் ஈடுபட்டு அவரை கி. பி.

For more ebooks vist: http://getmyebook.in/

1757-ல் பிளாசிப் போரில் தோற்கடித்து, வங்காள பீகார் பகுதிகளில் தங்களது நிர்வாகத்தை மேற்கொண்டனர். அதே காலத்தில் தெற்கே, ஆறாகாட்டு நவாப்பிற்கு எதிரான உள்நாட்டு போ ர்களில் நவாப்பிற்கு ராணுவ உதவி வழங்கியதுடன், அவரைத் தங்களுடைய கடனாளியாக மாற்றி, முழுக்க முழுக்க அவர்களையே நம்பி இருக்குமாறு செய்தனர். இதனால் நவாப் முகம்மது அலி, ஆகளுக்கு பல சலுகைகளை அளித்தார். அவர் கொடுக்கவேண்டிய பாக்கிக்காக சில மாவட்டங்களில் வரி வசூலிக்கும் உரியையும் கி.பி. 1781-85-ல் வழங்கினார்.

மைசூர் மன்னர் திப்புசுல்தானுடன் நடத்திய போரின் முடிவில், கி.பி. 1792-ல் தானமாகப் பெற்ற சத்தியமங்கலம், சேலம், திண்டுக்கல் பகுதிகளுடன் ஆற்காட்டு நவாப்பிடம் இருந்து ஒப்பந்தத்தில் பெற்ற திருநெல்வேலி, மதுரை, மறவர் சீமைகளிலும் முதன் முதலாக, வியாபாரத்துடன் வரி வசூலை மேற்கொண்டனர். கி.பி. 1795-ல் நவாப் முகம்மது அலி இறந்தவுடன் அவரது வாரிசுகளைத் தொடர்ந்து பயமுறுத்தி நிர்ப்பந்தித்து எஞ்சிய தமிழ்நாட்டின் பகுதிகளையும் நவாப்பின் அதிகார வரம்பிலிருந்து முழுமையாகப் பெற்று கி.பி. 1801-ல் கர்நாடகம் முழுவதும் தங்களது புதிய ஆட்சி முறையை அமுலுக்கு கொண்டு வந்தனர்.

பெயரளவில் வாணிபக் கழகமாக இயங்கிய இந்தக் கூட்டுக்கொள்ளை நிறுவனத்தை இங்கிலாந்து அரசியாக இருந்த விக்டோரியா ராணியார் கி.பி. 1858-ல் கலைத்து உத்தரவிட்டு அந்த நிறுவனம் சம்பாதித்து

For more ebooks vist: http://getmyebook.in/

வைத்து இருந்த இந்திய நாட்டுப் பகுதிகள் அனைத்தையும் தமது ஆங்கிலப் பேரரசின் பகுதியாக மாற்றி விட்டார். இங்ஙனம் ஆங்கில ஆட்சியுடன் இணைக்கப்பட்ட நமது நாட்டின் விடுதலையைப் பெறுவதற்கு நமது முன்னோர்கள் பல தியாகங்களைப் புரிந்து போராடியதை பல விடுதலை இயக்கங்கள் எடுத்துச் சொல்கின்றன.

**7. துபாஷ் ரங்கப்பிள்ளை**

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழக அரசியலை தமதுடமையாக்கிக் கொண்ட கும்பெனியாருக்கு. தமிழ்ச் சமுதாயத்தில் உள்ள தமிழர், வடுகர், இசுலாமியர் ஆகியோரது பிரச்சினைகளைத் தெரிந்து கொள்வதற்கும். பாளையக்காரர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்வதற்கும். மொழி பெயர்ப்பாளர்கள் இன்றியமையாதவர்களாக இருந்தனர். அவர்கள் துவி-பாஷி (இருமொழியாளர்) அல்லது துபாஷ் என வழங்கப்பட்டனர். அவர்களில் துபாஷ் பச்சையப்ப முதலியார் (காஞ்சிபுரம்) துபாஷ் ஆனந்தரங்கம் பிள்ளை (பாண்டிச்சேரி) துபாஷ் அப்துல்காதர் (அபிராமம்) ஆகியோர்களை இன்னும் மக்கள் நினைவுக் கூறப்படுகின்றனர்.

அவர்களைப் போன்று இராமனாதபுரம் சீமை வரலாற்றில் பெயர் போனவர் துபாஷ் ரங்கப்பிள்ளையாகும். சென்னையை அடுத்த ஆச்சாள்புரத்தில் சோழமண்டல கருணிகர் குலத்தில் பிறந்த இவரது மூதாதையர்கள் கும்பெனி கவர்னராக இருந்த எலிஜா எல் காலத்தில் மிகுந்த செல்வாக்குடன் திகழ்ந்தனர். இவரும் சென்னைக் கோட்டையில், ஜார்ஜ்

For more ebooks vist: http://getmyebook.in/

ஸ்டிரஸ்டடனி, ஜார்ஜ் பவுனி ஆகியோருக்கு துபாஷாக இருந்தார். பின்னர் காலின்ஸ் ஜாக்லன் இராமநாதபுரம் சீமைக் கலெக்டராக பணியேற்ற பொழுது அவரது துபாஷாக இராமநாதபுரத்திற்கு வந்தார். கலெக்டருக்கு ரங்கபிள்ளை மீது அசைக்கமுடியாத நம்பிக்கை இருந்தது. துபாஷ் தமது சுயநலத்திற்கு அதனைப் பயன்படுத்தினார். விரைவிலேயே ஜாக்ஸனது நிர்வாகம் ஊழல் மிகுந்து உழன்றது.

கும்பெனியாரது வருவாய் குறைந்து காணப்பட்டது. கணக்குகள் வளமையான வருமான வசூலைக் காண்பித்தன. ஆனால் வரவு இனத்தில் தொகை குறைந்தது. வசூலான தானியத்தை மிகவும் குறைவான விலைக்கு விற்று, வித்தியாசத் தொகையை தமது பேரத்திற்கு கிடைத்த தொகையாக துபாஷ் எடுத்துக் கொண்டார். அத்துடன் வேறு சலுகைகள் அளிப்பதாகச் சொல்லி இன்னும் சில வியாபாரிகளிடம் பணம் வசூலித்து வந்தார். மேலும், சிவகங்கை சேர்வைக்காரர்கள், எட்டையாபுரம் பாளையக்காரர் ஆகியோர் கி.பி. நவம்பர் 1797, மார்ச்சு ஜூலை 1798-ல் கும்பெனியாருக்கு செலுத்திய கிஸ்தித் தொகைகளும் அரசாங்க வரவுகளில் இடம் பெறவில்லை என்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. இன்னும் இவை போன்ற பல கையாடல்கள், ஊழல்கள், இதற்கு சில சம்பிரதி, அமில்தாரும் உடந்தையாக இருந்தனர். இவை தவிர இவரும் இவரது உறவினர்களும் இராமநாதபுரம் சமஸ்தானக் கோயில்களுக்கு அடிக்கடி போய் வந்தனர். பக்தி

For more ebooks vist: http://getmyebook.in/

மேலிட்டால் அல்ல. கோயில் செலவுகளிலும் கிடைத்ததைப் பெற்று வருவதற்காக.

இவரது ஊழல்களின் எதிரொலியாக கலெக்டர் ஜாக்ஸன் தமது பதவியை இழந்தார். சென்னை கவர்னர், இராமனாதபுரம் விசாரணைக்குழு' என்ற குழுவை நியமித்து இந்த ஊழலின் முழு விவரத்தையும் சேகரிக்க செய்தார். பெட்ரிக், ஒயிட், கோர்ல்பரோ, ஹாரிங்க்டன் என்ற பரங்கி அலுவலர்கள் அந்தக் குழுவில் இருந்தனர். 22,285, ஸ்டார் பக்கோடாக்கள் வரை அரசாங்கக் கணக்கில் கையாடல் செய்து இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. ரங்கப்பிள்ளை கையில் விலங்கிடப்பட்டு இராமனாதபுரம் வீதிகளில் கொண்டு செல்லப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் பாதுகாப்புடன் சென்னைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். 14,851 ஸ்டார் பக்கோடா தொகையை கும்பெனியாருக்கு செலுத்தி ரங்கபிள்ளையை விடுவிக்குமாறு அவரது குடும்பத்தினர் கோரினர். அந்தக் கோரிக்கையை கும்பெனியார் ஏற்றுக் கொண்டனரா? எஞ்சிய தொகை வசூலிக்கப்பட்டதா? என்ற விவரங்கள் தெரியவில்லை.

ஆனால், சிவகங்கை மருது சேர்வைக்காரர், எட்டையாபுரம் பாளையக்காரர், கீழ்க்கரை அப்துல் காதிர் மரைக்காயர், சென்னை நயினியப்பமுதலி, சென்னை ஷேக் தமால்ஜி ஆகியோர்களிடம் ரங்கப்பிள்ளை வசூலித்த தொகைகள் மட்டும் திரும்பக் கிடைக்கவில்லை என்பது உறுதியாகத் தெரிகிறது.

### 8. இராமலிங்க விலாசம்

For more ebooks vist: http://getmyebook.in/

சேதுபதி மன்னர்களது சிறப்பான இருக்கையாக விளங்கிய இடம். இராமனாதபுரம் சேதுபதி மன்னர்களில் இணையற்ற பெருமன்னராக விளங்கிய ரெகுநாத சேதுபதி என்ற கிழவன் சேதுபதி (கி.பி. 1674-1710) இந்த அரண்மனையை அமைத்தார். இதனையும் இதனைச் சூழ்ந்த இராமனாதபுரம் கோட்டையையும் அமைக்க கீழக்கரைப் பெருவணிகரும் சேதுபதி மன்னரது நல்லமைச்சருமான வள்ளல் சீதக்காதியின் பெரும் பொருளும் அரும் உழைப்பும் உதவியதாக வரலாற்று ஆவணங்களில் வரையப்பட்டுள்ளன. சேதுபதி மன்னர்களது ஆட்சி பீடமாகவும் அத்தாணி மண்டபமாகவும் விளங்கிய இந்த அரண்மனையை அழகுப் பேழையாக மாற்றியமைத்தவர்கள் விஜய ரகுநாத சேதுபதி (1710-25) , முத்துக்குமார விஜய ரகுநாத சேதுபதி (1730-35) சிவகுமார், முத்துக்குமா சேதுபதி (1784-1747) ஆகியவர்கள்.

இந்த சிங்கார மாளிகை உயர்ந்த மதில்களும், வளைந்த விதானங்களும், வண்ண ஓவியங்களால் நிறைக்கப்பட்டுள்ளன. இராமாயண, பாகவதக் கதைகளைச் சொல்லும் ஓவியங்களையும், வரலாற்று நிகழ்ச்சிகளை நினைவுபடுத்தும் ஒவியங்களும் அடுத்தடுத்து வரையப்பட்டுள்ளன. விஜயரங்க சொக்கநாத நாயக்கர் மன்னர் சேதுபதி மன்னருக்கு ரத்தின அபிஷேகம் செய்தல், முத்து விஜயரகுநாத சேதுபதியின் தெய்வீகத் தொடர்புகள், சேதுபதி மன்னருக்கு அன்பளிப்புகளுடன் பரங்கியர் காத்து இருத்தல், அந்தப்புர கேளிக்கைகள், மராத்தியருனான அறந்தாங்கிப் போர், மறவர் சீமைக்குள் புகுந்த

For more ebooks vist: http://getmyebook.in/

மராத்தியரைக் கைது செய்தல், அரண்மனையில் உறங்கிவிட்ட தமிழ்ப் புலவருக்கு ஆயாசம் தீர உபசரித்தல் போன்ற காட்சிகள் கண்ணையும், கருத்தையும் கவருவனவாக உள்ளன. இன்னும் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் மறவர் சீமையில் இருந்த மகளிரது வீர விளையாட்டுக்கள், ஆடல் குட்டியர், ஆரணங்குகளின் ஆடை அணிகலன்கள், படைவீரர்களது ஆயுதங்கள், அரச ஊழியர் பணிகள் ஆகியவைகளைச் சித்தரிக்கும் பல ஓவியங்கள் ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன. காலத்தையும் வென்று காட்சியளிக்கும் இவ்வளவு ஓவியங்கள் ஒரே இடத்தில் இந்தியாவில் வேறு எங்குமே இல்லையென தொல்பொருள் துறை மேதை திரு. நாகசாமி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆற்காட்டு நவாப்பிற்காக, முற்றுகையிட்டு இராமனாதபுரம் கோட்டையை 3-6- 1772-ல் மறவரது கடும் போருக்குப் பிறகு கைப்பற்றிய தளபதி ஜோஸப் ஸ்மித் இந்த அரண்மனையைப் பார்த்து வியந்து வரைந்துள்ளார். கும்பெனியார் முத்து ராமலிங்க சேதுபதி மன்னரைப் பதவி நீக்கம் செய்து அவரை திருச்சிக் கோட்டையில் அடைத்து வைத்து இருந்த பொழுது, இந்த அரண்மனையைத் தங்களது இருப்பிடமாகவும், அலுவலகமாகவும், கலெக்டர் பவுனியும், கலெக்டர் ஜாக்ஸனும் பயன்படுத்தினர். பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரரான வீர பாண்டியகெட்டி பொம்மு நாயக்கரை இந்த அரண்மனையின் மச்சுவீட்டில் மூன்று மணி நேரம் நிற்கவைத்து விசாரணை செய்தார். இந்த

For more ebooks vist: http://getmyebook.in/

நிகழ்ச்சிக்குப் பிறகு தான் வீரபாண்டியனாக மாறினர். கெட்டி பொம்முவின் புகார் மனுமீது மூன்று பேர் கொண்ட தூதுக்குழு ஒன்றை அனுப்பி கலெக்டர் ஜாக்ஸ்னையும் கெட்டி பொம்முவையும் விசாரிக்குமாறு சென்னை கவர்னர் உத்தரவிட்டார். அந்த குழுவினரது விசாரணை இந்த அரண் மனையில் தான் நடந்தது.

அறிஞர் பெருமக்களின் அரிய படைப்புக்களும் கலைஞர் பலரது சிறந்த கலைநிகழ்ச்சிகளும், அரங்கேற்றம் பெறுவதற்கும் பரிசுகளும் பாராட்டுக்களும் பெறுவதற்கும் இந்த அரண்மனை ஆய்வுக்களமாக விளங்கியது என்பது பிற்கால வரலாற்றில் இருந்து தெரிகிறது.

**9. இராமேஸ்வரம் திருக்கோயில் மூன்றாவது பிரகாரம்**

இராமேஸ்வரம் திருக்கோயில், இராமனாதபுரம் சேதுமன்னர்களது பண்பட்ட சமய உணர்வையும் கலை ஆர்வத்தையும் காலமெல்லாம் காட்டி நிற்கும் கலங்கரை விளக்கமாகும். இந்த கோயிலின் கட்டுமானங்கள் அனைத்திலும் சிறப்பாகக் கருதப்படுவது மூன்றாவது பிரகாரமாகும். இந்தக் கலைப்பணி கி.பி. 1740-ல் சிவகுமாரமுத்து விஜயரகுநாத சேதுபதி மன்னர் காலத்தில் துவக்கப்பெற்று கி.பி. 1769-ல் முத்து ராமலிங்க விஜயரகுநாத சேதுபதி மன்னர் ஆட்சியில் நிறைவு பெற்றது. இந்த நிறைவு விழாவினையொட்டி திருக்கோயிலின் மேலக் கோபுர வாசலில் இந்த

For more ebooks vist: http://getmyebook.in/

மன்னரது திருவுருவச்சிலை நிறுவப் பட்டது. (பார்க்க மேலட்டை சித்திரம்)

கோயிலின் திருமதிலுக்கு 30 முதல் 40 அடி உட்புறமாக கிழமேல் திக்கில் 880 அடியும் தெற்கு வடக்கில் 672 அடியுமாக 17 அடி அகலத்தில் இந்தப் பிரகாரம் முழுவதும் கல்லால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரகாரத்தின் இருபுறமும், 5 அடி உயர நீண்ட மேடையில், 12 அடி உயரமுள்ள 1212 கல்துண்கள், இருபுறமும் வரிசையாக நிற்கின்றன. ஒரே கல்லாலான ஒவ்வொரு துாணும் சிற்பக் கலையழகுடன், ஒரே அளவிலும், பரிணாமத்திலும் வடித்தெடுக்கப்பட்டுள்ளது. உலகத்தில் வேறு எங்கும் காணப்படாத இவ்வளவு நீண்ட கல் கட்டுமானம் ஒரு மூலையில் இருந்து இன்னொரு மூலை முடிவைப் பார்ப்பவர்களது கண்களுக்கு சிறந்த கலை விருந்தாக காட்சி அளிக்கிறது. கட்டுமானக் கலையின் சிறந்த உத்திகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இந்தப் பிரகாரத்தின் பிரம்மாண்டமான தோற்றமும் அதனை ஊடுருவித் தெளிவாகப் புலப்படுத்தும் நல்ல வெளிச்ச வசதியும், இந்த அமைப்பைக் காண்பவர்களது உள்ளத்தில் வியப்பையும் ஒருவித பிரமையையும் தோற்றுவித்துக் கொண்டு இருக்கிறது.

இந்தக் கட்டுமான அழகில் மிகவும் ஈடுபட்ட வெளிநாட்டறிஞர்களான பர்ஜஸ், பெர்குஸன் ஆகியோர் தங்களது நூல்களில் இந்த அமைப்பை மிகவும் பாராட்டி வரைந்துள்ளார்கள். இந்தச் சிறந்த அமைப்பை நிர்மாணித்த சிற்பாசிரியன் பெயரை

For more ebooks vist: http://getmyebook.in/

வரலாறு மறைத்து விட்டது வருந்தத்தக்கது. இன்னும் ஒரு புதிர் என்னவென்றால் இராமேஸ்வரம் தீவு நான்கு புறமும் கடலால் சூழப்பட்டு இருக்கும்பொழுது, இந்தக் கட்டுமானத்திற்குத் தேவையான இவ்வளவு பாறாங்கற்கள் எந்த மலையிலிருந்து, எவ்விதம் இந்தக் கோயிலுக்கு கொண்டுவரப்பட்டன என்பதாகும்.

**10. பக்கோடா**

பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டில், தென்னகத்தில் செலாவணியில் இருந்த நாணய வகைகளில் ஒன்று பக்கோடா என்ற தங்க நாணயம். இதனை முதலில் தயாரித்து வெளியிட்டவர் ராஜா காந்திவராஜ். (கி.பி. 1638-58) என்ற மைசூர் மன்னர். அவர் தமது இஷ்ட தெய்வமான விஷ்ணுவின் தசாவதாரங்களில் ஒன்றான பன்றியின் உருவத்தைப் பொறித்து வெளியிட்டார். இந்த வராக முத்திரை காரணமாகவே இந்த நாணயம் பின்னர் வராகன் எனவும் பெயர் பெற்றது.

இத்தகைய நாணயம் பாரசீக மொழியில் பட்-கடர்' எனப்பட்டது. முகலாயப் பேரரசர்கள் பாரசீக மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டு இருந்ததால், மைசூர் மன்னரும் தமது நாணயத்திற்கு பக்கோடா எனப் பெயர் சூட்டி வழங்கினார். இவரைப் பின்பற்றி ஆங்கில, போர்த்துகீஸிய, டச்சுக் காரர்களும் தென்னகத்தில் தங்களது பக்கோடா நாணயங்களைப் புழக்கத்திற்கு கொண்டு வந்தனர். போர்ச்சுக்கீஸியர் நாணயம் பேத்ரி பக்கோடா என்றும், டச்சுக்காரரது நாணயம் போர்ட்டோ நோவே பக்கோடா என்றும்,

For more ebooks vist: http://getmyebook.in/

ஆங்கிலேயர் நாணயம் ஸ்டார் பக்கோடா எனவும் குறிப்பிடப்பட்டன.

மறவர் சீமையைப் பொறுத்தவரையில், ஏனைய வெளி நாட்டினரைவிட, டச்சுக்காரர்களுக்கு மிகுந்த செல்வாக்கு இருந்தது. முத்து இராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் ஆட்சியின் பொழுது, மறவர் சீமைத் தறிகளில் தயாரிக்கப்படும் கைத்தறித் துணிகளைப் பெரும் அளவில் டச்சுக்காரர்கள் கொள்முதல் செய்து தேவிபட்டினம் துறைமுகம் வழியாக தரங்கம்பாடிக்கும் பின்னர் ஐரோப்பிய சந்தைகளுக்கும் அனுப்பி வைத்தனர். அதனால் டச்சுக்காரரது போர்ட்டோ நோவோ பக்கோடா நாணயம் இராமனாதபுரம் சீமையில் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் மிகவும் விறுவிறுப்பான செலாவணியில் இருந்தது. கி.பி. 1795-ல் இந்தச் சீமையின் ஆதிக்கத்தை மேற்கொண்ட ஆங்கிலக் கும்பெனியார் தங்களது ஸ்டார் பக்கோடா நாணயத்தை இங்கே செலாவணியில் ஈடுபடுத்தினர். என்றாலும் தொடர்ந்து நீண்ட காலம் வரை டச்சுக்காரரது போர்ட்டோ நோவோ பக்கோடா செலாவணியில் இருந்தது. அதனால் கும்பெனியார் தங்களது நாணயத்துடனான டச்சு நாணய மதிப்பைக் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்து இருந்தனர்.

| | | |
|---|---|---|
| கி.பி. 1801-ல் | 116 போர்ட்டோ நோவோ பக்கோடா | 100 ஸ்டார் பக்கோடாவுக்கு சமம் |
| கி. பி. 1806 -ல் | 120 ஷை | 100 ஷை |

For more ebooks vist: http://getmyebook.in/

| | |
|---|---|
| கி.பி. 1821- 34 ஷைல் | மதராஸ் ரூபாய் 0.13, 4-க்குச் சமம் |

கி.பி. 1825-க்குப் பிறகு இந்த நாணயம் புழக்கத்தில் இருந்து மறைந்தது.

| | | | |
|---|---|---|---|
| கி.பி. 1798-ல் | 100 பக்கோடா | ஸ்டார் | 350 ஆற்காட்டு ரூபாய்களுக்கு சமம் |
| கி.பி. 1799-ல் | 1 பக்கோடா | ஸ்டார் | $16\frac{3}{8}$ உள்ளூர் தங்கபணம் |
| கி.பி. 1800-ல் | 1 பக்கோடா | ஸ்டார் | 42 ஷை |

## 11. பிரதானி தாண்டவராய பிள்ளை

சிவகங்கைச் சீமையின் முதலாவது மன்னராக இருந்த சசிவர்ணப் பெரிய உடையாத் தேவருக்கும் அவரை அடுத்து அரியணை ஏறிய முத்துவடுகனாதப் பெரிய உடையாத் தேவருக்கும் பிரதானியாகப் பணியாற்றியவர் இவர். பிரதானி என்பது நிர்வாகப் பொறுப்பிற்குரிய அமைச்சர், படையணிக்குள்ள தளபதி ஆகிய இருபதவிகளும் இணைந்த பெரும் பதவி. அரசருக்கு அடுத்த இடம். இந்த உயர்ந்த நிலையை, சாதாரண கருணிகர் குடும்பத்தில் தோன்றிய இவர் எய்தியதற்கு அவரது திறமையும் அறிவுடமையுமே காரணம் ஆகும்.

மறவர் சீமையின் பிரதானியாக இராமனாதபுரத்தில் இருந்த தாமோதரம் பிள்ளையும் இவரும் உடன்பிறப்புக்கள் போன்று அரசியலில் ஒரே கொள்கையுடன் அன்னியோன்னியமாக இருந்து

For more ebooks vist: http://getmyebook.in/

வந்தனர். மதுரையில் முடிந்து போன நாயக்கப் பேரரசை நிறுவுவதற்கு இருவரும் இணைந்து முயன்றனர். அப்பொழுது ஆற்காட்டு நவாப்பாக இருந்த சந்தா சாகிப்பை இணங்க வைத்து, நாயக்க மன்னர் பரம்பரையைச் சேர்ந்த இளவல் விஜயகுமார பங்காரு திருமலை நாயக்கரை கி.பி. 1751-ல் மதுரைப் பேரரசராக முடிசூடும்படி செய்தனர். ஐந்து ஆண்டுகள் கழித்து ஆற்காட்டு நவாப் முகமது அலியின் பிரதிநிதியாக மதுரை கவர்னராகப் பணியாற்றிய கம்மந்தான் கான்சாகிபுடன் நெருக்கமாக இருந்து அவரது நல்லாட்சிக்கு ஆதரவாக இருந்தார். இவர்.

கான்சாகிபுவின் ஆண் குழந்தைக்கு சிறந்த அணிமணிகளை அன்பளிப்பாக வழங்கியதற்காக மேலூர் வட்டத்தில் உள்ள சிறுமணியேந்தல் என்ற சிற்றுரரை கம்மந்தானிடமிருந்து சர்வமானியமாகப் பெற்றார். ஆனால் அதனை தனக்கென வைத்துக் கொள்ளாமல் தாம் வழிபடும் மதுரை மீனாட்சிக்கு தானமாக வழங்கி விட்டார். இந்த அளவிற்கு கம்மந்தானுடன் நட்பாக இருந்த இவர், கம்மந்தான் ஆற்காட்டு நவாப்புடனும் கும்பெனியாருடனும் மனந் திரிந்தவராக கி.பி. 1763-64-ல் வீரமரணப் போரிட்ட பொழுது, அவருக்கு உதவ முன்வராது பெரும் பழிக்கு ஆளானார். காரணம் நவாப் முகம்மதலியின் பேச்சை முழுதுமாக நம்பியதுதான்.

ஆனால் ஏழு ஆண்டுகளில் நவாப் முகம்மது அலியின்வாக் குறுதி பொய்த்து விட்டது. சிவகங்கை மீது நவாப்பின் படைகளும் பரங்கிப் படைகளும் தாக்குதல் தொடுத்தன. எதிர்பாராத வகையில்

For more ebooks vist: http://getmyebook.in/

காளையார் கோவில் போரில் சிவகங்கை மன்னருடன் நின்று கடும் போர் புரிந்தார். முடிவு மன்னர் குண்டடிபட்டு வீழ்ந்து இறந்தார். கோட்டையும் விழுந்தது. ஆனால் இந்தப் பிரதானி நவாப்பிடம் சரணடையவில்லை. சிவகங்கை அரசி வேலுநாச்சியாரை பாதுகாப்பாக மைசூர் மன்னரது விருபாட்சியில் வைத்து விட்டு சிவகங்கைச் சீமையை மீட்பதற்கு உரிய நடவடிக்கைகளில் இறங்கினார். மைசூர் மன்னர் ஹைதர் அலிக்கு தூது அனுப்பி சிவகங்கை மீட்சிக்கு ராணுவ உதவி கோரினார். சிவகங்கை சீமையில் உள்ள அனைத்து நாட்டுத் தலைவர்களுக்கும் ஓலைகள் அனுப்பி நவாப்புடனும் கும்பெனியாருடனும் மோதுவதற்கு தயாராகிக் கொண்டு இருந்தார். நாளெல்லாம் நாட்டு விடுதலை பற்றிய சிந்தனையில் ஆழ்ந்து செயல்படும் பொழுதே மரணம் அவரைப் பறித்துக் கொண்டு போய் விட்டது. என்றாலும் அவரது சிறந்த பண்புகளையும் செயல் திறனையும் நாடோடி இலக்கியமான 'கான்சாகிபு சண்டை' யும் குழந்தைக் கவிராயரது மான்விடு தூதும் காலமெல்லாம் கட்டியங் கூறிக்கொண்டு இருக் கின்றன.

### 12. மருது சேர்வைக்காரர்கள்

மறவர் சீமையின் முப்பெரும் இனத்தில் ஒன்றாகிய 'அகம்படியர்' பெரும்பாலும் இராமனாதபுரம் சேதுபதி மன்னரது பணியில் இருந்து வந்தனர் அவர்களில் முக்குளம் கிராமத்தினைச் சேர்ந்த மொக்கைப் பழனி சேர்வை என்பவரது மக்கள் தான் வரலாறு புகழும் மருது சகோதரர்கள். மூத்தவர் வெள்ளை மருது

For more ebooks vist: http://getmyebook.in/

அல்லது பெரிய மருது என்றும், இளையவர் சின்னமருது அல்லது மருது பாண்டியன் என்றும் வழங்கப்பட்டனர். இவ்விருவரும் மறவர்களுக்குரிய ஆண்மையும் மனத் திண்மையும் பெற்று இருந்ததுடன், மற்றவர்களுக்கு இல்லாத உடல் வலிவும் வாய்க்கப் பெற்று இருந்தனர். இவர்களது தந்தையார் இராமனாதபுரம் மன்னரது பணியில் இருந்ததனால், இவ்விருவரும் அந்த மன்னரது உறவினரான சிவகங்கை மன்னரது சேவகத்தில் அமர்த்தப்பட்டனர்.

மிகச் சாதாரண பணிகளில் ஈடுபடுத்தப்பட்ட அவர்கள் விரைவில் சிவகங்கை மன்னரது அந்தரங்கப் பணியாளர்களாக மாற்றம் பெற்றனர். இயல்பாகவே, அவர்களிடம் பொருந்தி இருந்த பேராற்றல்கள் மன்னரைக் கவர்ந்ததில் வியப்பில்லை. ஆனால் சிவகங்கை மன்னர் முத்துவடுகனாத பெரிய உடையாத் தேவர் கி.பி. 1772 ல் காளையார்கோவில் கோட்டைப் போரில் ஆற்காட்டு நவாப்பின் படைகளுடன் மோதி வீரமரணம்எய்தினார். பிரதானி தாண்டவராய பிள்ளையுடன் மைசூர் மன்னர் ஹைதர் அலியிடம் அரசியல் தஞ்சம் பெற்ற ராணி வேலு நாச்சியாரது அந்தரங்கப் பணியாளர்களாக இருந்து வந்தனர். கி.பி.1780-ல் ஹைதர் அலி மன்னர் அளித்த உதவிப் படைக்குத் தலைமை தாங்கிய சிவகங்கை ராணியுடன் இந்தச் சகோதரர்கள் சிவகங்கைச் சீமையை ஆக்கிரமித்து இருந்த ஆற்காட்டு நவாப்பின் படைகளையும், அவர்களுக்குத் துணைபுரிந்த கும்பெனியாரது கூலிப்பட்டாளங்களையும் சிவகங்கை மண்ணில் இருந்து விரட்டி அடித்தனர்.

For more ebooks vist: http://getmyebook.in/

சிவகங்கைச் சீமை மீண்டும் சுதந்திர நாடாகியது. ராணி வேலு நாச்சியார் அரசியாராக முடிசூட்டப்பட்டார். மண்ணின் மானம் காத்த மருது சகோதரர் இருவரும் சிவகங்கைப் பிரதானிகளாகப் பணி ஏற்றனர். நாளடைவில் பெரிய மருதுவிற்கும், அரசியாருக்கும் நெருங்கிய தொடர்புகள் ஏற்பட்டன. அதனால் பிரதானி சின்னமருது அரசியாரது அதிகாரங்களைப் புறக்கணித்தவராக, தாமே அரசியலை நேரடியாக நடத்தி வந்தார். முந்தைய மன்னர்களது வழியில் நின்று, தாமே பல அற நிலையங்களை நிறுவினார். அன்ன சத்திரங்களைத் தோற்றுவித்து ஆலயத் திருப்பணிகளையும் மேற்கொண்டார். ஆற்காட்டு நவாப்பிற்கும், கும்பெனியாருக்கும் விசுவாசமுள்ள பாளையக்காரராக இருந்து வந்தார். அதனால் அவர்கள் தங்கள் சிவகங்கை சீமைக்கான கடிதப் போக்குவரத்தினை சின்னமருதுவுடன் மட்டும் கொண்டிருந்தனர். அரசியார் ஒருவர் அங்கு இருப்பதை அவர்கள் மறந்து விட்டனர். இவரைத் தங்கள் ஆவணங்களில் சிவகங்கை சேர்வைக்காரர்' என்று குறிப்பிட்டு வந்தன்ர். அந்த அளவிற்கு அவர்களுக்கிடையில் நெருக்கம் இருந்தது. -

ஆனால் இவரும், இராமனாதபுரம் மன்னரும் நெருங்க முடியாத அளவில் தீராத பகையும் வெறுப்பும் கொண்டிருந்தனர். சுதந்திர வேட்கை கொண்ட சேதுபதி மன்னரது சீமை அரசியலில் கும்பெனியார் நேரடியாக தலையிடுவதற்கும், பொது மக்கள் பல தொல்லைகளுக்கு ஆளாவதற்கும் இவர்களுக்கு இடையிலான பூசல்கள் பயன்பட்டன. பதினேழாம்,

For more ebooks vist: http://getmyebook.in/

பதினெட்டாம் நூற்றாண்டுகள் முழுவதும் தன்னரசாக விளங்கிய மறவர் சீமை கும்பெனியாரது ஆட்சியின்கீழ் கொண்டுவரப்பட்டது. சேதுபதி மன்னரும் சிறையில் அடைக்கப்பட்டார். இந்த அநீதியை எதிர்த்துக் கிளர்ந்து எழுந்த மறவர் இயக்கங்களை கும்பெனியார் அடக்கி ஒடுக்குவதற்கு மருது சகோதரர்களும் காரணமாக இருந்தனர்.

என்றாலும், அடுத்த ஐந்து ஆண்டுகளில் தமிழக அரசியல் முழுவதையும் தமதாக்கிக் கொண்ட கும்பெனியார் தமக்குப் பல வழிகளிலும் பயனுள்ள பாளையக்காரராக இருந்த மருது சகோதரர்களையும் சும்மா விடவில்லை. இதனைப் புரிந்துகொண்ட மருது சகோதரர்கள் கும்பெனியாரது ஆதிக்க வெறியை எதிர்ததுப் போராடுவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டனர். அப்பொழுது ஆங்காங்கு துளிர்விட்ட தென்னகத்துப் புரட்சி இயக்கங்களுடன் தொடர்பு கொண்டு செயல்பட்டனர். மகாராஷ்டிரம். மைசூர், வயநாடு மாநிலங்களில் உள்ளவர்களும், மதுரை. நெல்லை, திருச்சி, சீமைப் பாளையக்காரர்களுடனும் ஒருங்கிணைந்து பரங்கியரைப் பலவழிகளிலும் அழிப்பதற்கு முனைந்தனர். காலங்கடந்த அந்த நிலையிலும் அவர்கள் பல பாளையக்காரர்களையும், பொதுமக்களையும் அணி திரட்டி பல இடங்களில் பரங்கியருடன் மோதினர். முதுகுளத்தூர், கமுதி, அபிராமம். குளத்தூர், பாஞ்சை, கொடுமலூர், பரமக்குடி, சாலைக்கிராமம். திருப்புவனம், திருப்பாச்சேத்தி, மானாமதுரை, பிரான்மலை. திருப்பத்தூர், ராஜசிங்கமங்கலம், அரண்மனை, சிறுவயல்.

For more ebooks vist: http://getmyebook.in/

கொல்லங்குடி , காளையார்கோவில் ஆகிய ஊர்கள், இந்திய நாட்டு விடுதலைப் போராட்டக் களங்களாக மாறின. நாட்டுப்பற்று மிக்க நூற்றுக்கணக்கான நல்லவர்கள் தங்கள் நல்லுயிரைக் காணிக்கையாகத் தந்தனர். இந்தப் போராட்டத்தின் பொழுது, துரோகிகளும் தங்கள் பங்கினை நிறைவேற்றத் தவறவில்லை.

முடிவு, பரங்கியரை ஏதிர்ப்பதற்குத் திரட்டப்பட்ட மக்கள் அணி பிரிவு கண்டது. இந்தப் பலவீனத்தையும் பொருட்படுத்தாமல் பரங்கியரை இறுதிவரை எதிர்த்துப் போரிட்ட மருது சகோதரர்கள் தோல்வி கண்டனர். அவர்களையும், அவர்களது மக்கள், உறவினர், கூட்டாளிகள் அனைவரையும் கும்பெனியார் தூக்கில் தொங்கவிட்டு மகிழ்ந்தனர். கும்பெனியார் எஞ்சி யிருந்த எழுபத்து இரண்டு முதன்மை வீரர்களும் நாடு கடத்தப்பட்டு மலேஷிய நாட்டிற்கு அனுப்பப்பட்டனர். தன்னாசான சிவகங்கைச் சீமை ஜமீனாக' மாற்றப்பட்டது. அரிமாக்கள் ஆட்சி செய்த இடத்தில் அணில்கள்!

இந்திய நாட்டு விடுதலைப் போர் வரலாற்றின் இணையற்ற முன்னோடி வீரர்களான இந்த இருபெரும் சகோதரர்களும், மறவர் சீமையின் ஒளிவீசும் மாணிக்கங்களாக மக்கள் மனதில் நிலைபெற்றுள்ளனர். அவர்களது வீர உணர்வும், தியாகமும் எதிர்கால சந்ததிகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

For more ebooks vist: http://getmyebook.in/

## நூற்பெயர்க்கோவை


| Author | | Title |
|---|---|---|
| 1. Alexander Nelson | ; | Manual of Madura country (1868) |
| 2. Annasamy Ayyar, V. | ; | Sivaganga—its Origin and Litigation (1900) |
| 3. Anthony samy, R.G. | ; | Report on Dutch Records (1907). |
| 4. Dodwell, H. | ; | Madras Weavers under the company (1922) |
| 5. Hill S.C. | ; | Yousuff Khan, the rebel commandant (1914) |
| 6. Josias-Du-Pre | ; | Report on Ramnad (1771) |
| 7. Lushington S.R | ; | Correspondence on the Permanent Settlement of Southern Pollams (1803) |
| 8. Frank Penny | ; | History of Fort St. George |
| 9. Elphinstone | ; | History of India (1857) |
| 10. Mahalingam, T.V. | ; | Mackenzi Manuscripts Vol. I (1925) |
| 11. Nilakanta Sastry, K.A. | ; | Madras Tercentenary Commemoration Volumes (1958) |
| 12. Rajayyam, K. Dr | ; | Administration and Society in carnatic (1966) |
| 13. Raman, K.V. | ; | Early History of Madras Region (1957) |
| 14. Govindasamy, S.K. | ; | Unpublished letters of Bourchiar and Startton (1958) |


For more ebooks vist: http://getmyebook.in/

15. Dodwell, H. ; Calendar of Madras Records (1917)

16. Rajayyam, K. Dr. ; Selections from the History of Tamilnadu (1978)

17. Krishnasamy, W.S. ; Old Madras (1965)

18. Ramachandran, C. Dr. ; East India company and South India Economy (1980)

19. Srinivasachariar, C.S ; Invardness of British-Annexations in India (1951)

20. Srinivasa Iyer, R. ; Brief Notes on Rameswa rann (1914)

21. Venkatara man, K.S. ; Handloom Industry in South India (1940)

22. Vibart, Maj. ; Military History of Madras Engineers and Pioneers (1881)

23. Taylor, W. Rew. ; Catalogue of South Indian Manuscripts (Vol. 1)

24. Wilson, W.O. ; History of Madras Army Manual of Administration (1885)

25. Francis, W. ; Gazetteer of Madurai (1914)

26. Pate, H. R. ; Gazetteer of Tirunelveli (1917)

27. Rama samy. A ; Gazetteer of Ramanathapuram (1862)

28. Stuart A.J. ; Manual of Tirunel veli District (1879)

For more ebooks vist: http://getmyebook.in/

29. Moore, L. ; Tiruchinopoly District, Manual (1934)

1. Cottoπ J.J. ; List of Inscriptions on Tomb and Monuments (1905)

2. Burgess and Watesa ; A.S.S.I. Vol. IV (1886) Sastry

3. Kathirvelu, S. Dr ; History of Marawas (1972)

4. Edmond Burke ; Impeachment of Warren Hastings (1908)

5. Rajayyam, K. Dr. ; History of Madura (1974)

6. Rajayyam, K. Dr. ; Rise and Fall of Polegars in Tamilnadu (1962)

7. ; South Indian Rebellion 18001801

8. Ramasamy N.S. and Nagasamy, R. Dr. ; Ramanathapuram District Archaeological guides (1978)

9. Ramach araya, K. V. ; List of Inscriptions Topographically arranged (3 Vols) (1925)

10. Robert Sewell ; List of Inscriptions (1884)

11. Robert Sewell and Krishnasamy Iyengar S. Dr ; Historical Inscriptions of south India (1932)

12. Rajaram Raw T. ; Ramanathapuram Manual (1891)

13. Robert Oorme ; History of Military Transactions of British Nation

For more ebooks vist: http://getmyebook.in/

Indostation (1860-1861)

14. Robert Oorme ; Historical Fragments of Moghul Empire

15. Palme Dutt, R. ; ndia Today (1947)

16. Sathianatha Iyer, S. ; History of Nayaks of Madurai

17. Sathianatha Iyer, S. ; Tamilnadu in 17th century (1956)

18. Saulibere A. ; Red Sand (1957)

19. Rathakrishna Iyer, S. ; General History of Pudukottai (1916)

20. Pharoah's ; Gazetteer of South India (1855)

21. 1 Nilakanta Sastri, K.A ; Ceylon Historical Journal Vol. IV

22. Edgar Thurston ; Castes and Tribes of South India (1909) (Fin. Vols)

23. Pudukottai ; Pudukottai State Inscriptions Samasthanam

24. Concise History of Ceylon ; Nicholas and Paranavittana

25. SubramoniaSastry, K.R. ; Assi Vol. VIII (1937)

26. Hindu (3.9.1963) ; Former Residence of Nawab

27. Vanamamalai pillai ; The Sethu and Rameswaram (1929)


For more ebooks vist: http://getmyebook.in/

| நூலாசிரியர் | தலைப்பு |
|---|---|
| 1. இராகவ ஐயங்கார், ரா. மகாவித்துவான் | சேதுநாடும் தமிழும் (1932) |
| 2. இராகவ ஐயங்கார், மு. மகாவித்துவான் (பதிப்பு) | பெருந்தொகை (1938) |
| 3. இராமச்சந்திரன் செட்டியார் டி.எம். (பதிப்பு) | இராமப்பையயன் அம்மானை |
| 4. குரு. குகதாஸப்பிள்ளை | திருநெல்வேலி சீமை சரித்திரம் (1932) |
| 5. சோம. லெ. | இராமேஸ்வரம் குடமுழுக்கு மலர் (1958) |
| 6. அமிர்த கவிராயர் | ஒருதுறைக்கோவை |
| 7. அழகிய சிற்றம்பலக் கவிராயர் | தள சிங்கமாலை |
| 8. சொக்கநாதப் புலவர் | பணவிடு தூது |
| 9. புருஷோத்தம முதலியர் | தனிப்பாடற்றிரட்டு (1914) |
| 10. வானமாமலை (பதிப்பு) | கான்சாயபு சண்டை |
| 11. கமால் எஸ். எம். | இராமநாதபுரம் மாவட்ட வரலாற்றுக் குறிப்புகள் (1984) |
| 12. செயங்கொண்டான் | கலிங்கத்துப்பரணி |
| 13. புலியூர் கோசிகன் (பதிப்பு) | புறநானூறு (1958) |
| 14. | கலித்தொகை |
| 15. இரமநாதபுரம் சமஸ்தானம் | இராமநாதபுரம் நில மான்ய கணக்கு |

For more ebooks vist: http://getmyebook.in/


16. ஜி. கலியணம் பிள்ளை, எம்.ஏ. — இராமேஸ்வரத் தல வரலாறு (1965)

17. மலர்க்குழு — உலகத்தமிழ் மாநாட்டு மலர் கையேடு (1968)



(Upload an image to replace this placeholder.)

For more ebooks vist: http://getmyebook.in/



(Upload an image to replace this placeholder.)

## நூலாசிரியரது பிற படைப்புக்கள்

1. இராமநாதபுரம் மாவட்ட வரலாற்றுக்குறிப்புகள் (1984)
2. விடுதலைப் போரில் சேதுபதி மன்னர் (1987) (தமிழக அரசின் பரிசும் பாராட்டும் பெற்றது)

For more ebooks vist: http://getmyebook.in/

3. தமிழகமும், முஸ்லீம்களும் (1988)
(சென்னை சீதக்காத்தி அறக்கட்டளை பரிசும் பாராட்டும் பெற்றது.)
4. மாவீரர் மருது பாண்டியர் (1989) (தமிழக அரசின் பரிசும் பாராட்டும் பெற்றது)
5. மன்னர் பாஸ்கர சேதுபதி (1992)
6. சேதுபதி மன்னர் செப்பேடுகள் (1994) (தமிழக அரசின் பரிசும் பாராட்டும் பெற்றது)
6. சேதுபதியின் காதலி (1995) (தமிழக அரசின் பரிசும் பாராட்டும் பெற்றது)
7. சீர்மிகு சிவகங்கைச் சீமை (1996)

## ★ இலக்கியப் பதிப்புகள்

1. வள்ளல் சீதக்காதி திருமணவாழ்த்து (1987)
2. அலிபாத்துவடிா காப்பியம் (1991)

---

**★ சர்மிளா பதிப்பகம் ★**
21, ஈசா பள்ளிவாசல் தெரு,
இராமநாதபுரம்-623 501,

For more ebooks vist: http://getmyebook.in/

## இணைப்பு 3

## இராமநாதபுரம் முத்துராமலிங்க சேதுபதி அவர்கள் வழங்கிய நிலமான்யங்கள்

| **1. அன்னசத்திரங்கள்** | **அறக்கொடையாக வழங்கப் பட்ட கிராமங்கள்** |
|---|---|
| 1. அலங்கானுர் சத்திரம் | 1. கிளத்து சேரி (கழுவான் 2. அலங்கானூர் சேரி) |
| 2. ஆத்தாங்கரை-சத்திரம் | நகரிகாத்தான் |
| 3. இராமேஸ்வரம்-கஜானா வெங்கட்டராவ் சத்திரம் | மூப்பையூர் |
| 4. இராமேஸ்வரம் முத்துக் குமாரு பிள்ளை சத்திரம் | 1. கட்டனுர் 2. சேந்தனி |
| 5. கடுகுசந்தை சத்திரம் | கடுகு சந்தை |
| 6. கோட்டைபட்னம் சத்திரம் | கொடிக்குளம் |
| 7. தனுஷ்கோடி முகுந்தராய சத்திரம் | போத்தனதி |
| 8. திருப்புல்லானி-புருஷோத்தம பண்டித சத்திரம் | கழுநீர் மங்கலம் |
| 9. தீர்த்தாண்டதான சத்திரம் | 1. முத்துராமலிங்க பட்டினம் 2. இளையாத்தன்வயல் |

For more ebooks vist: http://getmyebook.in/

| | |
|---|---|
| | 3. காடன்குடி |
| 10. பரமக்குடிவேலாயுதபுரம் சத்திரம் | 1. வேலாயுதபுரம் |
| | 2. மதலைக்குளம் |
| | 3. இலுப்பக்குளம் |
| | 4. சின்னயன்யேந்தல் |
| | 5. சிறுமுதலைக் குளம் |
| | 6.வலையநேந்தல் |
| 11. தேவிபட்டினம் சத்திரம் | 1. தென்பொதுவக்குடி |
| | 2. சிலுக்குவார்பட்டி |
| | 3.அடந்தனக் கோட்டை |
| 12. பால்குளம் ராமசாமி மடம் சத்திரம் | கடுக்காய் |
| 13. பிள்ளை மடம்-சத்திரம் | சாத்தக்கோன்வலசை |
| 14. மண்டபம்-சத்திரம் | துரத்தி ஏந்தல் |
| 15. முத்துராமலிங்கபட்டினம் சத்திரம் | 1. பிரம்பு வயல் |
| | 2. கரந்த வயல் |
| | 3. பெரிய கரையான் |
| | 4. சின்னக்கரையான் |
| 16. முடுக்கன்குளம்-சத்திரம் | மரக்குளம் |
| 17. மண்டபம் தோணித் துறை சத்திரம் | 1. மண்டபம் |
| | 2. தேர்போகி |
| | 3. வளமாவூர் |

For more ebooks vist: http://getmyebook.in/

| | |
|---|---|
| | 4. மேலவயல் |
| 18. நாகநாத சமுத்திரம் சத்திரம் | இளந்தோடை |

**||. மடங்கள்**

| | |
|---|---|
| 1. திருவாவடுதுறை மடம் திருவாவடுதுறை | வல்லக்குளம் |
| 2. தியாகராஜ பண்டார மடம் திருவாரூர் | சூரியன்கோட்டை |
| 3. சுவாமியானந்த மடம் முத்துராமலிங்கபுரம் | கள்ளிக்குடி |
| 4. சிதம்பரகுருக்கள் மடம் (திருவாரூர்) தாமோதரபுரம் | மாடக்கோட்டை |
| 5. நாகாச்சிமடம் | பெருமானேந்தல் |
| 6. சொக்கநாத மடம் | கிழக்கோட்டை |
| செட்டி ஏந்தல் | செட்டி ஏந்தல் |

|||. **கிறித்தவ தேவாலயம்**

| | |
|---|---|
| 1. சர்வேசுரன் தேவாலயம் முத்துப்பேட்டை | 1. முத்துப்பேட்டை |
| | 2. தெஞ்சியேந்தல் |

**IV. ஆலயங்கள்**

| | |
|---|---|
| 1. இராமேஸ்வரம் பர்வதவர்த்தினி திருக்கோயில் | 1. பள்ளக்குளம் |
| | 2. நிலமழக்ய மங்கலம் |

For more ebooks vist: http://getmyebook.in/

| | |
|---|---|
| 2. திருப்புல்லாணி தர்ப்பசயன மழகியார் திருக்கோயில் | 1. உப்பானைக்குடி |
| | 2. தச்சங்குளம் |
| | 3. அனிகுருந்தான் |
| | 4. பாம்புவிழுந்தான் |
| | 5. நாவல்கரையான் |
| | 6. நெல்லியம்பதி |
| 3. மங்கைநாதர் திருக்கோவில் திருஉத்திரகோசமங்கை | 1. வித்தானூர் |
| | 2. காராம்பல் |
| | 3. பரந்தன் |
| 4. முத்துராமலிங்கசாமி திருக்கோயில் இராமநாதபுரம் | 1. சொக்கானை |
| | 2. மத்தியல் |
| | 3. கல்லுப்பொறுக்கி |
| 5. சாமிநந்தா சாமிகோயில் கோட்டைவெளி, இராமநாதபுரம் | 1. ஆதியரேந்தல் |
| 6. நஞ்சுண்டேசுவரசாமி ஆலயம் நயினார் கோயில் | 1. நாகலிங்கபுரம் |
| | 2. சின்ன ஆனைக்குளம் |
| 7. திலகேசுவரர் ஆலயம் தேவிபட்டினம் | 1. கடம்பவனசமுத்திரம் |
| 8. சுந்தரேசுவரர் ஆலயம், கமுதி | 1. சூரன்குடி |

For more ebooks vist: http://getmyebook.in/

| | |
|---|---|
| | 2. கொடிக்குளம் |
| 9. வரக்குணஈசுவர ஆலயம், சாலைக்கிராமம் | 1. சின்னஉடைநாச்சிஜேந்தல் |
| 10. கைலாசநாதசுவாமி கோயில், ஆர்.எஸ்.மங்கலம் | 1. முத்தியனாவயல் |
| 11. நரசிங்கப்பெருமாள் கோயில் கப்பலூர் | 1. நயினாவயல் |
| 12. திருமேனியாண்ட ஈசுவரர் கோயில், திருச்சுழியல் | 1. அஞ்சான்குத்தி |
| | 2. கள்ளத்திகுடி |
| | 3. கல்யாணசுந்தரபுரம் |
| | 4. தொண்டமான்குளம் |
| | 5. குறிக்காரகுளம் |
| 13. அங்காளபரமேஸ்வரி ஆலயம் ஆத்தங்கரை | 1. நாகாச்சி |
| 14. ஐயனார்கோயில், காட்டுப் பரமக்குடி | காட்டுப்பரமக்குடி |
| 15. மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயம் மதுரை | (உச்சிக்கால கட்டளை) |
| | 1. வெங்கலக்குறிச்சி |
| | 2. குரங்கனைக்குளம் |
| | 3. தொட்டியன்குளம் |

For more ebooks vist: http://getmyebook.in/

| | |
|---|---|
| | 4. கூவர்குளம் |
| | 5. வெள்ளக்குளம் |
| | 6. சிறுவேப்பங்குளம் |
| | 7. தொண்டைமான் ஏந்தல் |
| | 8. அனுப்பனேந்தல் |
| | 9. குறிஞ்சாக்குளம் |
| | 10. மேலஓடைக்குளம் |
| | 11. கீழஒடைக்குளம் |
| | 12. கீழகள்ளிகுளம் |
| | 13. பனிந்த ஏந்தல் |
| | 14. புளுகனைக்குண்டு |
| 16. பூலங்கால் வாள் ஐயனார் | பூலாங்கால் |

## V. குடிமக்கள் பெற்ற நிலக்கொடைகள்

### 1. வேதவிற்பன்னர்கள்

| | |
|---|---|
| 1. .ராமையர், சுப்பையர் | சிங்கனேந்தல் |
| 2. ஆழ்வார் ஐயங்காரும் பிறரும் | நரியனேந்தல் |
| 3. வெங்குஜயர் | முத்துவயல் |
| 4. முத்துராமலிங்கஜயர் | மேலச்சீத்தை |
| 5. சிதம்பரம் ஐயரும் பிறரும் | குவளன் சாத்தான் |
| 6. திருவேங்கடஜயர் | அருங்குடி |
| 7. வெங்கடேசுவரர் ஐயர் | முத்துரெகுநாதபுரம் |

For more ebooks vist: http://getmyebook.in/

| | |
|---|---|
| 8. அனந்தகிருஷ்ண ஐயங்கார் | அச்சங்குளம் |
| 9. நாராயண ஐயன், ராமஜயன் | உலகனேந்தல் |
| 10. நரசிங்கஜயன் | சுப்புராயபுரம் |
| 11. வெங்கிடசேஷய்யன் | வல்லக்குளம் கொத்தமங்கலம் |
| 12. சுப்பிரமணியன் கோபால் மங்கலாபதி ஐயர் | கீழஏந்தல் |
| 13. உச்சையன் | பாப்பானேந்தல் |
| 14. ஜகந்நாத ஐயன் | மாவிலங்கை |
| 15. சுந்தரமையர் | தீட்சிதர் ஏந்தல் |
| 16. வெங்கிட்டராமையர் | நெட்டையேந்தல் மேலக்கோட்டை |
| 17. நாகையர் | உடையான் சத்திரம் |
| 18. கிருஷ்ணஐயங்கார் | செப்பேடு கொண்டான் |
| 19. மதுரை மீனாட்சி கோவில் அலங்கார பட்டர் - குலசேகர பட்டர் | பொட்டாம்பட்டி |
| 20. சங்கரலிங்க குருக்கள் | முடித்தனாவயல் |
| 21. சுப்பையன் மற்றும் பதின்மர் | அனுமநேரி |
| 22. பெரிய ஐயன் | பரளச்சி (பகுதி) |
| 23. ராமகோவிந்தையர் | கீழப்பனையூன் (பகுதி) |
| 24. பண்டித மருங்கள் | சக்கரக்கோட்டை |
| 25. வெங்கடசுப்ரமணியன் | சம்பை |
| 26. சாமிபெருமாள்ஜயன் | ஈராங்கால் |

For more ebooks vist: http://getmyebook.in/

| | |
|---|---|
| 27. சுப்பையன் | குமார மங்கலம் |
| 28. பழநிபாபா | சாத்தனூர் |
| 29. பருவதம்மா | நிலையாம்பூண்டி |
| 30. பாலகுருவா நாயக்கர் | திருவடியேந்தல் |
| 31. பேரையூர் | கொல்லனகுளம் |
| 32. வெங்கிட கிருஷ்ண ஐயர் | கொண்டவாள |

**VI தமிழ்ப் புலவர்கள்**

| | |
|---|---|
| 1. மீர் ஜவ்வாதுப்புலவர் | சுவாத்தன் |
| 2. சங்கரப்புலவர் | உளக்குடி |
| 3. முத்தையாப்புலவர் | ஊரணிக்கோட்டை |
| 4. கங்கமுத்துப்பிள்ளை | பொது ஏந்தல் |
| 5. மாசிலாமணிப்புலவர் | அனுமந்தக்குடி (பகுதி) |
| 6. மன்னா ரெட்டி | வடகரை, தென்கரை |

**VII சிறந்த அலுவலர்கள்**

| | |
|---|---|
| 1. சிவகுருநாதபிள்ளை | (மணியக்காரர்) சிறுகம் பையூர் (பகுதி) |
| 2. அய்யம் பெருமாள் | (மணியக்காரர்) சிறுகம் பையூர் (பகுதி) |
| 3. குடியன் | (அம்பலக்காரர்), அஞ்சுக்கோட்டை (பகுதி) |
| 4. ராமக்கவண்டன் | (அம்பலக்காரர்) கல்லூரணி |

For more ebooks vist: http://getmyebook.in/

| | |
|---|---|
| 5. லிங்கம நாயக்கர் | (காவல்) பானிசுக்குளம் |

**VII தேவரடியார்**

| | |
|---|---|
| 1. தாசிநந்தகோபாலம் | (திருச்சுழியல்) மூனாடைப்பு (பகுதி) |
| 2. தாசிமுத்தாள் | (திருச்சுழியல்) மூனாடைப்பு (பகுதி) |
| 3. தாசிமுத்தாள் | (திருச்சுழியல்) கலியான சுந்தரபுரம் |

For more ebooks vist: http://getmyebook.in/

# இந்த மின்னூலைப் பற்றி

உங்களுக்கு இம்மின்னூல், இணைய நூலகமான, விக்கிமூலத்தில் இருந்து கிடைத்துள்ளது[1].

இந்த இணைய நூலகம் தன்னார்வலர்களால் வளருகிறது. விக்கிமூலம் பதிய தன்னார்வலர்களை வரவேற்கிறது. தாங்களும் விக்கிமூலத்தில் இணைந்து மேலும் பல மின்னூல்களை அனைவரும் படிக்குமாறு செய்யலாம்.

மிகுந்த அக்கறையுடன் மெய்ப்பு செய்தாலும், மின்னூலில் பிழை ஏதேனும் இருந்தால் தயக்கம் இல்லாமல், விக்கிமூலத்தில் இம்மின்னூலின் பேச்சு பக்கத்தில் தெரிவிக்கலாம் அல்லது பிழைகளை நீங்களே கூட சரி செய்யலாம்.

இப்படைப்பாக்கம், கட்டற்ற உரிமங்களோடு (பொதுகள /குனு -Commons /GNU FDL )[2][3] இலவசமாக அளிக்கப்படுகிறது. எனவே, இந்த உரையை நீங்கள் மற்றவரோடு பகிரலாம்; மாற்றி மேம்படுத்தலாம்; வணிக நோக்கத்தோடும், வணிக நோக்கமின்றியும் பயன்படுத்தலாம்

இம்மின்னூல் சாத்தியமாவதற்கு பங்களித்தவர்கள் பின்வருமாறு:

For more ebooks vist: http://getmyebook.in/

- Arularasan. G
- Deepa arul
- Balajijagadesh
- Sgvijayakumar
- Rabiyathul
- Neyakkoo
- Joshua-timothy-J
- HoboJones
- Fleshgrinder
- Be..anyone
- Info-farmer
- Patricknoddy~commonswiki
- Rocket000
- Xato
- Mecredis

---

1. ↑ http://ta.wikisource.org
2. ↑ http://creativecommons.org/licenses/by-sa/3.0/
3. ↑ http://www.gnu.org/copyleft/fdl.html

For more ebooks vist: http://getmyebook.in/